

வடமாகாண
மர நடுகை மாதம்
கார்த்திகை - 2018
"மரங்களை நேசிக்காத எவரும் இறைவனை நேசிப்பவர்கள் அல்லர்"
- மூப்பர் அம்பிலோகியோஸ்-
(கிரேக்க கிறிஸ்தவ மதகுரு)


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 350 ஐப்பசி 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 11 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

விலை: 40
பக்கங்கள்: 56

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM


## இலங்கையில் ஜனநாயகப் படுகொலை இந்திய அரசு வேடிக்கை பார்க்கின்றது

### சீறுகிறார் மு.க.ஸ்டாலின்



சென்னை, நவ. 11
இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து, அங்கு வாழும் ஈழத் தமிழர்களின் பாதுகாப்பை இந்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கூறியுள்ள திமுக » 52

## உதவிகளை நிறுத்தும் நிலையேற்படலாம்

### அமெரிக்கா கடும் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 11
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது நடவடிக்கைகளின் ஊடாக அமெரிக்கா வழங்கும் உதவிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றார் என்று அமெரிக்க செனட் சபையின் அயலுறவுத்துறைக் குழுவின் தலைவர் எலியட் ஏஞ்சல் எச்சரித்துள்ளார்.
அரச தலைவர் » 53

## மேற்குலகின் சதித் திட்டத்தை நாங்கள் தோற்கடித்துவிட்டோம்

### பெருமிதம் கொள்கிறார் தினேஸ் குணவர்த்தன

(விரிவு -பக்.3)

## மண்டேலாவாகஎதிர்பார்க்கப்பட்ட மைத்திரி முகாபே ஆனார்!

### மங்கள சாடல்

(விரிவு - பக்.2)

### நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில்

## நெருக்குவாரம் கொடுத்தால் ஆணைக்குழு உறுப்பினர்கள் பதவியை துறப்பதற்கு முடிவு

யாழ்ப்பாணம், நவம்பர் 11
நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தொடர்ந்தும், நெருக்குவாரம் கொடுத்தால் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் பதவி துறப்பதற்கு முடிவு » 53

## சு.கவிலிருந்து விலகும் எம்.பிக்கள்

### உட்கட்சிப் பூசலா?

கொழும்பு, நவ. 11
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு அறிவித்துள்ள நிலையில், தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவின் புதல்வரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த » 53

## பொதுத் தேர்தல் நடத்த ரூபா 500 கோடி தேவை

### மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11
அரசமைப்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமையவேபொதுத் தேர்தல் நடத்தப் » 52

## தமிழரை ஒருங்கிணைத்துச் செயற்படும் தலைமை வெற்றிடமாகவே உள்ளது

### கிட்டுப் பூங்காவில் திருமாவளவன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 11
உலகத்தில் சிதைந்து போயுள்ள தமிழர்களை எல்லாம் ஒருங்கிணைத்துச் செயற்படக்கூடிய தலைமைத்துவத்துக்கான வெற்றிடம் இருந்துகொண்டே இருக்கின்றது. இவ்வாறு தமிழகத்தைச் » 53

## தேர்தல் பணிகளை ஆரம்பிக்கும் உத்தரவு எதுவும் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், நவ. 11
தேர்தலுக்கான அறிவித்தல் வெளியிடப்பட்டதுமே, ஒவ்வொரு மாவட்ட தேர்தல்கள் திணைக்களமும் தேர்தல் பணிகளுக்கு » 53

## மைத்திரியின் நடவடிக்கைக்கு நீதிமன்றம் உரிய தீர்ப்பு வழங்கும்

### கூறுகிறார் இரா.சம்பந்தன்

கொழும்பு, நவ. 11
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தன்னிச்சையாக நாடாளுமன்றத்தைக் கலைத்து, மக்களின் ஆணையை மீறியுள்ளார். அரசமைப்பைமீறிய இவரது நடவடிக்கைக்கு » 49

### நாடாளுமன்றக் கலைப்பை எதிர்த்து

## ஐ.தே.க., கூட்டமைப்பு, ஜே.வி.பி. உயர் நீதிமன்றம் செல்கின்றன

» 53

## பாதீடு நிறைவேற்றப்படாததால் அடுத்த ஆண்டு பெரும் சிக்கல்

### பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 11
நாடாளுமன்றத்தின் ஊடாகவே பாதீடு நிறைவேற்றப்படவேண்டும். நாடாளுமன்றமே இல்லாத நிலையில் எதுவும் செய்ய முடியாது. தற்போது அரசமைப்புக்கு முரணாகவே நடவடிக்கை எடுக்கும் அரச தலைவர், இந்த » 53

## 58 எம்.பிக்கள் ஒய்வூதியம் இழப்பர்

கொழும்பு, நவ. 11
நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால், 5 ஆண்டுகளை முழுமைப்படுத்தாத 58 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கான ஓய்வூதியத்தை இழந்துள்ளனர்.
நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கலைக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு முதல் தடவை நாடாளுமன்றுக்குத் » 52

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

## பல்கலை மாணவர்கள் மூவர் ஆற்றில் மூழ்கி பரிதாபச் சாவு



கொழும்பு, நவ. 11
இரத்தினபுரி பலாங்கொடை, பான் குடா ஓயாவில் நீராடச் சென்ற சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.
உயிரிழந்த மூவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய » 53

## நீர்க் குழிக்குள் மூழ்கி இரு சிறுவர்கள் சாவு

### மன்னாரில் சோகம்

மன்னார், நவ. 11
மன்னார் தோட்ட வெளிப் பகுதியில் நீர்க்குழிக்குள் மூழ்கி 8 வயதுச் சிறுவர்கள் இருவர் நேற்றுப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். » 53


SDB வங்கியிடமிருந்து நிலையான வைப்புகளுக்கு வழங்கப்படும் அதிகூடிய வருடாந்த தேறிய வட்டி.

13.14% 12.60% வ.வ.

4 மாதங்கள்

அழையுங்கள் 011 5 411 411

011 5 411 411

SDBவங்கி

சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ




# மைத்திரியின் நடவடிக்கை கவலையளிக்கின்றது

## கனடா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11
இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பாக கவலை வெளியிட்டுள்ள கனடிய அயலுறவுத்துறை அமைச்சு, இது போருக்குப் பிந்திய நல்லிணக்கப் பணிகளை ஆபத்துக்குள்ளாக்கியிருப்பதாக தெரிவித்துள்ளது.
இதுதொடர்பாக கனடிய அயலுறவுத்துறைக் கொள்கையின் கீச்சகப் பக்கத்தில் இடப்பட்டுள்ள பதிவில், அரசியல் நிச்சயமற்ற நிலை மேலும் தீவிரமடைவது, இலங்கையின் ஜனநாயக எதிர்காலத்தையும், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் வாக்குறுதிகளையும் சிதைத்து விடும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

# அரச தலைவரைக் கண்டித்து மன்னாரில் ஆர்ப்பாட்டம்

மன்னார், நவ.11
வடக்கு - கிழக்கு மக்களின் ஆதரவுடன் அரச தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேனவின் அண்மைக்காலச் செயற்பாடுகள், ஜனநாயக விரோத செயற்பாடுகளாகக் காணப்படுவதாகவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கியது மட்டும் அல்லாமல், தொடர்ச்சியாக ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் விசனம் தெரிவித்து நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் கவனவீர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.
மன்னார் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் இந்தப்போராட்டம் இடம்பெற்றது.
இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீண்டும் குடும்ப ஆட்சி வேண்டாம் , ரணிலை அரச தலைவர் ஆக்குவோம், சஜித்தை தலைமை அமைச்சராக்குவோம், மைத்திரியே உன் அரசியல் அதிரடி எல்லாம் இராத்திரியே, ஜனநாயக விரோத செயற்பாடுகளை உடனே நிறுத்து எனப் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போரட்டத்தில் ஈடுபட்டனர்.

# மண்டேலாவாக எதிர்பார்க்கப்பட்ட மைத்திரி முகாபே ஆனார்!

## மங்கள சாடல்



கொழும்பு, நவ. 11
நெல்சன் மண்டேலாவாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட அரச தலைவர் மைத்திரி, ரொபர்ட் முகாபேயாக மாறிவிட்டாரென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி, தனது அரசுக்கு எதிராகச் செயற்பட்ட தலைவராக வரலாற்றில் இடம்பிடித்த மைத்திரி, தாம் கொண்டுவந்த அரசமைப்புக்கு எதிராக செயற்பட்ட அரச தலைவராகவும் மாறிவிட்டார். அரச தலைவரின் விருப்பத் துக்கு இணங்கவே இந்த அரசமைப்பை நாம் அன்று கொண்டுவந்தோம்.
இன்று தமது தரப்பினருக்கு பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் அரசமைப்புக்கு முரணாக ஓர் சர்வாதிகாரி போன்று நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். ஆபிரிக்க நாடுகளில்கூட இல்லாத அளவுக்கு இலங்கையின் தற்போதைய அரசியல் நிலமை காணப்படுகிறது.
நெல்சன் மண்டேலா போன்ற தலைவரைக் கொண்டுவருவோம் என்றே நாம் 2015ஆம் ஆண்டு வாக்களித்திருந்தோம். எனினும் தற்போது முகாபே போன்ற ஒரு பைத்தியக்காரத் தலைவரே நாட்டுக்குக் கிடைத்துள் ளார் - என்றார். (5)

# மைத்திரி – மகிந்த ஆட்சி கவிழத் தேங்காய் உடைப்பு

கொழும்பு, நவ. 11
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச ஆகியோரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, ஆட்சி மாற வேண்டுமெனக் கோரி தேங்காய் உடைத்து வழிபாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது.
அரச தலைவர் நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலை அறிவித்துள்ள நிலையில், ஐ.தே.க.வினர் முன்னேஸ்வரம் சிவன் கோயில், பிள்ளையார் கோயில் மற்றும் காளி கோயில்களில் ஆட்சி மாற்றத்தை வேண்டி தேங்காய் உடைத்து நேற்றுச் சனிக்கிழமை வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளனர். (5)



# தலதா மாளிகையில் மைத்திரி வழிபாடு

கொழும்பு, நவ. 11
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கண்டி சிறி தலதா மாளிகைக்குச் சென்று நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.
சிறி தலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல அவரை வரவேற்றார்.
அரச தலைவருடன் அமைச்சர்களான மகிந்த அமரவீர, எஸ்.பி. திசாநாயக்க, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்க நாயக்க ஆகியோரும் சென்றுள்ளனர்.
மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் திடீரென நாடாளுமன்றைக் கலைக்கும் அறிவிப்பை வெளியிட்டார். அதையடுத்து அரசியல் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் அரச தலைவர் தலதா மாளிகைக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டுள்ளார். (5)

# நாடாளுமன்றம் கலைந்தாலும் அமைச்சுக்கள் கலையாது

## கூறுகிறார் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, நவ. 11
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன் நாடாளுமன்றத்தைக் கலைத்திருந்த போதிலும், புதிய அரசு அமைக்கப்பட்டதன் பின்னர் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள் எதிர்வரும் ஜனவரி 5 ஆம் திகதி வரை இடைக்கால அரசின் அமைச்சர்களாக செயற்படுவார்கள் என்று பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் நீதித்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (5)

# நாடாளுமன்றத் தேர்தலில்: மைத்திரி–மகிந்த கூட்டின் தலைவர் யார் ?

ஜனவரி 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மகிந்த- மைத்திரி அணியினர் பல்வேறு மாற்றங்களை கட்சிக்குள் செய்து வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் சிறிலங்கா பொது மக்கள் முன்னணி போட்டியிவதற்கு, அந்தக் கட்சியின் நிறுவுனரான பசில் ராஜபக்சவை சம்மதிக்க வைத்துள்ளனர்.
இது தொடர்பில் மகிந்த ராஜ பக்ச சிறிலங்கா சுதந்திர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிம் தெரியப்படுத்தியுள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கைக்கு அமையவே தாம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பில் திருத்தம் செய்து, கட்சியின் தலைவராக மகிந்த ராஜபக்சவை நியமிப்பதற்கு மைத்திரிபால சிறிசேன இணங்கியுள்ளார் என்றும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீரவை பதவியில் இருந்து நீக்கவும், மகிந்த ராஜபக்சவின் நெருங்கிய சகா ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்கவும் மைத்திபால இணங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (7)

# இலங்கை நிலவரம் அதிர்ச்சியளிக்கின்றது

## ஆஸி. கூறுகிறது

கொழும்பு, நவ. 11
இலங்கை நிலவரம் குறித்து அதிர்ச்சியடைவதாக ஆஸ்திரேலிய அயலுறவுத்துறை அமைச்சர் மாரிஸ் பைன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் இந்த நடவடிக்கையானது இலங்கையின் நீண்ட ஜனநாயகப் பாரம்பரியத்தை சிதைப்பதாகவும், உறுதிப்பாடு மற்றும் செழிப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (5)

# மேற்குலகின் சதித் திட்டத்தை நாங்கள் தோற்கடித்துவிட்டோம்

## பெருமிதம் கொள்கிறார் தினேஸ் குணவர்த்தன

கொழும்பு, நவ. 11

முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், சபாநாயகர் கருஜயசூரியவும் இணைந்து மேற்குலக நாடுகளின் துணையுடன் இலங்கைக்கு எதிராக முன்னெடுத்திருந்த அனைத்துச் சதித்திட்டங்களையும் தோற்கடித்துள்ளதுடன், உறுதியான அரசொன்றை அமைப்பதற்கான சந்தர்ப்பதையும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், சபை முதல்வருமான தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மைத்திரி - மகிந்த தலைமையில் உருவான புதிய அரசு நாட்டை அழிவுப் பாதையில் இருந்து மீட்கவும், பொருளாதாரத்தை வலுப்படுத்தவுமே ஏற்படுத்தப்பட்டது. முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனாவைக் கொலை செய்வதற்கான சதித்திட்டம் அம்பலமானத்தால் நாட்டில் ஏற்படவிருந்த களேபரங்களை தடுத்து நிறுத்துவதற்கு அரச தலைவர் எடுத்த முயற்சியின் பின்னணியில்தான் இந்த அரசு உருவானது. அரச தலைவர் அரசமைப்புக்கு உட்பட்டு அனைத்தையும் செய்யும் போது சபாநாயகராகவிருந்த கருஜயசூரியவும், முன்னாள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் மேற்குலக நாடுகளின் நிகழ்ச்சி நிரலின் கீழ் நாட்டில் பாரதூரமான பிரச்சினை களை ஏற்படுத்தி இரத்தக்களரியை ஏற்படுத்தப் பார்த்தனர். அதிகாரம் இல்லாத சந்தர்ப்பத்தில் அரச தலைவரின் செயற்பாட்டுக்கு எதிராக நடந்துகொண்டமைக்காக சபாநாயகர் பொறுப்புக்கூற வேண்டும். ரணிலைவிட எமக்கு பெரும்பான்மைப் பலம் இருந்தது. ஆனால், நாட்டை தொடர்ந்து நெருக்கடிக்கு மத்தியில் கொண்டுசெல்ல முடியாது. நாட்டின் பொருளாதாரம் கடுமையான வீழ்ச்சியை நோக்கி நகர்ந்து வருகிறது. சட்டவாட்சி இல்லை. எவ்வாறு தொடர்ந்து பயணிப்பது?. எனவே, ஜனநாயகத்தையும், உறுதியான அரசையும் உறுதிப்படுத்தும் பலத்தை மக்களிடமே அரச தலைவர் கையளித்துள்ளார்.

ஐ.தே.கவும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து இல்லாதவற்றை எடுத்துக்கூறி பலவந்தமாக அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்தனர். மேற்குலக நாடுகளின் தலைமையில் இலங்கையில் முன்னெடுக்கப் பட்டிருந்த அனைத்துச் சதித்திட்டங்களும் தோற்கடிக்கப்பட்டு ஆட்சியாளர் யார் என்பதைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது - என்றார். (5,10)

# சஜித் தலைமையில் களமிறங்க ஐ.தே.கவினர் பச்சைக் கொடி

கொழும்பு, நவ. 11

2019ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி தேர்தல் நடைபெற்றால், ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமை அமைச்சர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை களமிறக்குவதற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் பச்சைக் கொடிகாட்டியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் அறிய முடிகிறது.

இதேவேளை, கட்சித் தலைவர் பதவியில் எந்த மாற்றமும் செய்யும் திட்டம் இப்போதைக்கு இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகில விராஜ்காரி யவசம் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன, நாடாளுமன்றத்தை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு அதிரடியாகக் கலைத்திருந்தார்.

இந்த விவகாரம் ஐக்கிய தேசிய முன்னணிக்கு பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளதுடன், அமெரிக்கா உள்பட பலநாடுகளின் எதிர்ப்புக்கும் உள்ளாகியுள்ளது. அரச தலைவர் வெளியிட்டுள்ள அரசிதழில் அடுத்தாண்டு ஜனவரி 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ளதுடன், அதே மாதம் 17ஆம் திகதி புதிய நாடாளுமன்றமும் கூடுமென குறிப்பிடப்பட்டுள்ளது. பெரிய கூட்டணியொன்றை அமைத்து தேர்தலில் களமிறங்கவுள்ளதாக அறிவித்துள்ள ஐ.தே.மு. கடந்த அரச தலைவர் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கியது போன்று பொதுத் தேர்தலில் ஐ.தே.கவில் ஒருவரை பொது வேட்பாளராகக் களமிறக்கத் தீர்மானித்துள்ளது.

அதற்கான பெயர்ப் பட்டியலில் ஐ.தே.கவின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவின் பெயர் முன்னிலையில் உள்ளதுடன், பங்காளிக் கட்சிகளிலும் அவருக்கான ஆதரவும் பலமாக உள்ளது. ஐ.தே.கவின் தலைவரும், முன்னாள் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரம சிங்கவைப் பொது வேட்பாளராகக் களமிறங்க் பெரும்பாளனவர்கள் விரும்ப வில்லையெனவும் அறிய முடிகிறது. (5,10)

# சட்டரீதியான தேர்தலை எதிர்கொள்ளத் தயார்

## கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 11

தேர்தலைச் சந்திக்க ஐக்கிய தேசிய முன்னணி எந்தவொரு சந்தப்பத்திலும் தயாராகவே உள்ளது. ஆனால், அது சட்டப்படியான தேர்தலாக இருக்க வேண்டும். அரச தலைவர் வெளியிட்டுள்ள சட்டவிரோத அரசிதழ் தொடர்பில் உயர்நீதிமன்றின் நிலைப்பாட்டை நாளை அறியவுள்ளோம். அரசிதழ் செல்லுப்படியானதென்றால் தேர்தலில் பெரிய கூட்டணியை அமைத்து போட்டியிடுவோம் என்று ஐ.தே.க. அறிவித்துள்ளது.

அலரிமாளிகையில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன கடந்த 26ஆம் திகதி மகிந்த ராஜபக்சவை சட்டவிரோத தலைமை அமைச்சராக நியமித்திருந்தார். கடந்த காலத்தில் பெரிய ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட மகிந்த தரப்பை மைத்திரி அதிகாரத்துக்குக் கொண்டு வந்து அவர்களின் ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் வழக்கு விசாரணைகளை தடுத்துள்ளார். நேற்று (நேற்றுமுன்தினம்) இரவுவரை நாடாளுமன்றில் பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளப் பார்த்தனர். சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுத்தும், இலஞ்சம் கொடுத்தும் அதனைச் சாதிக்க முற்பட்டனர். சபாநாயகர் தமது மனச்சாட்சியின் அடிப்படையில் நேர்மையாகச் செயற்பட்டிருந்ததால் அரசமைப்புச் சட்டங்களை மீறி அரச தலைவர் நேற்றிரவு (நேற்று முன்தினம்) நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

அரசியல் ரீதியாக நாங்கள் அவர்களைத் தோற்கடிக்கும் நிலை ஏற்பட்டதை முன்னிட்டு பெருமையடைகிறோம். 14ஆம் திகதி தோல்வியடையும் அவமானத்தைத் தவிர்த்துக்கொள்ளவே மகிந்தவுடன் இணைந்து இந்த சதித்திட்டத்தை அரச தலைவர் செய்துள்ளார்.

அரசமைப்பின் பிரகாரம் நான்கரை வருடங்களின் பின்னர்தான் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். 33 ஆவது சரத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள விடயம் 41ஆம் சரத்தின் பிரகாரம்தான் செயற்படும். அத்துடன்.70 ஆவது சரத்து நாடாளுமன்றத்தைக் கலைப்பதைக் கட்டுப்படுத்துகிறது. நாடாளுமன்றில் வெற்றியை பெற்றுக்கொள்ள முடியாது போகும் என்பதால் நாட்டைப் பற்றிக் கவலைப்படாது ரணிலை பழிவாங்குவதற்குச் சண்டித்தனமாக இந்தச் சதித்திட்டத்தை செய்துள்ளனர். நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு அரச தலைவர் கூறியுள்ள அர்த்தங்களின் அடிப்படையில், 5 ஆம் திகதி தேர்தலை நடத்தி பெரும்பான்மை இல்லாவிட்டால் மீண்டும் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தை கலைக்க முடியுமா? அரசமைப்பில் காட்டுச் சட்டங்கள் இல்லை என்பதை தெளிவாகக் கூறுகின்றோம்.

அரச தலைவரின் அதிகாரங்கள் 19ஆவது திருத்தச்சட்டத்தில் குறைக்கப்பட்டுள்ளன. இரண்டு முறை அரசமைப்பை மீறி அவர் நடந்துகொண்டுள்ளார்.

நீதிமன்றில் சென்று மேற்படி அரசிதழைச் செல்லுப்படியற்றதாக ஆக்குவதற்கு நடவடிக்கையெடுப்போம். அவ்வாறு முடியாது போனால் தேர்தலைச் சந்திப்பதற்கும் நாங்கள் தயாரகவே உள்ளோம். தேர்தலில் பெரிய கூட்டணி அமைத்து போட்டியிடுவோம். மைத்திரி- மகிந்த இருவரையும் விரட்டியடிப்போம்.

சட்டத்தை மீறித் தேர்தலை நடத்த முடியாது. சட்டப்படியே தேர்தலை நடத்த வேண்டும். சட்டவிரோத தலைமை அமைச்சர் அவருக்குத் தேவையான நேரத்தில் தேர்தலை நடத்த முடியாது. சு.கவைத் தவிர ஏனைய அனைத்துக் கட்சிகளும் நீதிமன்றம் செல்ல தயாராகவுள்ளன - என்றார். (5,10)

# மக்கள் தீர்மானத்துக்கு வழி ஏற்படுத்தியுள்ளோம்

## நாடாளுமன்றக் கலைப்புக்கு மகிந்தவின் விளக்கம்

கொழும்பு, நவ. 11

நிலையான நாட்டை ஏற்படுத்துவது என்பது மக்களின் கைகளிலேயே அடங்கியுள்ளது. அதற்கான வழியை தலைவர்கள் என்ற ரீதியில் நாம் ஏற்படுத்தித் தந்துள்ளோம். இவ்வாறு முன்னாள் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் தனது கீச்சகத்தில் மகிந்த கருத்துப் பதிவிட்டுள்ளார். அதில் அவர் தெரிவித்துள்ளதாவது, இதுவே மக்களுக்குச் சிறந்த தருணம். நிலையான நாட்டை ஏற்படுத்துவது என்பது மக்களின் கைகளிலேயே அடங்கியுள்ளது. அதற்கான வழியைத் தலைவர்கள் என்ற ரீதியில் நாம் ஏற்படுத்தித் தந்துள்ளோம். ஒரு பொதுத் தேர்தல் உண்மையிலேயே மக்களின் விருப்பத்தின் படி நிலையான நாட்டுக்கு வழி செய்யும், என்று குறிப்பிட்டுள்ளார். (5)

# தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களிடம் கொடுத்ததைவிட சிறந்த ஜனநாயகம் எது?

## அமெரிக்காவை நோக்கி கேள்வி எழுப்புகிறார் விமல் வீரவன்ச .

கொழும்பு, நவ. 11

உறுதியான அரசை அமைப்பதற்கான அதிகாரத்தை மக்களிடம் கொடுத்துள்ளமையைவிட உயர்ந்த ஜனநாயகம் எதுவென அமெரிக்காவிடம் கேட்கின்றோம் இவ்வாறு மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கேள்வியெழுப்பினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்குலக நாடுகளுக்கு அடிபணிந்து நாட்டில் இல்லாத பிரச்சினைகளை ஏற்படுத்தி அதிகாரத்தை பலவந்தமாகக் கைப்பற்றுவதற்குத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடுமையான முயற்சிகளை எடுத்தார்.

மேற்குலக நாடுகளும், இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் நேரடியாகத் தலையீடு செய்ய ஆரம்பித்துவிட்டன. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை கவலையளிப்பதாக அமெரிக்க தூதரகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. உறுதியான அரசை அமைப்பதற்கு மக்களிடம் அதிகாரத்தைக் கொடுத்துள்ளமையைவிட என்ன ஜனநாயகம் உள்ளதெனத் தெரியவில்லை.

சபாநாயகர் கருஜயசூரியவே ஏற்பட்டுள்ள அனைத்து நெருக்கடிகளுக்கும் காரணம். பொய்யான அறிக்கைகளை வெளியிட்டு மேற்குலக நாடுகளின் தலையீடுகளை இலங்கையில் அதிகரிக்கும் முயற்சிகளை எடுத்தார். அதன் காரணமாகவே அரச தலைவர் நாடாளுமன்றத்தை கலைத்து புதிய அரசைத் தேர்ந்தெடுக்கும் பலத்தை மக்களிடம் கொடுத்துள்ளார்.

தூதரகங்கள் முன்சென்று அழுது கொண்டிருக்காது தேர்தலைச் சந்தியுங்கள். இல்லாவிடின் நீதிமன்றம் செல்லுங்கள். அனைத்து நடவடிக்கைகளையும் அரச தலைவர், அரசமைப்புக்கு உட்பட்டே செய்துள்ளார் - என்றார். (5,10)

# கூட்டமைப்பின் ஆதரவு கிடைக்காமையால் கலைக்கப்பட்ட இலங்கை நாடாளுமன்றம்

## மன்னார் நகரசபைத் தலைவர் தெரிவிப்பு

மன்னார், நவ. 11

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு மகிந்த அணிக்குக் கிடைக்காமையால் தான் இலங்கையின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது என்று மன்னார் நகரசபைத் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்துள்ளார்.

மகிந்த தரப்பு இதர கட்சி உறுப்பினர்களிடம் பேரம் பேசியது போல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடமும் பேசினார்கள். தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் வேணவாக்களை வென்றெடுக்க பாடுபடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்த அரசுக்கு ஆதரவு வழங்கவில்லை. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுப் புதிய தேர்தலை நடத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அறிவித்தல் விடப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்தவுக்கு ஆதரவு வழங்கி இருந்தால், நாடாளுமன்றம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். உண்மையான தமிழ்த் தேசியத்தின் மீது பற்று கொண்ட கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காக என்றும் பாடுபடும். அதேபோல் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்த வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். (213)

# நிச்சயமாக நீதிமன்றை நாங்கள் நாடுவோம்

## மங்கள தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11

நாடாளுமன்றத்தைக் கலைத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைக்கு எதிராக நிச்சயமாக நாங்கள் உயர் நீதிமன்றத்துக்குச் செல்வோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அலரி மாளிகையில் நடந்த கூட்டத்துக்குப் பின்னர், 'த ஹிண்டு' நாளிதழுக்கு தகவல் வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நிச்சயம் நாங்கள் நீதிமன்றத்தில் இதனைச் சவாலுக்கு உட்படுத்துவோம். இதன் விளைவாக அரச தலைவருக்கு எதிராக ஒரு குற்றவியல் தீர்மானத்தையும் கொண்டு வருவோம். ஏனென்றால் அவரால் நாட்டுக்கு ஆபத்து. நாட்டின் ஜனநாயக மரபுகளுக்கு ஆபத்து உள்ளது. எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கிறது. ஆனால், இது அப்பட்டமான அரசமைப்பு மீறல். எனவே, இந்தக் கலைப்புக்கு எதிராக சவால் விட வேண்டிய தேவை உள்ளது, என்றும் அவர் கூறியுள்ளார். (5)

# நாடாளுமன்றம் திடீர் கலைப்பு தென்னிலங்கையில் கொதிப்பு

கொழும்பு, நவ. 11

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் நள்ளிரவுடன் கலைக்கப்பட்டுள்ள நிலையில், அரச தலைவரின் இந்த நடவடிக்கைக்கு அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அரச தலைவருக்கு இல்லாத நிலையிலும், அதற்கான நடவடிக்கையில் அவர் இறங்கியிருப்பது, நாட்டை பெரிய அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இதுகுறித்து அரசியல் கட்சிகள், பிரமுகர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்கள் வருமாறு.

**ராஜித சேனாரத்ன (ஐ.தே.க.)**

அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்திருப்பது சட்டவிரோதமான செயல். அரச தலைவர் முதலில், அரசமைப்புக்கு மாறாக தலைமை அமைச்சரைப் பதவிநீக்கம் செய்தார். அதன் பின்னர் நாடாளுமன்றத்தை முடக்கினார். நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க முடியாத நிலையில், அவர் இரண்டாவது சட்டவிரோத செயலாக, நாடாளுமன்றத்தைக் கலைத்திருக்கிறார். எனினும், ஐ.தே.க. பரந்துபட்ட கூட்டணி ஒன்றை அமைத்து தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தயாராக இருக்கிறது.

**குசல் பெரேரா (அரசியல் ஆய்வாளர்)**

அரசியல்வாதிகளின் தொடர்ச்சியான ஜனநாயக விரோதச் செயல்களின் ஆகப் பிந்திய நடவடிக்கை தான் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் செயல். இந்த அரசமைப்பு மீறல் மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கி விட்டது. எமக்கு நல்லாட்சி தேவையென்றால், ஜனநாயகத்தை நிறுவி அதனைப் பலப்படுத்த வேண்டும்.

**ரில்வின் சில்வா (ஜே.வி.பி.)**

அரச தலைவர் மைத்திரிபால இரண்டாவது தடவையாக அரசமைப்பை மீறிச் செயற்பட்டு நாடாளுமன்றத்தைக் கலைத்திருக்கிறார். நாடாளுமன்றத்தில் தேவையான 113 பெரும்பான்மை பலம் கிடைக்காததால் தான் அவர் இதனைச் செய்துள்ளார். இதன் மூலம் அவர் நாட்டைப் படுகுழிக்குள் தள்ளி விட்டுள்ளார். நாட்டில் முதல் முறையாக, அரச தலைவர் நாட்டின் அரசமைப்பை மீறி தேர்தலுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கும் நடவடிக்கைகளை பொறுத்திருந்து பார்ப்போம்.

**ஹரின் பெர்னான்டோ (ஐ.தே.க.)**

இது ஜனநாயகத்துக்கும், அரசமைப்புக்கும் எதிரானது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசமைப்பு என்னவென்று தெரியவில்லை. இதன் எதிர்விளைவுகளைப் பற்றியோ தனது நடவடிக்கைகளினால் நாட்டில் ஏற்படக் கூடிய தாக்கங்கள் குறித்தோ அவருக்குப் புரியவில்லை.

**ஹர்ச டி சில்வா (ஐ.தே.க.)**

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன போலித் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுடன் சேர்ந்து நாட்டின் அரசமைப்பைக் கழிவறைக் கடதாசிக்கு சமமானதாக்கி விட்டார். அரச தலைவர் அவர்களே, எங்கள் நாட்டின் அதிகாரபூர்வ பெயரிலிருந்து ஜனநாயகம் என்பதை நீக்குவதற்கான இன்னொரு அரசிதழ் அறிவித்தலை வெளியிடுங்கள்.

**கோத்தாபய ராஜபக்ச (முன்னாள் பாதுகாப்புச் செயலர்)**

இந்த தேசத்தின் தலைவிதியை தீர்மானிப்பவர்கள் மக்களே. மக்களின் இதயசுத்தியுடனான சக்தி எங்கள் நாட்டின் முக்கியமான தருணத்தில் உறுதித்தன்மை மற்றும் முன்னேற்றகரமான எதிர்காலத்தை வழங்க வேண்டும். மக்கள் சரியான தெரிவை மேற்கொள்வார்கள் என நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். (5)



### மகிந்தவுக்கு கூட்டமைப்பு ஆதரவு வழங்காமையாலேயே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது

கொழும்பு, நவ. 11

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்தமை சரியான நடவடிக்கை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மகிந்த ராஜபக்சவை ஆதரித்தால் இந்த நிலையேற்பட்டிராது. இவ்வாறு இந்தியாவின் பாஜக கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்தார்.

அவர் தனது கீச்சகத்தில் தெரிவித்ததாவது, கட்சி தாவுபவர்களை அடிப்படையாகக் கொண்ட பெரும்பான்மை என்பது அரசமைப்பிற்கு உகந்ததாகயிருந்தாலும் ஜனநாயகத்தில் தார்மீகம், வாக்காளர்களே தீர்மானிக்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளித்திருந்தால் அது சிறந்த விடயமாக அமைந்திருக்கும். ஆனால் தமிழ்த் தலைவர்கள் தற்கொலை செய்யும் சுபாவத்தை உடையவர்கள், என்று குறிப்பிட்டுள்ளார். (5)

# ஜனநாயகத்துக்கு சத்தியசோதனை

## விக்ரமநாயக்க விமர்சனம்

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியானது, ஆசியாவின் பழமை வாய்ந்த ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள சத்திய சோதனை என்று ஐக்கிய நாடுகளின் இளைஞர் விவகாரங்களுக்கான தூதுவர் ஜயத்மா விக்ரமநாயக்க விமர்சித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள கீச்சகப் பதிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தலையெழுத்தை, மூடிய அறைக்குள் சில முதியவர்கள் இணைந்து தீர்மானிக்கின்றனர். தற்போதைய நிலையில், நாட்டின் ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து அரசியல் தலைவர்கள் செயற்படுவது அவசியம். தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை தீர்ப்பதற்கு அனைவரும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவது அவசியம், என்று குறிப்பிட்டுள்ளார். (5)

# நாங்களும் அவதானம் செலுத்துகின்றோம்

## பிரிட்டன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 11

இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பாக பன்னாட்டுச் சமூகம் அவதானம் செலுத்தி வருகின்றது. நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி இடம்பெறுமென அரச தலைவர் அறிவித்திருந்தார். அதற்கு சில தினங்களுக்கு முன்பாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக உன்னிப்பாக அவதானித்து வருவதாக பிரிட்டனின் ஆசியா மற்றும் பசுபிக் பிராந்திய விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நல்ல நண்பன் என்ற ரீதியில், இலங்கையின் சகல கட்சிகளும் அரசமைப்பை மதித்து செயற்பட வேண்டுமென வலியுறுத்துகின்றோம். ஜனநாயகத்தை மதித்து சகல நிறுவனங்களும் செயற்பட வேண்டும்என்றும்மார்க்பீல்ட் வலியுறுத்தியுள்ளார். (5)

## நாடாளுமன்றம் கலைப்பு:

# இலங்கையில் நடப்பதை கண்காணிக்கின்றோம்

## கூறுகிறது ஐ.நா.

கொழும்பு, நவ. 11

இலங்கையின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்து என்ன நடக்கிறது என்று கண்காணிக்கப் போவதாக, ஐ.நா. தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கில் செய்தியாளர்களை நேற்றுச் சந்தித்த ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிடம், இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது குறித்தும், நெருக்கடிகள் மீண்டும் மோசமடைவது குறித்தும் இது தொடர்பாக ஐ.நாவின் நிலைப்பாடு தொடர்பாகவும் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. வழக்கமான அரசமைப்பு நடைமுறைகள் பின்பற்றப்படும் என்று நாங்கள் நிச்சயம் நம்புகிறோம். அதற்குப் பின்னர் என்ன நடக்கிறது என்று நாங்கள் கண்காணிப்போம், என்று தெரிவித்துள்ளார். (5)

## நாடாளுமன்றம் கலைப்பு:

# ஆழ்ந்த கவலையடைகின்றோம்

## அமெ. இராஜாங்கத் திணைக்களம்


கொழும்பு, நவ. 11

நாடாளுமன்றத்தைக் கலைக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் முடிவு குறித்து, அமெரிக்கா ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் கீச்சகப் பக்கத்தில், இது தொடர்பான பதிவு வெளியிடப்பட்டுள்ளது.

அதில், நாடாளுமன்றம் கலைக்கப்படவுள்ளதான செய்தி குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலையடைகிறது. இது அரசியல் நெருக்கடியை மேலும் மோசமடையச் செய்யும். இலங்கையின் அர்ப்பணிப்புள்ள பங்காளர் என்ற வகையில், உறுதிப்பாட்டையும் செழிப்பையும் உறுதி செய்வதற்கு, ஜனநாயக அமைப்புகளும், செயல்முறைகளும் மதிக்கப்பட வேண்டியது அவசியம் என்று நாங்கள் நம்புகிறோம், என்று கூறப்பட்டுள்ளது. (5)

# தேனீ வளர்ப்பை ஊக்கப்படுத்த யாழ்ப்பாணத்தில் தனி அமைப்பு



யாழ்ப்பாணம், நவ. 11
யாழ்ப்பாண மாவட்டத்தில் தேனீ வளர்ப்பை ஊக்குவிக்கவெனதனியான அமைப்பு(தேனீவளர்ப்போர் சங்கம்) அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணமாவட்டவிவசாயத்திணைக்களத்தின் உதவியுடனேயே இந்தத் தேனீவளர்ப்போர்சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. தேனீவளர்ப்போர்நாற்பது பேர் இந்தச்சங்கத்தில் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

தேனீ வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு தேனீ வளர்ப்போருக்கு தேன்கூடு உட்பட மற்றும் ஆலோசனைகள் போன்றவற்றை விவசாயத் திணைக்களம் வழங்கி வருகிறது. காரைநகர், நல்லூர், எழுதுமட்டுவாள், சாவகச்சேரி உட்பட மேலும் சில இடங்களில் இந்தத் தேனீ வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ம-17)

## பரிசளிப்பு

சாவகச்சேரி, நவ. 11
பன்னாட்டுலயன்ஸ்கழகத்தின் 306பி1மாவட்டத்தால் யாழ். மாவட்ட இடைநிலைப் பிரிவு (11 வயது 13 வயது) மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரப்போட்டியில், சித்திபெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வும் ஓவியங்கள் காட்சிப்படுத்தலும் சாவகச்சேரிதேவாலயசாலையில் உள்ள ஹன்ற நினைவு ஓவியக்கலைக்கூடத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

பிற்பகல் 3 மணிதொடக்கம் மாலை 6 மணிவரை இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. 306பி1மாவட்டசமாதான சுவரொட்டிப் பிரிவுக்கான மாவட்டத் தலைவர் லயன் வ. சிறிபிரகாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக பன்னாட்டு லயன்ஸ் கழகங்களின் 306பி1மாவட்ட ஆளுநர் லயன் தேவா பீற்றர் கலந்து கொள்ளவுள்ளார். (ம-9,159)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ. 11
வடமாகாண தலைமைச் செயலாளர் செயலகத்தின் ஏற்பாட்டில்குருதிக்கொடை வழங்கும்நிகழ்வும்அலுவலர்களுக்கான மருத்துவ பரிசோதனை முகாமும் எதிர்வரும் 15ஆம் திகதி செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடை நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள அலுவலர்கள் தமது விவரங்களை அனுப்பி வைக்கும்படியும், மருத்துவ பரிசோதனையில்பங்குபற்றவிரும்பும் அலுவலர்கள் ஏற்கனவே சிகிச்சை பெறும் நோய் நிர்ணய அட்டை மற்றும் ஏற்கனவே பெறப்பட்ட குருதி மற்றும் சிறுநீர் பரிசோதனை அறிக்கைகளைக் கொண்டு வருமாறும் மாகாண பிரதி தலைமைச்செயலாளர் (ஆளணியும்பயிற்சியும்) அ. சிவபாதசுந்தரன் அறிவித்துள்ளார். (ம-9,159)

## மணல் திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட உளவியந்திரம் பொலிஸாரின் வசம்!

### சந்தேக நபர்கள் மூவர் தப்பியோட்டம்

கொடிகாமம், நவ. 11
கொடிகாமம் கெற்பேலிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சட்டவிரோத மணல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரத்தை கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றினர். மணல் அகழ்வில்ஈடுபட்டவர்கள்என்றுசந்தேகிக்கப்படும்மூவர்பொலிஸாரைக்கண்டதும் தப்பியோடினார்கள். அவர்களைக் கைதுசெய்யும் பணிகள் துரிதப்படுத் தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களை அடுத்து தகவல் உடனடியாக கொடிகாமம் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து கொடிகாமம்பொலிஸாரால்மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போதே உளவுஇயந்திரம்கைப்பற்றப்பட்டது. மணல்ஏற்றிக்கொண்டிருந்தசந்தேகநபர்கள்மூவர்பொலிசாரைக்கண்டதும் தப்பியோடியுள்ளனர். "தப்பியோடியவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களைக் கைதுசெய்யும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (ம-9,159)



## மின்தடை

யாழ்ப்பாணம், நவ. 11
மின்விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு, மறுகட்டமைப்பு வேலைகளுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று சில இடங்களில் மின் தடைப்படும் என்றுஇலங்கைமின்சார சபை அறிவித்தது.

சுன்னாம் தெற்கு, மருதனார்மடம், மருதனார் மடம் நுண்கலைப்பீடம் ஆகிய இடங்களில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை மின் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபை மேலும் அறிவித்தது. (ம)




## மாணவர்களுக்கு உதவி

கொடிகாமம், நவ. 11
ஜேர்மனியின் ஸ்ருட்காா்ட் நகரில் இயங்கும் 'உறவுகளுக்கு கரம் கொடுப்போம்' அமைப்பால் தந்தைய இழந்த நிலையில் மறவன்புலோவில் வதியும் வறுமையில் உள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 மாணவர்களின் கல்விக்காகநேற்றுமுன்தினம்நிதியுதவிசெய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் கல்வி முடியும் வரை இந்த நிதி வழங்கப்படும் என்று அந்த அமைப்பின் வடமாகாணஇணைப்பாளர்வி. தனுசன்தெரிவித்தார். (ம-9,159)





வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம்மற்றும்வடமாராட்சிகிழக்குபனை தென்னைவளஅபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம் என்பன இணைந்து வடமாராட்சி கிழக்குப் பகுதியில் கசிப்புக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுவரொட்டிகள் அண்மையில் ஒட்டப்பட்டுள்ளன. (ம-160)

## மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 11
தென்மராட்சிப்பிரதேசசெயலகத்தில்கடமையாற்றி, கடந்தஒருவருடத்தில்பதவியுயர்வு, இடமாற்றம், ஓய்வுஆகியவைகாரணமாகச் சென்ற சுமார் 20 ஊழியர்களை மதிப்புறுத்தும்நிகழ்வு தென்மராட்சிப் பிரதேசசெயலக மண்டபத்தில்அண்மையில்இடம்பெற்றது. பிரதேச செயலர் திருமதி நேவந்தினி பாபுவின் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. தென்மராட்சிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நலன்விரும்பிகள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-9,159)




# 'விளையாட்டுக்கள் மூலமாக அமைதி' என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கு



கொடிகாமம், நவ. 11
சமாதானத்துக்கும்நல்லெண்ணத்துக்குமானயாழ்ப்பாணமாவட்டஅமைப்பின் ஏற்பாட்டில்'விளையாட்டுக்கள்மூலமாக அமைதி' என்னும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்ற மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச்சேர்ந்த 30 இளைஞர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். வலையமைப்பின் அமைப்பாளரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் இந்தியாவைச் சேர்ந்த அகஜாத், மற்றும் சுவாதி ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (ம-9,159)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி, நவ.11
கிளிநொச்சி கிராமிய கல்வி நிறுவனத்தின் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்குக் கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.
நிறுவனத் தலைவர் இ.குணநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கரைச்சிப் பிரதேச செயலர் த.முகுந்தன் கலந்து கொண்டார். (9)

## காலநிலைப் பாதிப்பிலிருந்து

# வழமைக்குத் திரும்புகிறது முல்லைத்தீவு மாவட்டம்

**முல்லைத்தீவு, நவ. 11**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக நிலவி வந்த சீரற்ற காலநிலை வழமைக்குத் திரும்பி இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது என்று மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய நிலை தொடர்பில் மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, கடந்த இரண்டு மூன்று நாள்களாகப் பெய்துவந்த மழை காரணமாக ஆறு வரையான சிறிய குளங்கள் உடைப்பெடுத்திருந்தன. அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் 202 குடும்பங்களைச் சேர்ந்த 647 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
வெலிஓயாப் பிரதேசத்தில் மாத்திரம் இரண்டு குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் தற்காலிக இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இடரில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக இலங்கை ராணுவத்தினர், வானூர்திப் படையினர், கடற்படையினர், பொதுமக்கள், அதிகாரிகளின் உதவியுடன் மக்களைக் காக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. முல்லைத் தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, ஆண்டான் குளம் பகுதிக்கு அடுத்துள்ள நித்தகைக்குளம் உடைப்பெடுத்திருந்தது.
இதன்போது ஆறு பேர் காணமல் போயிருந்தனர். இடர் முகாமைத்துவக் குழுவினர், முப்படையினர், காவற்றுறையினர் மற்றும் ஊர் மக்கள் அனைவரும் இணைந்து காணாமல் போனோரை மீட்கத் தேடுதல் மேற்கொண்டனர்.
இந்த நிலையில் காணாமல் போயிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் மற்றும் ஏனைய மூன்றுபேரும் காலை 7 மணியளவில் வானூர்திப்படையினர் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மாவட்டத்தில் நிலவிய சீரற்ற கால நிலை வழமைக்குத் திரும்பியதுடன் வெள்ளம் நிரம்பிக் காணப்பட்ட தாழ் நிலங்களில் வெள்ளம் குறைவடைந்து, இயல்பு நிலை ஏற்பட்டுள்ளதாக மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (6)



# கண் பரிசோதனை மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.11
தந்தை செல்வா நற்பணி மன்றஉறுப்பினர் க.தலையரட்ணத்தின் அனுசரணையில் கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டுள்ளது.
நேற்று முன்தினம் தொல்புரம் சர்வோதயத்தில் கண் பரிசோதனை மருத்துவ முகாமும் ,சுழிபுரம் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் மூக்குக் கண்ணாடிகளும் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள்,மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (7)

# உந்துருளியை மோதிய கன்ரர் வாகனம்




சாவகச்சேரி, நவ.11
ஏ -9 முதன்மைச்சாலைக்குள் நுழைந்த உந்துருளியை முதன்மைச்சாலையில் வந்த ஹன்ரர் வாகனம் மோதியதில் அதில் பயணித்த முதியவருக்குக் காலில் பாதிப்பு ஏற்பட்டது .
பாதிக்கப்பட்டவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் .
இந்தச் சம்பவம் நேற்று பகல் நுணாவில் மேற்கில் இடம்பெற்றது.
இந்தப் பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய முதியவர் சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் உந்துருளியில் ஒழுங்கையொன்றிலிருந்து முதன்மைச் சாலைக்குள் நுழைந்தபோது, எதிர்த்திசையில் வந்த வாகனம் மோதியுள்ளது . (9)



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்த தவிசாளர்

கிளிநொச்சி, நவ.11
கடும் மழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இயக்கச்சிப் பகுதிக்குப் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் மற்றும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை உறுப்பினர்கள் நேரில் சென்று பிரதேச மக்களுடன் அவர்களது நிலை குறித்து கலந்துரையாடியுள்ளனர்.
நேற்று மாலை குறித்த பகுதிக்குச் சென்ற தவிசாளர் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய இடர் முன்னாயத்தம் தொடர்பாகவும், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார். குறித்த பயணத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உப தவிசாளர் முத்துக்குமார் கஜன்,உறுப்பினர்களான வீரவாகுதேவர், கோகுல்ராஜ், நமேஷ் போன்றவர்களும் கலந்துகொண்டனர் .



# மாணவர்களுக்கு மதிப்பளிப்பு

தென்மராட்சி, நவ.11
மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த 7ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.
அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும், சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகனும், மதிப்புறு விருந்தினராகச் சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செ.மயூரனும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தி பெற்ற நான்கு மாணவர்களும், 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகள் பெற்ற 11 மாணவர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.(9 ,159)



# கிளிநொச்சி மாணவர்களுக்கு உதவி

கிளிநொச்சி, நவ.11
நாவற்குழி வெண்ணையன்கட்டு வீரபத்திரர் ஆலய இந்து இளைஞர் மன்றம் மற்றும் நாவற்குழி இளைஞர்களும் இணைந்து போரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி பொன்னகர் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ஈருருளிகளை க் கையளிக்கும் நிகழ்வு நிகழ்வு இடம்பெற்றுள்ளது.
நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் பொன்னகர் கிராம அலுவலர் அலுவலகத்தில் ,நாவற்குழி வெண்ணையன்கட்டு வீரபத்திரர் ஆலய இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் தலைமையில் இடம்பெற்றது.
போரால் கடுமையாகப்பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும், வறுமைக்கோட்டுக்குட்பட்ட, நெடுந்தூரம் நடந்தே கல்வி கற்கச்செல்லும் திறமையான வறுமைக்கோட்டுக்குட்பட்ட மாணவனுக்கான ஈருருளியும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதியை கனடாவில் வசிக்கும் வல்லிபுரம் வழங்கியுள்ளார்.

# சாலையைச் சீரமைத்து வழங்குமாறு கோரிக்கை

தென்மராட்சி, நவ.11
தென்மராட்சி தெற்கு மறவன்புலோப் பகுதியில் குன்றும் குழியுமாகக் காணப்படும் வள்ளியம்மன் கோவில் சாலையைச்சீரமைத்து வழங்குமாறு உரிய அதிகாரிகளை அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.
நாவற்குழி- கேரதீவுச் சாலையிலிருந்து செல்லும் இந்தச் சாலையூடாகத் தினமும் மாணவர்கள், அரச பணியாளர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், கோவில்களுக்குச் செல்வோர் என நூற்றுக்கணக்கானோர் கோவிலாக்கண்டி வரை செல்கின்றனர். இந்தச் சாலையில் தினமும் பேருந்து சேவைகளும் இடம்பெறுகின்றன.
சாலை மிகவும் மோசமாகப் பழுதடைந்து குன்றும் குழியமாகக் காணப்படுவதால் நடந்து செல்வோரும், வாகனங்களில் செல்வோரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
தற்போது சாலையின் இருபுறமும் காணப்படும் நெல் வயல்களில் விதைப்புகள் ஆரம்பமாகிப் பயிர்கள் வளர்ந்து வரும் நிலையில் தினமும் பெருமளவு வாகனங்களில் வருவோர் சாலைகளில் வாகனங்களை நிறுத்திச் செல்வதால் ஏனைய வாகனங்களில் செல்வோர் தினமும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்ற தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தின் பல சாலைகள் மிகவும் குறுகிய சாலைகளாக உள்ளதால், வாகனங்களில் செல்வோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்தச் சாலைகளை அகலமாக்கிச் சீரமைத்துத் தருமாறு மக்கள் கோருக்கின்றனர்.
இதுதொடர்பாக தென்மராட்சிப் பிரதேச சபைத் தவிசாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,
"எமது சபைக்கான நிதி மூலங்கள் குறைவாகவே காணப்படுகின்றது. எமது பிரதேசத்தில் இந்த வீதி மட்டுமல்ல பல வீதிகள் இதே நிலமையில் தான் காணப்படுகின்றன. வீதிகளைச் சீரமைக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கும்போது அரசியல் குழப்பம் ஏற்பட்டுவிட்டது .
அண்மையில் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசனிடம் இந்த வீதிகளின் சீரமைப்புத் தொடர்பாக பேசினேன், வரும் ஏப்ரல் மாதத்துக்குள் அனைத்து வீதிகளையும் சீரமைப்பதாக அமைச்சர் தெரிவித்திருந்தார்.
ஆனால் தற்போது அரச குழப்ப நிலைகளால் இனிவரும் காலங்களில்த் தான் மீண்டும் முயற்சிக்க வேண்டும் -என்றார். (9 ,159)

## முட்கொம்பன் கிராமத்துக்கு போக்குவரத்து வசதி போதாது

*அதிகரிக்குமாறு மக்கள் கோரிக்கை*

கிளிநொச்சி பூநகரி முட்கொம்பன் கிராமத்துக்குப் போக்குவரத்து வசதிகள் போதுமானளவு இல்லை. அதனால் சிரமங்களை எதிர்கொள்வதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கும் சென்றுவருகிறோம். அதற்குப்பூநகரிஅல்லதுகிளிநொச்சி ஆகிய இடங்களுக்குச் செல்வதற்கு உரிய போக்குவரத்து வசதிகள் இன்னுமில்லை.

இந்த இக்கட்டான நிலையால், தமது தேவைகளை நிறைவு செய்வதில் பெரும் துன்பங்களை எதிர்கொள்கிறோம். போக்குவரத்து வசதிகள் இன்மையால் பயணத்தேவைகளுக்கு நாள் ஒன்றைச் செலவிட வேண்டிய நிலை காணப்படுகிறது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் எனப் பலரும் சிரமங்களை எதிர்க்கொள்கின்றனர்.

உரியவர்கள் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பாகத் தனியார் போக்குவரத்து துறையினரிடம் கேட்டபோது, முட்கொம்பனில் இருந்து அக்கராயன் மருத்துவமனைக்குச்சென்று வந்த பேருந்து பழுதடைந்துள்ளது. அதனால் சில நாள்கள் சேவை இடம்பெறவில்லை எனினும்நேற்றுமுன்தினம் தொடக்கம் சேவை மீளஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்று தெரிவித்தனர்.

கிளிநொச்சிஇலங்கைபோக்குவரத்து சபையினரிடம் கேட்டபோது, அங்கு நான்கு சேவைகள் இடம்பெறுகின்றன. அதனை அதிகரித்து வழங்குவதற்குப் போதிய பேருந்துகள் இல்லை. ஆரம்பத்தில் மாவட்டத்துக்கு 28 பேருந்துகள் காணப்பட்டன. தற்போது 23 பேருந்துகளே காணப்படுகின்றன- என்று தெரிவித்தனர். (4,6)

## வடக்கிலுள்ள சுகாதாரத் தொண்டர்களில் முதற்கட்டமாக 400 பேருக்கு அரச நியமனம்

*சுகாதார அமைச்சுத் தெரிவிப்பு*

**யாழ்ப்பாணம், நவ. 11**

**வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுபவர்களில் 400 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கச் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. அதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.**

அரச நியமனம் வழங்கப்படாதுள்ள சுகாதாரத் தொண்டர்களைப் பணியில் நிரந்தரமாக இணைக்க நீண்டகாலமாக முயற்சி எடுக்கப்பட்ட நிலையில், தற்போது சுமார் 400 பேரைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என்று அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் 590 தொண்டர்கள் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிவருகின்றனர்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சராக இருந்த ப.சத்தியலிங்கத்தின் காலம் தொட்க்கம் முயற்சி எடுக்கப்பட்டது. தற்போது முடிவை எட்டியுள்ளது.

அதன்படி சுகாதாரத் தொண்டர்களைச் சேவை மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதன் மூலமாக ஏற்படும் வெற்றிடத்துக்குப் புதியவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் பதவி உயர்வுக்குச் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கான பதவி உயர்வுக்கான அனுமதி கடந்த மாதம் வழங்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களின் இடத்துக்குப் புதியவர்களை நியமிப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தற்போது சுமார் 400 பேரை நியமிக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

எனினும் பல சுற்றறிக்கைகளைப் பின்பற்றவேண்டிய நிலமை உள்ளது.

அதன் பிரகாரம் நியமனத்தில் 30 வீதம் கட்டாயம் ஆண்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தல் வேண்டும் என்ற கடப்பாடு உள்ளது. அதன் அடிப்படையில் சுமார் 100 ஆண்கள் தேர்வு செய்யப்பட வேண்டும். அதனால் சங்கத்தில் சமர்ப்பித்த பட்டியலில் உள்ள ஆண்கள் அனைவரும் நியமனத்தில் உள்வாங்கப்பட அதிகம் வாய்ப்புள்ளது.

பெண் தொண்டர்களில் சேவை மூப்பின் அடிப்படையில் தேர்வுக்கான ஏற்பாடுகள் இடம்பெறவுள்ளன. அதே நேரம் மிகுதிப் பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்குவது பற்றி ஆராயப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (4,105)

## சிங்கள பாடப் போட்டிகளில் வென்றோருக்குப் பரிசளிப்பு

சாவகச்சேரி, நவ. 11

இரண்டாம் மொழியான சிங்கள பாடம் கற்கும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் இடைநிலை வகுப்புகளில் (தரம் 6-8) கற்கும் மாணவர்களுக்கே இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வலய நிலை மாகாண நிலை ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்று தேசிய நிலைக்குத் தெரிவான பிரணவி உட்பட வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



தென்மராட்சிக் கல்வி வலய அழகியல் பாட இரண்டாம் மொழிப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா ஆரியரத்ன தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வரணி ஆசிரிய மத்திய நிலைய வழிகாட்டலும் ஆலோசனையும் அலகின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.க.சந்திரகுமார் கலந்துகொண்டார்.

போட்டிகளில் பங்குபற்றிய 31 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் பேச்சு, பாடல், உரையாடல், நாடகம், தாளலயம், சமாதானப் பாடல் போன்றவையும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (4,9)

## ஓரிடத்தில் பொலிஸ் சோதனை மறுபுறத்தில் பணம் கொள்ளை

*சாவகச்சேரியில் சம்பவம்*

*சாவகச்சேரி, நவ. 11*

சாவகச்சேரி நகரிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் வீதியில் பொலிஸார் சோதனையில் ஈடுபட, இரண்டாவது கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வர்த்தக நிலையத்துக்கு வாள்களுடன் சென்ற கும்பல் கடை உரிமையாளரைத் தாக்கி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது.

வாள்களுடன் நின்றிருந்த அந்தக் கும்பலின் அடாவடி குறித்துப் பிரதேசமக்கள் கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய இரண்டு பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டது, பொலிஸார் வரவில்லை என்று அங்குள்ளவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**ஒன்றுதிரண்ட இளைஞர் குழு**

கொடிகாமம், சாவகச்சேரி பொலிஸ் நிலையங்களிலிருந்து பொலிஸார் வரவில்லை. அதனால் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் சுமார் 20 உந்துருளிகளிலும் வாகனங்களிலும் ஒன்றுதிரண்டு சென்றனர் அவர்களைக் கண்ட வாள்வெட்டுக் குழு அங்கிருந்து தப்பியோடி விட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த முகமூடி அணிந்திருந்த நபர்கள் வீட்டைத் தாக்கிச் சேதப்படுத்திவிட்டு தப்பியோடியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட வீட்டுக்காரர் கொடுத்த தகவலையடுத்து கச்சாய் வீதியில் பொலிஸார் பலர் சேர்ந்து தேடுதல் நடத்திக் கொண்டிருந்தனர். அதன்போதே குறித்த கும்பல் வர்த்தக நிலையத்தில் பொருள்கள் வாங்குவது போலச் சென்று பின்னர் வாள்களைக் காட்டி வர்த்தகரைத் தாக்கிவிட்டு வியாபார வருமானப் பணம் 50 ஆயிரம் ரூபாவை அபகரித்துச் சென்றுள்ளது.

உந்துருளிகளில் சென்ற இவர்கள் கொடிகாமம், சாவகச்சேரிப் பொலிஸ் எல்லைப்பகுதியில் வாள்கள் சகிதம் நின்று அட்டகாசம் புரிந்தனர். அங்குள்ளவர்கள் மீது கற்களால் தாக்கியுள்ளனர். (4,9,159)

## சாவகச்சேரி பனை தென்னைவள கூ.சங்கத்தின் கூட்டுறவு தினவிழா

தென்மராட்சி, நவ.11

96ஆவது பன்னாட்டு கூட்டுறவு தினத்தையொட்டி சாவகச்சேரி பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு தின விழா சாவகச்சேரி ஐங்கரன் மணிமண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

சங்கத் தலைவர் வ.தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம், வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் பொ.செல்வராசா, யாழ்ப்பாண பனை அபிவிருத்திச் சபைப் பொது முகாமையாளர் எம்.பி. லோகநாதன், தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம், பனை வள நிறுவனங்களின் நிறுவுநர் க.நடராசா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

சங்கத்திலிருந்து ஓய்வுபெற்ற அங்கத்தவர்கள், பணியாளர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சி.ஈ. சாதாரண தரம், உயர் தரம் ஆகிய பரீட்சைகளில் சித்தி பெற்ற மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற சங்க அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகள் மதிப்பளிக்கப்பட்டனர்.

கடந்த வருடம் சிறப்பாகப் பணியாற்றினார்கள் என்று தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள், பணியாளர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

இதுதவிர, கூட்டுறவு தினத்தையொட்டி 10 முன்பள்ளிகளிடையே சங்கம் நடத்தும் போட்டிகளில் வெற்றியீட்டிய சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (4,9,159)



## சிறார்களின் ஆக்கப் பொருள் காட்சி

சாவகச்சேரி, நவ. 11
சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நேற்றுமுன்தினம் காலை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.
நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சிக் கல்விவலயமுகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.பிரேமதாஸ், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
அவற்றை பொதுமக்களும் பெற்றோர்களும் பார்வையிட்டனர். (4.9.159)

# பைக்கற் பால்மாவை விடுத்து பசும்பாலையே அருந்துங்கள்

### கால்நடை வைத்தியர்கள் அறிவுறுத்து

கொடிகாமம், நவ. 11
பால்மா பைக்கற்றுக்களை விடுத்து பசுவிலிருந்து கறந்த பசும்பாலை அருந்துவதால் அதிகளவில் நன்மைகள் கிடைக்கின்றன. பசும்பாலை நேரடியாக அருந்த அனைவரும் முன்வர வேண்டும். பெற்றோர் பால்மா பைக்கற்றுகளை வாங்கிக் கொடுப்பதைவிட பசும்பாலை வழங்க முன்வாருங்கள்.



இவ்வாறு சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரிகள் க.சசிமாறன், செல்வி அனோஜா ஆகியோர் அறிவுறுத்தியுள்ளனர்.

கச்சாய் அ. த.க. பாடசாலையில் மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் பசும்பால் வழங்கப்பட்டுள்ளது. அந்த நிகழ்வில் கருத்துரைக்கையில் இவ்வாறு தெரிவித்தனர்.
பசும்பால் நுகர்வை ஊக்குவிக்கும் முகமாக சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தினர் பசும்பால் வழங்கினர்.
பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,
பால்மா பைக்கற்றுகளைவிட பசும்பாலை அருந்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி அவர்கள் அங்கு எடுத்துரைத்தனர்.
விசர் நாய்க் கடியிலிருந்து தப்புவது தொடர்பான அறிவுரைகளையும் அவர்கள் வழங்கினர்.
அனைத்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் அவர்கள் வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (4.159)

## வலிப்பு ஏற்பட்டதால் கிணற்றில் வீழ்ந்த இளைஞன் சாவு

யாழ்ப்பாணம்,நவ. 11
வலிப்பு ஏற்பட்ட இளைஞன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் கோப்பாய் வடக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த நல்லைநாதன் நிருசன்ராஜ்(வயது -28) என்பவரே உயிரிழந்தார்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
அவர் தனது வீட்டில் குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றுள்ளார்.
திடீரென்று வலிப்பு ஏற்பட்டுள்ளது. அதன்போதே கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
நெடுநேரமாகியும் அவரைக் காணவில்லை என்று கிணற்றடிக்குச்சென்ற போதே கிணற்றுக்குள் அவர் சடலமாகக் காணப்பட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணப்போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (4.8)

# சிகை அலங்கரிப்பு நிலையங்கள் ஞாயிறு மூடப்படுவதால் சிரமம்

### திறக்குமாறு சபை உறுப்பினர் கோரிக்கை

சாவகச்சேரி, நவ. 11
ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்களை மூடுவதால் அரச பணியாளர்கள், மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சிகை அலங்கரிப்பு நிலையங்களை இனிமேல் ஞாயிற்றுக்கிழமைகளில் திறக்க நகரசபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு சாவகச்சேரி நகரசபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் உறுப்பினர் ம.நடனதேவன் தனிநபர் தீர்மானமாக உரையாற்றினார்.
முன்னைய காலங்களில் புதன்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அலுவலர்கள், மாணவர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிவந்தனர். சங்கத்தின் தீர்மானத்தின் பிரகாரம் தற்போது ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மூடப்படுகின்றன. அதனால் அலுவலர்களும் மாணவர்களும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
எனவே அவற்றுக்கு முன்னர்போன்று புதன்கிழமைகளில் விடுமுறை வழங்கி ஞாயிற்றுக்கிழமைகளில் திறப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் - என்று கோரிக்கை விடுத்தார்.
இதற்குப் பதிலளித்த தவிசாளர், இது தொடர்பாக சிகை அலங்கரிப்பு நிலையங்களின் தாய்ச்சங்கத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.
இது தொடர்பாக சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர் ஒருவர் தெரிவித்ததாவது:
"சிகை அலங்கரிப்பு நிலையங்களை காலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை நடத்த முடியும். வாரத்தில் ஒருநாளாவது குடும்பத்தினருடன் சந்தோசமாக இருந்து உணவருந்த வேண்டும் என்பதற்காகவும், பிள்ளைகளுடன் ஒன்றாக இருந்து அந்நியோன்யமாகப், பாசத்துடன் இருக்க முடியும் என்பதற்காகவும் சங்க உறுப்பினர்களின் வேண்டுகோளின் பிரகாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் நிலையங்கள் மூடப்படுகின்றன.
அலுவலர்கள் மாலை நேரங்களில் தமது பிள்ளைகளுடன் பழகுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. சனி ஞாயிறு தினங்களிலும் பிள்ளைகளுடன் மகிழ்வுடன் இருக்கின்றனர். பாதிப்புக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கும் அலுவலர்களும் மாணவர்களும் அலுவலகம் மற்றும் பாடசாலை முடிந்த பின்னர் இரவு 10.00 மணிவரை வந்து தம்து தேவைகளை நிறைவேற்ற முடியும் - என்றார். (4.9)

## போதைப்பொருள் பாவனைக்கு எதிராகக் கவனவீர்ப்பு ஊர்வலம்

கொடிகாமம், நவ. 11
போதைப்பொருள் பாவனைக்கு எதிராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு ஊர்வலம் நடத்தினர்.
கல்லூரி முதல்வர் செ.பேரின்பநாதன் தலைமையில் இது நடைபெற்றது.
வேப்பம் இலைகள் குடற் புழுக்களைக் கட்டுப்படுத்துகிறது. குடல் வாயுவை அகற்றுகிறது. வீக்கம் மற்றும் உடலில் ஏற்படும் கட்டிகளைக் கரைக்கிறது. தோல் நோய்களான படை மற்றும் சிரங்கைக் கட்டுப்படுத்துகிறது. இவற்றின் பயன் கொண்டு தோல் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கலாம்.

**வேப்பம் விதை எண்ணெய்**

வேப்பம் விதையில் இருந்து பெறப்படும் 'விதை எண்ணெய்' விச முறிவை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. தோல் நோய்களைக் கட்டுப்படுத்தும். தலைமுடி உதிர்வையும், தலைப்பேன், பொடுகுத் தொல்லை மற்றும் இளநரையைக் கட்டுப்படுத்துகிறது.

**வேப்பம் பூ**

வேப்பம் பூக்கள் குடற் புழுக்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துகிறது. செவி தொடர்பான நோய்களை குணப்படுத்து கிறது.

**வேப்பம் பட்டை**

வேப்பம் பட்டை நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகிறது. முறைக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துகிறது. உடலுக்குப் பலத்தைத் தருகிறது. பல்வலியைக் குணப்படுத்துகிறது. பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய்ப் பிரச்சினையை தீர்க்கும் தன்மையைக் கொண்டுள்ளது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கடைநிலை அரசியல்!

நாடாளுமன்றம் திடீரென்று நேற்றுமுன்தினம் இரவு கலைக்கப்பட்டுவிட்டது. கடந்த சில வாரங்களாகக் கொழும்பில் கட்டவிழ்ந்துவந்த சம்பவங்களின் தொடர்ச்சியாக நாடாளுமன்றக் கலைப்புக் குறித்த எதிர்பார்ப்புகள், ஆருடங்கள்வெளியாகிவந்தபோதும்நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரச அதிபரின் நடவடிக்கையானது 2015இல் இலங்கை எதிர்பார்த்த ஒட்டுமொத்தக் கனவையும் கலைத்துப் போட்டுள்ளது.

அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்தது அரசமைப்புப்படி சரியா? தவறா? என்கிற வாதம் ஒருபுறம் இருக்கட்டும். 2015ஆம் ஆண்டில் கூட்டு ஆட்சி ஒன்றை உருவாக்கி அதன் தலைவராவதன் மூலமாக இலங்கை அரசின் தலைவராகவும் உருவாவதற்கான தனது விருப்பத்தை மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியபோது, அவருக்கு ஆதரவு தெரிவித்தஅனைத்துத்தரப்பினரதும்எதிர்பார்ப்பாகஇருந்தது "மாற்றம்" என்பதே. நாட்டின் பெரும்பான்மையான மக்கள் அந்த மாற்றத்தை விரும்பியதன் பயனாகவே மைத்திரியால் அரச தலைவர் பதவியைப் பெறவும் முடிந்தது.

"மாற்றம்" என்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அடிப்படை விடயங்களில் முக்கியமானது படைத்துறைமயப்படுத்தப்பட்ட ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து இலங்கையை மீண்டும் மக்களாட்சித்தத்துவதின்(ஜனநாயகத்தின்)பால்திருப்புவது. மகிந்த குடும்பத்தின் தவறான இரும்புப் பிடிக்குள் இருந்த நாட்டை மீட்டு அதன் 70 ஆண்டுகால உறுதியான மக்களாட்சி மாண்பைப் பாதுகாப்பது எல்லாவற்றிலும் முதன்மையான தேவையாக இருந்தது. அதற்காகவே நிறைவேற்று அதிகார ஆட்சி முறையின் அதிகாரங்களைக் குறைத்து, சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்குவது, அரசமைப்பின் 18ஆவது திருத்தத்தின் மூலம் மகிந்த ராஜபக்ச தனக்குரியதாக்கிக்கொண்ட அதிகாரங்களைக்குறைப்பது ஆகியன திட்டமிடப்பட்டன, பின்னர்அவை செயற்படுத்தப்பட்டன.

இவற்றைச்செய்வேன்என்று வாக்குறுதி வழங்கிப்பதவிக்கு வந்த மைத்திரி, நாடாளுமன்றம் அவற்றைச் செயற்படுத்துவதற்குஅனுமதி வழங்கி. ஆதரவளித்து வந்தார். அதனூடாக மக்கள் எதிர்பார்த்த மாற்றத்தை அவர் ஏற்றுக்கொண்டார் என்பதே பொருள். அப்போதே அவர் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையின் அதிகாரங்களை மானசீகமாக இழந்துவிட்டார். ஆனால் இன்றோ, மக்களின் விருப்புக்கு மாறாக, தனது சொந்த வாக்குறுதிகளுக்கு மாறாக, எந்த அதிகாரத்தை ஒழிப்பதற்காகப் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுப் பதவிக்கு வந்தாரோ அது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்திருக்கிறார் மைத்திரிபால.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அரச தலைவருக்கு இல்லை என்று கூறுகின்ற அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தைத் தானும் இணைந்து கொண்டு வந்த பின்னரும் அரசமைப்பில் உள்ள சில வியாக்கியானங்களைக் காரணமாகக் கூறிக்கொண்டு நாடாளுமன்றத்தை மைத்திரி கலைத்திருப்பது, அடிப்படையில் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதில் தனக்கிருக்கும் ஈடுபாடின்மையை மைத்திரி வெளிப்படுத்தியதாகவே கொள்ளவேண்டும்.

இத்தகைய செயல் முற்றிலும் மக்களை ஏமாற்றுகின்ற, மோசடி செய்கின்ற ஒரு நடவடிக்கையே தவிர வேறில்லை. தன்னை அரச தலைவர் பதவிக் கதிரையில் அமர்த்திய கட்சிகளை, அரசியல் தலைவர்களை, பொது அமைப்பினரை, குறிப்பாகத் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை , நட்பு நாடுகளின் தலைவர்களை என்று எல்லோருக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்திருக்கிறார் மைத்திரி. அதன் மூலம் மக்களாட்சியை இலங்கையில் மீண்டும் நிலையாக மலரச் செய்யும் கனவை கனதியாகச் சவாலுக்கு உட்படுத்தியிருக்கிறார்.

நாட்டு நலனுக்காக, மக்கள் நலனுக்காக அவர் இதைச் செய்திருந்தால் மன்னித்துவிட்டுப் போயிருக்கலாம். ஆனால், சொந்த அரசியல் நலனுக்காகவும், கட்சி நலனுக்காகவும் அவர் புரிந்திருக்கும் இந்தச் செயல் அவரை ஒரு கடைநிலை அரசியல்வாதியாக வரலாற்றில் பதிவு செய்திருக்கிறது.


இலங்கை மக்களின் துன்பியல் என்னவென்றால் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறைமை உருவாக்கப்பட்டதில் இருந்து அந்தப் பதவிக்கு வந்தவர்கள் எல்லோரும் தமக்கு முன்னர் பதவியிலிருந்தவர்களைவிடவும் மிக மோசமானவர்களாகத் தம்மை நிரூபித்து அந்தப் பதவியிலிருந்து அகன்று சென்றிருக்கிறார்கள் என்பதுதான். தானும் விதிவிலக்கல்ல என்பதை மைத்திரியும் இப்போது நிரூபித்திருக்கிறார்.


# நாடாளுமன்றத்தைக் கலைத்தது சட்டப்படியானதா?




நாட்டின் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அரசியல் பரபரப்பு அதிகரித்துள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி மகிந்த ராஜபக்சவை இலங்கையின் தலைமை அமைச்சராக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்ததை அடுத்து அரசில் கடும் நெருக்கடி ஏற்பட்டது. இந்த நிலையில், நவம்பர் 9ஆம் திகதி நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, 2019 ஜனவரி 5ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என அரச தலைவர் வெளியிட்டுள்ள வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

**"உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்காமல் தேர்தலை நடத்த முடியாது" எனகிறார் சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய.**







"உயர் நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்காமல் தேர்தலை நடத்த முடியாது" என சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். ஜனவரி 5ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என அரச தலைவர் அறிவித்துள்ள நிலையில், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரின் கருத்து, அரசியல் முரண்பாடு இருப்பதைத் தெளிவாகக் காட்டுவதாகத் தென் இலங்கை அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார். 19ஆவது அரசமைப்பின் பிரகாரம், நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு, நான்கரை ஆண்டுகள் முடியும் வரையில் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு அரச தலைவருக்கு அதிகாரம் இல்லை என அரசமைப்பில் நிபுணத்துவம் பெற்ற சட்ட வல்லுநர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

**"அரச தலைவருக்கு நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் இருக்கிறது" என்கிறார் முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா.**

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் அரச தலைவருக்கு இருப்பதாக முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா உள்ளிட்ட சிலர் கூறுகின்றனர். 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவேற்றப்பட்ட 19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய, நாடாளுமன்றத்தைக் கலைப்பது குறித்து அரசமைப்பின் 33 மற்றும் 70 ஆகிய இரண்டு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே வேளை, நான்கரை ஆண்டுகள் வரை நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

**ஐக்கிய தேசியக் கட்சியின்**
**அமைச்சர் அஜித் பி பெரேரா**

"நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு அரச தலைவர் எடுத்த தீர்மானம் அரசமைப்புக்கு முரணானது. சட்டத்துக்கு முரணான எந்தவோர் உத்தரவையும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஏற்கக் கூடாது என கேட்டுக் கொள்கிறோம்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் அஜித் பி பெரேரா கூறியுள்ளார். "குருதி சிந்தாத வகையில் இந்த நெருக்கடியைத் தீர்க்குமாறு நாம் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரிடம் கேட்கிறோம்" என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

**இது இலங்கையின்**
**எட்டாவது நாடாளுமன்றம்**


தலைமை அமைச்சர் முரண்பாட்டு நிலையால், நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி, ஸ்திரமற்ற நிலையைச் சீர்செய்வதற்காகவே நாடாளுமன்றத்தைக் கூட்டி, ஜனநாயகத்தை நிலைநாட்டுமாறு தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. இந்த வேளையில் நேற்றுமுன்தினம் 9ஆம் திகதி நள்ளிரவு அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

தற்போது கலைக்கப்பட்டிருப்பது எட்டாவது நாடாளுமன்றம். இது மூன்று வருடங்கள் மட்டுமே நீடித்திருக்கிறது. 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி இந்த நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடத்தப்பட்டிருந்தது. இதில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி, 13 மேலதிக ஆசனங்களுடன் 106 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 12 மேலதிக ஆசனங்களுடன் 95 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. இலங்கை தமிழரசுக்கட்சி இரண்டு மேலதிக ஆசனங்களுடன் 16 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. ஜே.வி.பி இரண்டு மேலதிக ஆசனங்களுடன் 6 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. ஈ.பி.டி.பி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன தலா ஒவ்வோர் ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தன. தேர்தலின் பின்னர் இந்த எட்டாவது நாடாளுமன்றம் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி கூடியது. இந்த நிலையில், 2018ஆம் ஆண்டு 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று நாடாளுமன்றம் அரச தலைவரிக் அதிவிசேட வர்த்தமானி மூலம் கலைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி என்றழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரச தலைவரின் உத்தரவுக்கு எதிராக நீதிமன்றம் செல்லவுள்ளதாகத் தனித்தனியாக அறிவித்துள்ளன.


*நன்றி - பி;:பி.சி தமிழ்*

# இலங்கை அரசின் ஜனநாயகப் பலவீனம் இது

ந.லோகதயாளன்



அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா மேற்கொண்ட தலைமை அமைச்சர் மாற்ற நடவடிக்கையால், புதிய அமைச்சரவை நியமனங்கள், பேரம் பேசல்கள்,கட்சித் தாவல்கள் என்பன இடம்பெற்றன. முடிவில் நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்பதை மைத்திரி-மகிந்த புதிய கூட்டணி ஊகித்திருக்கிறது. அடுத்த கட்டமாக அரச தலைவரே நேரடியாகக் கட்சிகளின் பல தலைவர்களுடன் பேசி மகிந்தவைத் தக்க வைப்பதற்கு முயற்சித்தார். அதுவும் முடியவில்லை. இதன் இறுதியாக 9ஆம் திகதியன்று, ஒரே நாளில் மகிந்த ராஜபக்சாவை இரண்டு தடவைகள் அழைத்து மந்திர ஆலோசனை நடத்தினார் மைத்திரி. இதன் பிரகாரம் அவசர அவசரமாகப் பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதேபோன்று அரச அச்சு நிறுவனமும் அரச படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்த இரண்டு முக்கிய பிரிவுகளும் இராணுவ மயப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து. தற்போதைய குழப்ப சூழலில் அடுத்தது என்ன நடக்கும் எனப் பொதுமக்களால் திடமாக ஊகிக்க முடிந்தது. ஒரு நாள்கூடத் தாமதிக்காது உடனடியாக 9ஆம் திகதி இரவு 8.30 மணிக்கே நாடாளுமன்றைக் கலைப்பதற்கான அரச இதழில் அரச தலைவர் கையொப்பம் இட்டுவிட்டார்.



**மகிந்தவின் வலையில் மைத்திரி சிக்கிகொண்டார்**

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனா, மகிந்த ராஜபக்சாவின் வலையில் சிக்கி கொண்டார் என எண்ணத்தோன்றுகின்றது. தற்போது பன்னாடுகளைப் பொறுத்தமட்டில் (சீனாவைத் தவிர) மகிந்த ராஜபக்சா பெரு விருப்பத்துக்குரியவராக இல்லை. இந்த விடயம் மகிந்தவுக்கு நன்றாகவே தெரியும். இதனால் தன்மீது உள்ள அந்தப் பார்வையை நீக்குவதற்கு மகிந்த முயன்றார். 2015ஆம் ஆண்டுத் தேர்தலில் தான் தோல்வி அடைவதற்கு உள்நாட்டுச் சக்திகளை விடவும் வெளிநாட்டுச் சக்தியே காரணம் என மகிந்த இன்றும் திடமாக நம்புகின்றார். திட்டம் போட்டார். அதாவது பன்னாடுகளின் பார்வையில் உள்ள முதலாவது எதிரி என்ற தன்னுடைய இடத்தை வேறு ஒருவருக்கு நகர்த்துவதன் மூலம் தற்காலிகமாகத் தப்பித்து ஆட்சிக்கு வர முடியும் என மகிந்த நம்பினார். அரச தலைவர் ஊடாக அவர் தலைமை அமைச்சராக வந்தமையால் சர்ச்சை வலுப்பெற்று பன்னாடுகளின் கண்டனங்கள் அரச தலைவருக்கு எதிராகக் குவிந்தன. மகிந்த ஆட்சி அமைக்கும் முயற்சியில் தீவிரம் காட்டினார். 113 பெரும்பான்மை கிடையாது என்ற விடயத்தை அவர் திடமாக அறிந்தார். இதனால் உள்ள நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்துவதில் தீவிரம் காட்டினார். இதற்காக நாடாளுமன்றைக் கலைப்பதற்கு மைத்திரி விடுத்த கோரிக்கையைத் துருப்புச் சீட்டாக எடுத்து அதை ஏற்றார். இதனால் இலாபம் அடைந்தது மகிந்த என்பதோடு, மைத்திரி மகிந்தவின் வலையில் சிக்கிகொண்டும் விட்டார்.

**தேர்தல் ஆணைக்குழு விழிபிதுங்கித் திணறுகின்றது**

இந்தச் சூழலில் அடுத்த தேர்தலுக்காக அரச தலைவர் நாள் குறித்திருக்கிறார். இதனால், தேர்தல்கள் ஆணைக்குழு விழி பிதுங்கி நிற்கின்றது. 19ஆம் திருத்தச் சட்டத்தை அரச தலைவர் அடியோடு மீறும் வகையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டு வருகின்றது. இதனால், உச்ச நீதிமன்றின் அபிப்பிராயத்தைப் பெற வேண்டும் என ஒரு கருத்துக் கூறப்பட்டு வருகின்ற நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முடிவு தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று தற்போதைய அரச தரப்பினர் மத்தியில் இடம்பெற்றுள்ளது. அந்தக் கலந்துரையாடலின்போது தேர்தல்கள் ஆணைக்குழுவைக் கலைக்க முடியுமா? அவ்வாறு கலைப்பதற்கு என்ன வழிமுறை இருக்கிறது? எனவும் ஆராய்ந்துள்ளனர். இவ்வாறு ஆராயப்பட்ட இடத்தில் கூடியிருந்தவர்களில் ஒருவர் அடுத்த நிமிடமே அதைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் காதில் போட்டுவிட்டார். இதனால் நாடு இப்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியை ஒத்த நெருக்கடியைத் தேர்தல்கள் ஆணைக்குழுவும் எதிர்கொண்டுள்ளது.

**இங்கேதான் பன்னாடுகளின் விழிப்பு முக்கியப்படுகின்றது**

இலங்கையில் போர் இடம்பெற்ற காலத்திலும் சரி, போர் ஓய்ந்த பின்பும் சரி தமது அரசியலுரிமைகள் தொடர்பில் தமிழர்கள் தரப்பு பன்னாடுகளுக்கு முன்வைத்த நியாயப்பாடுகளை எந்தவொரு வல்லரசுகளும் கருத்தில் எடுத்திருக்கவில்லை. இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள அரசு உண்டு. ஜனநாயகம் உண்டு. அந்த நாட்டுக்கு இறைமை உண்டு. அதனால் உங்கள் பிரச்சினையை அந்த அரசுடனேயே பேசுங்கள். உள் நாட்டுக்குள் தீர்வு காணுங்கள். பன்னாடுகள் பக்க பலமாக இருக்கும் என்பதாகவே பன்னாடுகளின்பதில்கள் அமைந்திருந்தன. ஆனால் இந்தனை வல்லரசுகளையும் திசை திருப்பும் வகையில், பிரிவினை யாகிப்போன இரண்டு தலைவர்களும் ஒன்றாகி வல்லரசுகளுக்கே வித்தை காட்டிவருகின்றனர். போர் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் ஐ.நா முதல் அனைத்து நாடுகளிடமும் தமிழர் தரப்பு இவ்வாறான நிலமையே இலங்கையில் ஏற்படும். இந்த இலங்கை அரசை நம்பி எம்மை ஈடு வைக்காதீர்கள் என உரத்துக் குரல் எழுப்பி வருகின்றது. அந்தக் குரலை அவர்கள் செவிமடுத்திருக்கவில்லை. ஆனால் இன்று இலங்கை அரசு சீனா வீசிய வலையில் சிக்கிவிட்டது. அந்த வலை யைச் சீனா இழுத்துச் செல்வதற்கு முன்பு ஜனநாயக ரீதியில் இலங்கையை மீட்க வேண்டும் என்பதையாவது புரிந்து கொள்வார்களா? இன்றைய சூழலில் இலங்கையின் ஒரு பார்வையாளர், நடு நிலையாளர் என்ற விடயத்தைத் தாண்டி முழுப் பொறுப்புமிக்கவர்களாக மாற வேண்டிய வரலாற்றுக் கடமைபன்னாட்டினருக்குஉண்டு. மாறாகத் தற்போதும் கை கட்டி வேடிக்கை பார்த்து விட்டுப் பின்னர் கணக்கெடுப்பில் பங்கு கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

## ஆசிரியருக்கான கடிதம்

### வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் விடயங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்ப டுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க!

ஆனால், மேற்குறித்த விடயங்களைத் தவறாது இணைத்து அனுப்பவும். எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

### உரியவர்கள் முன்வருவார்களா...?

கடந்த 6ஆம் மாதம் 20ஆம் திகதியளவில் போக்குவரத்து வாகன அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான அனைத்துப் பரீட்சைகளும் முடித்து யாழ். மாவட்டச் செயலகத்தினூடாக எமது ஆவணங்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் இன்றுவரை எமக்கு அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லை. நாம் யாழ். செயலகத்தில் உரிய பகுதியினருடன் தொடர்புகொண்டபோது, தாம் அவற்றைக் கொழும்புக்கு அனுப்பியதற்கான பதிவுகளைக் காட்டினர். பிரதம தபால் அலுவலகத்துக்குப் பலமுறை சென்று பார்த்ததில் அங்கும் வரவில்லை. நடமாடும் சேவை யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது அங்கு சென்றும் விசாரித்தோம். இறுதியாக எமக்குச் சொல்லப்பட்ட பதில் 6ஆம் மாதம் நடந்த தபால் ஊழியரின் வேலை நிறுத்தத்தின்போது பொதிகள் தேங்கியதால் எமது ஆவணங்களும் எங்காவது தவறியிருக்கலாம் என்பதுதான். இந்தநிலையில் நாம் எமது வாகனத்தை எடுத்துக்கொண்டு வெளியேறவும் முடியாது. தொழிலுக்குச் செல்லும் போதும், ஏனைய தேவைகளுக்காகவும் வெளியே செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இதற்கு எங்கே முடிவு தேடுவது என்று தெரியவில்லை. எனவே எமது அனுமதிப்பத்திரத்தைப்பெற ஏதாவது நடவடிக்கை எடுக்கவோ, பதில் தரவோ உரியவர்கள் முன்வருவார்களா



390

நித்திய சுகம்

உடலே கோயில்

# நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த ஒன்றிணைவோம்!

இ.சுரேந்திரகுமார்

இன்றைய கால நகர்வில் நீரிழிவானது உலகை ஆட்டிப்படைக்கும் நோயாக மாறி வருகின்றது. நீரிழிவுக்கானபன்னாட்டுக்கூட்டமைப்புமேற்கொண்ட ஆய்வுத் தகவலின் அடிப்படையில் தற்போது உலகில் 415 மில்லியன் மக்கள் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தத்தொகை 2040ஆம்ஆண்டளவில் 640மில்லியனாக அதிகரிக்கும்எனகணிக்கப்பட்டுள்ளது. இதில்தென்கிழக்கு ஆசியாவில் மட்டும் 78.3 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர் என்றும், இந்தத் தொகை 2040 ஆம் ஆண்டளவில் 140.2 மில்லியனாக இருக்கும் என்றும் நீரிழிவுக்கான பன்னாட்டுக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆகவே இந்த நோயின் தாக்கம் என்பது எவ்வளவு பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியது என்பதை நாம்உணர்ந்துகொள்ளவேண்டும். இன்றுமக்களிடத்தே காணப்படுகின்றமிகப்பெரியகேள்வியாதெனில்எவ்வாறு நோயைக்கட்டுப்படுத்தலாம்என்பதே. உண்மையில்இதுவரைகாலமும் இதுபோன்ற பல நோய்கள் தாக்கத்தை ஏற்படுத்தியபோதும், அவற்றைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளதுடன் அதற்காக மருத்துவத் துறை அதிக பிரயத்தனங்களை மேற்கொண்டுள்ளது.

**நோய்க் காரணிகளை கட்டுப்படுத்துவதில் உள்ள இடர்பாடுகள்**

அந்தவகையிலேநீரிழிவைக்கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வருவதற்கு எவ்வாறான விடயங்கள் சவாலாக அமையப் போகின்றன என்பது பற்றி இப்பகுதியில் நோக்குவோம்.

ஏற்கனவேகுறிப்பிட்டதுபோன்றுகட்டுப்பாட்டுக்குள்கொண்டுவரப்பட்ட நோய்களான 'அம்மை, இளம்பிள்ளைவாதம், மலேரியா' போன்றவை தொற்றுநோய்களாகக் காணப்படுகின்றன.

இவற்றைக்கட்டுப்படுத்துவதற்குதடுப்பூசிமருந்துகள்கண்டுபிடிக்கப்பட்டன. அதை நோயாளர்களுக்கு உள்ளீடாகக் கொடுத்தன்மூலம்பெரும்பாலானநோய்த்தடுப்புச்செயன்முறைகள் வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டன. ஆனால், நீரிழிவுநோயைஎடுத்துநோக்கின், இவ்விதமான செயற்பாடுகள்ஊடாகஅதைக் கட்டுப்படுத்தமுடியாது. இது பல்வேறுகாரணிகளால்ஏற்படுத்தப்படுகின்றஒருதொற்று அல்ல. நீரிழிவு என்பது நீண்ட காலநோயாகும். இந்த நோயானது தொற்றுநோய் போன்று உடனடியாக ஏற்படுவதில்லை. எனவே நீரிழிவைக் கட்டுப்படுத்த வாழ்நாள் முழுவதும் அதற்குரிய கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல் என்பது மிகவும் அவசியமாகின்றது.

கட்டுப்பாட்டு முறைகளைக் கடைப்பிடிப்பதற்கு முன்பாக, நோய்க்காரணிகள்எவ்வாறுநோயைஉருவாக்குகின்றன என்பதுதொடர்பில்அறிந்துகொள்ளுதல்பொருத்தமானது. ஒருவருக்கு நீரிழிவு நோயானது பல்வேறு படிமுறைகளினூடாக ஏற்பட்டு, உடலில் பல்வேறு வகையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே இந்த நோயைத் தடுக்கவேண்டுமெனில் அதைப் பிறப்பில் இருந்து ல்கக்கொள்ளுதல் மிகவும் முக்கியமானது.

**நோயை ஏற்படுத்தும் காரணிகள்**

இனி நோயை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்ற காரணிகள் எவை என்பதை அறிந்து கொள்வோம்.

நாம்உணவைஉட்கொள்வதற்குமுக்கிய காரணங்களில் ஒன்று உடல் இயங்கு நிலைக்குத் தேவையான சக்தியைப் பெறுதலாகும். இந்தச் சக்தியை உணவிலுள்ள காபோவைதரேற்றுகள் மற்றும் இலிப்பிட்டுக்கள் மூலம்நாம்பெற்றுக்கொள்கின்றோம். இந்த உணவுப்பதார்த்தங்களைஉடலில் பல்வேறு உறுப்புக்களுக்கு அனுப்பிவைக்கும் பணியை உடலும், குருதிச் சுற்றோட்டத் தொகுதியும் மேற்கொள்கின்றன. உடலில் உள்ளபெரும்பாலான கலங்கள்குருதிக்கோளங்களைத்தமதுசக்தித்தேவைக்குப் பயன்படுத்துகின்றன. எனவே கலங்களுக்குக் குருதிக் குளுக்கோசை ஒழுங்குமுறையாக வழங்கும் பணியை ஈராலும், குருதிச் சுற்றோட்டத் தொகுதியும் செவ்வனே மேற்கொள்கின்றன.




அகநீர்ச் சுரப்பிகளில் இருந்து சுரக்கப்படும் ஓமோன்கள் இன்சுலின்மற்றும்குளுக்கோசின்அளவைக்கட்டுப்படுத்த உதவுகின்றது. இந்தக் கட்டுப்பாடானது இன்சுலின் சுரப்பான்அளவிலோஅல்லதுஅதன்செயற்படுதிறனிலோதங்கியுள்ளது. எனவே இன்சுலின் சுரப்பில் ஏற்படும் குறைபாடோ அல்லது இன்சுலின் செயற்படும் நிலையிலுள்ள குறைபாடுகளோஒருவரில்நீரிழிவுநோய்ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

எனவே இன்சுலின் சுரப்பு மற்றும் அதன் செயற்படுநிலையைப்பேணக்கூடியவகையில்எமதுவாழ்க்கைமுறையை அமைத்துக்கொள்வதுடன், அவற்றில்பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளைத் தடுத்தலே ஒருவர் தன்னை நீரிழிவு நோயில் இருந்து பாதுகாப்பதற்கான வழிவகையாகும்.

இனி நீரிழிவை ஏற்படுத்தும் முதன்மைக் காரணிகள் எவை எனப் பார்ப்போம். பின்வரும் காரணிகளை நீரிழிவுக்கான பன்னாட்டுக் கூட்டமைப்பு முதன்மைக் காரணிகளாகப் பட்டியலிட்டுள்ளது.

- அதிகூடிய உடற்பருமன்.
- ஆரோக்கியமற்ற உணவு.
- உடல் உழைப்பு இன்மை.
- குடும்ப அங்கத்தவரிடையே நீரிழிவு காணப்படுதல்.
- உயர் குருதியமுக்கம்.
- வயோதிபம்
- குளுக்கோசின் சகிப்புத் தன்மை குறைதல்.
- கர்ப்பகால நீரிழிவு நோய்.
- கர்ப்பகாலத்தில் சரியாக உணவு உண்ணாது போதல்.

**நோய்த் தடுப்பு முறை**

எனவே நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்கு ஒருவர் வாழ்க்கை முறையைச் சரியாக அமைத்துக்கொள்ள வேண்டும். இதைச் சுருக்கமாகக்கூறவேண்டுமாயின், ஆரோக்கியமான உடல்நிறையைப்பேணுவதும், மிதமானஉடல் உழைப்பை ஏற்படுத்தலும் நீரிழிவில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளாகும். ஆரோக்கியமான உடல் நிறையை எவ்வாறு அடையவேண்டுமெனில், ஆரோக்கியமான உணவுகளை உடலின் சக்தித் தேவைக்கு ஏற்ப உள்ளெடுத்தல் என்பது மிகவும்அவசியமாகின்றது. ஒவ்வொருவருக்கும்தேவைப்படும் சக்தியானது அவர்களின் பால் நிலை, வயது மற்றும் உடல்உழைப்புஎன்பவற்றில்முக்கியமாகத்தங்கியுள்ளது. எனவேஒருவர்தனக்குச்சாதாரணமாகஎவ்வளவுஅளவு சக்தி தேவைப்படுகிறது என்பதை அறிந்திருத்தல் அவசியமாகின்றது. இதன்பின்னர்தான்உள்ளெடுக்கும்உணவுப் பொருள்களைக் கருத்திற்கொண்டு அவற்றின் அமைப்பு, அளவு என்பவற்றின் மூலம் அன்றாடம் உள்ளெடுக்கும் உணவால் கிடைக்கப்பெறும் சக்தியின் அளவைக் கணிப்பிடுதல் அவசியமானது. இந்த அளவானது தேவைக்கு அதிகமாக இருப்பின் அவை கொழுப்பாக உடலில் சேமிக்கப்படுகின்றன. உடல்அங்கங்களில் கொழுப்புப் படிவடைதலேஇந்த நோயின் உருவாக்கத்துக்கான ஆரம்பக்காரணங்களாகச்சொல்லப் படுகின்றன.

கொழுப்புப் படிவதைத் தடுப்பதனூடாகவோ அல்லது அகற்றுவதனூடாகவோ நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுப்பது மட்டுமல்லாது, நீரிழிவுநோய் ஏற்பட்டவர்களில் அந்த நோயால் ஏற்படும் தாக்கத்தைஇயன்றளவுவினைத்திறனுடன்கட்டுப்படுத்த முடியும்என அண்மைய ஆய்வுகள்சுட்டிக்காட்டுகின்றன.

**உடல் நலத்தையும் ஆரோக்கியத்தையும் முதன்மைப்படுத்துவோம்!**

கொழுப்புப் படிதலைக் கட்டுப்படுத்த கிரமமாக உடல் இழைப்பை ஏற்படுத்தக்கூடிய உடல் உழைப்பு அல்லது கிரமமானஉடற்பயிற்சிமிகவும்அவசியமாகின்றது. இதை நாம் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும். மேலும் மதுபானப்பழக்கவழக்கம், புகைத்தல்மற்றும்வாழ்வில்ஏற்படும் மன அழுத்தம் போன்றவை கரரணமாகவும் உடலில் கொழுப்புபடிவு ஏற்படுகின்றது. எனவே ஒருவர் மதுபானப் பழக்கத்தை அல்லது புகைத்தலைக் கைவிடுவதன் மூலமும் நீரிழிவுநோயின் தாக்கத்தில் இருந்து விடுபடலாம்.

இன்றைய அவசர உலகில் நாம் எமது தேவைகளை அதிகரிக்கச் செய்வதன் ஊடாக மன அழுத்தத்துக்கு உட்படுகின்றோம். எனவே மன அழுத்தத்தைத் தடுக்கக்கூடிய வகையில் எமது வாழ்க்கையை அமைத்தல் என்பது இன்றியமையாததாகும். நீரிழிவு நோயாளிகளுள் பலர் மன அழுத்தம் காரணமாகவும், நோயின் பக்கவிளைவு காரணமாகவும் குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கின்றனர்: கட்டுப்பாடற்ற நீரிழிவால் ஏற்படும் விளைவுகளை அனுபவித்துத் துன்பப்படுவதை அவதானிக்க முடிகிறது.

ஏனவேதான் பன்னாட்டு நீரிழிவுக்கான கூட்டமைப்பு ஒருவர் குறைந்தது ஒருநாளைக்கு 6 தொடக்கம் 8 மணித்தியாலயங்கள் நித்திரை செய்வது அவசியம் என அறிவுறுத்துகிறது. எனவே வாழ்க்கையை ஆரோக்கியமான முறையில் வாழ்வதே நீரிழிவு நோயில் இருந்து விடுபடுவதற்கான சிறந்த வழிமுறையாக இருக்க முடியும். இதை உணர்ந்துகொண்டும், சிந்தனைபூர்வமாகத் தெரிந்துகொண்டும் வாழ்வியல் முறைகளில் மாற்றங்களைக் கண்டுகொள்ள அனைவரும் ஒன்றிணைந்து முயற்சிப்போம். உடல்நலத்தையும் ஆரோக்கியத்தையும் முதன்மைப்படுத்துவோம்!

கட்டுரையாளர்:
சமூக மருத்துவ நிபுணர்,
மூத்த விரிவுரையாளர்,
தலைவர்,
சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை, மருத்துவபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


## நீரிழிவு நடை பயணம்!



பன்னாட்டு நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனைநீரிழிவுச்சிகிச்சைநிலையம், மக்கள் மத்தியில்நீரிழிவுநோய்தொடர்பானவிழிப்புணர்வைஏற்படுத்தும் விதமாக ஒழுங்கு செய்துள்ள 'நீரிழிவு நடை பயணம்' எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு யாழ். போதனா மருத்துவமனை முன்றலில் இருந்து ஆரம்பமாகும். இந்த விழிப்புணர்வு நடை பயணத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனை நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஞாயிறு சிறப்பம்சம்
சூரியகாந்தி
உதயன்
11.11.2018

# கலைக்கப்பட்டது மன்று...! கலகக்காரன் மைத்திரி...!



கட்டுரை

கு. டிலீப்

'நந்தவனத்தில் ஓர் ஆண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி'

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் செயற்பாடுகள் இப்படித்தான் அமைந்திருக்கின்றன. 'நல்லாட்சி' என்ற கோலைக் கொடுத்துவிட, முன்னைய ஆட்சியாளரான மகிந்தவை விட மோசமான, சர்வாதிகார ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார் மைத்திரி.

கடந்த இரண்டு வாரங்களாக இலங்கையில் அரசியல் களம் எப்போதும் இல்லாத திடீர் திருப்பு முனைகளைச் சந்தித்து வருகின்றது. திரைப்படங்களின் 'க்ளைமாக்ஸ்' காட்சிகளை விஞ்சும் அளவுக்கு இலங்கையில் அரசியல் நிலவரம் இருக்கின்றது. எதையும் யோசிக்காது, அரசமைப்பை மதிக்காது அதிரடியாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுக்கும் முடிவுகள், ஒட்டுமொத்த இலங்கையையும் பார்த்துப் பன்னாட்டுச் சமூகம் பல்லிளிக்கும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கின்றது.

மகிந்த ராஜபக்ச நிறைவேற்று அதிகார அரச தலைவராக இருந்து கொண்டு சர்வாதிகார ஆட்சி நடத்தினார். மனித உரிமைகளை மதிக்கவில்லை. ஊடக சுதந்திரத்தைக் குழிதோண்டிப் புதைத்தார். ஜனநாயகத்தைக் கொடூரக் கரங்களால் அடக்கி ஒடுக்கினார். அவரது ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்கு முடிவு கட்டுவதற்காக, பன்னாட்டுச் சமூகமும் இலங்கையின் மனித உரிமைச்செயற்பாட்டாளர்களும் சேர்ந்து பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவைத் தெரிவு செய்தனர்.



2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் ஊடாக அரியணை ஏறினார் மைத்திரிபால சிறிசேன. 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகத் தனக்கு இருந்த அதிகாரங்களை அவர் குறைத்தார். இவ்வாறு அதிகாரக் குறைப்புச் செய்த ஒரே ஒரு தலைவர் தானே என்று ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரிலும் அவர் மார் தட்டினார். பல இடங்களிலும் இதைத் திரும்பத் திரும்பச் சொல்லி, தனக்குப் பதவி ஆசையோ, அதிகார வெறியோ இல்லை என்பதை நிரூபிக்க முயன்றார். நரி என்னதான் வேடமிட்டாலும் ஊளையிடும்போது அதன் சுயரூபம் வெளிவரத்தானே செய்யும். மூன்று ஆண்டுகளாக மைத்திரி அணிந்திருந்த 'நல்லாட்சி' முகமூடி கழன்று விழுந்துவிட்டது.

**ஜனநாயகத்தைக் கேலிக்குள்ளாக்கினார் மைத்திரி**

கடந்த 26ஆம் திகதி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியிலிருந்து தூக்கிவிட்டு மகிந்த ராஜபக்சவை நியமித்தார். எவரைப் பரம எதிரியாக கணித்தாரோ அவரையே தலைமை அமைச்சராக நியமித்தார் மைத்திரிபால. 2015ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்திருந்தால், மகிந்த தன்னைக் கொன்று புதைத்திருப்பார் என்று கூறிய மைத்திரி, அதே மகிந்தவுக்குப் பதவி கொடுத்து தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு முரணாக அரச தலைவர் இந்தக் காரியத்தை மேற்கொண்டார். பலரும் புருவத்தை உயர்த்தி மைத்திரியின் ஜனநாயக விரோதச் செயலை வியப்புடன் பார்த்தனர். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத ஒருவருக்குப் பதவியைக் கொடுத்து ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்கினார்.

நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு பல் முனை அழுத்தங்கள் வந்ததும், நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் போட்டுடைத்தார் மைத்திரி.

**பேரம் பேசல்களும் தோல்வியில் முடிந்தன**

பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்காக மைத்திரி- மகிந்த அணி பேரம் பேசல்களைத் தொடங்கியது. அமைச்சுப் பதவி, கோடிகள் என்று எல்லாவற்றையும் வாரியிறைத்து, ஆள்களை மடக்கிப் போடத் தொடங்கினர். மகிந்த ராஜபக்சவின் சகோதரரும், 'மிஸ்ரர் ரென் பேசன்ர்ரேஜ்' என்று அழைக்கப்படுவருமான பசில் ராஜபக்ச இந்தப் பேரம் பேசல்களில் வலு கெட்டிக்காரர். பலருடனும், பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார். அவரின் முயற்சிக்கு வெற்றி கிடைக்காமல் இல்லை. 8பேரை மாத்திரம் அவர்களால் விலைக்கு வாங்க முடிந்தது. அதற்கு மேல் அவர்களால் நகர முடியவில்லை.

வழமைக்கு மாறாக முஸ்லிம் கட்சிகள் ஓரணியில் நின்றன. ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைச் செய்வதற்கு போடப்படும் எலும்புத் துண்டுகளை கௌவுவதற்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை. இதனால் பேரம் பேசல் ஊடாக ஆள்களை விலைக்கு வாங்குவது ஒரு கட்டத்துக்கு மிஞ்சி நகரவில்லை.

நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு எல்லாப் பக்கத்தாலும் அழுத்தத்துக்கு மேல் அழுத்தம் அரச தலைவர் மைத்திரிக்கு பிரயோகிக்கப்பட்டது. 16ஆம் திகதி வரை ஒத்தி வைத்த நாடாளுமன்றத்தை 14ஆம் திகதி நடத்த இணங்கினார். அதற்கிடையில், முடிந்த பலத்தைப் பிரயோகித்து ஆள்களை வாங்குவதற்கு அவர்கள் திட்டமிட்டனர்.

14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடியதும், மகிந்த தரப்பு பெரும்பான்மையை நிரூபித்தே ஆகவேண்டும் என்று சபாநாயகர் கரு அதிரடியாக முடிவெடுத்து அறிவித்தார். இது அரச தரப்பை ஆட்டங்காணச் செய்து விட்டது. அரச தரப்போ தங்களிடம் பெரும்பான்மை இல்லை என்பதை மறைத்து, இன்னும் கொஞ்சக் காலத்துக்கு இதே நிலையில் நகர்ந்து, ஆள்களை விலைக்கு வாங்குவதற்குத் திட்டமிட்டிருந்தது.

**நாடாளுமன்றம் கூடுவது பற்றிய குழப்பமும் மைத்திரி அணி எதிர்கொண்ட சிக்கலும்**

14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடியது அரச தலைவரின் உரை மாத்திரமே இடம்பெறும் என்றும், அதன் பின்னர் நாடாளுமன்றத்தை ஒத்தி வைப்பதற்காக தீர்மானம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அரச தரப்பு திரும்பத் திரும்பக் கூறி வந்தது. ஆனால் சபாநாயகர் கரு விடாப்பிடியாக, 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடியதும் பெரும்பான்மையை நிரூபிக்கும் வாக்கெடுப்பு நடக்கும் என்று அறிவித்தார். ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகமும், சபாநாயகரின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தன. இது அரச தரப்புக்கு மேலும் சிக்கலைக் கொடுத்தது.

**நாடாளுமன்றம் கலைக்கப்படுவதை பல உறுப்பினர்கள் விரும்பியிருக்கவில்லை**

கடந்த புதன் கிழமை, நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பான பரீட்சார்த்த முயற்சியை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்தார். சர்சைக்குரிய தீர்ப்புகளின் நாயகன் என்று வர்ணிக்கப்படும் முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வாவும் மைத்திரிபால சிறிசேனவும் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இதன் பின்னர், நாடாளுமன்றம் கலைக்கும் முடிவை நோக்கி அரச தலைவர் நகர்ந்தார். ஆனால் அன்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டத்தில் பங்கேற்ற நாடாளமன்ற உறுப்பினர்கள் பலர், நாடாளுமன்றம் தற்போது கலைக்கப்படுவதை விரும்பியிருக்கவில்லை. அவர்களில் பலர் இந்த முறையே நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள். இப்போது கலைத்தால் அவர்களுக்கு ஓய்வூதியமும் கிடைக்காது. இதனால் நாடாளுமன்றம் கலைப்பதை தள்ளிப்போடுமாறு மைத்திரிக்கு அழுத்தம் கொடுத்தனர்.

**நாடாளுமன்றைக் கலைப்பதற்கான திட்டம்**

நாடாளுமன்றத்தைக் கலைக்க அரச தலைவர் திட்டம் தீட்டும் விடயம் ஊடகங்களில் தீயாகப் பரவிவிட்டது. உடனே அதை மறுத்து அரச தகவல் திணைக்களத்தின் ஊடாக அரச தலைவர் அறிக்கை வெளியிட்டார். மறு நாள் வியாழக் கிழமை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் நடந்தது.

அந்தக் கூட்டத்துக்கு அலைபேசிகள் கொண்டு வருவதற்கே தடை விதிக்கப்பட்டது. மூடிய இரகசியக் கூட்டமாக அது நடந்தது. அந்தக் கூட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலரும், அமைச்சருமான துமிந்த திசாநாயக்க பங்கேற்கவில்லை. துமிந்த, மகிந்தவின் ஆட்சியை விரும்பியிராத ஒருவர். வேறு வழியில்லாமல் அமைச்சுப் பதவியை ஏற்றிருந்தார். அன்றைய கூட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன காரசாரமாகப் பேசினார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பது தனது பொறுப்பு என்று கூறிய அவர், நீங்கள் நிம்மதியாகச் சென்று நித்திரை கொள்ளலாம் என்று கூறியிருந்தார்.

**மகிந்த - மைத்திரி மந்திர ஆலோசனையின் முடிவில் நாடாளுமன்றைக் கலைக்கும் முடிவு**

மறுநாள் காலை அதாவது, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையும் அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவை எடுக்கவில்லை. அன்று மதியம் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும், தலைமை அமைச்சர் மகிந்தவுக்கும் இடையில் சந்திப்பு நடந்தது. அரச தலைவர் செயலகத்தில் இரகசிய மூடிய சந்திப்பாக நடந்தது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை நிரூபிக்க முடியாத நிலை ஏற்பட்டதை இருவரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றைச் சேர்ந்த 39 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரணியில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர். அதனை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, மகிந்தவுக்கு எடுத்துரைத்தார். நடுநிலமை வகிக்குமாறு கோரிக்கைவிடுத்திருந்ததை அவர்கள் நிராகரித்திருந்ததையும் மகிந்தவுக்கு கூறினார். அத்துடன், துமிந்த திசாநாயக்க போன்றோரை நம்ப முடியாது என்பதையும் மைத்திரி சுட்டிக்காட்டினார். நீண்ட நேரக் கலந்துரையாடலின் பின்னர், மைத்திரியின் கையில் முடிவை விட்டு மகிந்த வெளியேறினார்.

வெள்ளிக்கிழமை மாலை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய, தங்களிடம் பெரும்பான்மை இல்லை என்பதை பகிரங்கமாக ஒத்துக் கொண்டார்.

அவரது அறிவிப்பு வெளியான சில நிமிடங்களில், மைத்திரி மகிந்த இடையிலான இரண்டாவது இரகசிய சந்திப்பு நடந்தது. கொப்பேக்கடுவ விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது. மிகக் குறுகிய நேரமே இருவரும் பேசினர். மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் முடிவை எடுத்திருப்பதை மகிந்த ராஜபக்சவிடம் இந்தச் சந்திப்பில் கூறியிருக்கின்றார்.

இதன் பின்னர் அரச தலைவர், நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அரசிதழ் அறிவிப்பில் இரவு 8.30 மணிக்கு கையெழுத்திட்டார்.

**அரசமைப்புக்கும் அதிகாரத்துக்கும் விரோதமானது**

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்காக அதிகாரம் அரச தலைவரிடமிருந்து 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகப் பிடுங்கப்பட்டுள்ளது. ஆனாலும், அரசமைப்பு முரணாக எவ்வாறு தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணிலை அகற்றினாரோ, அதேபோன்று நாடாளுமன்றத்தையும் கலைத்தார்.

அரச தலைவரின் இந்தச் செயற்பாடு அரசமைப்புக்கு முற்றிலும் முரணானது என்று யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறைத் தலைவர் குமாரவடிவேல் குருபரன் குறிப்பிடுகிறார்.

'அரசமைப்பு உறுப்புரை 70 இன் காப்பு வாசகம் தெளிவாகக் கூறுகின்றது. அரசமைப்பின் 33 மற்றும் 33 (2) அரச தலைவரின் வெவ்வேறு அதிகாரங்களைச் சொல்லிக் கொண்டு குறிப்பாக நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பான விவரணம் 70 இல்தான் சொல்லப்பட்டுள்ளது. பொதுவாக சொல்லப்பட்டதை எடுத்துக் கொண்டு, சிறப்பாகச் சொல்லப்பட்டதைத் தவிர்க்கலாம் என்து அரசமைப்பில் அறியப்படாத ஒன்று. சட்டபீடத்தின் முதலாம் ஆண்டு மாணவனுக்கும் தெரிந்த விடயம்.

அரசமைப்பில் ஓர் இடத்தில் பொதுவாகவும், இன்னோர் இடத்தில் சிறப்பாகவும் விவரமாகவும் ஒரே விடயம் சொல்லப்பட்டால் விவரமாகச் சொல்லப்பட்டதே கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்' என்று அவர் குறிப்பிடுகின்றார்.

உயர் நீதிமன்றுக்கு இந்த விடயம் எடுத்துச் செல்லப்பட்டால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது அரசமைப்புக்கு முரணானது என்றே தீர்க்கப்படுவதற்கே வாய்ப்பு அதிகம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். நீதிமன்றுக்குச் செல்லும் தரப்புக்கள், தனியே இந்த விடயத்தை மாத்திரம் எடுத்துச் செல்லாது, தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிய விவகாரத்தையும் கொண்டு செல்ல வேண்டும்" என்று அவர் கூறுகின்றார்.


மைத்திரி - மகிந்தவுக்கு, இது அரசமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது என்று தெரிந்திருக்காமல் இருக்காது. அது தெரிந்திருந்தும் அவர்கள் இவ்வாறு செய்திருப்பது, நீதிமன்றம் ஊடாகக் கொஞ்சக் காலமாவது இழுத்தடிக்கப்பட்டு, நாடாளுமன்றம் மீண்டும் கூடுவதற்கான காலத்தை நீடிப்பதே அவர்களின் நோக்கமாக இருக்கக் கூடும்" என்று குருபரன் குறிப்பிடுகின்றார். அத்துடன் அரச தலைவரின் இத்தகைய சட்ட விரோதச் செயற்பாட்டுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது முறையற்றது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி, நாடாளுமன்றம் மீண்டும் கூடி, மகிந்த பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத சந்தர்ப்பத்தில், ரணில் மீண்டும் தலைமை அமைச்சராகினால், மைத்திரி - ரணில் இடையிலான அதிகார மோதல் தொடரும். ஆக மொத்தத்தில் நாடு இனிக் குழப்பத்திலிருந்து மீள்வதற்கான வாய்ப்பு க(அ)ருகிவருகின்றதே நிதர்சனம்.

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்





# இலங்கையின் ஜனநாயகமும் பன்னாட்டு அக்கறையும்

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன எவருமே எதிர்பாராத விதத்தில் ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி விட்டு மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக நியமித்த சம்பவம் உள்நாட்டிலும் பன்னாட்டு அளவிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திவிட்டுள்ளது. ஆனால், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இப்படியான அதிர்ச்சியை ஏற்படுத்தி அனுபவம் கெண்டவர் அவர். முதல்நாள் இரவு மகிந்தவுடன் விருந்துண்டு விட்டு அடுத்தநாள் காலையிலேயே மகிந்தவுக்கு எதிராக அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டவர். மகிந்த ராஜபக்சவின் சர்வாதிகார நடவடிக்கைகளுக்கும், ஊழல், மோசடி, அதிகார முறைகேடு போன்ற பலவற்றையும் எதிர்த்து அவருக்கெதிராகப் போட்டியிடுவதாகக் கோரி மக்களிடம் ஆதரவு கோரியவர். மக்களும் அதை ஏற்றுக்கொண்டு அவருக்கு ஆதரவு வழங்கி நாட்டின் தலைராக்கினர். அவர் எவரைச் சர்வாதிகாரி எனவும், உழல் மோசடிகாரர் எனவும் குற்றம் சாட்டினாரோ அவரையே தற்சமயம் தலைமை அமைச்சராக நியமித்துள்ளார்.

**கருஜெயசூரிய, சஜித் பிரேமதாச ஆகியோர் உடன்படாததால் மகிந்த**

நாட்டைச் சீரழித்தவராக அன்று குற்றம் சாட்டப்பட்டவர் இன்று எவ்வாறு தலைமை அமைச்சர் பதவிக்குக் பொருத்தமானார்? என்ற கேள்வி எழுந்தாலும் கூட அரச தலைவர் அதற்கான பதிலை வழங்கியுள்ளார்.. அதாவது அவர் ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனவும், இதனால் தான் கரு ஜெயசூரியவையும், பின்பு சஜித் பிரேமதாசவையும் தலைமை அமைச்சர் பதவியை ஏற்கும்படி கேட்டுக்கொண்டதாகவும், அதற்கு அவர்கள் மறுத்துவிட்டதாகவும், அதன் பிறகுதான் மகிந்த ராஜபக்சவைத் தெரிவு செய்ததாகவும் தெரிவித்திருந்தார். இது இவ்வாறிருக்க, தன்னைத் தலைமை அமைச்சர் பதவிலியிருந்து விலக்கியமை செல்லுபடியற்றதெனவும் தானே எப்போதும் தலைமை அமைச்சர் எனக்கூறி அலரிமாளிகையை விட்டுவெளியேறுவதற்கு ரணில் விக்கிரமசிங்க மறுத்து வருகிறார்.

சபாநாயகர் கருஜெயசூரியவும் 20ஆம் திகதிக்கு முன்பிருந்த (ரணில் தலைமை அமைச்சராக) நாடாளுமன்று நிலைமையே செல்லுபடியாகும் எனத் தெரிவித்துவிட்டார். ஆனாலும் அமைச்சர்கள் நியமனமும் அவர்கள் அமைச்சரைவைகளைப் பொறுப்பேற்பதும் துரித கதியில் இடம்பெற்றுவருகின்றன. இப்படியான ஒரு குழப்பமான நிலையில் தான் பன்னாடுகளின் அக்கறை நேரடியாகவும் மறைமுகமாகவும் இலங்கையின் அரசியல் நிலைமைகள் மீது குவிய ஆரம்பித்துள்ளது.

**மகிந்த காலத்தில் சீனாவின் நுழைவும் திட்டங்களும்**

மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகப் பதவியேற்றதும் அவருக்கு முதல் முதலாக வாழ்த்துத் தெரிவித்த நாடு சீனா. அவரின் காலத்தில் சீனா இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கும் இலங்கை தன்னுடைய கதவுகளை அகலத் திறந்தவிட்டிருந்தது. பதிலுக்குச் சீனாவும் தாராளமாகவே இலங்கைக்குக் கடனுதவியை வழங்கியது.

அதுமட்டுமன்றிச் சீனாவின் பட்டுப் பாதைத் திட்டத்துக்கு வாய்ப்பான நிலைகளை இலங்கையில் உருவாக்கி அவற்றில் தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தியது.

இந்த நிலையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் தான் மேற்குலக நாடுகளும், இந்தியாவும் இணைந்து மகிந்த ராஜபக்ச தரப்பினரை ஆட்சியிலிருந்து இறக்குவதற்கு மைத்திரிபாலவைப் பயன்படுத்திக் கொண்டன.

மைத்திரிபால சிறிசேன அரச தலைவராக இருந்தபோதிலும் நாட்டைக் கொண்டு நடத்துவதில் அதிக பங்கைத் தலைமை அமைச்சரான ரணில் விக்கிரமசிங்கவே கையில் எடுத்துக்கொண்டார்.

**ரணிலின் மேற்குலக ஈடுபாடும் உள்ளூர் நெருக்கடியும்**

ரணில் விக்கிரமசிங்கவின் வியூகத் தால் சீனா ஏற்கனவே போட்ட பூட்டுக்களைக் கழற்ற முடியாதிருந்தது. ஆனாலும் இலங்கையின் பொருளாதாரம் மேற்குலக நலன்களை நோக்கி நகர்த்தப்பட்டது. உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் என்பவற்றின் நிபந்தனைக ளுக்கு அமைவாகவே இலங்கையின் அபிவிருத்திகளும், ஏனைய பொருளாதார வழிமுறைகளும் வகுக்கப்பட்டன. உலகவங்கி, பன்னாட்டு நாணய நிதியம் என்பவற்றின் நிபந்தனைகளில் முக்கியமானவை தனியார் துறையை ஊக்குவித்தல், அரச செலவீனங்களைக் குறைத்தல் என்பனவாகும். இலங்கையின் அபிவிருத்திகளும் ஏனைய பொருளாதார வழிமுறைகளும் உருவாக்கப்பட்டன. தனியார்துறையை ஊக்குவித்தல் என்பது உள்ளூர் விவசாயம், கைத்தொழில் என்பவற்றை ஊக்குவிப்பதல்ல. பல்தேசிய நிறுவனங்களில் முதலீடு களை அதிகரித்தலாகும். அதேபோல் அரச செலவினங்களைக் குறைத்தல் என்பது அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங் களையும் ஆடம்பரச் செலவுகளையும் குறைப்பதல்ல. மாறாக மக்களுக்கு மானியமாக வழங்குகின்ற வரிச்சலுகைகளைக் குறைத்துப் பாவனைப் பொருள்களை விலையேற்றுதல் என்பதே. அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரம் நிலவிய இந்த மூன்று வருடங்களிலும் நாட்டு வளங்களை மேற்குலக நாடுகள் கொள்ளையிடவும், மக்களிடம் குறைந்த கூலியில் உழைப்பை வாங்கவும் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன.

**மேற்கு நாடுகள், அமெரிக்காவின் அவசர சந்திப்புக்கள்**

ரணில் அரசால் எரிபொருள் உட்படப் பாவனைப் பொருள்களின் விலைகள் கண்மூடித்தனமாக அதிகரிக்கப்பட்டன. மக்களின் தலைக்கு மேல் சுமைக்கு மேல் சுமையாக ஏற்றப்பட்டது. இப்படியான நிலையில் திடீரென மைத்திரி ஏற்படுத்திய இந்த மாற்றம் மேற்குலகால் ஏற்கக்கூடியதாக இல்லை.

எனவேதான் இந்த விடயத்தில் மேற்கு நாடுகளும் இந்தியாவும் களமிளறங்கியுள்ளன. ஐரோப்பிய ஒன்றியம் இந்த விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் அவசரமாகப் பேச்சுக்களை நடத்தியுள்ளது. இந்தியாவின் மூன்று குழுக்கள் கொழும்பில் தங்கியிருந்து சில நகர்வுகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

இதேவேளையில் இரண்டு தரப்புக்களில் எவருக்கு அதிக நாடாளுமன்றப் பெரும்பான்மை உண்டு என்பதைத் திட்டவட்டமாக முடிவு செய்யமுடியாத நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் முக்கியமானவையாக விளங்குகின்றன. எனவே இரண்டுதரப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சி செய்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே தமிழ்தேசியக் கூட்டமைப்பினருடன் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் பேசியிருந்தனர். இதை அடுத்து இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதராக நியமிக்கப்பட்டிருக்கின்ற அலோய்னா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் நீண்ட பேச்சுக்களை நடத்தியிருந்தார். அப்போது சம்பந்தன் தமது நிலைப்பாடு பற்றித் தூதருக்கு விளக்கியதாகவும் அதற்குப் பதிலளித்த அவர் தற்போதைய பிணக்குகள் ஜனநாயக முறைப்படி தீர்க்கப்பட வேண்டும் எனவும் புதிய அரசமைப்பு உருவாக்கம், ஜெனிவாத் தீர்மானத்தை நிறைவேற்றுதல் போன்ற விடயங்களில் அர்ப்பணிப்புடன் அமெரிக்கா செயற்படும் எனவும் உறுதியளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து அமெரிக்கத் தூதுவர் சபாநாயகர் கரு ஜெயசூரியவையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

**தமிழர்களின் பிரச்சினைகள் பின்தள்ளப்பட்டே வருகின்றன**

புதிய அரசமைப்பு நிறைவேற்றுவதையும், ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்றுவதையும் எழுத்துமூலம் உறுதிசெய்கின்ற தரப்புக்கே ஆதரவு வழங்குவதற்குத் தாம் தயார் என ஏற்கனவே அறிவித்திருந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஆனால் தற்சமயம் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் முகமாக ஆட்சி மாற்றத்துக்கு எதிராகவே வாக்களிக்கப்போவதாக அது அறிவித்துவிட்டது. அமெரிக்கத் தூதருடனான சந்திப்பின்மூலமாக அது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேற்கு நாடுகள் என்றாலென்ன, இந்தியா என்றாலென்ன எம்மையும் எமது பிரச்சினைகளையும் தங்கள் நலன்களின் அடிப்படையில் பயன்படுத்துவதும், பின்னர் கைவிடுவதும் தேவை ஏற்படும்போது தமிழர்களின் அழிவுக்குத் துணைபோவதும் புதிய விடயங்களல்ல.




இந்த முறையும் அதே வழிமுறையில் தான் நடப்பார்கள் என எண்ணாமலிருப்பதற்கான எந்த விதமான உத்தரவாதங்களும் இல்லை. முன்பு செய்யப்பட்டதுபோன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறைந்தபட்சம் எழுத்து மூலமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொண்டு ஆதரவு வழங்குவதே பொருத்தமானதெனத் தமிழ்மக்கள் நம்புகின்றனர்.

பன்னாடுகள் எம்மிலிருந்து பயன்பெறமுனையும்போது நாமும் அதைப் பயனுள்ளதாக்குவதில் உறுதி யாகவிருப்பது அவசியமாகும்.

சிரிப்பு

மிருசுவில் தமிழ்தாசன்




# கள்ள முட்டைகள்

என்ன இருந்தாலும் நண்பன் சண்முக சுந்தரம் நல்லவன். இக்கட்டான, நெருக்கடியான தருணங்களில் பண உதவி செய்பவன். யாராவது என்னுடன் தகராறு பட்டால் உடனடியாகச் சண்டி கட்டி நியாயம் கேட்க வரும் முதல் நண்பன் அவனே தான். அப்படிப்பட்ட உயிர்கொடுக்கும் நண்பன் இப்போது உயிர் போகும் நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றான்.

வேலி மீது அமர்ந்திருந்த குரங்குக் கூட்டங்களுடன் குரங்குச் சேட்டை விட்டுக் குரங்குக் கடிக்கு ஆளாகியிருக்கிறான். குரங்கின் வாலைப் பிடித்து வேடிக்கை காட்ட அது கண்ட கண்ட இடமெல்லாம் இவனைக் கடித்துக் குதறிவிட்டது. இப்போது குரங்கு போலக் கத்துகின்றானாம். அதைப் போல சேட்டைகள் பண்ணுகின்றானாம்.

ஆள்களைக் கண்டால் பல்லிளித்துத் தாவிப் பாய்கின்றானாம். இது சாதாரணமான குரங்கின் கடியல்ல. விசர் பிடித்த குரங்கின் கடியென்று வைத்தியர் திடமாகச் சொல்லிவிட்டாராம். இப்போது அவனுக்குக் குரங்கு வைத்தியம் தான் செய்கின்றார்களாம். குரங்குக்குப் போடும் ஊசி வைத்தியம்தான் செய்கின்றார்களாம். அந்தக் குரங்களை ஒருமுறை போய் பார்த்து விட்டு வரலாமென்றால் பையில் ஒரு சதமில்லை. கையிலுமில்லை. மனைவியிடமுமில்லை. ஏன் வீட்டிலேயே இல்லை. இன்று மட்டுமா எப்போதுமிந்த இல்லையென்ற வார்த்தைக்குப் பஞ்சமேயில்லை. என்ன செய்யலாமென்று யோசித்தபோதுதான் உச்சத்தில் பல்லியொன்று 'உச்' கொட்டிச் சத்தமிட்டது.

உச்சத்துப் பல்லி அச்சமில்லை. அண்ணாந்து பார்த்தேன். அடடா! பரண் மீது ஒரு தகரடப்பா. அதற்குள் முட்டைகளி ருந்தன. அது சரி. இங்கே தான் கோழிகளில்லையே ஒரேயொரு சேவல் மட்டும் நின்றது.

சேவல் முட்டை போடுமா போடவே போடாது. அப்படியென்றால் இந்த முட்டைகள் எப்படி இங்கே வந்தது. ஒரு வேளை பாம்பு முட்டைகளாக இருக்குமோ! இல்லை. அப்படியென்றால் இந்த முட்டைகள் வந்தவழிதான் என்ன! ஓகோ! இதுவா விடயம். அடுத்தவீட்டு அன்னம்மாக்காவின் கோழிகள் எமது வீட்டுக்கு வர அவைகளை மெல்லப் பிடித்து வைத்து அடைத்து முட்டை எடுக்கின்றாள் என் மனைவி பரமேசு. இவைகள் சொந்த முட்டைகளல்லகள்ள முட்டைகள். சரி, கள்ள முட்டையென்றாலும் கோழி முட்டைகள்தானே! மெல்ல ஒரு பையை எடுத்து பத்து முட்டைகளைப் பத்திரமாக வைத்துக் கொண்டு சந்தையை நோக்கிக் கம்பீரமாக நடையயின்றேன்.


முதல் வரிசையில் அந்த மொட்டந்தலையனின் முட்டைக்கடை. ஏராள முட்டைகள் வாங்கி வைத்திருந்தான். அதேபோல் விற்பனை செய்து கொண்டுமிருந்தான்.

"அண்ணை முட்டை என்ன விலை"

உசாராகக் கேட்டேன். பதினெட்டென்றான். சரி! என்ன விலையென்றாலும் கொடுக்க வேண்டியதுதான். என்ன! நான் கஷ்டப்பட்டுப் போட்ட முட்டையா! அடுத்த வீட்டுக் கோழி போட்ட முட்டைகள்தானே! பேரம் பேசவில்லை. பேசாமற் கொடுத்துவிட்டேன். கையில் நூற்றியென்பது ரூபா கிடைத்தது. இதுபோதும் பஸ்காசு. தேனீர்ச் செலவுடன் ஒரு 'தம்மும்' அடிக்கலாம். மிகுந்த மகிழ்ச்சியுடன் போய்க் கொண்டிருந்தேன்.

"ஓடிவா ஓடிவா முட்டை இருபது ரூபா"

மற்றுமொரு முட்டை வியாபாரி குரல் கொடுத்துக் கொண்டிருந்தான். "எடே அந்த மொட்டைத் தலையன் பதினெட்டெண்டு என்னை ஏமாத்திப் போட்டான். உவனை விடக் கூடாது இண்டைக்கு மொட்டையை உடைச்சுவிடுறன்"



கறுவியபடி அவனிடம் விசாரித்தேன். பதினெட்டுக்கு ஒரு சதம் கூட அதிகமாகத்தர முடியாதென்று பிடிவாதமாக நின்றான். நானும் மல்லுக்கட்டிப் பார்த்தேன். வழமை போல் இதிலும் தோல்விதான். இருந்தும் ரோசம் பொத்துக் கொண்டு வந்தது. விடவில்லை. விடவும் கூடாது.

"வேண்டாம்! என்ரை முட்டையைத் தா! இந்தா உன்ரை காசைப்பிடி. அங்காலை இருபது ரூபாவுக்கு வித்துக் காட்டுறன் பொறு" மொட்டையனின் மிறாள் பார்வை என்னைச் சுட்டெரித்தது. ஏதோ முணுமுணுத்தபடி உள்ளே சென்று பத்து முட்டைகளைத் தந்தான்.

"என்னை ஏமாத்தப் பாக்கிறியோ!" சொல்லியபடி மற்றைய முட்டைக் காரனிடம் கொடுத்தேன். அவனிப்போது முட்டையின் விலை பதினைந்து என்றான். நான் சண்டைக்குப் போனேன். விற்கும் விலை தான் இருபதாம். வாங்குவது பதினைந்துக்கென்று விளக்கம்சொன்னார். பிழைஎன்மீதுதான். பிழையாக விளங்கிக் கொண்டேன். இருபது ரூபா இலாபத்துக்கு ஆசைப்பட்டு இப்போ முப்பது ரூபா நட்டம். போகட்டும் கள்ள முட்டை தானே! இதென்ன இது ஒவ்வொரு முட்டையையும் எடுத்து காதருகில் வைத்துக் குலுக்கிப் பார்த்துத் தனியாக வைக்கிறானே! என்னவாயிருக்கும்.

"அண்ணை பத்து முட்டையும் அழுகல். கூழ் முட்டையைக் கொண்டு வந்து ஏமாத்தப்பாக்கிறியோ" எனது சேர்ட்டைப் பிடித்தான்.

இப்போதுதான் விடயம் புரிந்தது. நான் கொண்டு வந்த நல்ல முட்டைகளை வைத்துக் கொண்டு என் மீதிருந்த கோபத்தினால் பழுதடைந்த முட்டைகளை என் தலையில் கட்டிவிட்டான். இனி அவனிடம் போய் மண்டியிடவும் முடியாது. சண்டித்தனம் செய்யவும் முடியாது. ஆஸ்பத்திரிக்குப் போக முடியாது. எல்லாமே முடியாததாகவே யிருந்தது. முடிந்தது ஒன்றுதான். அந்தக் கூழ்முட்டைக ளு டன் ஒப்பாரி வைத்தபடி நடந்தேன். இதை வைத்து என்ன செய்வது! தலையைச் சுற்றிப் போட்டு எறிய வேண்டியதுதான். அதுபோய் அச்சொட்டாக சலூன் கார அண்ணரின் தலையில் வீழ்ந்தது. "ஆரடா என்ரை தலையில கூழ்முட்டை அடிச்சது" ஆக்ரோசமாகத் துரத்தினான். நானிப்போது மைல் றேசில்"

---

# கண்ணபிரானே எழுந்து வா...

கவிதை

மீசாலையூர் கமலா



வாசுதேவா வாமனா
பாசாங்கு பண்ணுகிறாயா?
பாற்கடலில் துயிலென்றே
காத்தற் கடவுளாய் நீயல்லவா
எத்திக்கிலும் என்னவெல்லாம்
நடக்கிறதென்று நாராயணா
உனக்கா தெரியாது

கொள்ளைகள் கொத்துக்கள் வெட்டுக்கள்
சொல்லொணாத் துயரங்களில்
உன் பக்தர்கள் துவண்டு நிற்கின்றனரே
உடமைகளும் உருக்குலைந்திட
சித்தம் கலங்கி கண்ணீராறு
பெருக்கெடுத்துக் கொள்கிறதே
மாயவா வா உலகினது
காத்தற் கடவுளே
தர்மத்தை நிலைநாட்ட எழுந்துவா

அதர்மங்கள் போக்கிட
எழுவேன் என்றாயே
இன்று தீபாவளிப் பெருநாள்
தீபங்களை நிரை நிரையாய் வைத்து
தீமைகள் போக்கிட வருவாய் என்றே
கரங்கள் கூப்புகின்றோம்
பகவானே பாரிலே நீதிக்காய்
உன் பக்தர்களைக் காத்திட

# வரமா? சாபமா?

எத்தனை அவலங்கள்
எத்தனை அநீதிகள்
எத்தனை அழிவுகள்
எத்தனை சாவுகள்

வயோதிபக் கழுதைகள்
வாலிப மிடுக்குடன்
வஞ்சமில்லாப் பிஞ்சுகளை
கொஞ்சி விளையாடி
வன்புணர்வு செய்து
இச்சைப் பிரியர்களாய்
நீடூழி வாழ்வதா?

நடுச் சமாமதில் அடுத்தவர்
மனைகளில் முகமூடித்
திருடராய் வேடமிட்டு
கொலை செய்து
கொள்ளையடித்து
பெண் ஜென்மங்களை
வன்முறை செய்திடும்
காடையர்கள் இனியும்
வாழ்வதா? தடம் மாறி
தருணம் மாறி
நிலையிழந்து
நிம்மதியிழந்து
பண்பாடு மறந்து
செல்லரித்துப் போய்
செத்து மடிவது
வரமா? இல்லை
சாபமா?



கவிதை

உடுவிலூர் கலா

# 12 ஆயிரம் பேரை ஈராக்கில் கொன்ற ஐ.எஸ். அமைப்பு!



ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் 12 ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ள தகவல் தற்போது தெரியவந்துள்ளது.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் விடுபட்டுள்ளது. சிரியாவில் தற்போதும் ஆங்காங்கு அந்த அமைப்பு வேரூன்றியுள்ளது. ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பிலான ஆய்வுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் சுமார் 12 ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற தகவல் தற்போது வெளிவந்துள்ளது.

நினிவே, கிர்குக், சலாவுதீன், அன்பார் ஆகிய மாகாணங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போரிலேயே பெருமளவானோர் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்ற தகவலும் வெளிவந்துள்ளது.

**'சிரியாவில் எத்தனை அப்பாவிகளோ...'**

தொகுப்பு
பிரகாஸ்

**ரவுண்ட் த வேள்ட்**

## ட்ரம்ப் – புடின் மீண்டும் சந்திப்பு


கோப்புப்படம்

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ரஷ்ய அதிபர் புடின் இருவரும் பிரான்ஸின் பரிஸ் நகரில் இன்று சந்திக்கவுள்ளனர்.

1914ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நான்காண்டுகள் நீடித்த முதலாம் உலகப் போர் 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதியே முடிவுக்கு வந்தது. இந்தப் போர் முடிவடைந்து நூறாண்டுகள் ஆகும் நிலையில் இந்த நாளை நினைவுகூரும் வகையில் பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பரிஸ்நகரில்பல்வேறுநிகழ்வுகள்நடைபெறவுள்ளன.இந்தநிகழ்வுகளில்பங்கேற்குமாறு உலகில்உள்ளசுமார்80முக்கியநாடுகளின் தலைவர்களுக்கு பிரான்ஸ் அரசின் சார்பில் அழைப்புவிடுக்கப்பட்டது. இந்தஅழைப்பை ஏற்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புடின்இருவரும்இன்றுபரிஸுக்குச்செல்கின்றனர். அங்கு இருவரும் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த இரு அதிபர்களும்கடந்தசிலமாதங்களுக்குமுன்னரும் சந்தித்திருந்தனர். கிரிமியாவிவகாரம், சிரிய விவகாரம், ஈராக் விவகாரம், உக்ரைன், ஈரான் விவகாரங்கள் என்பன தொடர்பில் இருவரும் பேச்சு நடத்திய போதிலும் ஆக்கபூர்வமான முடிவுகள் எவையும் அந்தச் சந்திப்பில்எடுக்கப்படவில்லை. இந்தநிலையில் இன்றைய தினம் இடம்பெறும் சந்திப்பு பெரியளவில் எதிர்பார்க்கப்படுகிறது.

**'வல்லரசுகள் ஐக்கியமாகுமா...?'**

## ஆப்கானிஸ்தானில் தலிபான் எழுச்சி!

ஆப்கானிஸ்தானில்தனிபான்அமைப்புநாளுக்குநாள் எழுச்சி பெற்று வருகிறது என்று உலக வல்லரசான அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஆப்கானீஸ்தானில் தலிபான் அமைப்பு கடந்த பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்கா மேற்கொண்ட பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக தலிபானை அழிப்பதும் இருந்தது. ஆப்கானிஸ்தான் இராணுவத்துடன் இணைந்து அமெரிக்கப் படைகளும் ஆப்



கானிஸ்தானில்தலிபான்களுக்குஎதிராகப்போரிடுகின்றபோதிலும் அந்த அமைப்பை முழுமையாகத் தோற்கடிக்க முடியவில்லை. ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் இந்த வருடம் அதிக தடவைகள் தலிபான்களால் இலக்கு வைக்கப்பட்டது. இதையடுத்தே தலிபான்களைவீழ்த்தஇயலவில்லைஎன்பதைஏற்றுக்கொண்டுள்ளது அமெரிக்கா.

ஆப்கானிஸ்தான்அதிபர்அஸ்ரப்கானி,தலிபான்களைஆயுதத்தைக் கைவிடுமாறும், அவ்வாறு ஆயுதங்களைக் கைவிட்டால் அந்த அமைப்பை அரசியல்க் கட்சியாக அங்கீகரிக்கலாம் என்றும் அண்மையில் தெரிவித்திருந்ததும் கவனிக்கத் தக்கது.

**'வல்லரசின் படுதோல்வி இது...'**

## பற்றியெரிகிறது பாகிஸ்தான்

பாகிஸ்தானில், முகமது நபிக்கு எதிராகப் பேசினார் என்ற குற்றச்சாட்டில் சிக்கி சிறைத் தண்டனை அனுபவித்த அசியா பிவி தற்போது விடுதலை செய்யப்பட்டிருக்கும் நிலையில் அவர் நெதர்லாந்து சென்றுள்ளார் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அவர்மீண்டும்கைதுசெய்யப்படவேண்டும், அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி பாகிஸ்தானில் பரவலாக போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

கிறிஸ்தவரான அசியா தனது சக பணியாளர்களுக்கு தண்ணீர் கொடுக்கும்போது, அவர்கள் கிறிஸ்தவரிடமிருந்து தாங்கள் தண்ணீர் வாங்க மறுத்ததுடன், அவரை முஸ்லிம் மதத்திற்கு மாறும்படியும் வற்புறுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து அசியா அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் எனவும் இதில் அவர் முகமது நபியை அவமானப்படுத்திவிட்டார் என்று அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் அவருக்குச்சாவுத்தண்டனைவிதிக்கப்பட்டது.ஆனால் இந்தக் குற்றச்சாட்டை அசியா தரப்பு மறுத்து வந்தது.

இந்த வழக்கு தொடர்பாக அசியா தொடுத்த மேன்முறையீட்டில், அவரது சாவுத் தண்டனையை கைவிடப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார். பாகிஸ்தானில் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதை அடுத்து அவர் நெதர்லாந்துக்குச் சென்றார் என்று பாகிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சி.என்.என். ஊடகத்தின் செய்தியாளர் ட்ரம்புடன் வாக்குவாதத்தில்ஈடுபட்டிருந்தார். இதையடுத்து அவரைவெள்ளைமாளிகைக்குள் அனுமதிப்பதற்கான அடையாள அட்டையை செல்லுபடியற்றதாக்கியுள்ளது ட்ரம்ப் நிர்வாகம்.



தொகுப்பு
அனார்கலி




# புழுதி விதைப்பு சேற்று விதைப்பானது!




அம்பாறை மாவட்டத்தில், நீர்ப்பற்றாக்குறை காரணமாக பெரும்போக நெற்செய்கைக்கான விதைப்பு வேலைகள் மழையை நம்பிய புழுதி விதைப்பாக ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தற்சமயம் சேற்று விதைப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

காலநிலை மாற்றம் காரணமாக தற்சமயம் இந்த மாவட்டத்தில் தொடராக அடைமழை பெய்துவருவதால் நெற்செய்கை மேற்கொள்ளப்படவேண்டிய வயல் நிலங்கள் மழைநீர் நிறைந்து வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன.

இதன்காரணமாகவே புழுதி விதைப்பை சேற்று விதைப்பாக முன்னெடுக்கவேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் இம்முறை 2018/2019 பெரும்போக நெற்செய்கையை 83 ஆயிரம் ஹெக்ரெயர் நெற்காணியில் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்படடுள்ளதாகவும், பெருமழை காரணமாக இந்த மாவட்டத்தின் நீர்ப்பாசன மூலமான சேனநாயக்கா சமுத்திரத்தின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாகவும் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் தெரிவித்துள்ளார்.

**பொழியட்டும் அருள்மழை!**



# நியாயம் கற்பிக்கிறார்!

"கல்முனை தமிழ் உபபிரதேச செயலக வளாகத்துள் அனுமதி பெறாமல் இந்து ஆலயம் கட்டப்பட்டமையானது சட்டத்துக்கு முரணானதாகும். இங்கு கடமைக்குவரும் மூவின மக்களையும் முட்டிமோதவிட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையை எவ்வாறு அனுமதிப்பது?" என கல்முனை மாநகர மேயர் மூத்த சட்டத்தரணி ஏ.எம். றகீப் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், "அண்மையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் பௌத்த விகாரை அமைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தமிழ்த்தரப்பினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இந்த முன்னுதாரணம் எல்லோருக்கும் பொருத்தமுடையதாக இருக்க வேண்டும்" எனவும் மேயர் றகீப் நியாயம் கற்பித்துள்ளார்.

**மனமுண்டானால் இடமுண்டு!**

# கொதிக்கிறார் மேயர்

கல்முனை மாநகரசபையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமிழ்மக்கள் மத்தியில் இனவாதக் கருத்துக்களை விதைத்து, தமிழ்-முஸ்லிம் இன முரண்பாடுகளை ஏற்படுத்த முனைவதாக கல்முனை மாநகரமேயர் மூத்த சடடத்தரணி ஏ. எம்.றகீப் கவலை வெளியிட்டுள்ளார்.

கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற ஊழியர்கள், அதிகாரிகள் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்முனை மாநகரசபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமிழ்மக்களிடம் இனவாதக்கருத்துக்களை விதைத்து இனமுரண்பாடுகளை ஏற்படுத்த முனைந்துள்ளதுடன், சபை அமர்வுகளைக் குழப்பி மாநகர அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போட முனைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி!**

# 100ஆவது குருதி சுத்திகரிப்பு!



நிந்தவூர் ஆதார மருத்துவமனையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிறுநீரக குருதி சுத்திகரிப்புப் பிரிவில் 100 ஆவது குருதி சுத்திகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதையொட்டிய சிறப்பு நிகழ்வு ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

மருத்துவமனையின் சிறுநீரக குருதி சுத்திகரிப்புப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் திருமதி சஹீலாராணி இஸடீன் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டதுடன், கேக்வெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். பிரிவிலுள்ள சிறுநீரக நோயாளர்களுக்குப் பரிசுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.

**நற்பணி தொடர வாழ்த்துவோம்!**

# நினைவுகூரல்




கல்முனைமாநகரசபையிலிருந்துபிரிந்து சாய்ந்த மருதுக்கு தனி உள்ளூராட்சி சபை வேண்டுமென சாய்ந்தமருது பிரதேச மக்கள் மேற்கொண்ட எழுச்சிமிகு போராட்டம் நினைவுகூரப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்ற இலக்கை நோக்கிய நவம்பர் எழுச்சியும், ஓராண்டுப் பூர்த்தியும் என்ற வாசகங்களையும், தனி உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை முன்வைத்து நடத்தப்பட்ட மக்கள் எழுச்சிப் போராட்ட படங்களின்பின்னணியையும்கொண்டபதாகைகள் சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் முன்றலில் தொங்கவிடப்பட்டுள்ளன.

**ஓராண்டு சென்றும் இந்த விடயத்தில் அரசியல்வாதிகளின் கண்கள் திறக்கவே இல்லை!**

# கணக்காளர் பயணம்



பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் கணக்காளர்களுக்காக பன்னாட்டு மட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மூன்று வாரகால வதிவிடச் செயலமர்வு ஒன்றில் பங்குபற்றுவதற்காக கல்முனை மாநகர சபையின் கணக்காளர் ஏ.எச்.தஸ்தீக் சீனா பயணமாகியுள்ளார். சீனாவின் பீஜிங் நகரில் "நிதிமுகாமைத்துவமும் பொருளாதார அபிவிருத்தியும்" எனும் தொனிப் பொருளில் எதிர்வரும் 26ஆம் திகதிவரை இந்தச்செயலமர்வு நடைபெறவுள்ளது.

மேலும் இந்தச்செயலமர்வில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து 15 கணக்காளர்கள் சீனா பயணமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பயணம் வெற்றியளிக்கட்டும்!**

# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

23

தொடர்

தாஸ் மாஸ்ரர்

நாம் 'எவ்2' க்கு மாற்றப்பட்டு 10 நாள்களின் பின் என்று நினைக்கிறேன். எங்களில் 10 பேரை முதலில் வெளியே வரச்சொல்லி 'எவ்' பிரிவை விட்டு வெளியே எடுத்தார்கள். ஆனால் ஏன்? எங்கோ? கொண்டு போகிறீர்கள் என்று அவர்களைக் கேட்க முடியாது. கூட்டிச் சென்ற அதிகாரிகளின் பின்னால் சென்றோம். களுத்துறை அலுவலகப் பிரிவுக்குக் கூட்டிச் சென்று பெரிய வாங்கில்களில் இருக்கச் சொன்னார்கள். நான் ஓரத்தில் இருந்தேன். என்னை ஓர் அதிகாரி வந்து அழைத்தார். சிறைச்சாலை அத்தியட்சகரின் அறைக்குள் கூட்டிச் செல்லப்பட்டேன். அங்கு வெள்ளை சேட் அணிந்து ரை கட்டியிருந்தார் ஓர் அதிகாரி. தான் சிறைச்சாலை ஆணையாளர் அலுவலகத்திலிருந்து வந்திருப்பதாகவும், சி3 பிரிவில் நடந்த கொலை பற்றியும் கேட்டார். நான் பொலிசாருக்குச் சொன்னதையே அவருக்கும் கூறினேன்.

'இறந்தவருக்கு எதிரிகள் என்று யாராவது இருந்தார்களா? ' என்று கேட்டார்.

'நான் இச் சிறைச்சாலைக்கு வந்து இரண்டு மாதங்கள் மட்டுமே ஆகின்றன. எனக்குத் தெரிந்தவரை யாருமில்லை' என்றேன்.

அவர் தாங்கள் விசாரணையை ஏன் நடத்துகிறோம் என்று விளங்கப்படுத்தினார். ஒரு கைதியைப் பாதுகாக்கும் பொறுப்பு சிறைச்சாலைக்கு உண்டு. இந்தச் சம்பவம் நடந்து விட்டதன் பின் அதுபற்றி விசாரனை நடாத்த வேண்டிய பொறுப்புத் தமக்குண்டு என்பதும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது எவ்வாறு தடுப்பது என்ற நடவடிக்கைகள் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது என்றார். அவரது விசாரணையின் பெரும்பகுதிக் கேள்விகள் சிறைச்சாலை நிர்வாகம் இந்தக் கொலை நடப்பதற்கு எந்தெந்த வழிகளில் அக்கறை செலுத்தாது உள்ளது. கொலை நடந்த நேரம், கடமையாற்றியவரின் கவனக்குறைவு போன்றவையும் இதற்குச் சாதகமாக அமைந்தன என்பது பற்றிய நோக்கத்திலேயே அமைந்தது. புறப்படும்போது தனது பெயர் களப்பதி எனவும், தான் திருகோணமலையைச் சேர்ந்தவர் எனவும், கொல்லப்பட்டவரும் திருகோணமலையைச் சேர்ந்தவர் எனவும் குறிப்பிட்டார்.

* * *

எனது விசாரணை முடிந்தபின் வெளியில் போய் நின்றேன். வோறோர் இடத்தில் இன்னோர் அதிகாரி விசாரித்துத் தட்டச்சுச் செய்து கொண்டிருந்தார். நான் என்னுடன் வந்திருந்த கைதிகள் சிலரின் விளக்கங்களை மொழிபெயர்த்து அவருக்குக் கூறினேன். சீலன் என்ற உரும்பிராயைச் சேர்ந்த கைதியின் விளக்கம் இவ்வாறு இருந்தது.

'நான் கால் வருத்தம் காரணமாகச் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் மருந்து எடுத்திருந்தேன். அதில் நித்திரைக் குளிசையும் தரப்பட்டுள்ளது. இரவு 9மணியளவில் அதைக் குடித்துவிட்டுப் படுத்துவிட்டேன். காலையில் போலிங் எண்ணும்போது தான் எழுந்திருந்தேன்'

அதைத் தட்டச்சுச் செய்து முடித்த அதிகாரி என்னிடம் கூறினார் 'இது தரமான ஓர் அறிக்கை, யாரும் எதுவும் செய்யமுடியாது' என்று சிரித்தார்.

லோகன் என்பவர் (வவுனியாவைச் சேர்ந்தவர். தெலுங்கு இனத்தைச் சேர்ந்தவர், எனது சங்கத் தலைவன்) இவ்வாறு கூறினார்.

'ஏதோ ஜயோ...! என்று கத்துவது போல சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன். உடனே நான் எனது அறையின் இரும்புக் கதவைக் காலால் தள்ளி மூடிக்கொண்டிருந்தேன். பிறகு சத்தம் எதுவும் கேட்கவில்லை. நான் அவ்வாறு செய்ததற்குக் காரணம் 2000ஆம் ஆண்டு சிறைச்சாலை ஊழியர்களும், தண்டணை தீர்க்கப்பட்ட சிங்களக் கைதிகளும் சிறைக்குள்ளே புகுந்து அடித்தார்கள். சுட்டார்கள். அவ்வாறான ஒரு சம்பவமாக இது இருக்கக்கூடும் என்று நினைத்துப் பயந்தேன்' என்றார்.

களுத்துறைச் சிறைச்சாலைக்குள் புகுந்து அங்குள்ள கைதிகளைக் கொலை செய்வதற்கு அந்த ஊரிலுள்ள சிலர் பல தடவைகள் முயன்றபோதும் இராணுவத்தினரும், சிறைச்சாலை ஊழியர்களும் தடுத்திருக்கிறார்கள்.

2001ஆம் ஆண்டு முற்பகுதியில் சிறைச்சாலையின் முகப்புக் கதவு வரை கத்திகள், பொல்லுகள் சகிதம் சிங்கள ஊரவர்கள் வந்தார்கள். அவர்களுடன் பேசிய சிறைச்சாலை அத்தியட்சகர்

'இங்கு புலிகள் என்றுயாருமில்லை, சந்தேகத்தின் பெயரில் கைதான பொதுமக்கள் தான் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தொல்லை கொடுக்க வேண்டாம். அதையும் மீறி உள்ளே புகுந்தால் அவர்களும் சும்மா இருக்கப் போவதில்லை. உங்களில் சிலரும் சாக வேண்டிவரும்' என்று கூறி விட்டுப் பெரிய கதவைத் திறந்து விடும்படி கடமையில் இருந்த சிறைச்சாலை ஊழியர்களுக்குப் பணித்தாராம். உடனேயே எல்லோரும் திரும்பிச் சென்றதாக அறிந்தேன்.

* * *

ஒரே உடுப்புக்களை அணிந்துகொண்டு வெளியில் திறக்கப்படாமலேயே 8 நாள்கள் கழிந்தாயிற்று. 12 ஜனவரி 2001 காலையில் எம்மை எண்ணும்போது கதவைத் திறந்து கீழே இறங்கி வரச்சொன்னார்கள். அந்தச் சந்தோசத்தில் சசி என்பவன் கீழே அவசரப்பட்டு இறங்கியபோது தடுக்கி விழுந்து விட்டான். நான் நினைத்தேன் வந்த ஜெயிலர் விசயம் தெரியாமல் திறந்து விட்டார் என்று. பாணும் தேனீரும் கீழே

வைத்துத் தந்தார்கள். மண்ணில் கால் பட்டதும் மிகவும் சந்தோசமாக இருந்தது. அப்போது தான் நான் முதன் முதலாக எவ்3 வாட்டிலுள்ள தண்டணை தீர்க்கப்பட்ட கைதிகளைப் பார்த்தேன். சற்று நேரத்தில் மீண்டும் பூட்டி விட்டார்கள்.

காலை 9 மணியிருக்கும் பிரதம சிறை அதிகாரி (எஸ்.பி.), ஜெயிலர்மார் சிலர், ஊழியர்கள் எல்லாம் வந்து கதவைத் திறந்தார்கள். எம்மைப் பார்ப்பதற்கு ஐ.சி.ஆர்.சி வந்திருப்பதாகக் கூறினார்கள். நாம் எல்லோரும் ஆர்வத்தோடு கீழே இறங்கினோம். ஐ.சி.ஆர்.சியின் பிரதிநிதியாக லின்டா என்ற வெள்ளைக்கார அம்மையார் வந்திருந்தார். 'காலை வந்தணம்' என்று சொல்லி எம்மை வரவேற்றார். எங்களில் இருவரை முன்னால் உள்ள கட்டடத்துக்குக் கூட்டிச் சென்று தான் கொண்டு வந்த பொருள்களில் ஒவ்வொன்றிலும் 33 எண்ணித் தந்தார்.

ஒரு பெரிய துவாய், ஒரு சன்லைட், ஒரு லைபோய், ஒரு பற்பசை, ஒரு பற்தூரிகை இவ்வளவும் கிடைத்தன. பெரிய ஆறுதலாக இருந்தது. ஒவ்வொரு கைதியும் மிகுந்த ஆர்வத்துடன் தாம் விரும்பிய வர்ணங்களில் துவாய்களை எடுத்துக் கொண்டார்கள். எனக்கு இளம்சிவப்பு நிறத் துவாய் ஒன்று கிடைத்தது. அது ஓரளவு பெரிய துவாயாக இருந்ததால் அதை உடுத்திக் கொண்டு ரீசேட்டையும், சாறத்தையும் சவர்க்காரம் இட்டுத் தோய்த்துக் காயவிட்டேன். ஏறத்தாழ 10 நாள்களின் பின் அந்த உடுப்புகள் இரண்டும் சவர்க்காரம் போட்டுத் தோய்த்தது அன்று தான்.


* * *

12ஆம் திகதியன்று எம்மை வழமையான கைதிகளின் ஒழுங்குக்குளின்படி செயற்படவிட்டார்கள். எவ் வாட் அமைந்திருந்த பகுதி மிகவும் அமைதியான சூழல். விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த காரணத்தால் கைது செய்யப்பட்டு, குற்றம் தீர்க்கப்பட்ட கைதிகளுடன் உறவுகளை வைத்தோம். எல்லோரும் சந்தோசமாக நடத்தினார்கள். தனியாக, பிரித்துப் போடப்பட்டிருந்த அவர்களுக்கு எமது வரவு மிகவும் உற்சாகத்தைக் கொடுத்தது.

16.1.2001 அன்று பகல் சாப்பாடு தந்து மீண்டும் பூட்டப்பட்டபின் திடீரெனச் சங்கிலிகளுடனான கைவிலங்குகளுடன் வந்து எங்கள் அனைவரையும் சி3 வாட்டுக்குப் போவதற்குப் புறப்படுமாறு கூறினார்கள். நாங்கள் சந்தோசமாக வெளிக்கிட்டபோது 'எந்த பொருள்களும்' எடுக்க வேண்டாம் பொலிஸ் வந்திருக்கிறது, மீண்டும் விசாரிப்பதற்கு' என்றார்கள்.

இரண்டு பெரிய சங்கிலிகளுடன் முன்பு கொண்டு வரப்பட்டதைப் போலவே விலங்கிட்டுக் கூட்டிச் சென்றார்கள். ஏற்கனவே எல்லாக் கைதிகளும் பூட்டப்பட்ட நேரம் என்பதால் சி பிரிவு ஏனைய வாட்டுக்களின் யன்னல்களுக்கூடாக ஏனைய கைதிகள் நின்று எம்மைக் கண்டதும் ஆர்ப்பரித்துக் கையசைத்தார்கள். அந்தத் துன்பத்திலும் அவர்களது ஆதரவு எம் அனைவருக்கும் உற்சாகத்தைத் தந்தது. 4ஆம் திகதிக்குப் பின் அன்று தான் எம்மை அந்தப் பக்கத்துக்குக் கூட்டிச் சென்றார்கள். சி பிரிவு கைதிகள் அனைவரும் எங்கள் 33 பேரிலும் அனுதாபமும், அன்பும் வைத் தி ருந்தார்கள். ஏனெனில் எங்களில் யாரும் அந்தக் கொலை எப்படி நடந்தது என்ற தகவலைக் கூறவில்லைஎன்பதுடன், ஆளுக்காள் முரண்பட்டு மற்றவர்களைக் காட் டிக்கொடுத்து விட்டுத்தப்ப முயற்சிக்கவில்லை. அதற்காகச் சிறைச்சாலை நிர்வாகம் கடுமையாக நடத்துகிறது என்பதெல்லாம் அவர் களுக்கு ஏனைய ஊழியர்கள் மூலம் அறியக் கிடைத்திருந்தது.

ஏனைய பிரிவுக் கைதிகளும் அதே உணர்வுடன் இருந்ததால் தான் எமக்குப் பொருள் சேர்த்து



அனுப்பியிருந்தார்கள். சிலர் கடிதம் மூலம் எமக்கு உற்சாகமூட்டியும் இருந்தார்கள்.

அந்த வகையில் 33 பேரும் சிறைக்குள் சிறையிருந்த பெருமைக்குரியவர்களானோம். 'தாங்கள் அனுப்பியது கிடைத்ததா?' என்றும் கேட்டார்கள். சிறை அதிகாரிகள் எல்லோரும் சிங்கள மொழி பேசுபவர்களாக இருந்தது இவ்வாறான விடயங்களைச் சூட்சுகமாகப் பேசுவதற்கு இலகுவாக இருந்தது.

* * *

சி3 பகுதி நிசப்தமாக இருந்தது. அந்த வாட்டுக்கு முன்னால் அழகாகப் பூத்துக்குலுங்கியவாறு இருந்த பூக்கன்றுகள் எல்லாம் பிடுங்கி எடுத்துக் காய்ந்து போயுள்ளன. அதைச் சகிக்க முடியாமல் உள்ளது. இந்தப் பூக்கன்றுகளுக்குள் கைதிகள் ஏதாவது கொலைக்கான சிறிய ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் 4ஆம் திகதி காலையிலேயே சிங்களப் பாட்டிக்காரரைக் கொண்டு அவற்றைப் பிடுங்கி எறிந்து சோதனை நடாத்தியதாகப் பின்னர் அறிந்தேன்.

(தொடரும்)

# சர்க்கார்



## விஜய்
### இரசிகர்களுக்குரிய வழக்கமான விருந்து

தன்னுடைய வாக்கு வேறொருவரால் கள்ள வாக்காகப் போடப்பட்ட கோபத்தில் வாக்களிக்கும் உரிமைக்காகப் போராடும் இளைஞன் விஜய். அந்த இளைஞன் ஆட்சியமைக்கவுள்ள கட்சியை அசைத்துப் பார்த்தால் அதுவே 'சர்கார்'.

**கதை**

தொழில் உலகில் முதல் தர நபராக வலம் வருபவர் சுந்தர் ராமசாமி (விஜய்). இவர் இந்தியாவில் நடக்கின்ற தேர்தலில் வாக்களிப்பதற்காக அமெரிக்காவிலிருந்து சென்னைக்குப் பயணமாகிறார். விஜய்யின் வாக்கு இன்னொருவரால் கள்ள வாக்காகப் போடப்பட்டது தெரிந்ததும் அந்தத் தேர்தல் முடிவுகளை நிறுத்தி வைக்கச் சொல்லி முறையிட்டு நீதிமன்றம் செல்கிறார். 49 (பி) பிரிவின்படி விஜய் வாக்களிக்கலாம் என்று தீர்ப்பளித்த நீதிமன்றம் வாக்குச்சாவடி அமைக்கவும் உத்தரவிடுகிறது. இதனிடையே விஜய்க்கு வழக்கு விவகாரத்தில் அளிக்கப்பட்ட தீர்ப்பை மேற்கோள் காட்டி தமிழகத்தின் பல மாவட்டங்களில் உள்ள இளைஞர்கள் தங்கள் வாக்குகளும் கள்ள வாக்குகளாகப் போடப்பட்டதால், எங்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்க வேண்டும் என்று 3இலட்சத்துக்கும் மேற்பட்டோர் மனுத்தாக்கல் செய்கின்றனர். இதை ஏற்ற நீதிமன்றம் தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையுடன் மறுதேர்தல் நடத்த உத்தரவிடுகின்றது. இதற்கிடையில் அகில இந்திய மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவர் மாசிலாமணி (பழ.கருப்பையா) பதவி ஏற்க அவசரமாக ஆயத்தமாகிறார். ஆனால், பதவியேற்பு விழா பாதியிலேயே முடிய, மறு தேர்தல் அறிவிக்கப்படுகிறது. பழ.கருப்பையாவை எதிர்த்து விஜய் அதே தொகுதியில் களமிறங்குவதாகச் சபதமிடுகிறார். அந்தச் சபதம் என்ன ஆனது, பழ.கருப்பையா வென்றாரா? ஆட்சியமைத்தது யார்? விஜய் ஏன் வாக்களிப்பதில் அவ்வளவு தீவிரம் காட்டுகிறார்? போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது திரைக்கதை.

**பாத்திரங்கள்**

படம் முழுக்க விஜய்யின் ராஜ்ஜியம்தான். ஸ்ரைல், நாயகத்தனம், வசன வெளிப்பாடு, சண்டைக்காட்சிகள், நடனம் என்று எல்லாவற்றிலும் வழமையைத் தாண்டியிருக்கிறார். தனி ஒருவனாக விஜய் 'சர்கார்' படத்தின் ஒட்டுமொத்த பலத்தையும் தன் தோள்களில் சுமந்திருக்கிறார். ஓ.எம்.ஜி பொண்ணு பாடலில் மட்டும் நடனம் ஆடும் கீர்த்தி சுரேஷ் மிகவும் பாவம். மற்றும்படி விஜய்யுடன் வந்து போகிறார். யோகி பாபுவுக்கும் படத்தில் பெரிதாக எந்த வேலையும் இல்லை. பாட்டுக்கான தலைப்புக் கொடுக்கவே பயன்பட்டிருக்கிறார். ராதாரவி தனக்கே உரிய தேர்ந்த நடிப்பில் இயல்பாகவே அசத்துகிறார்.

விஜய்யை மிஞ்சும் அளவுக்கு அநாயசமாகப் பேசிக் கவர்கிறார். பழ.கருப்பையா பக்குவமான நடிப்பில் மிளிர்கிறார். வரலட்சுமிக்கு அழுத்தமான கதாபாத்திரம். தனக்குக் கிடைத்த வாய்ப்பை மிகச் சரியாகப் பயன்படுத்திச் சிறந்த நடிப்பைக் கொடுத்திருக்கிறார். துளசி, கல்யாணி, பிரேம், லிவிங்ஸ்டன், டான்ஸ் மாஸ்டர் சிவசங்கர் எனப் பலரும் ஓரிரு காட்சிகளில் வருகிறார்கள்.



**ஒளிப்பதிவு - காட்சியமைப்பு இசை**

க்ரிஷ் கங்காதரனின் ஒளிப்பதிவு படத்துக்குப் பெரிய பலம். அமெரிக்கா, சென்னையின் அழகையும், ஆயிரக்கணக்கான மக்களையும் கமராவில் அள்ளிக்கொண்டு வந்திருக்கிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் பாடல்கள் பரவாயில்லை. ஒட்டுமொத்தமாகப் பாடல்கள் கதையோட்டத்துக்கு வேகத்தடையாகவே இருக்கின்றன. ஏ.ஆர்.முருகதாஸ் ஜெயமோகனின் வசனங்கள் மனதில் பதிகின்றன.

ஒரு விரல் புரட்சியாக தனக்காகப் போராடும் விஜய், தேர்தல் முடிவுகள் தள்ளி வைக்கச் சொல்வது, மறு தேர்தலுக்குக் காரணியாய் அமைவது, தானே வேட்பாளராகக் களத்தில் குதிப்பது எல்லாம் திரைக்கதைக்கு வலுச் சேர்க்கும் அம்சங்களாக உள்ளன. 234 தொகுதிகளிலும் போட்டி என்பதும் திரைக்கதை நகர்வுக்கு சரியான உத்திதான். அதில் பியூஷ்மனுஷ், சபரிமாலா, பேராசிரியை சரஸ்வதி என்று நிகழ்கால ஆளுமைகளை, சமூக ஆர்வலர்களை அடையாளப்படுத்தும் நோக்கில் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதும் சரியான உத்தி.

**பலம் - பலவீனம்**

தன் வாக்குக்காகப் போராடும் இளைஞன் ஒருவன் ஒட்டுமொத்த தமிழக மக்களுக்காகவும் போராடினால் என்ன ஆகும் என்ற சுவாரஸ்யக் கதையைப் பிடித்து அதகளம் செய்திருக்கிறார் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ். நெல்லை தீக்குளிப்பு சம்பவம், பாரவூர்திப் பணம் ஆகிய நிஜங்களும் திரைக்கதையின் பொருத்தமான இடத்தில் கோக்கப் பட்டிருக்கின்றன. ஆனால், ஜல்லிக்கட்டு, வெள்ள மீட்பு என்று நடப்புச் சம்பவங்கள் கைத்தட்டலுக்காகவே காட்சிகளாகவும், வசனங்களாகவும் அமைந்திருப்பது ஒரு கட்டத்தில் சோர்வை வரவழைக்கின்றது. அதுவும் கழகம் இணையும் விழாவில் நடக்கும் அசம்பாவிதங்கள், அடுத்தடுத்து மாறும் அரசியல் காட்சிகள், முகநூல், கீச்சகம், 'வட்ஸ் அப்' பை நம்பியே மாற்றத்தை விதைக்க நினைப்பது ஆகியவற்றில் நம்பகத்தன்மை காணாமல் போய், செயற்கை மட்டுமே மிஞ்சுவதால் இரண்டாம் பாதியில் படத்துடன் ஒட்ட முடியவில்லை. சில இடங்களில் எழும் கேள்விகளுக்கு நாயகன் வழியாகவே பதில் சொல்லியிருப்பது புத்திசாலித்தனம்! ஆனால், அதைத் தாண்டியும் கேள்விகள், இடறல்கள் இல்லாமலில்லை.


சூழ்ச்சி எனத்தெரிந்த பின்னும் அவ்வளவு புத்திசாலியான வரலட்சுமி ஓரிடத்தில் தலையைக்கொடுப்பது ஏன்? மத்திய அரசைப்பற்றி ஒரு குட்டி வசனம்கூட இல்லை. மாநிலத்தையே குழப்பத்தில் தள்ளும் அரசியல் விளையாட்டில் மத்திய அரசின் பங்கு கொஞ்சம் கூட இருக்காதா என்ன? இவை எல்லாம் படம் பார்க்கும்போதே தோன்றுவதால் படத்தோடு ஒன்றிப்போவது கொஞ்சம் குறைகிறது! விஜய்யின் 'கார்ப்பரேட் கிரிமினல்' எனும் அடைமொழிக்கு திரைக்கதையில் கொஞ்சம் கூட நியாயம் சேர்க்காதது பெரும் ஏமாற்றம். அந்த ஒற்றை வார்த்தையை வைத்துக்கொண்டு திரைக்கதையில் எப்படியெல்லாம் விளையாடியிருக்கலாம், மொத்தமாய் தவறவிட்டு வழக்கமான, பழக்கமான ஒரு திரைக்கதையையே தந்திருக்கிறார் முருகதாஸ். இவற்றை தவிர்த்துப் பார்த்தால் குறியீடுகள் மூலம் சமகால அரசியலை நினைவுகூர்ந்த விதத்தில் விஜய்யின் 'சர்கார்' விஜய் இரசிகர்களைத் திருப்திப்படுத்தும் படமாக உள்ளது.

மற்றும்படி வழக்கமான நாயகத்தனத்தை மெய்ச்சுகின்ற தென்னிந்தியத் தமிழ்ச் சினிமாவிலிருந்து படம் சற்றும் விடுபடவில்லை. கமல், ரஜினி என்று அரசியலுக்குள் நடிகர்கள் பாதம் பதித்துக்கொண்டிருக்கும் தருணத்தில் வெளியாகியிருக்கின்ற சர்காரும் விஜய்க்குள் இருக்கின்ற அரசியல் நுழைவுக்கு வலுச் சேர்ப்பதாகக் கருதப்படக் கூடிய அம்சங்களையே உள்ளடக்கியிருக்கின்றது.



**தன் வாக்குக்காகப் போராடும் இளைஞன் ஒருவன் ஒட்டுமொத்த தமிழக மக்களுக்காகவும் போராடினால் என்ன ஆகும் என்ற சுவாரஸ்யக் கதையைப் பிடித்து அதகளம் செய்திருக்கிறார் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ். நெல்லை தீக்குளிப்பு சம்பவம், பாரவூர்திப் பணம் ஆகிய நிஜங்களும் திரைக்கதையின் பொருத்தமான இடத்தில் கோக்கப்பட்டிருக்கின்றன.**

# 'போய் இரேஸட்'




வரலாறு முழுவதும் தன்பாலின ஈர்ப்பைக் குறிவைத்து மன்னிக்க முடியாத அவலங்கள் அரங்கேறி இருக்கின்றன. அத்தகைய உண்மைக் கதை ஒன்றைத் திரைக்கதையாக்கிப் படமாகப் பதிவு செய்திருக்கிறது 'போய் இரேஸட்'. இந்தத் திரைப்படம் நவம்பர் 2ஆம் திகதியன்று வெளியாகியிருக்கிறது.

**உண்மைக் கதை**

தீவிர இறை நம்பிக்கை கொண்ட குடும்பத்தில் பிறந்த சிறுவன் ஒருவன், கல்லூரி செல்லும் வயதில் தனது பாலின ஈர்ப்பின் தடுமாற்றத்தை ஒருவாறாக அடையாளம் காண்கிறான். அதை வீட்டில் வெளிப்படையாகச் சொல்லும்போது குடும்பத்தினர் அதிர்ச்சியடைகின்றனர். தேவாலயத்தின் ஆதரவில் நடத்தப்படும் 'சிகிச்சை முகாம்' ஒன்றுக்கு அவன் அனுப்பப்படுகிறான். பாலின ஈர்ப்பில் 'பிறழ்வு' கண்ட இளைஞர்களைத் திருத்துவதற்கு இறைபோதனையும், மனோத்தத்துவமும் கலந்த கடும் பயிற்சிகள் அங்கே வழங்கப்படுகின்றன. இவ்வாறு சிகிச்சைக்குப் பணிக்கப்பட்ட ஜராாட் கான்லி என்பவர், தனது அனுபவத்தை 'போய் இரேஸட்' என்ற தலைப்பில் எழுதிய புத்தகம் பலத்த விவாதங்களை எழுப்பியது. இவரது வாழ்க்கை, புத்தகத்தைத் தழுவி அதே தலைப்பிலான திரைப்படம் தற்போது உருவாகி இருக்கிறது.




**பாத்திரங்கள்**

தன்பாலின ஈர்ப்பை மையமாக வைத்து, குடும்பம், சமூகம், உறவுகள் மத்தியிலான உருக்கம், இறை நம்பிக்கை, இயற்கையின் விழைவு எனப் பலவற்றையும் இந்தப் படத்தின் கதை அலசுகிறது. பாலினத் தடுமாற்றத்துக்கு ஆளாகும் இளைஞராக லுகாஸ் ஹெட்ஜஸ் நடித்துள்ளார். திரைக் கதையை வடிவமைத்து, தயாரிப்பில் பங்கேற்றதுடன் படத்தை இயக்கியுள்ளார் ஜோயல் எட்ஜர்டன். தன்பாலின ஈர்ப்பைக் 'குணப்படுத்தும்' சிகிச்சையாளராக வரும் இவருக்கும் பாதிக்கப்பட்ட இளைஞனுக்கும் இடையேயான உரையாடல்களும் விவாதங்களுமே படத்தின் மையம். மகன் மீதான பாசத்துக்கும் மத நம்பிக்கைகளுக்கும் இடையே அல்லாடும் பெற்றோராக, ஒஸ்கர் விருது பெற்ற ரஸல் க்ரோ மற்றும் நிகோல் கிட்மேன் நடித்துள்ளனர்.



# அற் இரெர்நிரிஸ் கேற்






"ஓவியங்களை விட்டுவிட்டால் உலகிடம் பேசுவதற்கு வேறு ஒன்றுமே இல்லை" என்றவர் உலகப் புகழ் ஓவியரான வின்செண்ட் வான்கோ. இதைக் கலையார்வத்தில் மட்டும் அவர் சொல்லவில்லை. வாழ்ந்த காலத்தில் அந்த அளவுக்குப் பெரும் புறக்கணிப்புக்கு ஆளானவர் அவர். 37 வயதில் அகாலமாய் முடிந்த வான்கோவின் உருக்கமான வாழ்க்கை 'அற் இரெர்நிரி'ஸ் கேற்' என்ற திரைப்படமாக வருகிறது. நவம்பர் 16ஆம் திகதியன்று திரைக்கு வருகிறது.


**சோகங்கள் நிறைந்த வான்கோவின் வாழ்க்கை**

சிறுவயது முதலே குடும்பம், பாடசாலை, மதபோதகர் எனப் பலரால் வான்கோ புரிந்துகொள்ளப்படாமலும் போதிய அரவணைப்பின்றியும் மனச்சோர்வுக்கு ஆளானார். வளர்ந்ததும் வறுமையும் சேர்ந்துகொள்ள மன அழுத்தத்தில் விழுந்தார். வாழ்நாளில் பத்தாண்டுகளுக்கும் குறைவான காலத்திலே அவர் ஓவியம் வரைவதற்காகத் தூரிகையை ஏந்தியிருந்தார். அதிலும் கடைசி 6ஆண்டுகளில் பின்னாளில் உலகப் பிரசித்தி பெற்ற ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓவியங்களை வரைந்து தள்ளினார். அதற்கான பொருளையோ, புகழையோ வாழ்நாளில் வான்கோ அனபவித்திருக்கவில்லை என்பது மற்றுமொரு சோகம். பிரான்சில் வாழ்ந்த கடைசி 2 ஆண்டுகளில் வான்கோவை அலைக்கழித்த மனப் பாதிப்புகளும் வறுமையும் அவற்றின் மறுமுனையில் பீறிட்ட கலைத்தாகமும் உச்சத்திலிருந்தன. ஓவியங்களின் வழியே ஆதியும் அந்தமுமற்ற வெளியுடனான வான்கோவின் உரையாடல் அப்போதுதான் நிகழ்ந்தது. தன்னுடைய காதை அறுத்துக்கொண்டது முதல் தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்கின்ற சர்ச்சைக்குரிய முயற்சி வரையிலான தருணங்களை இந்தத் திரைப்படம் அலசுகிறது.

**நடிப்பு இயக்கம்**

கலைஞனின் துயர வாழ்க்கையைப் பகிரும் படம் என்றாலும், வான்கோவின் பார்வையிலான காடு, மலை, வானம் உள்ளிட்ட இயற்கைக் காட்சிகளைத் தனித்துவமாகப் படம் பிடித்திருக்கின்றனர். வான்கோவாக வில்லெம் டவ்போ நடித்திருக்கிறார். படத்தை இயக்கியவர் ஜீலியன் ஸ்ஷ்னாபெல். இறப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்பாக வான்கோ வரைந்த ஓவியத்தின் பெயரையே திரைப்படத்தின் தலைப்பாகச் சூட்டியுள்ளனர். அதுதான் 'அற் இரெர்நிரிஸ் கேற்'


# நினைவுகூரத்தக்க 'செவின் சாமுராய்'




'ஏழு வீரர்கள்' என்று அர்த்தப்படுகின்ற இந்தத் திரைப்படமானது ஜப்பானிய இயக்குநர் அகிரா குரோசாவா இயக்கிய ஜப்பானிய மொழித் திரைப்படம் ஆகும். 1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி வெளியானது. கதை 1578ஆம் ஆண்டு நடைபெறுவதாக எடுக்கப்பட்டிருந்தது. தனது விளை நிலங்களின் அறுவடைப் பயிர்களைக் கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்றுவதற்கு விவசாயிகள் ஏழு வீரர்களை நியமித்து கொள்ளையர்களுடன் சண்டையிடுவதைப் பற்றிய கதை இது.

இந்தத் திரைப்படத்தின் படத்தொகுப்பாளராகவும் இணைக் கதாசிரியராகவும் அகிரா குரோசாவா இருந்தார். இதுவரை எடுக்கப்பட்டத் திரைப்படங்களிலேயே மிகச்சிறந்த படங்களுள் இந்தத் திரைப்படமும் ஒன்று. மேலும் உலகம் முழுவதும் புகழ் பெற்ற ஜப்பானியமொழித் திரைப்படம் இது. 1982 ஆம் ஆண்டின் தேர்வின்படி இந்தத் திரைப்படம் முதல் மூன்று இடங்களுள் ஒன்றாகத் தெரிவாகியது. மேலும் இயக்குநர்களின் சிறந்த 10 திரைப்படங்களுள் ஒன்றாக 1992 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்டது. 2018ஆம் ஆண்டு நிறைவடையப்போகின்ற இந்தத் தருணத்தில், பல ஊடகங்களின் தர வரசைப்பட்டியலிலும் இந்தப் படமே முன்னிலையில் நிற்கின்றது. ஒரு குழுவைக் கொண்டு ஓர் இலக்கை அடையும் உத்திக்கு இந்தத் திரைப்படமே அத்திபாரமிட்டது.

நீண்ட நேரம் ஓடக்கூடிய படமான இது (மூன்று மணி நேரம், இருபத்தி ஏழு நிமிடங்கள்) விருதுகள் பலவற்றை வென்றுள்ளது. வெனிஸ் திரைப்பட விழா (1954), மனிசி திரைப்பட விருது (1955), பிரித்தானிய அக்கடமி திரைப்பட விருதுகள் (1956), சிறந்த திரைப்படத்துக்கான விருது, சிறந்த வெளிநாட்டு நடிகருக்கான விருது, ஒஸ்கார் விருது (1957, ஜஸ்ஸி விருது (1959) ஆகிய விருதுகளுக்கு உரித்துடையது. சிறந்த இயக்குநரான அகிரா குரோசாவாவின் சிறுதொகைப் படைப்புக்களில் இது குறிப்பிடத்தக்க ஒன்று.



# மனிதத்தை மலர வைப்பாய்!

மனிதத்தின் மகத்து வத்தை
மாதலத் துக்கே யுணர்த்தும்
புனிதத்தைப் பூம் பொழிலாய் (ப்)
பூதலத்துக் கீந் திடுவாய்

கன்னல் மொழி யதனால்
களங்க மதைத் துடை த்தகற்றி
மின்னலாய் ஒளி யுமிழ்ந்து
மீட்சி தமை யீந்திடுவாய்


வாழும் வகை தெருட்டும்
வற்றாத நீ ரூற்றாய்
நாளு மெமைக் காத்து
நல் லருளைத் தந்திடுவாய்

கோலம் கொழுந்துவிட
கொள்கை பரந்தொளிர
ஞாலம் நனி சிறக்கும்
நவ்வியத்தை நமக்கருள்வாய்

எல்லோரும் எல்லாம் பேற்று
இல்லாதார் இல்லை யெனும்
வல்ல சமுதாயமதை
வடிவமைக்க வைத்திடுவாய்

கவிதை

வி.சி. குஞ்சிதபாதம்



மேடை - 05

தையிட்டி அ.இராசதுரை

# அதியுயர் காண்டத்து மேடைகள்

இந்தடங்களில்... தெறியன் தெறியனாய்ச் சம்பவித்துக் கொண்டுவிட்ட சிவிலியன்களின் பாதுகாப்பை முன்னிட்டு... ஒரு நாளைக்கு காலையும் மாலையுமென்ற கணக்கில் ற்ரேர்ன் பிடித்து அக்குறேற்ரான நேரத்துக்குத் தவறாது வந்து சுற்றிப் பார்த்துக் கொண்டு போகுமந்த மிலிட்டரிப் பொலிஸ் இன்றைக்குமிந்த மாலை நேர ற்ரேனுக்கு தெற்கு வீதியில் வந்து கொண்டிருக்கும் மோட்டார் பைக் , சத்தம் கேட்டதும் கதைக்க வாயெடுத்த அந்த முக்கிய கதையினையும் அப்படியே விழுங்கிவிட்டு குருக்க ளும் அர்ச்சுணாவும் பரபரவென்று கோபுரவாசல் பக்கமாய் விழுந்து கட்டி ஓடி வந்தும் விடுகிறார்கள்...

அப்படியே கழற்றினாற்போல், உகண்டா, இடியின் சாயலைக் கொண்ட 'அன்ரன் விஜே' என்ற மிலிட்டரிப் பொலிஸ்காரன் வந்ததும் வராததுமாய் அந்த இரண்டு மாட்டுத் தலைகளையும் கோவில் முகப்பில் கண்டுவிட்ட வெக்காளிப்பில் 'மே மொக்கத...? மே மொக்கத..."என்றெல்லாம் கத்தித் தொலைத்து, சத்தம் வைக்கத் தொடங்கியேவிட்டான்?

கையில் வெண்ணையிருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலையத் தேவையில்லையென்ற கணக்காய் கண்ணுக்கு முன்னால் அதன் புரடீயூசர் இருக்கத்தக்கதாய் ஏன்.. கஷ்டப்பட வேணும்... என்ற மாதிரியாய் வலும் ஈசியாய், அர்ச்சுணா.. கரடியார், பக்கமாய்க் கண்ணைக் காட்டிவிட்டதுதான், தாமதம் கரடியைக் கடித்துப் பிடுங்கிய இன்னொரு கரடியாக விஜே... இந்தப் பெயரெடுத்து விட்ட இந்த மந்திர, வாய்க்கட்டுக் கரடியாரை, விசயம் விளங்காமல்.. உள்ள நடப்பைப் புரிந்துகொள்ள முடியாமல் பதில் சொல்லும் படியாக ஆய்க்கினைப்படுத்தி அரியண்டப்படுத்தி தன்னையே களைக்க வைத்துக் கொண்டிருந்தான்.

● ● ●

"இது பூச்சி... கத்தாக்கறண்ட இல்லே...?" தன்னுடைய ஆற்றாமையைத் தமிழும் சிங்களமும் மிக்ஸ் பண்ணி வெளிப்படுத்திவிட்ட விஜே... இடையில் வந்துவிட்ட செல்போனழைப்புக்கு உலாவி, உலாவி பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

இந்த விஜேக்கு புறோக்கின் இங்கிலிஸ் கூட ஒரே BROKEN தான்?

தமிழ் கதைப்பும் விழுந்து விழுந்தெழும்பி நடக்கத் தொடங்கி, எல்லாம் முடிவில் மேல்மாடிப் படியினால் உருண்டு விழுந்து செத்துப் போகும், சின்னக்குழந்தை எவ்வளவோ... பெற்றர்?

அர்ச்சுணாவுக்குச் சிங்களம், சாடைமாடையாய்த் தெரிந்திருந்தாலும்தான், கதைத்துக் கொள்வதற்குத் தைரியமில்லை? இந்தக் கரடியாரின் சம்பவிப்பை, விஜேக்கு டீற்ரேலாய்....சொல்லி விளங்கப்படுத்திக் கொள்ள இந்தப் 'பாஷை' ஒரு பாடாயிருந்துகொள்ள ஊமையும் ஊமையும் மூக்குச் சொறிந்த கதைதான் கடைசியில் கண்டமிச்சம்?

பறக்கப் பறக்கச் சிங்களம் பேசுவதில் ஒரு மகாகெட்டிக்காரனென்று சேர்டிபிக்கற் வாங்கி வைத்திருக்குமிந்தக் கரடியாரின் சிங்களமானது.. மந்திரவாய்க் கட்டோடு தொண்டைக்குள் கிடந்து ஒரே சங்கிலிக் கட்டில் போடப்பட்டுவிட்ட ஒரு கடியன், நாயாய், ஊளையிட்டுக் கொண்டிருந்தது?

விஜேயின் நீண்ட நேர செல்போன் கதைப்பு முடியவும் உந்தோட்டமோடிப் போன குளப்படி அருணகிரி தென்மராட்சி பலாப்பழம் புகழ் சந்தோசம் கிளாக்கரையும் தன்னுடைய ஒரு பன்பலுக்குக் கூட்டிக் கொண்டு வந்து கோபுரவாசலில் ஒரு கம்பீரமாய் மிதக்கவும் ரைம் சரியாகவேயிருந்தது.

● ● ●

வந்த சூட்டோடு கரடியார் 'கதைக்கமாட்டார்' என்ற நியூசையும் த்திறல்லாய், அறிந்து முடித்துக் கொண்ட அருணகிரி... தன்னுடைய பெண்டில்காறியும் பேசப் பேச இந்தச் சனியன் பயலோடு ஒரு பொடிகாட் மாதிரியாய் நல்லாய் ஒட்டி முட்டிக் கொண்டு உறவாடித் திரிந்துவிட்ட தன்னிலும் தானிந்த 'வாய் கட்டு மந்திரம்' ஒரு தொத்துவியாதியாய்த் தொத்தித் தாவிட்டதோ.. என்ற பயக்கெடுதியில் தன்னுடைய வாயையும் அடிக்கடி தடவித் தடவிப் பார்த்தும்...?

தன்னுடைய இந்த வாய்க்கும் இப்படியேதும் வந்துவிட்டால் வடமராட்சிக்காரியான தனது மனைவி, கோகுலம்... தன்னோடு அடிக்கடி ஏண்டுவெட்டிப் பேசித் தள்ளும் பட்டாஸ் வெடிப் பேச்சுக்களுக்கெல்லாம் தானும் சரிக்குச் சரியாய் நின்று பிடித்துக் கதைத்துக் கொள்ள வழியில்லாமல் வெள்ளைக்கொடி- சரண்டர் தானென்று 'வாய்க்குச்' செத்தவீடு, கொண்டாடி முடித்தநேரமாய்..

● ● ●

திடீரென்று நினைக்கமுழிக்க செத்தவீட்டிலொரு பெரிய கல்யாண வீடுகணக்காய்... கரடியார் கத்தத் தொடங்கியேவிடுகின்றார்? கரடியாரின் இந்தச் சத்தமானது உண்மையானதொரு கரடியின் சத்தம்தானோ? என்று நினைத்தோ என்னவோ அந்த மிலிட்டரிப் பொலிஸ் விஜே திடீரட்டியனவய் வெருண்டு மிரண்டு நின்ற இடத்தைவிட்டு ஒரு கொஞ்சம் பின்தள்ளிப் போனவன் எருமைகளும் யானைகளும் கலக்கியடித்த குறட்டை, சற்று நேரப் பொழுதுக்குள் தெளிவடைந்துவிட்டதுபோல கரடியாரின் வாயிலிருந்து கதைப்பின் சீரான வடிவத்தைக் காணப்பெற்றதும் கரடியார் பக்கமாய் கொஞ்சம் முன்தள்ளியே வந்தும் விடுகின்றான். அதற்கும்தான் பயப்பிடவில்லை என்பது போல...!

குருக்களும் பார்த்தார். இந்த மிலிட்டரிப் பொலிசைக் குழப்பியடித்துவிட்ட இந்த வாய்கட்டு மந்திர சமாச்சாரம் இராணுவத்துக்குள்ளும் போய் நுழைந்து.. சும்மாவொரு கடுகளவையும் மலையளவாக்கி இந்தப் புலிவிசரில் பெரும் கீசறிநாசறியாக்கியும் விடுவார்களென்ற பயத்தில் குருக்களும் மிகவும் புத்திசாதுரியமாய் சங்கிலிக் கட்டில் போட்டுவிட்ட அந்தக் கடியன் கட்டை அருளாமல் அவிழ்த்தும் விடுகின்றார்.


விஜேயின் இது தொடர்பான விசாரிப்புக்கு தக்க மறுமொழியை இப்பொழுதிந்த வாய் வந்துவிட்ட பின்னாடியும்... சொல்லிக் கொள்ளத் தைரியமற்றவராய்க் கரடியார், பெரும் அவஸ்தைப்பட்டுத் தொலைக்க... இது தொடர்பான சகல யாதர்த்தங்களையும் அந்த இரண்டு மாட்டுத் தலைகளையும் சுட்டிக்காட்டி ஆனாவிலிருந்து அகேனம் வரையும் கரடியாருக்கும் தோற்காத வகையில் தறோவாய்ச் சிங்களம் பேசக்கூடிய சந்தோசத்தார் படமோடிக் காட்டிவிடுகின்றார். கரடியாருக்குத் தமது வந்த வாய் மறுபடியும் போனவாயாகியேவிட்டது போன்ற திகில் மயக்கம்.

● ● ●

அந்தச் சூரன் தலைபோன்ற அந்த இரண்டு மாட்டுத் தலைகளையும் சுட்டிக் காட்டி அந்த மிலிட்டரி கரடியாரின் அந்தச் சொன்னவாய்க்கு நேராகவே ஒரு குண்டை வெடிக்க வைத்துவிட்டதும் குருக்களும் அர்ச்சுணாவும் மற்றும் அனைவரும்தான் சுதந்திரமாய்ச் சிரித்து விழுந்தார்கள்.... அந்த இரண்டு மாட்டுத் தலைகளோடும் கரடியார் ஒரு வில்லன் நடை நடந்து போய்க் கொண்டிருக்க..." இந்த இரண்டு தலைகளையும் கொண்டு போய் வடிவால் ஆக்கிச் சாப்பிடு என்று விஜே சோல்லிவிட்ட அந்தக் குண்டுக் கதையை அசைபோட்டபடியே சந்தோசமும் துக்கமும் பின்னால் போய்க் கொண்டிருந்தார்கள். குருக்களையா தாம் சொல்ல எண்ணியிருந்த அந்தக் கதையைத் தொடங்கினார்.

(தொடரும்)

# புலமைப்பரிசில் பரீட்சை அவசியம்தானா?



**சமூக எதிர்பார்க்கைகளை திறம்பட நிறைவேற்றுவது குறித்த கருத்தாடல்**

கட்டுரை

க. கங்காதரன்

கல்வி என்பது திணிப்பற்றதாக. இயற்கையோடு ஒன்றிணைந்த மகிழ்ச்சிகரமான நிலையை ஏற்படுத்துவதாக, வாழ்வியலுக்கு வேண்டிய அறிவையும், திறன்களையும், மனப்பாங்குகளையும் வளர்ப்பதாக, பயனுள்ளதாக, சமூக எதிர்பார்க்கைகளை நிறைவு செய்வதாக, காலமாற்றங்களோடு மாற்றமடையும் நிலை கொண்டதாக அமைதல் வேண்டும்.

பொதுவான இலக்குகளை நிர்ணயித்து அதன்பால் நகர்த்திச் செல்லப்படுவதாக இருத்தல் வேண்டும். அதுவே பயனுள்ள உயிர்ப்புள்ள பொருத்தப்பாடான கல்வியாகும். ஒரு நாட்டின் சிறந்த கல்வி முறையை அளவிடும் அளவுகோல் அந்த நாட்டின் பாடசாலைகளினதும், கல்வி நிறுவனங்களி னதும், உயர் கல்வி நிறுவனங்களினதும், பல்கலைக்கழகங்களினதும் எண்ணிக்கை அல்ல. அவற்றின் கல்வி வெளியீடுகளும் அல்ல. மாறாக அவற்றால் வெளியிடப்படும் வெளியீடுகள் சமூகத்திற்கு பொருத்தப்பாடுடையதாக அமைகின்றதா? சமூக எதிர்பார்க்கைகளை நிறைவு செய்வதாக அமைகின்றதா?. நிலைபேறான பேண்தகு அபிவிருத்திக்கு வழிசமைப்பதாக அமைகின்றதா? மகிழ்ச்சிகரமான பாதுகாப்பான வாழ்வியல் நிலையை ஏற்படுத்துவதாக அமைகின்றதா? பால்நிலை சமத்துவத்தையும் பொருளியல் நிலை சமத்துவத்தையும் பேணுவதாக அமைகின்றதா? மனித நேயத்தையும் மனிதத்துவத்தையும் கட்டியெழுப்புவதாக அமைகின்றதா? கால மாற்றங்களுக்கும் உலகியல் மாற்றங்களுக்கும் ஏற்ப ஈடுகொடுத்து வாழ்வதற்கான சமூகத் திறன்களை வழங்குவதாக அமைகின்றதா? என்ற வினாக்களுக்கு விடையளிப்பதாக அமையவேண்டும். பதில்கள், நேர்நிலைப் பாங்கானதாக அமையும்போது அதுவே சிறந்த ஒரு கல்வி முறையை வழங்கும் நாடாக அமைகின்றது.

**திணிக்கின்ற கல்வியால் பயனில்லை**

மேற்குறிப்பிட்ட நிலைகளை ஒரு நாடு எட்டவேண்டுமானால் திணிப்பு முறைக் கல்வியினூடாகவோ, அல்லது 'போலோ பிறேரி'யின் கூற்றுக்கு அமைய வங்கி முறையிலான கல்வி முறையினாலோ அறிவை எட்ட முடியாது. வழங்கப்படும் கல்வி முற்குவிப்பு நிலையுடையதாக, சமகாலப் பிரச்சினைகளை உள்ளடக்கியதாக, ஜோன் டூயியின் கூற்றுக்கி ணங்க வாழ்வியலுக்குப் பயனுடையதாக, இயற்கையோடு ஒன்றிணைந்ததாக, மகிழ்ச்சிகரமான நிலையை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும். அண்மையில் வெளியாகிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் சித்தியடைந்தோருக்கான வெட்டுப்புள்ளியின் இணையத்தள வெளியீட்டையும், அதனால் பிஞ்சு உள்ளங்களின் மனதில் ஏற்பட்ட ஆற்றிட முடியாத தாழ்மை உணர்வு நிலையையும் இங்கு குறிப்பிட முடியும். என்ன கொடூரம்! உயர் அடைவு மட்ட நிலையாக இரு பாடங்களிலும் சராசரியாக எண்பது மதிப்பெண்களை எடுத்த நிலையிலும் பிள்ளைகள் பரீட்சையில் தோல்வி, ஒன்றும் தெரியாதவன் என்ற அடையாளத்துவம்.

பெற்றோர்கள் ஆசிரியர்கள் வெளிப்படுத்தும் கண்டிப்பான உணர்வு.சித்தி எய்தியவர்கள் சூடிக்கொள்ளும் ஓர் ஏளனப் பார்வை. உண்மையில் அவன் பரீட்சையில் சித்தியடையவில்லைத் தானா? என்ன செய்ய முடியும் ஏதும் அறியாப் பிஞ்சு உள்ளத்தில் தோற்றம் பெறும், தான் ஏதும் அற்றவன்,பயன் அற்றவன் என்ற மனநிலை எத்துணை கொடிய உணர்நிலை. விரக்தியின் விளிம்பில் பிள்ளைகள். இந்த நிலையில்தான் நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டியவர்களாகின்றோம். கல்விச் சிந்தனையாளர்களும், கல்விப் புல அதிகாரிகளும்,ஆளும் வர்க்கத்தினரும் இது குறித்துச் சிந்திக்கவேண்டும்.

**கல்வி முறைமையில் மாற்றம் வேண்டும்!**

மனித உரிமை, சிறுவர் உரிமை, சிறுவர் துஸ்பிரயோகம் எனப் பேசிக்கொண்டிருக்கும் நாம் இது பற்றிச் சிந்திக்காதிருப்பது ஒரு புரியாத புதிராகவே உள்ளது. சிறுவர் உரிமை என்பது, 'சிறுவன் ஒருவன் தான் வாழும் சூழலில் தன்னை நிலைப்படுத்தி மகிழ்வுடன் வாழ்வதற்கான அனைத்து உரிமைகளையும் பெற்றுக்கொள்ள உரித்துடையவன்' என்ற நிலையைச் சுட்டி நிற்கின்றது. அவனுக்கான அனைத்துத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படவேண்டும். இங்கு, மாஸ்லோவின் தேவைக் கொள்கை நினைவுகொள்ளத்தக்கது.

இந்த நிலையில் அவனுக்கான தேவைகள் நிறைவு செய்யப்பாடாமல் பெற்றோர்களும், ஆசிரியர்களும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த, தமக்குரிய ஒரு அந்தஸ்தை பெற்றுக்கொள்ள தரம் 5 மாணவர்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துகின்றனர். தீனிபோட்டு இறைச்சிக்காக வளர்க்கப்படும் இறைச்சிக் கோழிகளாக பாவனை செய்கிறார்கள். பரீட்சையை நோக்காகக் கொண்டு திறனற்ற, ஆளுமையற்ற குழந்தைகளாக குழந்தைகளின் விருப்பு வெறுப்புக்கள் தாண்டி அபிலாசைகள் அனைத்தையும் புறந்தள்ளி திணிப்பு முறையிலான கல்வியை வழங்குகின்றார்கள்.

குழந்தைகளுக்குப் போதிய ஓய்வில்லை.போதிய உறக்கமில்லை. பொழுதுபோக்கை மகிழ்வுடன் கழிக்கச் சந்தர்ப்பம் இல்லை. குடும்ப அங்கத்தவருடன் ஒட்டி உறவாடி அன்பு செலுத்தி வாழ்வதற்கு நேரமில்லை. எப்போதும் 'படி' 'படி' என்ற நச்சரிப்பு. தேவையற்ற அதீத போட்டியுணர்வு. உள கால வயதிற்கு அப்பாற்பட்ட அறிகைத் திணிப்பு. எப்போதும் ஏதோ ஒரு பொருத்தபாடின்மையற்ற வாழ்வியலுக்கான பயனற்ற இலக்கை நோக்கிய நகர்த்தல்கள். மகிழ்வையும், சந்தோசத்தையும் தொலைத்து குரோத உணர்வும் வெறுப்புணர்வும் கொண்டு பிள்ளைகள் வாழ்க்கைப் பாதையில் பயணிப்பதற்கான வழிகாட்டல்கள். தன் ஆசைகளையெல்லாம் அடக்கியபடி பிள்ளை வாழ்கின்றது. இவை யாவும் பிள்ளைகளின் உரிமை மீறலல்லவா?

இவற்றையெல்லாம் புறந்தள்ளி அதீத உளநெருக்கீட்டை ஏற்படுத்துவதாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் சித்திக்கான வெட்டுப்புள்ளி அமைகின்றது. 70 புள்ளிக்குமேல் பெற்றவர்கள் சித்தி என்ற பாசாங்கு நிலை. எது யதார்த்த உண்மை நிலை? இவை யாவும் பிள்ளைகளின் உள நிலைகளை வெகுவாகப் பாதித்து பிறைற்றின் ஆளுமைக் கொள்கைக்கு அமைவாக இவை பிற்காலத்தில் பிள்ளைகளின் பிறழ்வான, பொருத்தப்பாடற்ற நடத்தைகளுக்கும், உளச் சிதைவுகளுக்கும் காரணமாக அமைகின்றது.

இந்தநிலையில் நோக்கும் போது தூலசிந்தனைப் பருவ நிலைக்கான கல்வியறிவு வழங்கல் நிலையில் பெற்றோர்கள்.ஆசிரியர்கள், சமூகம் என அனைத்துத் தரப்பினரும் முக்கிய கவனம் எடுக்க வேண்டிய அவசிய நிலையை உணர முடிகின்றது. இந்தப் பருவநிலை மாணவர்களின் பொருத்தப்பாடான கல்விக் கலைத்திட்டத் தன்மையிலேயே ஒரு சமூகத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது என்பது வெளிப்படை.



அந்தவகையிலே இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முறைமையில் கீழ்வரும் மாற்றங்களை உண்டு பண்ணுதல் சிறப்பாக அமையலாம்

**பெறுபேறு வெளிவிடுதலுக்கான பரிந்துரை**

- க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு வெளியாதல் நிலமை போன்ற தன்மையைக் கைக்கொள்ளல்.
- வெட்டுப்புள்ளியை மிகத் தாழ்நிலையில் இல்லாமலும் உயர் நிலையில் இல்லாமலும் பல்கலைக்கழக மாணவர் தெரிவுக்கான தகுதி போன்று ஒரு நியம நிலையைப் பேணுதல்.
- ஒரு நியம அடிப்படையில் வெட்டுப்புள்ளியைத் தெரிவு செய்து அந்த வெட்டுப்புள்ளிக்குமேல் பெற்ற அனைவரையும் சித்தியடைந்தோர் என இணையத்தில் வெளியிடல்.
- பல்கலைக்கழக மாணவர் தெரிவு போன்று இவர்களையும் உதவித்தொகை மற்றும் பாடசாலைத் தெரிவுக்கு விண்ணப்பிக்கும்படி பணித்தல்.
- அதற்கான பிறிதொரு வெட்டுப்புள்ளியை அமுல்படுத்தல்.
- தற்பொழுது நடைமுறையில் இருக்கும் 70 இற்கு மேற்பட்ட புள்ளி நிலையை உடையோர் பரீட்சையில் சித்தி என்ற நிலையை 100 புள்ளி என மாற்றுதல்.

**தீர்க்கப்படும் பிரச்சினைகள்**

- பெறுபேறு வெளிவிடப்படும் போதான மாணவர்கள்,பெற்றோர்கள், ஆசிரியர்களின் தேவையற்ற உள நெருக்கீடு தவிர்க்கப்படும்.
- பாடசாலைகளில் மெல்லக் கற்கும் மாணவர்களை ஒதுக்கிவிட்டு மீத்திறனுடையோருக்கு கல்வி போதிக்கும் நிலமை மாற்றியமைக்கப்படும்.
- ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என அனைவரும் நம்பிக்கையுடன் இயங்குவர்.
- மிதமிஞ்சிய போட்டி நிலை தவிர்க்கப்படும்.
- வெற்றியடைவதற்கான வாய்ப்பு நிலைகள் அதிகரிக்கப்படும்.
- வசதி வாய்ப்பு நிலை குறைந்த மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான வாய்ப்பு நிலைகள் அதிகரிக்கலாம்.
- அனைத்து மாணவர்களும் அடிப்படை நிலைத் தேர்ச்சியை அடைவதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கும்.

**பாடக்கலைத்திட்டத்தில் மாற்றம் காண்பதற்கான பரிந்துரை**

தற்பொழுது உள்ள பாடக்கலைத்திட்ட நடைமுறையில் சுற்றாடல் சார் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் உயர் அளவில் கொடுக்கப்படாமையால் பிள்ளையின் சமூகத்திறன்கள் கட்டியெழுப்பப்படுதல் மற்றும் உயர்மட்டச் சிந்தனைகள் விருத்தியடைதல் ஆகியவற்றுக்கான சந்தர்ப்பங்கள் குறைவு. விஞ்ஞானக் கல்விக்கான போதிய அடிப்படைத்தேர்ச்சிகள் கிடைக்கப்பெறுவதில்லை. இதனால் உயர்தரத்தில் விஞ்ஞான தொழில்நுட்பக் கற்கைகளை தெரிவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இவற்றுக்குத் தீர்வாக ஆளுமையும் சுற்றாடல் சார் செயற்பாடுகளும் எனும் ஒரு புதிய பாடப்பரப்பை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பரீட்சித்தலுக்காக அறிமுகம் செய்தல். (மொத்தப் பாடங்களின் எண்ணிக்கை 3)

**பிரதேச ரீதியாக, கல்வி வலய ரீதியாக வெட்டுப்புள்ளி தீர்மானித்தல்**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை நோக்காகக் கொண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி தரம் 1 இற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள முற்படுகின்றார்கள். இதனால் கிராமப்புற பாடசாலைகளில் தரம் 1 இற்கான மாணவர் சேர்வு வீதம் குறைவாக உள்ளது. இதனால் பல கிராமப்புறப் பாடசாலைகள் இன்று மூடப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் தரம் 1 இற்கான மாணவர்கள் சேராமைக்கான காரணத்தை எடுத்து நோக்கின், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புற பாடசாலைகளில் சேர்ப்பதே முதன்மைக் காரணமாக அமைந்துள்ளது. கிராமப்புறங்களில் இருந்து வரும் மாணவர்கள் பலர் நகர்ப்புறப் பாடசாலைகளில் உள்ள சகல வசதிகளுடனும் கற்கும் பொருளாதார நிலையில் மேம்பட்ட மாணவருடன் போட்டிபோட முடியாத நிலையிலும், தமது பாடவிதானத்திற்கு புறம்பான ஏனைய ஆளுமைத் திறன்களை வளர்க்கமுடியாதவர்களாகவும் உள்ளனர். இது கல்வியில் பின்னடைவை ஏற்படுத்தும் ஒரு நிலையாக உள்ளது. மேலும் அரசினால் முன்னெடுக்கப்படும் 'அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் கொள்கை அமுல்படுத்தும் திட்டம் வெற்றிநிலை காணாமைக்கும் இதுவே காரணமாக அமைகின்றது.

எனவே பிரதேச ரீதியாக அல்லது கல்வி வலய ரீதியாக வெட்டுப்புள்ளியை அமுல்படுத்துவதன் மூலம் கீழ்வரும் நன்மைகளை அடைந்துகொள்ள முடியும்.

- நகர்ப்புறம் நோக்கிய தரம் 1 இற்கான அனுமதி பெறல் குறைக்கப்படும்.
- நகர்ப்புறப் பாடசாலைகளில் பிள்ளைகளின் அதிகரித்த தொகை மட்டிடப்படும்.
- கிராமப்புறப் பாடசாலைகளில் தரம் 1 இற்கான அனுமதிகள் அதிகரிக்கும்.
- அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற எண்ணக்கரு வலுவடையும்.
- கிராமப்புற வறியநிலையிலுள்ள மாணவர்கள் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.
- நகர்ப்புறப்பாடசாலைகளில் மீத்திறன் மாணவர்கள் செறிவடையும் நிலை தவிர்க்கப்படும்.
- கல்வியில் ஒரு சமத்துவப்போக்கு மேலோங்கும்.
- கிராமப்புறப் பாடசாலைகளும் வெற்றிப்பாடசாலைகளாக மாற்றமடைய சந்தர்ப்பங்கள் உண்டு.

# முகக்கறை போக்கும் மூடர் நாம்...!

கவிதை

நவராஜ்



முகத்தினில் தெறித்த
குருதிக் கறையைத் துடைத்தெறிய
முத்தவெளியில் முந்நூறு களியாடல்கள்
வெறுவான் வெளியெங்கும்
விசில் ஒலி நிறைந்தது
குருதி துடைத்தவர் ஆடுகிறார்.
கலைகள் காயங்களை ஆற்றுகின்றன
முகக்குருதி துடைத்து
முழுநிலவாக்கி விடுகிறது.

எல்லோரும் செல்கிறார்கள்
நாமும் செல்கிறோம்.
நலியாக்கலையுடையவர் நலிபோக்க
கலைகளை இறக்கி ஏற்றுகிறோம்
முகத்தை மினுக்க முனைகிறோம்..
அடிவான் கரையில் படிந்த செம்மையாய்
அகத்தினில் எழும்
ஆழ்துயர் அகலுமா.....?
கண்கள் குளிர்ந்திட்டால்

உள்ளம் குளிருமா...?
உள்ளக்குளிர்ச்சியே
கண்களின் திரையுடைத்து
மெய்யினது பொன்னடியைக்
கண்டுணர வைக்கும்.
இதற்கு இன்னோர்
அகம் வேண்டும்
யார் தருவார்....?
அகம் மாறினால்... நாம் யார்....?

கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்




# பனிப்பாளங்கள் நிறைந்த கிறீன்லாந்து

'கிறீன்லாந்து இனியுற்' என்று அழைக்கப்படும் இனத்தவர்கள் தான் கிறீன்லாந்தின் 89 வீதமான குடிமக்களாக இருக்கிறார்கள். கிறீன்லாந்து மண்ணுக்குரியவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இவர்களுக்கு, டென்மார்க் குடியுரிமையும் உண்டு.

**இங்கு போக்குவரத்து எப்படி?**

அசாதாரணமான போக்குவரத்து முறைக்ளைக் கொண்டது கிறீன்லாந்து. இங்கே தொடருந்து சேவை என்று எதுவும் கிடையாது. நகரங்களுக்கு இடையில் வீதிகளும் கிடையாது. நாடு முழுவதிலும் 150 கிலோமீற்றர் நீளமான வீதிகள் மாத்திரமே இருக்கின்றன. கோடைகாலங்களில் கரையோரமாகப் படகுகளில் பயணித்திருப்பதை வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, அறிய முடிகின்றது. குறிப்பாக இந்தத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும், பனிக் காலத்தில், நாய்கள் இழுத்துச் செல்லும் சறுக்கு வண்டிகளே இடம்விட்டு இடம் மாறுவதற்கு உதவியிருக்கின்றன.

**வானூர்திச் சேவைகள்**

இங்கு வானூர்தி நிலையம் இருக்கின்றது. எயார் கிறீன்லாந்து, எயார் ஐஸ்லாந்து என்று இரண்டு வானூர்தி நிறுவனங்கள் கிறீன்லாந்துக்கான பயணத்தை ஒழுங்காக மேற்கொண்டு வருகின்றன. இங்கேயுள்ள 5 பொதுவான பன்னாட்டு வானூர்தி நிலையங்கள் பிரசித்தமானவை. எல்லாமே உள்நாட்டுச் சேவையையும், ஐஸ்லாந்துக்கான பயணத்தையும் மாத்திரமே நடத்தி வருகின்றன. இவற்றுள் மிகப் பெரியது 'கங்கர்லுசுவாக்' என்று அழைக்கப்படுகின்றது. கிறீன்லாந்துக்கு பயணமாகும் பன்



னாட்டு வானூர்திகளின் மையப் பகுதி இதுதான். ஜும்போ வானூர்திகள் ஓடி மேலேற வசதியான நீள ஓடுபாதை இங்கு மாத்திரமே இருக்கின்றது. தலைநகரிலுள்ள (நூக் வானூர்தி நிலையம்) வானூர்தி நிலையத்திலும் ஓடுபாதை அதிக நீளமில்லை. 'ஆக்டிக் உமியாக் லைன்' எனப்படும் கரையோரக் கடவைப் படகு மூலம் பொதிகள் அனுப்பப்படுகின்றன. வாரத்தில் ஒரு தடவை மாத்திரமே இந்தச் சேவை உண்டு. போவதற்கும் வருவதற்கும் 160 மணிநேரங்கள் தேவைப்படுகின்றன.

**பழமையும் புதுமையும் சேர்ந்த கலவை**

தற்போது புழக்கத்திலுள்ள நவீன மின்னியல் சாதனைங்களாகட்டும், அல்லது பரம்பரியமாகத் தொடரும் எதுவாகவும் இருக்கட்டும். இரண்டுங்கலந்தவர்களாகவே இவர்கள் காட்சி தருகிறார்கள். நாய் இழுத்துச் செல்லும் சறுக்கு வண்டியொன்று குறுக்கே செல்ல, பென்ஸ் ஆடம்பரக் காரொன்று அதைக் கடந்து செல்வதை வடக்கில் காணமுடியும். தெற்கில் கிழங்கு அறுவடை செய்யும் விவசாயிகளைக் காணும் அதே வேளை காலங்காலமாக அணியும் தேசிய ஆடை அணிந்தபடி, கையில் ஒரு புதிய அலைபேசியுடன் பெண்மணி நடந்து கொண்டிருப்பதையும் காண முடியும். எனவே பழமைக்கு இவர்கள்விரோதிகளல்ல. புதுமையைஎதிர்ப்பவர்களும்அல்ல.

**உணவு வகையறாக்கள்**

உணவு விடயத்தில், கிறீன்லாந்துக்கே உரிய உணவு வகையறாக்களுடன் ஐரோப்பிய உணவுகளும் சங்கமமாகி விட்டன போலும். இங்குள்ள உணவுகள் அப்படித்தான் மாறியிருக்கின்றன. 'சுவாசற்' எனப்படும் கடல் உணவும், மாமிசம் கலந்த சூப்பும் இங்கு மிகவும் பிரசித்தமானவை. இவைதான் அவர்களின் தேசிய உணவு! இங்குள்ள வால்றஸ் பிராணியின் மாமிசம், ரேஸர்பில் என்ற பறவையின் மாமிசம் உட்பட அரிசி, நறுக்கிய வெங்காயம் ஆகியன இடப்பட்டுக் காய்ச்சப்படும் வாசமுள்ள சூப் அதி சுவையானது. நாட்டின் பெயர் சொல்வது. ஆனால்இதன்தனித்துவம்இன்றைக்குஅருகிவிட்டது. இவர்களின் தற்கால உணவு சீல், திமிங்கலம், றெயின்டியர் எனப்படும் ஓர் இன மான், பறவைகள் கொண்டதாகவேஇருப்பதுண்டு. ஆனாலும்தனித்துவம்மிக்கவை.

**அசைவங்களே அதிகம்..**

இங்கேசெடிவகைகள்குறைவுஎன்பதால், கடல்வாழ்அல்லது தரைவாழ் உயிரினங்களையே இவர்கள் கொன்று உண்கிறார்கள். பல இனப் பறவைகள், மான்கள், சீல், துருவக் கரடி, ஆக்டிக் முயல்கள் என்று கடலிலும் தரையிலும் வாழுகின்ற பல உயிரினங்கள் இவர்களுக்குத் தேவையான உணவை வழங்கி வருகின்றன. இவர்களின் தேசிய மிருகம் துருவக் கரடி. 'கறிபவ்' எனப்படும்ஒருபெரிய இனமான், சீல், வால்றஸ் எனப்படும் கடல்வாழ் உயிரினங்கள், துருவக் கரடிகள், ஆக்டிக் முயல்கள், சல்மன், திமிங்கலம் மற்றும் சில இன மீன்கள் என்று இவர்களுக்கு மாமிச உணவு தாராளமாக இருக்கின்றது. இவர்கள் சூப்பில் சேர்த்துக் கொள்ளும் மாமிசத்தில் 'ரேஸர்பில்' என்ற பறவையின் மாமிசமும் இருக்கின்றது. இந்தச் சுறுசுறுப்பான பறவை தரைக்கு வருவதே இனப் பெருக்கத்துக்குத்தான்! ஒரு வருடத்தில் ஒரேயொரு முட்டையை மாத்திரமே இது இடுகின்றது. கரையோரக் கற்பாறைப் பகுதியில் கூடுகட்டும் இந்தப் பறவை ஆயுள் வரைக்கும் ஒரேயொரு இணையையே வைத்திருக்கும். இது எமக்கு வியப்பூட்டும் ஒரு தகவல்

**உடும்புப் பிடியாகப் பழக்க வழக்கங்கள்.**

இந்த நவீன யுகத்திலும் பூ வேலைப்பாடுகளுடன் கூடியநீண்ட ஆடையைப்பெண்கள்கைவிட்டுவிடவில்லை. நவீன உலகில்தங்கள் கலாசாரச் சின்னமாக இதை அவர்கள் நோக்குகிறார்கள். அணிகிறார்கள். நண்பர்களும், குடும்ப அங்கத்தவர்களும் இங்கு மிக முக்கியத்துவம் பெறுகிறார்கள்.
குழந்தை பிறந்த நாள் நிகழ்வாக இருக்கட்டும் அல்லது ஒரு சாவு வீடாக இருக்கட்டும். தங்கள் தேசிய ஆடையை அணிவதற்குப் பெண்கள் தவறுவதில்லை. இப்படியான ஒன்றுகூடல்களில் பால் கோப்பியும், கேக்கும் கொடுத்து உபசரிப்பது இவர்களின் பாரம்பரிய வழக்கம்.
'மற்றக்' என்று இவர்கள் மொழியில் குறிப்பிடப்படும் திமிங்கலத் தோலைப் பச்சையாக அல்லது வாசனைப் பொருள்களுடன் உண்ணும் பழக்கம் இவர்களிடம் காலங்காலமாக இருந்து வருகின்றது.

**உறவைச் சித்திரிக்கும் தேசியக் கொடி**

கிறீன்லாந்து உலகின் மிகப் பெரிய தீவு, டென்மார்க்கின் ஒரு பகுதிஎன்றே இதைச்சொல்லவேண்டும். இவர்களது தேசியக் கொடியில் இது தெளிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. சிவப்பு, வெள்ளை நிறத்திலான இந்தக் கொடி இவர்களுக்கும் டென்மார்க்குக்கும்இடையில்உள்ளஉறவைவெளிப்படுத்துகிறது. கிடக்கையில் இருக்கும் ஒரு கோட்டினால் பிரிக்கப்பட்டுள்ள கொடியின் மையப் பகுதியில், சற்று இடப்புறமாக ஒரு வட்டம் இருக்கின்றது.
இந்த வட்டம் சூரியனைக் குறிப்பதோடு, அது கோடைகால நடுப்பகுதியில் திரும்பி வ்ருவதையும் இது சித்திரிக்கின்றது. 1721ஆம் ஆண்டு தொடக்கம் 1953ஆம் ஆண்டு வரை இது ஒரு டானிஷ் காலனித்துவ நாடாகவே இருந்துள்ளது. 1953ஆம் ஆண்டில்நாடுஎன்றமதிப்புப்பெற்று, 2009ஆம் ஆண்டில் சுய ஆட்சியைத் தொடங்கியிருக்கிறார்கள். ஜுன் 21ஆம் திகதி இவர்களது தேசிய தினமாகும். இவர்களிடமும் புழக்கத்தில் இருப்பது டானிஷ் குரோனர்தான்!

**ஒரு கொசுறுச் செய்தி**

2300ஆம் ஆண்டளவில் புறச்சூழலின் அழுத்தம் காரணமாக, கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் இந்தத் தீவின் அனைத்துப் பனிப்பாளங்களும் கரைந்து விடும் என்று பயமுறுத்துகிறார்கள். இதற்கிடையில்காற்றுள்ளபோதேதூற்றிக்கொள்வோம் எனநினைத்து, அபுதாபி, நன்னீருக்காக, இங்குள்ளபனிப்பாளங்களைக்கட்டி இழுத்துவரத்திட்டமிடுகின்றது. அனேகமாக அடுத்த வருடம் இந்தத் திட்டம் தொடங்கப்படலாம் என்கிறார்கள். பல்வான்கள் பிழைத்துக் கொள்வார்கள் என்பதில் தவறேயில்லை.

# எப்போ வி(மு)டியும்?




சிறுகதை

விவேகானந்தனூர் சதீஸ்

டாங்...டாங்...டாங்... கொழும்பு வெஸ்லிக் கல்லூரி மணியோசை காலை எட்டுமணி என்பதைத் தொட்டுக் காட்டாமல் சற்று அப்பாலிருந்து அறியப்படுத்தியது. பேஸ்லைன் வீதியின் வாகன இரைச்சல்களும் பேருந்துகளின் ஹோர்ன் சத்தங்களும் கூட அவன் செவிகளுக்கு இதமாகவே இருந்தது. காரணம், சிறையின் இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் இளமையைத் தொலைத்தவனுக்கு இந்த ஓசைகள் ஓர் ஒத்தடங்களாக இருக்கலாம். காலை வரிசையுடன் கூண்டுக்குள்ளிருந்து வெளியே வருவதும் மாலை வரிசையுடன் மறுபடியும் அடைக்கப்படுவதுமென இன்று நேற்று அல்ல. கடந்த இருப்பத்தைந்து வருடங்களாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஓர் அன்றாடச் செயற்பாடு. இந்த இரண்டு தசாப்த கால இடைவெளிக்குள் எத்தனையோ காட்சிகள், கண்டங்கள், கனவுகள், கற்பனைகள் இவையெல்லாம் ஊமை கண்ட கனவுகளாக இன்றுவரை அவனுக்குள் புதைந்து போகிறது.

கைதிகள் பலரும் காலை வெளியில் ஏதோ விற்றமின் ஈ. இருப்பதாகக் கருதி சுற்றுமதிற் சுவர்களுக்குள் சுற்றிச் சுற்றி நடக்கிறார்கள். இவனோ எவற்றிலும் அக்கறை கொள்ளாதவனாக விடுதிக்குப் பின்புறமிருக்கும் ஜாம் மரத்தின் கீழ் குந்தியிருக்கிறான். ஓஷோன் படலம் சிதிலமடைந்து சூரியக் கதிர்களில் 'அல்ட்ரா வயலட்' கலந்து நேரடியாக நிலத்தை நோக்குவதாலோ அல்லது உடலில் ஏதேனும் உபாதைகள் புகுந்து ஒத்துழையாமை போராட்டம் நடத்துவதாலோ அவன் ஒதுக்கியிருக்கவில்லை. வறுமையின் வாட்டத்திலும் தனது நீண்ட பிரிவினாலும் உடல் உளத்தாக்கத்தினாலும் தீண்டப்பட்டிருந்த தனது தாய், கடந்த மாதம் நிரந்தர நிம்மதியைத் தேடிக் கொண்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்தாள். புகுந்த வீட்டுப் புறமொதுக்கத் தால் பெற்றவன் தஞ்சமென்று பிள்ளையுடன் வந்திருந்த தன் இளைய சகோதரியின் எதிர்காலம்? அம்மாவென்ற உறவொன்று எங்கோ ஒரு மூலையில் இருக்கிறாள் என்ற இதய ஆற்றுகை... எல்லாமே வெற்றிடமாகி ஒரு ஆயுள் தண்டனை அளிக்கப்பட்ட அரசியல் கைதியாக அவன் மர நிழலின் கீழ் பலயோசனைகளுடன்...

"மகேந்திரன் மொனவத கல்பனா கரண்னே?" (என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்) தனது பெயரின் உச்சரிப்பு செவியினூடாக மூளையை தூண்டிய துலக்கத்தால் தலைலைய நிமிர்த்தி அக்கம் பக்கம் பார்த்தவன்.." ஒன்றுமில்லை மாத்தையா... சும்மா தான்" "சரி சரி... யோசிக்க வேணா.. எல்லாம் சரிவரும் மகேந்திரன்" என தன் சகோதரனுக்கு ஆறுதல் சொல்வதுபோல் தலையைத் தடவியவாறு கூறினான். இன்றும் கூட கொட்டி... கொட்டி என்று கொக்கரித்துக் கொண்டு



தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கிறதென்று சிங்கள மக்களுக்கு விளங்கினாலே போதும். அதற் கான தீர்வு விரைவில் வந்து விடும். மாறாக பிற்போக்கு அரசியல் வாதிகள்தானே தமிழனெல் லாம் புலியென்று சித்திரம் தீட்டி இனவாத உரம் போட்டு இலவச தண்ணீர் வீட்டு, இலங்கைத் திருநாட்டின் சமா தானத்தை ச் சாகடித்து வருகி றார்கள். இந்தச் சிறைக் காவ லர் போல எல்லா சிங்கள மக் கள் மத்தியிலும் ஒரு புரிந்து ணர்வு வராதா?

இனத்தைக் கூறுபோடுகின்ற சில பிற்போக்குவாதிகள் மத்தியில் பல நல்லுள்ளங்களும் இல்லாமில்லை என்பதற்கு இந்தக் காக்கிச் சீருடைக்காரன் ஒருவனே போதும்.

விஜேசிங்க சிறைக்காவலன் வேலைக்குச் சேர்ந்து வெறும் ஐந்து வருடங்களே. பொதுவாக சிறையதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் இருக்கக் கூடிய முரட்டுக் குணம், சிறைக்கு வரும் அனைவரும் சுத்தமான குற்றவாளிகளே என கணிப்பீடும் இயல்பு, சிறைக்கைதிகளை மனித குலத்துக்கு அப்பாற்பட்டவர்களாக நடத்துதல் போன்ற பல குணாங்குறிகள் விஜேசிங்கவிடம் இருந்ததில்லை. அதற்கு மாறாக சூழ்நிலைக் கைதிகளாக இருப்பவர்கள் மீது பண்புடனும் பரிவுடனும் நடந்துகொள்ளும் பக்குவம் அவனை எல்லா கைதிகளுக்கும் பிடித்திருந்தது. கடந்த மாதம் தாயினுடைய சாவுச் சடங்குக்கு மகேந்திரனை மட்டக்களப்புக்கு கூட்டிச் சென்ற குழுவில் விஜேசிங்கவும் ஒருவனாக சென்றிருந்தான். ஆனால், மகேந்திரன் வீட்டு நிலமைகளை கண்ணூடே காணக்கூடியதாக இருந்தது.

"இப்படித்தானே நீண்டகாலமாக சிறையில் இருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களும் துன்பங்களாலும் தொடர் பிரிவுகளாலும் நாளாந்தம் வருந்திக் கொண்டிருப்பார்கள்" எனப் புரிந்து கொண்டிருப்பான் போலும். அன்று முதல் கைதிகளுக்கு ஆறுதல் கூறும் அவனது செயற்பாடு இரண்டால் பெருக்கப்பட்டிருந்தது.

"என்ன மாத்தையா... நீங்களா இண்டைக்கு எங்கட வாட்டுக்கு டியூட்டி?" "ஒவ் மகேந்திரன். நான் தான் டியூட்டி. சந்தோசம் தானே..." மகேந்திரன் சிரித்தவாறு. "என்ன மாத்தையா உங்கட அரசு தானே வந்திருக்கு. எங்களையெல்லாம் ரிலீஸ் பண்ணிருவாங்களா? சிங்கள பேப்பர்களில எங்களப் பத்தி ஏதும் விசேசமா போட்டிருக்காமே...! பாத்தீங்களா மாத்தையா?" "ஒவ் மகேந்திரன். வெளிநாடு எல்லாம் ஒங்கள விடுதல பண்ண சொல்லி கேக்கிறீர் தானே.. அது இல்லாம, உங்கட தமிழ் பகஷ(கட்சி) ஆக்கள் அரச தலைவரோடு கதைக்கிறது. எல்லாம் சரி வாரது. பெரிய யோசனை வேணாம் மகேந்திரன். நம்மட சிங்கள ஆக்கள் எல்லாம் உங்கள மாறி அரசியல் கைதிகள் விடுறதுக்கு விருப்பம். ஒண்ணு ரெண்டு அரசியல் காரனுவ அரசியல் பேசுறதுக்காக சும்மா சத்தம் போறது. இதெல்லாம் கணக்கெடுக்க வேணாம்"

"இப்படித்தானே மாத்தையா 2003ஆம் ஆண்டு சமாதானம் வரக்குள்ள சந்தேகத்தில பிடிச்ச அரசியல் கைதிகள விடுறன்... விடுறன் எண்டு ஏமாத்திப் போட்டாங்கள். நாங்களும் ஒவ்வொரு முறையும் ஏமாந்து, எங்கள இளமைக் காலத்தையெல்லாம் இந்த சிறைக்குள்ளேயே தொலைச்சிட்டம். அதுமட்டுமா அப்பா,அம்மா இரண்டு பேரும் எண்ட கவலையில இறந்து போனாங்க. எனக்கெண்டா இந்த அரசியல்வாதிகளின்ட கதைகளில நம்பிக்கையில்லை மாத்தையா" இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும்போது அந்த விடுதிப் பக்கம் வந்த சீனியர் சிறைக்காவலர் ஒருவர், "மொகத விஜேசிங்க... கொட்டி தெக்க டீல் கதாகரணவா..?" (என்ன புலியுடன் ஒப்பந்தம் பேசுரியா?) அவரது இனவாத உமிழ்ப்பை மென்சிரிப்பால் புறந்தள்ளி பேச்சைத் தொடர்ந்தான் விஜேசிங்க. "மகேந்திரன்... நம்பிக்கையோட நீங்க இருக்கவேணும். எல்லாருக்கும் பிரச்சினை இருக்கிறது. கவல துக்கம் எல்லாம் இருக்கிறது. எங்களுக்குத் தெரியுமா... டி.எஸ்.சேனாநாயக்கா ஸ்கூல்ல படிச்ச நம்மட தம்பி மென் வெலயாட போனது. அந்த நேரம் கோச்சில பொம்ஸ் வெடிச்சி அவரு செத்து போச்சி. எனக்கு மிச்சம் கவலதான். பாவம்தானே... அவுங்க ஆமி இல்லதானே. அதுக்காக நான் ஒங்கசுட கோபம் இல்ல. தமிழ் சனங்களுக்கு நிறைய பிரச்சினை இருக்கிறது. நம்மளுக்கு தெரியும். அந்தப் பிரச்சினைகள சரிபண்ணி இருந்தா மிச்சம் சனங்கள் செத்துப் போச்சி இல்லதானே. மகேந்திரன் இதையெல்லாம் இந்த அரசியல் காரங்கட பிழைதானே. இப்ப நிலமை கொஞ்சம் பரவால்லதான. நா நினைக்கிறன் இனி எல்லாம் மெல்ல மெல்ல சரிவரும். கவல வேணாம் மகேந்திரன்"

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கிறதென்று சிங்கள மக்களுக்கு விளங்கினாலே போதும். அதற்கான தீர்வு விரைவில் வந்துவிடும். மாறாக பிற்போக்கு அரசியல்வாதிகள்தானே தமிழனெல்லாம் புலியென்று சித்திரம் தீட்டி இனவாத உரம்போட்டு இலவச தண்ணீர் விட்டு இலங்கை திருநாட்டின் சமாதானத்தை சாகடித்து வருகிறார்கள். இந்தச் சிறைக்காவலர் போல எல்லா சிங்கள மக்கள் மத்தியிலும் ஒரு புரிந்துணர்வு வராதா? புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினை தீராதா...? என எத்தனை இலட்சம் உள்ளங்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றன. விஜேசிங்கவின் கதையைக் கேட்ட மகேந்திரனுக்கு ஆச்சரியம் "என்னடா எங்கட ஆக்களால பாதிக்கப்பட்டுக் கூட அவன் என் மீது அன்பு காட்டுறானே.. இத்துணை மறப்போம்... மன்னிப்போம் என்பது! அல்லது உண்மை நிலவரங்களையும் யதார்த்தத்தையும் அறிந்துதான் இப்படி நடக்கிறானா! எனப் புரியாதவனாக அவன்மேல் மேலும் மரியாதை கொள்கிறான் மகேந்திரன்.

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு, மொறக்கொட்டாஞ்சேனைக் கிராமத்தில் பத்தொன்பது வயது பருவப் பையனாக ஊருக்குள் பவனி வந்தவன் மகேந்திரன். நன்மை, தீமை அறியாப் பெடி. அடிக்கடி போராளிகளின் பாசறை புகுந்து வந்ததை அறியாதவர் அவ்வூரில் இல்லையெனலாம்.

43

கட்டுரை

# 'அம்மாச்சி'யை மாற்றக் கூடாது...!

மு.தயாபரன்

அம்மாச்சி' உணவகத்தின் பெயரை மாற்ற வேண்டும் என்று கூறியி ருந்தார் அங்கஜன் இராமநாதன். தமிழ் அரசியல் தலைமைகளின் மனோநிலைக்கு இந்த விடயமும் ஓர் எடுத்துக்காட்டு.

மக்களுக்கு ஆற்றவேண்டிய எத்தனையோ சேவைகள் தேங்கிக் கிடக்கும் நிலையில் தமக்குள் முரண்படுகின்றஒருவகை'தன்முனைப்பு'(ஈகோ) தமிழ்த் தலைவர்களின் சாபக்கேடு. இதற்கு அங்கஜன் இராமநாதன் மாத்திரமன்றி எந்தவொரு தமிழ்த் தலைவர்களும் விதிவிலக்கல்ல. வடக்கு மாகாண சபை விடயத்திலும் இதுவே நடந்து முடிந்தது. தென்னிலங்கையில்; பல தலைவர்கள் அரசியலுக்குள் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். பண்டாரநாயக்கா பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தின் பெயர் ஆட்சியாளர்களுக்கு ஏற்ப மாற்றப்பட்டு வருவதாகத் தெரியவில்லை.

அதைப்போல பலவற்றைக் குறிப்பிட முடியும். தற்போதிருக்கின்றஅரசதலைவருக்குமுந்தையைஅரச தலைவரான மகிந்த ராஜபக்சவின் நாமம் சூட்டப்பட்டுநிறுவப்பட்டவைஎவையும்அவருக்குப் பிறகு பீடமேறிய ஆட்சியாளர்களால் மாற்றப்படவில்லை. இத்தகைய ஓர் ஆரோக்கியமான அரசியல் பாரம்பரியத்தை அவர்கள் பின்பற்றி வரும் நிலையில், போர் முடிந்து, மகாண ஆட்சி கிட்டியதும் உருப்படியாகச் செய்த ஒரே ஒரு வேலை என்று கருதப்படுகின்ற அம்மாச்சி விடயத்திலும் மதிப்புக் குறைகின்ற நடவடிக்கைக்கு அத்திபாரமிடுகின்றனர் தமிழ்த் தலைவர்கள்.

30.8.2018 அன்று காலையில் திருநெல்வேலியிலுள் அம்மாச்சி உணவாகத்துக்கு நான் சென்றிருந்தேன். அங்கு குறிப்பிட்டதோர் உணவுப்பொருளைத் தயாரித்து விற்பனை செய்யும் பணியிலிருந்த ஒரு பெண் பதற்றமான சூழலில் காணப்பட்டார். உணவருந்துகின்ற பகுதியில் 'ரீசேர்ட் நீளக்காற்சட்டை' சகிதம் சாதாரண மனிதனாக ஆடையணிந்திருந்த ஒருவரை அடிக்கடி பார்த்துப் பரபரப்படைந்தார். அந்தப் பெண் என்னிடம் கேட்டார். 'உங்களுக்குச் சிங்களம்தெரியுமா?'என்று.'ஆம்'என்றேன். அவர் என்னிடம் ஏற்கனவே தான் பார்த்துக்கொண்டிருந்த ரீசேட் போட்டிருந்த அந்தக் குறித்த நபரைக் காட்டி, "அவர்தான் இந்த உணவகத்துக்குப் பொறுப்பான பெரியவர். அவர் இங்குஉணவருந்துவதற்குச்சாதரணமாக வருபவரைப்போல வந்து என்னிடம் உணவு கேட்க, நான் பார்சல் கட்டிக்கொண்டிருந்தேன். கடைசியாகத் தான் அவருக்குக் கொடுத்தேன். அவர் குறை நினைக்கிறாரோ தெரியாது. அதை ஒருக்கால் அவரிடம் சொல்ல வேண்டும்' என்றார்.



**அவர்தான் பாரம்பரிய உணவு பற்றிய அம்மாச்சிக்குரிய கோட்பாட்டை உருவாக்கியவர்**

அவர் குறிப்பிட்டுக் கூறிய நபர் கை கழுவிவிட்டுத் திரும்பியபோது, நான் அவரைச் சந்தித்து அந்தப் பெண் கூறிய விடயமாக அவரிடம் பேசினேன். அவர் மிக எளிமையான ஓர் அதிகாரியாக இருந்தார். அவர்என்னிடம்'நான்தான்இந்தப்பாரம்பரிய உணவுபற்றியகோட்பாட்டைஉருவாக்கியவன். இந்த உணவகங்கள் சீராக நடத்தப்படுகின்றனவா? உணவின் தரம் எப்படியிருக்கிறது? உணவு தயாரிப்பவர்கள் சுத்தம் பேணுகிறார்களா? உணவகத்துக்கு வருபவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்கின்றனர்? போன்ற பல விடயங்களை நான் நேரடியாகச் சென்று அவதானித்துவருகிறேன். அந்தப்பெண்ணிடம்கூறுங்கள் சாப்பிடுவதற்காக உணவு கேட்பவர்களுக்கு முதலில் வழங்கிவிட்டுப் பின்னர் தான் பொதி செய்ய வேண்டும்" என்று நானும் அவ்வாறே அந்தச் செய்தியை குறிப்பிட்ட அந்தப் பெண்ணுக்குக் கூறிவிட்டு வெளியேறினேன்.

அன்றுதான் எனக்கு ஒரு விடயம் தெரியவந்தது. இது வடமாகாண சபைக்குச் சொந்தமானதோ, ஐங்கரநேசனால் உருவாக்கப்பட்டதோஅல்லஎன்பது. இதுபலருக்குத்தெரிந்திருக்கவில்லை. வடமாகாணசபை நிர்வாகத்தில் அப்படி ஒருஉணவகத்தைச்செவ்வனேசெய்யமுடியாதுஎன்பதை அவரைச் சந்தித்த பின்னரெ புரிந்து கொண்டேன்.




**நாடுமுழுவதும் இதுபோன்ற வேலைத் திட்டங்கள் இருக்கின்றன பெயரை எதிர்த்ததால் மாகாணசபைக்குரியது என்று மக்கள் எண்ணுகிறார்கள்**

இது விடயமாக 23.10.2018ஆம் ஆண்டில் ஐங்கரநேசனால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில், "திருநெல்வேலியில் அமைக்கப்படட உணவகம் கொழும்பு அரசின் நிதியூட்டலில் உருவாக்கப்பட்டதாயினும் அது மாகாணத்துக்கானதாகவும் மாகாண விவசாயத் திணைக்கள வளாகத்தில் அமைந்திருப்பதாலும் மக்களின் அரசியல் அபிலாசைகளைவெளிப்படுத்தும்பிரதிநிதிஎன்றவகையில் 'ஹேலபோஜன சால' என்ற பெயர் சூட்டுவதை நிராகரித்தேன்" என்று குறிப்பிட்டுள் ளார்.

இதுபோன்றபலதேசியவேலைத்திட்டங்களைஅரசு நாடு முழுவதும் மேற்கொண்டு வருகிறது. அதை நேரடியாக உரிய அதிகாரிகள் கவனித்தும் வருகிறார்கள்.

இலங்கை முழுவதிலும் பாரம்பரிய உணவு என்கிற விடயத்தில் இவ்வாறான நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த நிலையங்களுக்கு 'ஹேல போஜன சால' (மரபு ரீதியான உணவு மையம்)எனப்பெயர்சூட்டப்பட்டுள்ளது. அதைத் தமிழில் வைக்க முற்பட்டபோது வடமாகாண சபை எதிர்த்ததால் மக்கள் இந்த உணவகம் மாகாண சபையினுடையது எனப் பிழையாக விளங்கிக் கொண்டுள்ளனர்.

வடக்கு மாகாணசபை முன்வைத்த திட்டங்களில் அம்மாச்சி உணவகம் என்ற திட்டமே உருப்படியானது என்று பலராலும் கூறப்படுகின்றபோதிலும்கொழும்புவிவசாயஅமைச்சினாலேயே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**சிங்கள - தமிழ் மொழிபெயர்ப்பு**

தமிழில்அம்மாச்சி(பூட்டி)என்பதுமதிப்புடையபெயர். எப்போதும்வீட்டில்வயதானபெண்களாலேயேசுவையான உணவுகளைத் தயாரிக்க முடியும். எனவே சிங்களத்தில் 'ஹெல போஜன சால' என்றிருப்பதை அதே அர்த்தத்தில்தமிழில்மொழிபெயர்க்கவேண்டும்என்ற அவசியம் இல்லை. இதில் யாருடைய நிர்வாகம் என்பதுகூட முக்கியமல்ல தரமான, தமிழர் பாரம்பரிய உணவு என்பதே கருத்திலெடுக்கபட்ட வேண்டும்.

வங்கிகளிலும்ஏனையபலதிணைக்களங்களலும்சிங்களப் பெயர்களையே தமழில் எதுகின்றனர். இங்குறு பிஸ்கட், ரண் கெகுளு, சமுர்த்தி, திவி நெகும போன்ற பல சிங்களச்சொற்கள் அவ்வாறேதமிழில் புகுத்தப்பட்டன. இவற்றுக்கெல்லாம் என்ன அர்த்தம் என்று கூடத் தெரியாது அனைவரும் உச்சரிக்கின்றோம். சிங்களச் சொல் ஒன்றுக்குத் தமிழில் அர்த்தம் தேடினால் அது உரிய உள்ளடக்கத்துடன் கொண்டுவரப்படாது. தமிழில் மாற்றம் செய்யும்போது அது தெளிவற்ற ஒன்றாகவே இருக்கும். சிங்கள மொழிச் சொல்லின் உள்ளடக்கும்அர்த்தமும்வரக்கூடியதாகதமிழில்நல்லசொல் ஒன்றைக் கண்டுபிடிப்பதே நல்லது. கொம்பியூட்டர் என்பதுஆங்கிலச்சொல். அதைமேலைநாட்டவர்களே கண்டு பிடித்தனர். அதைக் கனிணி என்று தமிழ்ப் படுத்தினாலும், அனைவரதும் பேச்சுப் பாவனையில் கொம்பியுட்டர் என்ற சொல்லே உள்ளது. எனவே தமிழில் சிங்களச் சொல்லின் நேரடி அர்த்தத்தைத் தேடி அலையாது, அம்மாச்சி என ஆரம்பித்து வைக்கப்பட்ட சொல்லை அழைப்பதே மதிப்புடையதாகும்.

**அர்த்தமுள்ள அரசியல்**

ஏலவே நடைமுறையிலுள்ள சமுர்த்தி, திவிநெகும, பண்டாரநாயக்காமண்டபம்போன்றனபதவிக்குவருகின்றஅரசுகளின்விருப்புக்குஏற்றபடிபிற்காலங்களில் பெயர்மாற்றத்துக்கு உட்பட்டுக் கொண்டிருந்தால், அரசுகளுக்கு அதுவே வேலையாகிவிடும். முன்னையவர்கள் பெயர் சூட்டுவதும் பின்னையவர்கள் மாற்றி அமைப்பதும் தொடரும். இவற்றை விடுத்து மக்களுக்குரிய சேவை விடயத்தில் அக்கறை காட்டார். அர்த்தமுள்ள அரசியல் என்பது பெயர்களை மாற்றுவதால் வெளிப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.



திருநெல்வேலியில் அமைக்கப்படட உணவகம் கொழும்பு அரசின் நிதியூட்டலில் உருவாக்கப்பட்டதாயினும் அது மாகாணத்துக்கானதாகவும் மாகாண விவசாயத் திணைக்கள வளாகத்தில் அமைந்திருப்பதாலும் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தும் பிரதிநிதி என்ற வகையில் 'ஹேல போஜன சால' என்ற பெயர் சூட்டுவதை நிராகரித்தேன்




செ.மகேஷ்

# பானையில் இருந்தால் தான்...!

"ஆட்சி என்றும் ஜனநாயகம் என்றும் அண்மைய நாள்களில் பலரும் பேசுகிறார்களே எது ஜனநாயகம்? என்று கண்டு கொள்வது கடினமாகவே இருக்கிறது" என்றார் சிவபாதத்தார். அவரது புறுபுறுப்பைச் செவிமடுத்த செல்லத் தம்பியருக்குத் தனது தவறு புரிந்தது.

ஏனென்றால் எதைக்கேட்டாலும் பதிலே சொல்லாமல் நினைத்துக்கொண்டிருக்கும் செல்லத்தம்பியர் மீதில் சிவபாதத்தாருக்கு ஆத்திரம் இருப்பது தெரிந்தது. இருப்பினும் ஜனநாயகம் என்று பலரும் சொல்வதைக் கேட்டும் வாசித்தும் தெரிந்து கொண்ட பல விடயங்கள் செல்லத்தமபியரின் நினைவில் வந்து கொண்டிருந்தன.

• • •



"மக்கள் நல்ல சட்டங்களால் ஆளப்படுவதைக் காட்டிலும் ஒரு நல்ல மனிதரால் ஆளப்படுவதே சிறந்தது" என்று அரிஸ்டோட்டில் சொல்லியுள்ளார். மக்களால் தெரிவு செய்யப்படும் மக்களாட்சிக்கு உட்பட்டதே ஜனநாயகம் என்பதாகச் சில பொழுதுகள் சிந்தித்த செல்லத்தம்பியரை அரிஸ்டோட்டிலின் சொற்கள் பலமாக அறைந்தன!

• • •

**நல்ல மனிதரை எங்கே தேடுவது?**

பெரிய படையாக இருந்தாலும் நல்ல சரியான தலைவன் இல்லையெனில் படையானது வெற்றியை நோக்கி முன்னேறுவது இல்லை என்கிறார் எங்களுடைய வள்ளுவர். ஒரு கட்சி ஆட்சி அதிகாரத்துக்கு வந்தால் அதன் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கடும் உழைப்பு, நேர்மை போன்ற நற்பண்புகளுடன் பொதுநலனைக் காக்கும் அர்ப்பணிப்புடனான சேவையையும் ஒத்துழைப்பையும் வழங்கி நாட்டை வளப்படுத்தி ஆள்வதே ஜனநாயகம் என்பதாகச் சிந்தித்த செல்லத்தம்பியா். அத்தகைய ஆட்சி எங்கே இருக்கிறது? என்று எண்ணிப் பார்த்தார். சந்தேகங்கள் நிறையவே வந்து போயின. யார் யாரோ தேர்தலில் நிற்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது ஆசனத்தை வெற்றி கொள்வதற்கு வாக்கு வேட்டையில் கூடி அலைகிறார்கள். கொள்கைகள் பல உள்ளன. அவற்றை முன்வைத்துப் பெரிய குரலெழுப்பிப் பேசுகிறார்கள். பின்னர் வீடு வீடாக ஓடி வாக்குக் கேட்கிறார்கள்.

• • •

பசித்தவனுக்குச் சோறு போட்டவனுக்கு வாக்கு!
பணம் தந்தும் பைசிக்கிள் தந்தும் இலவசமாகப் பொருள் ஈந்தவனுக்கும் வாக்கு!
பதவி, வீடு என்பன கிடைக்க உதவியவனுக்கு வாக்கு! எல்லாம் போக உறவினன் தேர்தலில் நின்றால் அவனுக்கே வாக்கு! இத்தகைய வாக்களிக்கும் தேர்தல் முறையால் வடிவமைக்கப்பட்டதே எங்கள் ஜனநாயகம்.

"அரசியல் அறிவுமிக்க உயர்குடி மக்களின் ஆட்சியே உன்னதமானது" என்றார் பிளேட்டோ.

அதேவேளை பாமரர் கும்பலின் மோசமான ஆட்சியே இந்த ஜனநாயகத் தேர்தல் முறையால் விளையும் ஆபத்து என வாதிட்டார் அரிஸ்டோட்டில். அதை நிரூபித்த ஜனநாயக ஆட்சியின் பெருமைகளை நாம் பலவேளைகளில் சந்தித்துள்ளோம்.

நீதி நியாயம் என்பது அதிக வாக்குகளால் கணக்கிடப்படும்போது நேர்மை உண்மை என்பன மௌனமாகவே இருக்கப் பணிக்கப்படுகின்றன.

• • •

ஏன் நாம் எதிர்பார்த்த ஜனநாயகத்தை எம்மால் அமைக்க இயலாமல் இருக்கிறது? தேர்தலில் நிற்பவனுக்கே வாக்களிப்போம்! அவனிடம் ஜனநாயக ஆட்சியை நடத்தும் மக்கள் நேயம் மனவலிமை நல்லெண்ணம் உள்ளதா? அவற்றை நாம் ஆராய்ந்தறிந்து வாக்களிக்க முடியாதபடி தேர்தல் காலத்தில் மேலெழும் தேவைகள் எம்மைத் தடுத்துவிடுகின்றன. எப்பொழுதுமே இவை தொடர்வதாகவே தெரிகிறது. ஒரு நல்ல, வல்ல, பொதுநலம் வாழும் மனித நேய மிக்க தலைவன் எங்களது தேர்தலில் நிற்காதவரை இந்த நிலை மாறப்போவதில்லை. பானையில் இருந்தால்தான் அகப்பையிலே வரும். என்ற பழமொழிதான் செல்லத்தம்பியரின் நினைவுக்கு வந்தது. அவரின் மௌனம் இப்போதும் கலையவே இல்லை.

■

கவிதை

காவலூரான்

# யார் கேட்டார்கள் ஆட்சி மாற்றங்கள் ?

*யாரோ விதையாக*
*எவரோ சொன்னீர் வார்க்க*
*சிவந்த மண்ணில்*
*விளைந்த பயிரின்*
*அறுவடை செய்ய மட்டும்*
*சில அடிவருடிகள்*


*வியாழமாற்றத்திற்காய்*
*விரதங்கள் இருந்தோம்*
*இராசிகள் பார்த்து*
*தோசங்கள் தீர்த்தோம்*
*விடிவிற்காய் கோயில்களில்*
*பூசைகள் செய்தோம்*
*வியாழன் மாறியது*
*தமிழன் மானம்....?*

*ஆட்சி பீடத்துக்காய்*
*ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்*
*தேயிலை காட்டில் வெறும்*
*ஆயிரத்துக்கான அவலங்கள்*
*மீட்சி பெறுவோம் என*
*போலியான கட்சி மாற்றங்கள்*
*முடிவு வாட்டி வதைக்கப்போகும்*
*டொலரின் ஏற்றங்கள்*

*மாற்றம் வரும் என்று*
*வெறும் மாய்மாலங்கள்*
*சிறு இறக்கங்கள் காட்டி*
*இனிப்பு பூசிய தற்செயல்கள்*
*பெட்டி கைமாறும்*
*பணம் பதவிகள்*
*வட்டி வரிகட்டுவதற்காய்*
*ஊர்வலம் போகிறோம்*

*யார் கேட்டார்கள்*
*ஆட்சிமாற்றங்கள்*
*எதற்காக இந்தத் திடீர் திருப்பங்கள்*
*வேட்டு வைப்பது எப்பவோ*
*எங்கள் பொருளாதாரம்*
*காட்டிக் கொடுப்பவர்க்கு*
*கோடிகளின் கொண்டாட்டம்...*

■





# தண்ணியிலைதான் கண்டமோ?

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கு றோட்டுகளிலையும் கரைநீளமும்மழைக்குத்தேங்கின தண்ணியைப்பற்றிச்சொன்னதை வைச்சுக்கொண்டு அருளர் வந்து என்னட்டைக் கேட்டார் பாருங்கோ ஒரு கேள்வி...! எனக்குப்பெரியதலைகுனிவாயல்லோபோட்டுது. மனிசன் இலேசிலை வாய்திறக்காது. திறந்துதெண்டாக் காரணமில்லாமல் இராது. நியாயமில்லாமலுக்கு இராது. அப்பிடித்தான் அந்தாள். நான் காரணத்தோட கதைக்கிறயில்லை எண்டு முடிவெடுத்துப் போடாதயுங்கோ. நான் கதைக்கிறது கொஞ்சம் கூடத்தான் எண்டது எனக்கும் விளங்குதுதான் எண்டாலும் குறைக்கேலாமக் கிடக்குது.

அருளர் கேட்டது அப்பிடிப் பாரதூரமான கேள்விதான்பாருங்கோ. அதுக்காகக் கோவப்பட ஏலாதுதானே?

'கதிரேசா...! நீ தண்ணி எல்லா இடமும் தேங்கிப்போயிருக்கிறது பிழை எண்டு சொல்லுறியோ? பஸ் காறற்றை பிரச்சினை ஒண்டும் புதினமில்லைத்தானே? சண்டைக்குப் பிறகு சனம் சாகிறது விபத்துகளாலைதான். அதுக்குக்காரணங்கள்கனக்கக்கண்டியே. பாக்கிறவங்கள் கேக்கிறவங்கள் இராட்டிக்கு உதுகள் குறைவில்லாம நடக்கிறது வழமைதானே? இதுபோகச் சில பஸ்காறற்றை அடாவடியளைப்பற்றிப் பேப்பர்க்காறரும் எவ்வளவோ தரம்எழுதியுமல்லே இருக்கிறாங்கள். பேப்பர் வாசிக்கிற, நல்லதைக் கேட்டு நடக்கிற, பண்பான ஆக்கள் இபப எங்க இருக்கினம்? அது கிடக்கத் தண்ணிப் பிரச்சினைதான் இப்ப பெரியபிரச்சினையாக் கிடக்குது. தேங்கிற தண்ணி நிலத்துக்குள்ள போறது நல்லது தானே...நீஅதையிதைச்சொல்லிஅவனவன் ஆரும் ரோசமுள்ளவங்கள் இருந்தால், வெட்டிக் கடலுக்கையல்லே விடப்போறாங்கள்?"

அருளர் சொன்னது நியாயமாத்தான் படுகுது.

எங்கடையாக்கள் முந்தினகாலத்திலையெல்லாம்குளங்களையும், கேணியளையும்வெட்டிப் பாதுகாத்தது நிலத்தடி நீரைப் பாதுகாக்கத்தானே? இப்பஎன்னடாவெண்டால்குளங்கள் எல்லாமே குப்பையளாலையும் கஞ்சலுகளாலையும் மூடுப்பட்டல்லே கிடக்குதுகள்? கவனிப்பார் எவருமில்லாததாலை குளத்துக் குள்ளாலை வரம்புகளைப் போட்டுக் காணியாக்கின வரலாறுகளும் இருக்கல்லே? இடங்களைச் சொல்லவேண்டின தேவையில்லை. குளங்களுக்கானவாய்க்கால்களும்உப்பிடித் தானே ஆகியிருக்கு?

அதோட கோயில் கேணியளை மூடித்தானே கோயிலுகள் கட்டுகினம். பைப்பிலை பிடிச்சு ஐயர் ஊத்துற தண்ணியோடை சாமி குளிருமோ எண்டதை ஆரும் யோசிச்சதாய்த் தெரியேல்லை. கோயிலுகளிலை அந்தக்காலத்திலைஏன்கேணியளைக்கட்டினவங்கள் எண்டு யோசிக்கக்கூடின ஆக்கள் இல்லை. கோயிலுகளின்ர நோக்கமே தெரியாத அப்பாவியள்தானே அந்தந்தக்கோவில்நிர்வாகங்களிலை இருக்கினம். சொல் வழி கேக்கிற பழக்கம்எங்கடை ஆக்களுக்குஇல்லைஎண்டதும் சொந்தமாய் யோசிக்கத் தெரியாதவைதான் நிர்வாகங்களிலைமுன்னுக்கிருக்கினம்எண்டதும் நான் சொல்லித்தான் தெரிய வேணுமெண்டில்லைத்தானே?

"யாழ்பாணத் தண்ணிப் பிரச்சினையானதெண்டு கொஞ்ச நஞ்சக் கூத்தே ஆடினனாங்கள்? யாழ்ப்பாணத் தண்ணி ஏன் பிரச்சினையானதெண்டு ஏதும் கதைச்சனாங்களோ எண்டால், 'சுன்னாகத்து ஓயிலை' விட வேறயொண்டையும் பற்றிக் கதைச்சமாதிரியில்லை. தண்ணி உவராகுது எண்டதை எல்லாரும் ஏற்றுக்கொள்ளுகினம். ஆனால் ஏன் எண்டு யோசிக்கினமில்லை...' எண்டு சொறிக்கந்தர்புலம்பினதைஅந்தாள்தண்ணியிலைஅப்பிடித்தான்புலம்புறதுஎண்டுசிரிச்சு நக்கலடிச்சதோடை சரி.

"தரைக்குள்ளசேமிப்பாகிறதண்ணியையெல்லாம்குளாயடிச்சுஉறுஞ்சிறம். அந்தளவுக்குத் திரும்பஉள்ளுக்கசேமிக்கிறதுக்குத்தண்ணியைத் தரைக்குள்ள இறங்க விடுகிறமோ? விடுகிற அளவு காணுமோ? அதை எப்பிடிக் கூட்டலாம் எண்டு ஆரும் யோசிச்சமோ?" எண்டுசங்கரன்வாத்திகொதிக்கிறதிலைநியாயமிருக்கில்லோ?

இப்பிடியிருக்கேக்குள்ளதண்ணியைறோட்டிலையும் றோட்டோரத்திலையுமாவது தேக்கிறதுநல்லதெண்டுதான்படுகுது. இல்லையோ?

"றோட்டுப் போட்ட இஞ்சினியர்மார் புத்திசாலியள்தான். இல்லையெண்டால் உப்பிடி றோட்டிலை குளங்கட்டியிருப்பினமோ? எண்டு ரெண்டுஎஞ்சினியர்பெடியளைலண்டனுக்கு அனுப்பின பரமேசக்கா பெருமைப்படுறது கொஞ்சம்ஓவராத்தான்கிடக்குது"எண்டுசெல்லரண்ணை சொல்லுறார்.

உதுமட்டுமேகடைத்தெருக்கள்கூடறோட்டுக்கும் கடையளுக்கும் இடையிலை தண்ணியைத் தேக்கியல்லே வைச்சிருக்குதுகள். றோட்டுகளின்ரஉயரமும்தண்ணிஅதிகமாப்படாத இடங்களிலை கட்டியிருக்கிற மதவுகளும்நன்மைக்குத்தான்எண்டுறதைஇப்பவாவது புரிஞ்சியளே எண்டு சீனியர் கேக்கிறதை நக்கலெண்டு நினைக்கிறியளோ? தண்ணீலை போகாமல் நிதானமாகப் போங்கோ பிரச்சினையில்லை எண்ட அவற்றை புத்திமதியாலை எரிச்சல் வரயில்லையோ?

அறிக்கை

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி



# வாசிப்பின் மூலமாக வாழ்வில் முழுமை பெறுவோம்

வாசிப்புமனிதசமுதாயத்துக்குச்சுவாசம்போன்றது. ஒரு பிள்ளையானது எழுத்துக்களைப் பயின்று வாசிக்கக் கற்றுக் கொள்கின்றபோது உலகத்தை மெல்ல .மெல்லப் புரிந்து கொள்ள முற்படுகின்றது. வாசிப்பின் ஊடாக அதனுடைய அறிவு, திறன், மனப்பாங்கு என்பன மெல்ல மெல்ல வளர ஆரம்பிக்கின்றது. இந்த வாசிப்பானது பிள்ளையினுடைய வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து செல்கின்றபோது அது முழுமைபெற்றநற்பிரசையாகசமூகத்திற்கும்நாட்டிற்கும்பயனுள்ள பொக்கிசமாக மாறுகின்றது. வாசிப்பின மூலம் புரிந்துணர்வு ஏற்படுகின்றது. இதன்மூலமாகசமூகமாற்றம், சமூகநல்லிணக்கம், கூட்டு வாழ்க்கை முறை, சிறந்த விழுமியங்கள் என்பன ஏற்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக சமூகத்தின் தேவைகள் கல்வியின் மூலமே நிறைவு செய்யப்பட வேண்டிய நிலை இருப்பதனால் அதற்கும் வாசிப்பே பெருந்துணை புரிகின்றது.

கல்வியானது ஒரு மனிதனுடைய வாழ்க்கையிலே எல்லாவிதமான செயற்பாடுகளையும் வளர்க்கும் வகையிலே அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதில் ஒழுக்க விழுமியங்கள் மிகவும் முக்கியமானவையாகும். இவை பாடசாலையிலே கலைத்திட்டம் மற்றும்பாடத்திட்டத்தினூடாகப்புகுத்தப்பட வேண்டும். இவை மாணவர்கள்தாமாகவிளங்கிக்கொள்வதற்கேற்றவாறுபாடங்களினூடாக புகுத்தப்பட வேண்டும். ஒரு பாடசாலை ஒழுங்கமைப்பில் மாணவர்கள் பெறுகின்ற எல்லாவிதமான அனுபவங்களினதும் மொத்த வடிவமாகபாடங்கள்வடிவமைக்கப்பட வேண்டும். சிறுவயதில்படங்களினூடாகஎளியவசனங்களினூடாகபிள்ளைகளுக்குஇவைஉட்புகுத்தப்பட வேண்டும். படம் பார், பாடம் படி என்று சொல்வார்கள். இந்த விடயங்களை ஒரு பிள்ளை புத்தகக் கலாசாரத்தினூடாகவே அதிகமாகப் பெற்றுக் கொள்ள முடியும். தன்னைப் பற்றியும் தனது சூழலைப் பற்றியும் பிற மனிதர்களைப் பற்றியும் அறிவதற்கு வாசிப்பே ஒருவனுக்குக் கை கொடுக்கின்றது.

வாசிப்பு இல்லாத ஒரு மனிதன் கிணற்றுத் தவளைக்கு ஒப்பிடப்படுவான். உலகில் அன்றாடம் நடைபெறும் அரசியல், சமூக பொருளாதார, கலாசார, தொழில்நுட்ப, கலை, வர்த்தக மாற்றங்களை வாசித்தலினூடாக நாம் பெற்றுக் கொள்கின்றோம்.

இன்று அச்சுஊடகங்களோடு இலத்திரனியல்ஊடகங்களும்வாசிப்புக்கு துணை புரிகின்றன. இவை வேகமாக செய்திகளை, தகவல்களைத்தருகின்றன. இன்று மாணவர்கள் தமது கற்றல்தேவைகளுக்காக இணையத்திலிருந்து பெருமளவு தகவல்களையும் விடயங்களையும் பெற்று வாசிப்பதைக் காண்கின்றோம். நவீன இலத்திரனியல்சாதனங்கள், தொடர்பாடல்உபகரணங்கள்வந்தாலும் நூலகங்களுக்குச் சென்று படிக்கும் மக்களின் தொகையிலும் சரிவு ஏற்படவில்லை. செலவு இல்லாது அல்லது குறைந்த செலவோடு எப்பொழுதும் பெறக்கூடியவையாக எல்லோரும் பெறக்கூடியவையாகவும் இருப்பன. அச்சில்வெளிவரும்பிரசுரங்களும்நூல்களுமேயாகும். மக்கள் பயன்பட வேண்டும் எனும் நோக்கிலேயே நாடு முழுவதும் நூலகங்களும் வாசிகசாலைகளும் நிறைந்து கிடக்கின்றன. இவற்றை மக்கள் பூரணமாகப் பயன்படுத்த வேண்டும். வாசிப்பே இல்லாத மனிதன் கண்ணிருந்தும் குருடனாகவே விளங்குவான்.

பெற்றோரும் ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நூல்நிலையங்களுக்கு வாரத்தில்ஒரு நாளாவது பிள்ளைகளை அழைத்துச் செல்ல வேண்டும். வீட்டில் பெரியவர்கள்சிறிதளவுநேரத்தையாவதுவாசிப்புக்குஒதுக்கும்போது பிள்ளைகளும் அதில் ஆர்வம் காட்டுவார்கள். பாடசாலை நூலகங்களை சுத்தமானதாக, வெளிச்சம் காற்றோட்டம் உள்ளதாக மாற்றியமைத்து ஆசிரியர்கள் வாசிப்பின் பயன்களை மாணவர் மத்தியில் எடுத்துரைத்து அவர்களை வாசிப்பை நோக்கித் திருப்ப வேண்டும். மாணவர்கள்வாசிப்பதினூடாகஅவர்களின்மொழிவளம்பெறுகின்றது. பாடத்துறைசார்ந்தபல்வேறுபுதியவிடயங்களையும்அவர்கள் அறிந்து கொள்ள முடிகின்றது.

கல்வி அமைச்சின் பாடசாலைநூலக அபிவிருத்திகளை "நூல்களாகிய தோழர்களே நேசமிகு நண்பர்கள்" என்ற தொனிப்பொருளில் வாசிப்பைமேம்படுத்தும்நிகழ்ச்சித்திட்டமொன்றைபாடசாலைகளில் தரம் 6 -13 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்காக 2018-2019 வேலைத்திட்டத்தில் இணைந்துள்ளது. இது தேசிய மட்டம் வரை சென்றுமாணவர்கள்சாதனைகளைநிலைநாட்டக்கூடியமுறையில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும்.

தேசிய வாசிப்பு மாதம் ஒவ்வோர் ஆண்டும் ஒக்ரோபர் மாதம் கடைப்பிடிக்கப்படுகின்றது. இனங்களுக்கிடையில்புரிந்துணர்வைஏற்படுத்துவதற்கான வாசிப்பு என்பது இவ்வருடத்துக்கான தொனிப்பொருளாகும். நீடித்த நிலையான சமாதானத்திற்கான திறவுகோல் ஆழமானவாசிப்பேஎன்பதைநாம்உணரவேண்டும். வாசிப்பதன்ஊடாக இனங்களுக்கிடையில்புரிந்துணர்வுஏற்படவும்சமூகங்களிடையில் நல்லிணக்கம் ஏற்படவும் வழிசமைத்து வாசிப்பின் ஊடாக நாமும் முழுமை அடைவோம்.

# கலை இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

**கலை இலக்கியப் படைப்பாளிகளின் எழுத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும், சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்தளிப்பது இந்தப் பகுதி. இவை 'யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு' என்ற தலைப்பில் கலாநிதி சி.க.சிற்றம்பலம் எழுதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளியிட்ட நூலில் இடம்பெற்றிருந்தவை இவை.**

தொகுப்பு-சிதம்பரதாசன்

தற்போதைய வட மாகாணம் ஏறத்தாழ 79.50°.- 81.0°, கிழக்கு நெட்டாங்குக்கு இடையிலும், வட அகலாங்கு 8.50° - 9.50° க்கு இடையிலும் அமைந்துள்ளது. இதன் பரப்பு ஏறத்தாழ 8687.6 சதுர கிலோமீற்றர்கும். பெரும்பாலும் 750மில்லி மீற்றருக்கும் (மி.மீ) - 200 மில்லி மீற்றருக்கும் (மி.மீ) இடைப்பட்ட மழைவீழ்ச்சியைப் பெறும் இந்தப் பிரதேசத்தின் வெப்பநிலை 25 பாகை செல்சியசுக்கும் 28 பாகை செல்சியசுக்கும் இடைப்பட்டுக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரதான கல்வகையாகச் சுண்ணாம்புப் பாறை வகை காணப்பட வன்னிப் பகுதியின் குறிப்பாக வவுனியா மாவட்டப் பகுதியின் பிரதான பாறை வகையாகக் கருங்கற் பாறை வகை காணப்படுகின்றது. மண் கையைப் பெறுத்த மட்டிற் குடா நாட்டில் வலிகாமம், வடமராட்சியின் சில பகுதிகளில் சுண்ணாம்புத் தன்மை கொண்ட செம்மஞ்சள் மண் வகை காணப்படுகின்றது. இத்தகைய மண்வகை விவசாய நடவடிக்கைகளுக்கு உகந்ததாக அமைந்துள்ளது. இவ்வாறே கரையோரப் பகுதிகளிலுந் தென்மராட்சியை அண்டிய பகுதிகளிலுங் கரையோர மண்படிவும், நரை மண் வகையுங் காணப்படுகின்றன. நெற்பயிர்ச் செய்கை, தென்னைமரச் செய்யை ஆகியவற்றுக்கு இவை உகந்ததாக அமைந்துள்ளன.

\+ + +

வட பகுதி வரலாற்றில்குறிப்பாக அதன் பண்பாட்டு வளர்சியில் அதன் பௌதீக அம்சங்களான காலநிலை, மண்வளம், இயற்கைத் தாவரம் , மட்டுமன்றித் தரைத் தோற்றமும் அதனைச் சூழவுள்ள கடலுங் காத்திரமான பங்கினை வகித்துள்ளன என்றால் மிகையாகாது. பொதுவாக இப் பகுதி 500 மீற்றரு க்குக் குறைவான உயர வேறுபாட்டினைக் கொண்டிருந்தாலுங் கூடப் பெரும்பகுதி 100 மீற்றருக்குக் குறைவான பகுதியாகவே விளங்குவதால் கரையோரச் சமவெளிக்குரிய தரைத்தோற்றத்தினையே இது பெற்றுக் காணப்படுகின்றது. குடா நாட்டில் கீரிமலை, தெல்லிப்பழை.கந்தரோடை .போன்ற பகுதிகள் உயரமான தரைத்தோற்றத்துடன் காணப்படுவது போலப் பெருநிலம் பரப்பில் வவுனியா மாவட்டத்தினை உள்ளடக்கிய பகுதிகள் இத் தன்மையைக் கொண்டு விளங்குகின்றன. இத்தகையதரைத்தோற்றத்திற் காணப்படும் மண் வகையின் செழுமைக்கேற்ப ஆதி நாகரீகத்தின் எச்சங்கள் இங்கு காணப்படுவதும் அவதானிக்கத்தக்கது. பொதுவாகவே மக்களின் குடிப்பரம்பல் கரையோரங்களை அண்டிய -மணற் பிரதேசங்களின் நீரை அலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிவதால் ஆரம்பமாவது வளக்காறாயினும் மக்கள் மத்தியில் காணப்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி உள்ளே உள்ள பகுதிகளிற் காணப்பட்ட மண்வளம் பிற பொருளாதார வாய்ப்புக்கள் ஆகியன மக்களை உள்நோக்கி ஈர்த்ததும் ஈழத்து வரலாற்றில் காணப்படும் ஒரு நியாயமாகவுள்ளது.
ஈழத்து வரலாற்றில் வராற்றில் அதனைச் சூழவுள்ள கடல் நீர்ப்பரப்புத் தாக்கத்தினை ஏற்படுத்தியது போன்று வட பிராந்தியத்தின் மூன்று பக்கங்களையுஞ் சூழவுள்ள கடல் அதன் வரலாற்றோட்டத்தின் பெரும்பங்கினை வகித்துள்ளது எனலாம். இக் காலத்தினை போல் ஆதி காலத்திலும் இப் பகுதி மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயம் அமைந்திருந்தாலுங் கூடக் கடலிற் கிடைத்த மீன் வகைகளும் பிற கடல்படு பொருள்களும் இப் பகுதி மக்களின் உணவு வகையில் இணைந்து கொண்டன. இதுமட்டுமின்றி மன்னார் குடாவில் கிடைத்த சிப்பிகள், முத்துக்கள், வட பகுதிகளிற் கிடைத்த ஆகியன இப் பிராந்தியத்தில் முத்துக்குளித்தல், சங்குகுளித்தல் ஆகிய தொழில்களை ஊக்குவித்ததன் மூலம் பிற நாட்டு வணிகரையும் இப் பகுதி நோக்கி ஈர்த்தன.

\+ + +

பாக்கு நீரிணையாற் பிரிக்கப்பட்ட ஈழத்தின் வட பகுதி பிற பகுதிகளை விட தமிழகத்திற்கு அண்மித்துக் காணப்படுலதாலேயே தமிழகத்தின் தாக்கம் ஈழத்தின் ஏனைய பகுதிகளையும் விட வட பகுதியில் விதந்து காணப்பட்டதை வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு அவதானிக்க முடிகின்றது. இப் பகுதித் துறைமுகங்கள் தமிழகத் துறைமுகங்களோடு இணைந்திருந்த வரலாற்றை எதிர்கால அகழ்வாராட்சிச் சான்றுகள் நிச்சயம் உறுதிப்படுத்துவது என எண்ணுவது வெறும் யூகமன்று.

\+ + +

மேற்கூறிய பண்புகள் கொண்ட வட பகுதியின் பௌதீக அமைப்புப் பண்டு தொட்டு இப் பகுதி வராலாற்றினை நிர்ணயிப்பதில் முக்கி பங்கினை வகித்துள்ளன எனலாம். இப் பகுதி ஈழத்தின் ஒரு பகுதியாகக் காணப்பட்டாலுங் கூட இதில் அனுராதபுரம், பொலநறுவை, நாகரகங்களின் தாக்கத்தினை விடத் தமிழக நாகரிகத்தின் தாக்கமே விதந்து காணப்படுவது மட்டுமின்றி ஸ்திரம் பெற்றுக் காணப்படுவதும் இதன் பௌதீக அமைப்பின் தாக்கமே எனலாம். இதனால் அன்று மட்டுமின்றி அன்றும் பௌத்த சிங்கள கலாசாரத்தில் அமிழாது, அக் கலாசார அலைகளுக்கும் முகங்கோடுத்து அதே நேரத்திலே தனது தனித்துவத்தைப் பேணிய பெருமை மட்டுமன்றி இன்றும் அத் தகைய தனித்துவத்தினைப் பேண மனைந்து நிற்பதும் இப் பகுதிக்குரிள தனித்துவமான பண்பாகும்.
எனினுங் சிங்கள மக்கள் வராற்றினை அறிந்து கொள்வதற்திய இலக்கியத் தொல்லியற் சான்றுகள் ஆராயப்பட்டது போலத் தமிழ் மக்களின் வராலாற்றினைவிளக்குந் தொல்லியற் சான்றுகள் விரிவானமுறையில் ஆராயப் படவில்லை. இந்த நாடு சிங்கள - பௌத்தர்களுக்கே உரிய நாடு என்ற நோக்கில் எழுதப்பட்ட பாளி நூல்களிலே தமிழர்களின் வரலாற்றினைப்ப பற்றி விரிவான தடயங்கள் காணப் படவில்லை. சிங்கள அரசின் வரலாற்றிலே தமிழ்மக்களின் தலையீடுகள் ஏற்பட்ட போது தான் தமிழ் மக்கள் பற்றிய குறிப்புக்கள் இவற்றில் உள. இத்தகைய குறிப்புக்கள் தமிழ் மக்களின் வரலாறு பற்றி அறியப் போதிய சான்றாதாரங்களாக அமையவில்லை. தமிழ் நூல்களாகிய கைலாய மாலை, வையா பாடல், யாழ்ப்பாண வைபவ மாலை ஆகியன நல்லூர் அரசின் எழுச்சிக் காலத்தில் எழுதப் பட்ட போதிலும் நல்லூர் அரசு பற்றிய விரிவான சான்றுகள் இவற்றிலும் இல்லை. இது மட்டுமின்றி இவ் அரசுக்கு முன்னருள்ள காலபகுதி பற்றி அங்குமிங்குமாக தொடர்ச்சி அற்ற முறையிலே தான் குறிப்புகள் சில உள. .தொல்லியச் சான்றுகளை நோக்கும் போது சிங்கள அரசுகள் நிலைத்திருந்த பகதிகளோடு ஒப்பிடுகையில் வட பகுதி பெரும்பாலும் தொல்லியளாளரின் கவனத்தினை ஈர்க்காத பகுதியாகவே விளங்கியுள்ளது. இன் நிலையில் ஈழத்து வரலாற்றினை எழுதியோர் பாளி நூல்களை மூலாதாரமாகக் கொண்டு எழுதியதாலேயே தமிழ் மக்கள் இன்று செறிந்து வாழும் பிரதேச ங்களில் அவர்களின் வரலாற்றிற்குரிய பங்கினை அளிப்பதற்குப் பதிலாக சிங்கள தலைநகர்களுக்கே முக்கியத்தும் கொடுத்தனர். தமிழ் மக்களின் பிராந்தியங்களுக்குரிய இடத்தினை அவை நல்கவில்லை. இருந்துந் தமிழ் மக்களின் பங்களிப்புப் பற்றியும் வட பகுதி ஈழத்து வரலாற்றில் பெற்றிருந்த முக்கியத்துவம் பற்றியும் இன் நூற்றண்டின் இருபதுகளிற் சேர் போல் பீரிஸ் கந்தரோடையில் தொடர்ந்து மேலாய்வுகளும் இதனைத் தொடர்ந்து அராசநாகய முதலியார், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் இப் பகுதி வராலாறு பற்றி எழுதிய நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் வெளிவந்திருந்துங்கூட ஈழத்து வரலாற்றிலே பங்கையும் குறிப்பாக வட பகுதிக்குரிய இடத்தினையுஞ் சிங்கள வரலாற்றாசிரியர்கள் அங்கீகரிக்கவில்லை.
இவ்வாறான கண்ணோட்டத்துக்கு அடிப்படையான காரணம் இன் நாட்டின் நாகரீக கர்த்தாக்கள் சிங்கள மக்களின் மூதாதையினர் என்ற பாளி நூலோர் கற்பித்த இலக்கிய அணுகு முறையும் ஈழத்தின் அணுகு முறை பற்றிய ஐதீகங்களும் ஒற்றையாட்சி ஈழத்து வரலாற்றோடுகளிற் பெற்றிருந்த முக்கியத்து வமாகும். எனினும் இற்றைக்கு கால் நூற்றாண்டுக்கு முன்னர் 1969இல் அனுராத புரத்திலும் இதனைத் தொடர்ந்து அடுத்த ஆண்டிற் கந்தரோடை புத்தள மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் ஈழத்தின் நாகரீகக் கர்த்தாக்கள் பற்றிய புதிய சிந்தனையைத் தந்தாகூங் கூட 1980 இல் இவ் ஆய்வுகளை மதிபீடு செய்த நமது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வு ஈழத்து நாகரிக கர்த்தாக்கள் இன்று நீங்கள - தமிழ் மொழிகளைப் பேசுவோர் மூதாதையினர் என்பதை உறுதி செள்துள்ளது. ஈழத்தின் பெருங்கற்காலப் பண்பாடு என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட நமது ஆய்வு தென்னிந்தியாவிலே எவ்வாறு ஆதித் தென் திராவிடத்திலிருந்து தற்காலத் தென்னிந்திய மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், தமிழ், மலையாளம் ஆகிய துளிர்த்த னவோ அவ்வாறே இத் தென் திராவிட மொழிகளிலிருந்து ஈழத்துத் தமிழும் சிங்கள மொழியின் மூதாதை மொழியாகிய 'எலு' வும் துளிர்த்தன என்பது எடுத்துக்காட்டப்பட்டது.
இத்துடன் இந்தியாவிலிருந்து பௌத்தத்துடன் ஈழம் புகுந்த அதன் மத மொழியாகிய பாளியின் செல்வாக்கினாலேயே திராவிட மொழியாகிய எழு (பழைய சிங்கள மொழி) வட இந்திய மொழிச் சாயலைப் பெற்று உருமாறாப் பௌத்த மத ஜாதகக் கதைகளைக் கருப் பொருளாகக் கொண்டு 'வட இந்திக் குடியேற்றம்' என்ற ஐதீகம் வளர்க்கப்பட்டது. இக் கதை வெறும் ஐதீகம் எனப் பலர் உணர்ந்திருந்த போதும் அண்மைக்கால ஆய்வுகள் தான் இது ஐதீகம் என்பதை உறுதிப்படுத்தியதோடு ஈழத்தில் காணப்பட்ட பெருங் கற்காலக் கலாசாரத்துக்குரிய தீராவிட மக்களின் குடிப்பரம்பலுக்கு இவ் வைதீகத்தின் மூலம் விளக்கங்கொடுக்கப்பட்டதும் நமது ஆய்வால் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதனை மேலும் உறுதிப்படுத்தும் முகமாகச் சிங்கள- தமிழ் மொழிகளுக்கிடையே நிலவும் அடிப்படை ஒற்றறுமைகள், இரு சமூகங்களிடையே நிலவும் பொதுவான அம்சங்கள், சமூக வழக்குகள், வழிபாட்டு முறைகள் ஆகிய அமைகின்றன. இதனால் பாளி நூலோர்க் கூறுவது போல் சிங்கள மக்கள் மட்டடும் தான் இன் நாட்டின் ஆதிக் குடிகள். அல்லவென்பதும் தமிழ் மக்களும் அவர்களோடு ஒத்த பழமையும் வராலாற்றையுமுடையவர்கள் என்பது உறுதிளாகிவிட்டது.

\+ + +

ஈழத்து நாகரீகத்தின் தோற்றம் பற்றி அகழ்வாராச்சிச் சான்றுகள் மூலங் கிடைத்த மேற்கூறிய பரிமாணம் ஈழத்தின் மிகப் பழைய கல்வெட்டுக்களாகிய பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றியும் புதிய முடிவுகளைத் தந்துள்கது. முன்னரெல்லாம் இக் கல்வெட்டுக்கள் வட இந்தியாவில் இருந்து ஈழத்திலேற்றகப்பட்ட சிங்கள மக்களின் மூதாதையினர் ஆகிய ஆரியரின் குடியேற்றத்துக்கான ஆதாரமாகக் கொள்ளப்பட்டது. ஆனால் கடந்த கால் நுற்றண்டுகளாக இக் கல்லெட்டுக்கள் பற்றிய ஆய்வுகள், கல்வெட்டுக்கள் இந்துக்களாக விளங்கிய சிங்கள மக்களின் மூதாதையனர் பௌத்தத்தைத் தளுவிய போது பௌத்த சங்கத்தினருக்கு குகைகளைத் தானமாக அளித்ததை எடுத்து விளக்குவனாக உள்ளன. இத்தகைய குகைத் தானங்களை எடுத்துக் காட்டும் இக் கல்வெட்டுக்களின் வரி வடிவம், இவற்றில் காணப்படும் பெயர்கள் ஆகியன இக் கல்வெட்டுக்களில் இருவித படைகள் படைகள் உள என்பதை துலாம்பரப்படு த்தியுள்ளன. முதலாவது படை ஈழம் தமிழகம் ஆகிய பிராந்தியங ங்களிற் கி.மு 6 ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த திராவிட வரி வடிவமாகும். இவ் விரி வடிவம் இவ்விரு பிராந்தியங்களிற் செல்லவாக்குற்றிருந்ததை எடுத்துக் காட்டும் பல பழைய கல்வெட்டுக்கள் சிங்கள அறிஞர்களான சத்த மங்கல கருணாரத்தின, பெர்ணாண்டோ போன்றோரால் இனங்காணப்பட்டது. இவ் வரி வடிவம் சிங்கள தமிழ் மக்களின் மூதாதையினர் மத்தியிற் பயின்றிருந்த காலையிற்றான் பௌத்தம் வட இந்தியாவிலிருந்து கி.மு மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அறிமுகமானது. பௌத்தத்தோடு அதன் மத மொழியாகிய பாளி மட்டுமன்றி வட இந்திய பிராமி வடிவமும் அறிமுகமானது. இதனாற் பழைய திராவிட மொழிகள் பயின்ற நாட்டிற் பாளிப் பிராகிருத்தின் செல்வாக்கால் வட இந்திய கலாசாரத்தினைப் பிரதிபலிக்கும் சொற்கள் வழக்கில் வர பழை திராவிட வடிவங்கள் மட்டுமன்றிப் பழைய திராவிட கலாசாரத்தின் எச்சங்களும் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின. இத்தகைய மறைவு கிறிஸ்தாப்த காலத்திற் பெருமளவு பூர்த்தியானது. திராவிட மொழியாகிய எழுவைப் பேசிய மக்கள் மத்தியில் இவ்வாறு பௌத்த கலாசாரம் ஏற்படுத்திய தாக்கத்தினால் வட இந்தியக் கலாசாரம் மேலோங்கியது. எனினும் பிராமிக் கல்வெட்டுக்களில் இன்றும் பழைய திராவிட கலாசாரத்தின் எச்சங்களாக விளங்கும் பழைய வரி வடிவ எழுத்துக்களும் ஆய்.வேள்.பரத.பருமக.(பெருமகன்) போன்ற திராவிடக் குழுப் பெயர்களும், விருதுப் பெயர்களும் இவர்களின் இந்துமத நம்பிக்கைகளைக் குறிப்பிட்டுக் காட்டும் இந்துக் கடவுளரின் பெயர்களும் .பௌத்த கலாசாரம் எலு மொழியைப் பேசிய சிங்கள மக்களின் மூதாதையினரை வென்றெடுத்ததை உறுதி செய்கின்றன. பௌத்தஞ் சிங்கள மக்களின் மூதாதையி னரை வெற்றி கொண்டது போலத் தமிழ் மக்களை இதனால் வெற்றிகொள்ள முடியவில்லை.

கட்டுரை

சமஸ்



# ஒரு கல்வி நிறுவனம் யாரை உருவாக்கவேண்டும்?

நானும் ராஜும் பேடிங்டன் ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்தோம். "பிரிட்டனின் கிராமப்புறங்களைப் பற்றி அவசியம் எழுத வேண்டும் என்று சொன்னீர்கள் இல்லையா? நாம் நாளைக்கு அங்கு செல்வோம். அதற்கு முன்இன்னும் இரண்டு விடயங்களை மட்டும் இந்தப் பயணத்தில் நீங்கள் இணைத்துக்கொண்டால் நல்லது என்று நினைக்கிறேன். பிரிட்டனின் கல்வி, சுகாதாரக் கட்டமைப்பு. இது அவசியம் நமது மக்களுக்குச் சென்றடைய வேண்டியது. நாம் இப்போது ஒக்ஸ்போர்ட் செல்கிறோம்."
பிரிட்டனின் கல்வி, சுகாதாரக் கட்டமைப்பு உலக அளவில் பிரசித்தி பெற்றது. இந்தப் பயணத்தில் அதுகுறித்து எழுதுவதற்காக ஏற்கனவே ஹெலனுடன் பலரையும் சந்தித்திருந்தேன். கல்விப்புலம் தொடர்பில் அறிந்துகொள்வதற்காகக் கிங்ஸ் கல்லூரி, வெஸ்ட்மினிஸ்டர் பல்கலைக்கழகம் இரண்டுக்கும் சென்றிருந்தேன். கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் செல்லும் திட்டத்தை வேறொரு சந்திப்பின் நிமித்தம் கடைசி நிமிடத்தில் கைவிட வேண்டியதாயிற்று. இப்போது ஒக்ஸ்போர்ட் பயணம் தானாக வந்தமைந்தது ஒரு திளைப்பை உண்டாக்கியது.

### அரச பள்ளிகளுக்கே அதிக முக்கியத்துவம்

"இலங்கைத் தமிழரான பொன்னம்பலம் ராமேஸ்வரன் ஒக்ஸ்போர்ட்டில் நம்மை வரவேற்பதற்காகக் காத்திருக்கிறார். என் நண்பர் வழி நண்பர் அவர். ஒக்ஸ்போர்ட் செல்லும் வழியிலும் நாம் கிராமப்புறப் பிரிட்டனைப் பார்க்க முடியும். மேலதிகம் நீங்கள் தெரிந்துகொள்வதற்கு நாளைக்கு உங்கள் தோழியோடு ஒரு சுற்றுச் சுற்றிவாருங்கள்."
ஐந்தாறு பெட்டிகளைக் கொண்ட சின்ன ரயில் அது. தேம்ஸ் நதியை ஒட்டியும் வெட்டியும் அமைந்திருந்த பாதை முழுவதும் நிலம் பச்சை பூரித்திருந்தது. நீரோடைகள், பச்சை வயல்கள், அடர்ந்த, உயர்ந்த மரங்கள், இடையிடையே கிராமங்கள். நல்ல மழை பெய்துகொண்டிருந்தது.

### "இங்கே ஆரம்பக் கல்வி எப்படி இருக்கிறது?''

"பிரிட்டனில் ஆரம்பக் கல்விக்குப் பெரிய முக்கியத்துவம் கொடுப்பார்கள். அரசு, அரசு நிதியுதவி பெறும் பாடசாலைகளில் படிப்பவர்கள்தான் பெரும்பான்மை. கல்வி அரசின் பொறுப்பு. ஆரம்பக் கல்விக்குக் கட்டணம் கூடாது. அது இலவசமாக வழங்கப்பட வேண்டியது" என்று 1918ஆம் ஆண்டில் சட்டம் இயற்றினார்கள். ஆக, ஆரம்பக் கல்வியைப் பிரிட்டிஷார் ஜனநாயகப்படுத்தி முழுமையாக நூறு வருடங்களாகின்றன. ஒரு முரண்பாடு என்னவென்றால், இங்கே 'பப்ளிக் ஸ்கூல்' என்று சொல்லப்படுபவை சுயநிதிப் பள்ளிகள். அரச பள்ளிகளை 'ஸ்டேட் ஸ்கூல்' என்று சொல்வார்கள்."

**"நீங்கள் அரச பள்ளிகளுக்குச் சென்றிருக்கிறீர்களா? சுயநிதிப் பள்ளிகளுக்கும் அரச பள்ளிகளுக்குமான வேறுபாடு எப்படி இருக்கும்?''**


"என்னுடைய நண்பர்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களுக்குச் சென்றிருக்கிறேன். அவர்கள் எல்லாம் அரச பள்ளிகளில்தான் படிக்கிறார்கள். பிரமாதமாக இருக்கும். பள்ளிக்கூடத்தில் குழந்தைக்குக் கொடுக்கும் உணவைக்கூடப் பெற்றோரின் விருப் பத்தைக் கேட்டுதான் ஆசிரியர்கள் முடிவுசெய்வார்கள் என்று என் நண்பர் சொல்வார். பெற்றோர்கள் விருப்பப்பட்டால், நீச்சல் பயிற்சி, களச் சுற்றுலா போன்ற படிப்புக்கு அப்பாற்பட்ட கூடுதல் பயிற்சிகளுக்குப் பணம் கொடுக்கலாம். அதுகூடக் கட்டாயமல்ல. தனியார் பள்ளிகள் இங்கே பெரும்செலவு பிடித்தவை. உயர் வர்க்கத்தினரைத் தாண்டி இங்கே தனியார் பள்ளிகளை விரும்புவோரும் இல்லை. அதற்கான தேவையும் இல்லை. ஒக்ஸ்போர்ட்டில் படிக்கும் பிரிட்டன் மாணவர்களில் கிட்டத்தட்ட அறுபது சதவீதத்தினர் அரச பள்ளிகளில் படித்துவிட்டு வந்தவர்கள் என்று ஓர் ஆய்வு சொல்கிறது. அப்படியென்றால், தரம் நன்றாக இருக்கிறது என்றுதானே அர்த்தம்?"

### ஒக்ஸ்போர்ட் என்கிற பல்கலைக்கழக நகரம்

உலகின் பழைமையான பல்கலைக்கழகத்தைத் தன்னுடைய அடையாளமாக்கிக்கொண்டிருந்த ஒக்ஸ்போர்ட் நகரத்தை ஒன்றே கால் மணி நேரத்தில் அந்த ரயில் சென்றடைந்தது. ரயில் நிலையத்துக்கே வந்திருந்தார் பொன்னம்பலம் ராமேஸ்வரன். கூடவே பேராசிரியர் மகரனும். கம்பளி உடையையும் தாண்டி அன்றைய குளிரில் பேராசிரியருடைய உடல் வெடவெடத்துக்கொண்டிருந்தது. குடைக்குள் இழுத்துக்கொண்டு கார் நோக்கி எங்களை அழைத்துச்சென்றார். காரில் அமர்ந்ததும், "ஒரு பெரியவரை இந்தக் குளிர் நாளில் நாம் தொந்தரவுக்குள்ளாக்கிவிட்டோம்" என்று என் காதில் கிசுகிசுத்தார் ராஜ். ஏதோ புரிந்துகொண்டவராக "தமிழாட்கள் இங்கே வருவது என் உயிருக்கு உற்சாகம் கொடுப்பது. உங்களுக்கு உதவ வாய்ப்பளிப்பதன் மூலம் என்னை நீங்கள் உயிர்ப்பிக்கிறீர்கள்" என்று சொன்னார் பேராசிரியர். அந்த நாள் முழுவதுமே அந்த உற்சாகத்தை அவர் வெளிப்படுத்தினார். ரயில் நிலையத்தைக் கடந்து ஒக்ஸ்போர்ட் நகருக்குள் கார் நுழைந்தபோது மனம் திகைப்பில் ஆழ்ந்தது. வேறு ஒரு யுகத்துக்குள் நுழைவதுபோல் இருந்தது.
"இந்தச் சிறிய நகரம் ஆயிரம் வருடங்களை அப்படியே தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகம்தான் ஊர். ஊர்தான் பல்கலைக்கழகம். நீங்கள் வானூர்தியிலிருந்து ஒக்ஸ்போர்டைப் பார்த்தால், இதன் புராதன அழகு புரியும். சுற்றிலும் பச்சை. நடுவே இந்தப் பழுப்பு நகரம். கனவுகளின் நகரம் இது."
அபாரமான காதலுடன் பேசிக்கொண்டிருந்தார் பேராசிரியர். ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைப் பற்றி நாளெல்லாம் பேசியவர் அதை அணுஅணுவாக அறிமுகப்படுத்தினார்.

### பழமையானதும் நீண்ட செயற்பாடுடையதுமான ஒக்ஸ்போர்ட்

"உலகத்தில் இன்றுள்ள பல்கலைக்கழங்களிலேயே பழைமையானதும், தொடர்ந்து செயல்படுவதும் மட்டுமானதல்ல ஒக்ஸ்போர்ட். தலைசிறந்தவற்றுள்ளும் தன்னைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. 'ரைம்ஸ்' உயர் கல்வி நிறுவனத் தரவரிசையில் உலகப் பல்கலைக்கழங்களில் இன்றும் முதலிடத்தில் இருக்கிறது. கிட்டத்தட்ட 350இக்கும் மேற்பட்ட பட்டப்படிப்புகளை இங்கே பயிற்றுவிக்கிறார்கள். 24ஆயிரம் மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்களில் கிட்டத்தட்ட சரிபாதியினர் வெளிநாட்டினர். உலகின் ஆறு கண்டங்களைச் சேர்ந்த, 150இக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் படிக்குமிடம் இது. அப்படியென்றால், இங்கே படிக்கும் ஒரு மாணவனுக்கு எப்படிப்பட்ட கலாச்சார வளம் கிடைக்கும் என்று எண்ணிக்கொள்ளுங்கள்."
ஒக்ஸ்போர்ட்டின் ஆரம்பகாலக் கட்டடங்கள் ஒவ்வொன்றுக்கும் அழைத்துச் சென்றார். "இங்கே எல்லாம் நம்மாட்கள் கால்கள் பட வேண்டும். நம் தமிழ் மக்களின் எண்ணங்கள் விசாலப்பட்டு, கனவுகள் விரிபட வேண்டும். தமிழ்ப் பிள்ளைகள் இங்கே வர வேண்டும். நீங்கள் அப்படி எழுத வேண்டும்" என்று சொன்னபடியே அவரும் ஒவ்வொரு கட்டடமாக ஏறி இறங்கினார். கடுமையாக அவருக்கு மூச்சிரைத்தது. இறுதிவரை அதை அவர் பொருட்படுத்தவே இல்லை.



"இந்தப் பல்கலைக்கழகம் இதில் அங்கம் வகிக்கும் 38 கல்லூரிகளால் ஆனது. இந்தக் கல்லூரிகள் அனைத்தும் பல்கலைக்கழகத்துக்கு உள்ளாகவே சுயேச்சையாக இயங்குபவை. ஒவ்வொரு கல்லூரியின் நிர்வாகம், உள்கட்டமைப்பு, செயல்பாடுகள் எல்லாவற்றையும் முடிவெடுக்கும் அதிகாரம் அந்தந்தக் கல்லூரிகளிடமே இருக்கிறது. இந்த அதிகாரப் பரவலாக்கம், தன்னாட்சி செயல்பாடு இதைத்தான் நம்மவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். என்ன சொல்கிறீர்கள்? உங்களுக்குத் தெரியுமா? கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழகம் உண்டாகவும் ஒக்ஸ்போர்ட்டில் படித்தவர்கள்தான் காரணம்.

### கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துக்கு அத்திபாரமிட்டது ஒக்ஸ்போர்ட்

1209ஆம் ஆண்டில் இங்கே சின்னக் கலவரம். அப்போது இங்கிருந்து சென்ற ஆசிரியர்கள்தான் கேம்ப்ரிட்ஜ் சென்று அந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவினார்கள்.'
இடையிடையே கட்டடங்களின் உச்சிப் பகுதியைச் சுட்டிக்காட்டினார். "அடிக்கடி நீங்கள் இப்படி மேல் நோக்கிப் பார்க்க வேண்டும். இங்குள்ள கட்டடங்கள் முழுவதிலும் மேலிருந்து நீரை ஊற்றுவதற்கான 'காகோய்ல்'கள் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றின் உருவத்தைப் பாருங்கள்." அங்கிருந்த உருவங்களில் சில மனித முகமும், சில விலங்கு முகமும் கொண்டிருந்தன. மூக்கை நோண்டிக்கொண்டிருக்கும் உருவம், சிறுநீர் கழிப்பது போன்ற உருவம் என்று விநோதமான அவற்றைச் சுட்டிக்காட்டும் தருணங்களில் அவர் சிறுபிள்ளையாக மாறினார்.

### ஒக்ஸ்போர்ட் மீது ஹிட்லருக்கிருந்த விருப்பு

"பிரிட்டனைக் கைப்பற்றினால் ஒக்ஸ்போர்ட்டைத்தான் தலைநகரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று உத்தேசிருந்தாராம் ஹிட்லர். ஒக்ஸ்போர்ட் மீது அவரது படைகள் குண்டு வீசாததற்கு இதுவும் ஒரு காரணம்." உலகின் மிகப் பழமையான பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் முன் நாங்கள் நின்றோம். உலகிலேயே பெரியதான பல்கலைக்கழகப் பதிப்பகமும் பிரிட்டனின் மிகப் பெரிய கல்வி நிலைய நூலகமும் அதற்குள்தான் இயங்குகின்றன. 'நமக்குப் பெரிய கனவுகள் வேண்டும் சமஸ், என்ன சொல்கிறீர்கள்?' என்றார். பதிலை அவர் எதிர்பார்க்கவில்லை.
"இப்போதைய தலைமை அமைச்சர் தெரஸா மே, முந்தையவர்கள் டேவிட் கமரூன், டோனி பிளேர், மார்க்கரெட் தாட்சர்... பிரிட்டனின் 27 தலைமை அமைச்சர்கள் இங்கே படித்தவர்கள். இது தவிர, பன்னாட்டுத் தலைவர்கள் குறைந்தது 30 பேர் இங்கு படித்தவர்கள். ஆஸ்திரேலியாவின் ஐந்து தலைமை அமைச்சர்கள் இங்கு படித்தவர்கள். 2017 வரையிலான கணக்குப்படி நோபல் பரிசு வென்றவர்களில் 69பேர் இங்கே மாணவர்களாகவோ, ஆசிரியர்களாகவோ வருகைதரு பேராசியர்களாகவோ இருந்திருக்கிறார்கள். விளையாட்டு என்று எடுத்துக்கொண்டால், 160 ஒலிம்பிக் பதக்கங்களோடு தொடர்புடைய இடம் இது. கலைஞர்கள், இலக்கியவாதிகள் பட்டியலை நாம் இன்றைக்குள் பேசி முடிக்கவே முடியாது. நம் நாட்டுக் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றும், ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் இப்படி ஒரு பட்டியலை நாமும் உருவாக்க வேண்டும் என்று எண்ண வேண்டுமா, இல்லையா?" நாங்கள் மூவருமே அவரை உன்னிப்பாகக் கவனித்திருந்தோம்.

### வேலை செய்த படியே படித்து முடிக்கலாம்

"இதுவும் ஒரு நிறுவனம்தான். இங்கேயும் பணம் பண்ணாமல் இல்லை. 30ஆயிரம் பேருக்கு வேலையளிக்கும் நிறுவனம் இது. ஒவ்வொரு வருடமும் 200கோடி பவுண்டுகள் - பிராந்தியப் பொருளாதாரத்துக்கு இந்தப் பல்கலைக்கழகம் கொடுக்கிறது. உலகப் பெரும் பணக்காரர்களின் பிள்ளைகள் படிக்குமிடம் இது. ஆனால், இங்கே படிக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் வரும் ஒரு மாணவன் உணவு விடுதியில் வேலை செய்துகொண்டேனும் இங்கு படித்துவிட முடியும். அதற்கான வாய்ப்புகளையும் ஓர் ஓரத்தில் வைத்திருக்கிறார்கள். நான் முதன்முதலில் இங்கே வந்தபோது ஒரு பேராசிரியர் சொன்னார், 'பட்டதாரிகளை அல்ல. ஒவ்வொரு துறை வழியாகவும் உலகை ஆளும் தலைவர்களை நாம் இங்கே உருவாக்குகிறோம்!' இந்த எண்ணம் எத்தனை ஆசிரியர்களிடம் இருக்கிறது என்று எண்ணுகிறீர்கள்?"
அவருக்கு மூச்சிரைத்தது. "இங்கே அரச பள்ளிக்கூடங்கள் பிரமாதமாக இருக்கும். ஆனாலும், இங்குள்ள சமூகம் மாணவர்களுக்கு நாம் பள்ளிக்கூடங்களில் என்ன வசதியைக் கொடுக்கிறோம் என்பதோடு தங்களுடைய கடமை முடிந்துவிட்ட தாக நினைப்பதில்லை. மாணவர்கள் எப்படி வெளியே வருகிறார்கள் என்பதையும் ஆய்வுசெய்கிறது. அண்மையில் ஒரு செய்தி வாசித்தேன். அரசுப் பள்ளிக்கூடங்களுக்கும் தனியார் பள்ளிக்கூடங்களுக்கும் உள்ள வேறுபாடு சம்பந்தமான ஆய்வு முடிவு அது. பிரிட்டிஷ் அமைச்சரவை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்று ஒவ்வொரு துறையாக எடுத்துக்கொண்டு அவர்களில் எத்தனை பேர் அரச பள்ளிகளிலிருந்து வந்தவர்கள், எத்தனை பேர் அரச பள்ளிகளிலிருந்து வந்தவர்கள் என்று ஆய்வுசெய்திருக்கிறார்கள். தனியார் பள்ளிகளில் படித்து வந்தவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்டச் சரிபாதியை நெருங்குகிறது. தனியார் பள்ளிகளில் படிப்பவர்களின் எண்ணிக்கை இங்கே குறைவு. அப்படியிருக்க அரச துறைகளில் அரசுப் பள்ளிகளிலிருந்து வந்தவர்களின் விகிதாசாரம் குறைவதற்கு என்ன காரணம் என்று ஆய்வு நடப்பதாகச் சொல்கிறது அந்தச் செய்தி. இந்த அணுகுமுறை எவ்வளவு முக்கியம் பார்த்தீர்களா? நீங்கள் இதையெல்லாம் எழுத வேண்டும்." கனத்த மௌனத்துடன் பார்த்துக்கொண்டிருந்த எங்களுக்கு விடைகொடுத்தார் பேராசிரியர். மழை கொட்டிக்கொண்டிருந்தது.

நன்றி: தி ஹிந்து

# சபாநாயகருக்கு வந்த சோதனை!



கட்டுரை

ஸூடோ ஸ்வாமி

சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தேசிய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த முறைப்பாட்டில், அண்மைய சம்பவங்களின்போது சபாநாயகர் நடந்து கொண்ட விதம், சட்டத்துக்கு முரணானது என்னும் வகையில் குறிப்பிடப்பட்டி ருக்கிறது. குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்திருக்கும் அந்த அமைப்பின் மூன்று உறுப்பினர்கள், சபாநாயகரின் இந்த நடவடிக்கைகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவானவை எனச் சுட்டிக்காட்டுகின்றனர். சபாநாயகருடைய இந்த நகர்வுகள் குற்றமாக நிரூபிக்கப்படு மெனில் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனையைப் பெற்றுக்கொடுக்க கூடியவை என்கிறார்கள் முறைப்பாட்டாளர்கள்.

**முடிவுக்கு வராத குழப்பநிலை**

இலங்கையின் நாடாளுமன்றில் பெரும்பான்மை பெற்ற தலைமை அமைச்சர் யார் என்னும் பொது அறிவுக் கேள்விக்குச் சரியான விடை கிடைக்காத நிலை இப்போதும் தொடரவே செய்கிறது. கடந்த 26ஆம் திகதி முன்னிரவில் தொடங்கிய இந்தத் தொங்குநிலை, அரசமைப்பின் உதவியுடன் நாடாளுமன்றின் கதவுகள் இறுகச் சாத்தப்பட்டிருப்பதன் காரணமாக, எதிர்வரும் 14ஆம் திகதிக்கு அப்பாலும் நீடிக்கும் என்றே கருதப்படுகிறது. அரசமைப்பால் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி மகிந்த ராஜபக்ஷவைத் தலைமை அமைச்சராக நியமித்த அரச தலைவர் தரப்பினால், நாடாளுமன்றில் தமக்குரிய பெரும்பான்மையை நிரூபிப்பதில் இருக்கக்கூடிய நிச்சயமற்ற தன்மை, இந்த இழுபறியை முடிவுக்குக் கொண்டுவருவதைத் தாமதப்படுத்தியிருக்கிறது. (அவர்கள் நாடாளுமன்றத்தினைக் கூட்டுவதில் ஆர்வம் காட்டவில்லை) எனினும், நாடாளுமன்றில் பெரும்பான்மையை கொண்டிருப்பதை விடவும், தலைமை அமைச்சருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து வெற்றி காண்பதே, யார் தலைமை அமைச்சர் என்பதற்கான திடமான பதிலைத் தரும் என்கிறார்கள் அரசமைப்பு நிபுணர்கள். ஆனால், அது ஒன்றும் விரைவாக இடம்பெறக்கூடிய ஒன்றல்ல என்கிறார்கள் அரசியல் அனுபவசாலிகள்.

**குழப்பத்துக்கிடையில் கரு ஜெயசூரிய விடயம்**

நாடாளுமன்றைத் தற்காலிகமாகப் பூட்டி வைத்து விட்டு நடத்தப்படும் திருவிளையாடல்கள், உள்நாட்டிலும் அனைத்துலகிலும் கவனக்கலைப்பை நிகழ்த்தியுள்ள வேளையில், பரிதாபத்துடன் நோக்கப்படுகிறார் இலங்கையின் சபாநாயகர் கரு ஜெயசூரிய. நாட்டின் முக்கிய உயர் தீர்மானங்கள் எட்டப்படுகின்ற மன்றின் தலைமையாளராகவும், அரசமைப்பு சபையின் தலைவராகவும், நாட்டில் முன்னுரிமை வழங்கப்படும் குடிமக்க ளில் மூன்றாவது நிலையில் வைத்து மதிக்கப்படுகின்ற சபாநாயகர், எழுந்துள்ள குழப்ப நிலையைச் சுமூகப் படுத்துவதில் பங்களிப்பார் என்னும் கருதுகோளுடன் பலரும் அவரை அணுகியிருந்தனர். தொடருகின்ற முடக்க நிலையைக் கட்டுக்குள் கொண்டுவருவது நாடாளுமன்றைக் கூட்டுவதன் மூலமே என்று கருதும் உள்நாட்டு மற்றும் மேற்குலகத் தரப்பினர், சபாநாயகரிடமே முதலில் சரண் புகுந்தனர். எனினும் நாட்டின் அரசமைப்பு அவருடைய கைகளைக் கட்டிவைத்திருப்பது இப்போது புலப்பட்டிருக்கிறது.

19 ஆவது திருத்தத்தின் கீழ், அரச தலைவரினது அதிகாரங்கள் குறைக்கப்பட்டு அவை நாடாளுமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டிருப்பினும், நாடாளுமன்றினை ஒத்தி வைக்கும் அதிகாரம் அரச தலைவரிடமே காணப்படுகிறது. அதே போன்று மீண்டும் நாடாளுமன்றைக் கூட்டும் அதிகாரமும் அரச தலைவர் வசமே இருக்கிறது.

**ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றம்**

இலங்கை அரசமைப்பின் 70 ஆவது உறுப்புரையின் படி, நாடாளுமன்றை ஒத்தி வைக்கும் விவகாரம் அரச தலைவரைச் சார்ந்ததாகும். ஒத்திவைக்கப்படும் அறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்கு மேற்படாத வகையில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படலாம். கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை வெளியிடப்பட்ட 2094/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் படி, ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த ஒத்திவைப்பு, எதிர்வரும் 16ஆம் திகதி வரை என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலும், பின்னர் இரண்டு நாள்கள் முன்னகர்த்தி 14ம் திகதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமையே வெளியாகியிருக்கிறது. பின்னர் நாடாளுமன்று கலைக்கப்படுவதான அரச இதழில் அரச தலைவர் ஒப்பமிட்டிருந்தார்.

**கரு ஜெயசூரியவின் கையறு நிலை**

கடந்த 26ஆம் திகதி குழப்பநிலை தொடங்கிய பின் நாடாளுமன்றைத் தொடக்கி வைக்கும் நாள் தொடர்பில் வெவ் வேறான திகதிகள் உத்தியோகபூர்வமற்ற வகையில் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் பின்னர் 14ம் திகதியே அறுதியாகவும் உறுதியாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அப்போதைய சங்கடநிலையைச் சமாளிப்பதற்கு உதவ முடியாத சபாநாயகருக்குரிய கையறு நிலை எண்பிக்கப்பட்ட நிலையில், அவர் எடுத்த நிலைப்பாடுகள் கடந்த வாரத்தில் விவகாரமாகி யிருந்தன. நாடாளுமன்றத் தேர்தலின் மூலமாகவே தெரிவாகும் உறுப்பினரான சபாநாயகர், விடயங்களை நடுநிலையாகவே கையாளவேண்டும் என்பது எதிர்பார்ப்பாகும்.

எனினும் நடைமுறையில் உள்ள சிக்கலை இலகுபடுத்த எடுத்த நகர்வுகள், சபாநாயகர் நடுநிலைமையான நடைமுறைகளைப் பின்பற்றுகிறாரா? என்னும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தன. அரச தலைவரின் ஆதரவுடன் ஆளும் தரப்பாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் அணியினர், நாடாளுமன்றை உடனடியாகக் கூட்டுவது தொடர்பில் அலட்சியப் போக்கைக் காண்பித்து வந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டுத் தெரிவான சபாநாயகர் கரு ஜெயசூரிய, சில மென்நகர்வுகளை மேற்கொண்டிருந்தார். அந்த முன்னெடுப்புக்கள், குருதியானது தண்ணீரை விடத் தடிப்பானது என்னும் ஆங்கிலப் பழமொழியை நினைவூட்டத் தவறவில்லை.

**மகிந்தவை மதிக்காத அறிக்கைகள்!**

புதிய தலைமை அமைச்சராக மகிந்த பதவியேற்றுக்கொண்டமை தொடர்ந்த சூழலில் ரணிலின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பது சபாநாயகரின் முதன்மைக் கோரிக்கையாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியால் விடுக்கப்பட்ட எழுத்து மூல வேண்டுகையை அடுத்தே, சபாநாயகர் மேற்படி வேண்டுகோளை அரச தலைவரிடம் விடுத்திருந்தார். மகிந்த பதவியேற்றுக்கொண்டமை மற்றும் ரணில் பதவி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் சட்டமா அதிபரிடம் வேறு கேள்வி எழுப்பியிருந்தார் சபாநாயகர். அதன் பிற்பாடு, சர்ச்சைக்குரிய உள்ளடக்கங்களுடன் சபாநாயகருடைய இருவேறு அறிக்கைகள் கடந்த வாரத்தில் வெளிவந்திருந்தன. முதலில் வெளிவந்திருந்த 5ஆம் திகதிய அறிக்கை கொஞ்சம் காரசாரமாகவே அமைந்திருந்தது. புதிய குழுவினர் பெரும்பான்மையைநாடாளுமன்றில்நிரூபிக்கும் வரை பழைய நிலைமையையே தாம் அங்கீகரிப்பதாகச் சபாநாயகர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அத்தோடு நாடாளுமன்றை 7ஆம் திகதி கூட்டுவது தொடர்பில் அரச தலைவரால் தமக்கு அளிக்கப்பட்ட வாய்மூல வாக்குறுதி பின்பற்றப்படாதமை தொடர்பிலும், சபாநாயகர் அரச தலைவரைக் கடிந்திருந்தார். அன்றைய தினத்தில், சபாநாயகருடைய வாசஸ்தலத்துக்கு முன்னால் அவருடைய நிலைப்பாடு களைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்றும் இடம்பெற்றிருந்தது.சபாநாயகருடைய அடுத்த அறிக்கை கடந்த 7ஆம் திகதியன்று வெளிவந்திருந்தது. அந்த ஊடக அறிக்கையில், எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும்போது, பெரும்பான்மையைப் பரீட்சிக்கும் வாக்கெடுப்பை நடத்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

கட்சித் தலைவர்களுடனான கலந்துரையாடலை அடுத்தே தனது தீர்மானத்தை அவர் அறிவித்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் விடுத்த வேண்டுகோளை முன்னிட்டே சபாநாயகர் அத்தகைய தீர்மானத்தை எடுத்திருந்தார்.

**'ஆளும் தரப்பு' கடும் விமர்சனம்!**

26ஆம் திகதிக்குப் பின்னான ஊர் இரண்டுபட்ட நிலைவரத்தால் கொண்டாட்டம் அடைந்திருக்கும் தரப்பினர், சபாநாயகருடைய நகர்வுகளைக் கடுமையான விமர்சனத்துக்கு உட்படுத்தி வருகின்றனர். மகிந்தவுக்குத் தலைமை அமைச்சருடைய ஆசனத்தை ஒதுக்க சபாநாயகரால் தெரிவிக்கப்பட்ட மறுப்பு, ஒத்திவைக்கப்பட்ட தினத்துக்கு முன்பதாக நாடாளுமன்றைக் கூட்டுவதற்குச் சபாநாயகர் காட்டும் அவசரம், 14ஆம் திகதி வாக்கெடுப்பை நிகழ்த்துவதற்கான புறச்சூழ்நிலைகளை ஏற்படுத்திக்கொடுப்பதில் அவர் காட்டும் ஆர்வம் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்களை நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் உள்ள தமது அலுவலகத்தில் சந்தித்தமை போன்ற காரணங்களை முன்வைத்து அவர்கள் தமது விசனத்தை வெளியிட்டுள்ளனர். அரசமைப்பின் உள்ளடக்கத்துக்கு அமைவாக நாடாளுமன்றக் கதவுகள் தாழிடப்பட்டுள்ள நிலையில் சபாநாயகருடைய கோரிக்கைகள் மற்றும் நடவடிக்கைகள் அரசமைப்புக்கு முரணானவை, மோசடியானவை, பக்கச்சார்பானவை என்பதே அவர்களின் வாதமாகும். சபாநாயகரை மாற்றுவது தொடர்பில் தம்மிடம் தீர்மானம் எதுவும் இல்லை என்னும் நிலைப்பாட்டை கொண்டிருந்த ஆளும் தரப்பு, தொடர்ந்து அந்த தீர்மானத்தில் நீடிக்குமா? என்பது இப்போது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது.

**சபாநாயகருக்கு வந்துபோன வாய்ப்பு!**

எழுந்துள்ள அரசமைப்புக் குழப்ப நிலையைக் கையாள்வதற்குச் சபாநாயகர் முயற்சித்த வழிகள் தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் முற்றியிருக்கும் நிலையில், சபாநாயகருக்கு நீட்டப்பட்ட மற்றொரு வாய்ப்புத் தொடர்பில் திருவாய் மலர்ந்திருக்கிறார் அரச தலைவர். அந்த விவரத்தைக் கடந்த திங்கட்கிழமை பத்தரமுல்லையில் நடைபெற்ற மக்கள் மகிமைப் பேரணியில் வெளிப்படுத்தியிருந்தார் அவர். எட்டு மாதங்களுக்கு முன்பு, தலைமை அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்குமாறு கரு ஜெயசூரியவைத் தாம் அழைத்தது தொடர்பான விவரத்தையும் அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்ததையும் பகிரங்கப்படுத்தியிருந்தார் மைத்திரிபால சிறிசேன. ஐ.தே.க.வின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சவாலான ஒருவராகத் தாம் இருக்க விரும்பவில்லை எனக் கரு தமக்குத் தெரிவித்திருந்ததாகவும் அரச தலைவர் அங்கு குறிப்பிட்டிருந்தார்.

**நடு நிலைக்குரியவர் சபாநாயகர்**

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதித்தலைவராக மற்றும் தலைமைத்துவச் சபையின் தலைவராகப் பணியாற்றிய கரு ஜெயசூரிய, தற்போது சபாநாயகர் என்னும் ரீதியில் நடுநிலைமையை நிலைநாட்டுபவராகவே விளங்க வேண்டும். அரசமைப்பு தொடர்பாக நீடிக்கும் குழப்ப நிலையை முடிவுக்குக் கொண்டுவர அவர் எடுக்கக்கூடிய நகர்வுகள், பக்கச்சார்பானதாக நோக்கப்படுகின்றன.

அவை ஊழல் நடவடிக்கையாகக் கருதப்பட்டு முறைப்பா டும் செய்யப்பட்டிருக்கிறது. எனினும் ஜனநாயக விரும்பிகளும் நிலவுகின்ற தொங்குநிலையை விரைவில் சீராக்க விரும்பும் தரப்புக்களும் அவருடைய முன்னெடுப்புகளுக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். இந்த நிலையில், சுயாதீனமான சபாநாயகரைச் சோதனைக்குட்படுத்தாமல் பணியாற்ற வழியேற்படுத்துவதற்கு ஏதுவாக அரசமைப்பைத் திருத்த வேண்டியது உறைக்கும் வகையில் உரைக்கப்படுகிறது!




## வர்ணம் தீட்டுவோம்




## தொடர் மொழிக்கு ஒரு மொழி

1. தாய் தந்தையரை இழந்தவன் - **அநாதை**
2. முதியவர்கள் வாழும் இடம் - **ஆச்சிரமம்**
3. சுதந்திரமற்று வாழ்பவன் - **அடிமை**
4. கடவுள் இல்லை என நம்புபவன்- **நாத்திகன்**
5. வழக்கைத் தாக்கல் செய்பவன் **வாதி, வழக்காளி**
6. வழக்கில் குற்றம் சாட்டப்படுபவன்- **பிரதிவாதி**
7. சிறைத்தண்டனை பெற்றவன்- **கைதி**
8. பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர்- **நடத்துநர்**
9. வாகனத்தைச் செலுத்துபவர்- **சாரதி**
10. தேர்தலில் போட்டியிடுபவர்- **வேட்பாளர்**
11. தேர்தலில் வாக்களிப்பவர்- **வாக்காளர்**
12. வீண் செலவு செய்பவன்- **ஊதாரி**
13. மாநகர சபை ஒன்றின் தலைவர்- **மேயர், முதல்வர்**
14. கணவனை இழந்த பெண்- **விதவை**
15. மனைவியை இழந்த ஆண்- **தபுதாரன்**
16. திருமணம் செய்து கொள்ளத ஆண்- **பிரம்மச்சாரி**
17. திருமண வயது கடந்தும் திருமணம் ஆகாத பெண்- **முதிர்கன்னி**
18. கடற்கரையில் மீன்பிடித் தொழிலாளர் தங்கியிருக்கும் இடம்- **வாடி**
19. கோட்டையைச் சுற்றியுள்ள ஆழமான நீர்நிலை- அகழி
20. இல்லை என்று சொல்லாது பிறருக்குப் பொருளை அள்ளி வழங்குபவன்- **வள்ளல்**



## பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையை குறைப்போம்!

மனித வாழ்வை இலகுவாக்க அறிமுகமான பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையானது இன்று மனித வாழ்வின் இருப்பையே கேள்விக்குள்ளாக்கி நகரின் அழகையும், சுற்றுச் சூழல் சுகாதாரத்தையும் பாதிக்கும் பொருளாக மாறியுள்ளது. இந்தப் பிளாஸ்டிக் பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்க நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சில செயற்பாடுகள்.

பாடசாலைகளுக்கோ, அலுவலகங்களுக்கோ, அல்லது வைத்தியசாலைக்கோ, உணவுகளை எடுத்துச் செல்லும்போது 'லஞ்சீற்' பாவனையைத் தவிர்த்து சாப்பாட்டுப் பெட்டி, வாழை இலை என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

ஆன்மிக நிகழ்வுகளில் பிளாஸ்ரிக் பொலித்தீன் அலங்கார சோடனைகளைத் தவிர்த்து பாரம்பரிய அலங்கார சோடனைகளைப் பயன்படுத்துதல்

அரச, தனியார் நிறுவனங்களில் நிகழும் ஒன்றுகூடல்கள் ஒருங்கிணைப்பு நிகழ்வுகளில் பிளாஸ்ரிக் கப் பாவனையை நிறுத்துதல், தவிர்த்தல்

சிற்றுண்டிச் சாலைகளில் பிளாஸ்ரிக், கோப்பை , தட்டுகளில் உணவு வழங்குவதைத் தவிர்த்து வாழை இலை மற்றும் பீங்கான் தகரத் தட்டுகளைப் பயன்படுத்தலாம்.

பொது இடங்கள் (பூங்கா), வைத்தியசாலை போன்ற மக்கள் கூடும் இடங்களில் இவ்வகைக் கழிவுகள் சேகரிக்கும் தொட்டிகளை மக்களுக்கு இலகுவில் தெரியும்படியும் வைக்க வேண்டும்.

இறப்பு நிகழ்வை அறிவிக்கும் அல்லது கண்காட்சி போன்ற நிகழ்வுகளை அறிவிக்கும் விதமான பிளாஸ்ரிக் பதாகை களை வீதிகளில் கட்டுவரைத் தவிர்த்து துணி யாலான பாதாகையைப் பயன்படுத்துதல்.

குடிப்பதற்கு பாவிக்கு தண்ணீர் போத்தல்கள் கூடியளவு கண்ணாடிப் போத்தல்களாக இருக்க வேண்டும்.



## முட்டாள் அரசன்

ஓர் அரசன் மாறு வேடத்தில் நகர சோதனைக்காகச் சென்றார். அவருக்குப் பின்னால் சிறிது தொலைவில் மெய்க்காப்பாளர்கள் சென்று கொண்டிருந்தனர். நகரத்துக்கு வெளியே ஒரு வீதியில் அரசன் போய்க் கொண்டிருக்கும்பொழுது கடிநாய் ஒன்று ஓடி வந்து அரசனைக் கடித்துக் குதறியது. அரசனுடைய கூக்குரலைக் கேட்டு மெய்க்காப்பாளர்கள் ஓடி வந்து அரசனைக் காப்பாற்ற முயன்றார்கள். அதற்குள் அரசன் இட்ட கூச்சலைக் கேட்டு வீட்டுக்கார்ரன் ஓடிவந்து நாயைப் பிடித்துக் கட்டிப்போட்டான். மாறுவேடத்தில் வந்தவன் அரசன் என்பதை அறிந்ததும் வீட்டுக்காரன் பயந்துபோய் நின்று கொண்டி ருந்தான். மெய்க்காப்பாளர்கள் கட்டி வைக்கப்பட்ட நாயைக் கொல்வ தற்காகச் சென்றார்கள்.

அரசன் அவர்களைத் தடுத்து "நீங்கள் அதைக் கொல்ல வேண்டாம். நாயின் சொந்தக்காரனே அதைக் கொல்ல வேண்டும். அவன் அந்த நாயை எப்படிக் கொல்கிறானோ அதேபோல் அவனையும் கொல்ல வேண்டும்" என்று உத்தரவிட்டான். கலக்கமடைந்த நாயின் உரிமையாளன் அரசர் கூறியதை எண்ண சிந்தனை வயப்பட்டான். "இரவில் நகர சோதனைக்கு வந்த அரசன் தகுந்த பாதுகாப்போடு வராமல், நாய் இருப்பது தெரியாமல் வந்து கடிபட்டு இப்பொழுது என்னுடைய உயிரையும் அழிக்கப் போகிறானே" என்று வருத்தத்து டன் யோசனை செய்தான். மறுநாள் அரசன் அவனை அரண்மனைக்கு அழைத்தார். அரண்மனைக்கு வந்த அவனிடம் "நாயை என்ன செய்தாய்?" என்று அரசன் கேட்டான்.

நாயின்சொந்தக்காரனோ "மகாராஜா! அதைக் கொன்று விட்டேன்" என்றான். அதற்கு அரசனும் எப்படிக் கொன்றாய்?" என்று கேட்டான்.

"அதன் வாலைப்பிடித்து ஒரே வீச்சிலே பாறையில் வீசிக் கொன்றேன்" என்றான். இப்போது நாயின் சொந்தக்காரன் பதற்றமின்றி ஆசுவாசமாகப்.பதில் கூறினான்.நாயின் உரிமையாளர் கூறிய பதிலைக் கேட்ட அரசன் பதற்றமடைந்தான். "நாய்க்கு வால் உண்டு என்பதால் அதை அவன் கூறிய படியே கொன்றுவிட்டான். ஆனால் நான் இட்ட கட்டளையின் படி நாயின் உரிமையாளரை அதுவிதமே கொலை செய்ய முடியாது. அவனுக்கு வால் இல்லையே" என எண்ணி தான் எடுத்த முட்டாள்த்தனமான தவறான முடிவை தன்னிலையில் உணர்ந்து கொண்டான். தலை குனிந்து நின்றான்.

## மணல் வீடு கட்டுவோம்

கோடி கோடி பணத்தினால்
மாடி வீடு கட்டுவர்
கோடி கோடி மணலினால்
வீடு நாங்கள் கட்டினோம்!

செங்கல் தேவையில்லையே
சிமெந்தும் தேவையில்லையே
எங்கள் வீட்டைக் கட்டிட
இரும்பும் தேவையில்லையே!

ஐந்து நிமிட நேரத்தில்
அழகு மிக்க வீட்டினைச்
சந்து பொந்து இன்றியே
குந்தி நாங்கள் கட்டினோம்!

கடலின் அலைகள் வீட்டினை
கரைத்திட்டாலும் பயமில்லை
உடனே புதிய வீட்டினை
உவகையோடு கட்டுவோம்!

ஏடு படிக்கும் யாவரும்
கூடி வீடு கட்டினோம்
வீடு உடைந்து போகுமுன்
ஓடி வந்து பாருங்கள்!







# இன்றைய நாள்

**மேடம்:** பொது இடங்களில் நிதானத்துடன் பேசுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை தாமத கதியில் இயங்கும். இலாபம் இருக்கும். குடும்பத்திற் கான செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** உறவினர் உதவி கண்டு மனம் நெகிழ்வீர்கள். விடாமுயற்சியால் முக்கிய பணி ஒன்றை நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். இலாபம் திருப்திகரமாக இருக்கும்.

**மிதுனம்:** யாரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சுமாரான அளவில் பணவரவு இருக்கும்.

**கடகம்:** சிலர் உதவுவது போல பாசாங்கு செய்வர். சுயகௌரவத்தை பாதுகாக்க முயல்வீர்கள். தொழிலில் நிலு வைப் பணி நிறைவேற்றுவது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** உங்கள் வாழ்வில் கூடுதல் வளம்பெற புதிய வாய்ப்பு உருவாகும். தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

**கன்னி:** நண்பரின் உதவியால் நன்மை பெறுவீர்கள். மனதில் இருந்த குழப்பம் விலகும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். இலாபம் பன்மடங்கு உயரும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவர்.

**துலாம்:** சிலரது விமர்சனத்தால் மன வருத்தம் ஏற்படலாம். இலட்சியங்களை உணர்ந்து பணிபுரிவது நல்லது. தொழில், வியாபாரத்தில் முன்னேற கூடுதல் மூலதனம் தேவைப்படும். லாபம் சீராக இருக்கும்.

**விருச்சிகம்:** மனஉறுதியுடன் செயற்பட்டு முன்னேறுவீர்கள். தொழில் அபிவிருத்திக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். லாபம் உயரும். பெண்கள் உடல்நலனில் அக்கறை கொள்வர்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் அக்கறையுடன் பணிபுரிவது அவசியம்.

**மகரம்:** சவால்களை திறமையுடன் எதிர்கொள்வீர்கள். பலரும் வியந்து பார்க்கும் விதத்தில் வளர்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரம் செழித்து வளரும்.

**கும்பம்:** மதிநுட்பத்துடன் பணிபுரிந்து வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** அறிமுகமில்லாதவரால் வீண்சிரமம் ஏற்படலாம். தொழில்; வியாபாரத்தில் ஏற்படும். குளறுபடியை தாமதமின்றி சரிசெய்வது நல்லது. இலாபம் ஓரளவு இருக்கும்.



# ‘2.0’ விரைவில் வெளியிடு ‘தமிழ் ரொக்கர்ஸ்’ அறிவிப்பு!

சங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த், அக்ஷய் குமார், ஏமி ஜாக்சன் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் ‘2.0’. ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைத்துள்ளார். ‘எந்திரன்’ படத்தின் இரண்டாம் பாகமாக ரூ.543 கோடியில் இந்தப் படம் உருவாகி இருக்கிறது.


அண்மையில் வெளியாகிய இந்த படத்தின் முன்னோட்டக் காணொளி நல்ல வரவேற்புகங கிடைத்திருக்கும் நிலையில், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் படம் எதிர்வரும் 29ஆம் திகதி வெளியாக இருக்கிறது.

இந்த நிலையில், 2.0 படம் விரைவில் தமிழ்ராக்கர்ஸில் வெளியாகும் என்று சினிமாப் படங்களைத் திருட்டுத்தனமாக வெளியிடும் ‘தமிழ்ராக்கர்ஸ்’ கீச்சகப் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

முன்னதாக விஜய் நடிப்பில் வெளியாகித் திரையரங்குகளில் வெற்றிகரமாகஓடிக்கொண்டிருக்கும் ‘சர்கார்’ படத்தையும் படம் வெளியான அன்றே வெளியிட்டுப் படக்குழுவுக்கு அதிர்ச்சியளித்தது. இந்த நிலையில், 2.0 படமும் இணையதளத்தில் வெளியாகும் என்று அறிவித்துள்ளதால் சினிமா வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.











தலைமை அமைச்சராகியும் நாடாளுமன்றம் செல்லாத தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச வரலாற்றில் இடம் பிடித்தார். இலங்கை ஆசியாவின் அதிசயம் என்று சும்மாவா சொன்னார்கள்!!

தூங்கி எழும்ப நாடாளுமன்றம் இல்லாத நாடு எது?

**இலங்கை**





நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது









## சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | | 3 | | | 1 | 8 | |
| | | | | 8 | | | 6 | |
| 8 | | 7 | | | 4 | 3 | | |
| | | 6 | | 2 | | | 9 | |
| | 9 | | | 4 | | | 3 | |
| | 4 | | | 7 | | 2 | | |
| | | 1 | 7 | | | 6 | | 3 |
| | 3 | | | 1 | | | | |
| | 7 | 4 | | | 9 | | 1 | 2 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 6 | 4 | 1 | 9 | 5 | 8 | 7 |
| 4 | 8 | 7 | 5 | 2 | 3 | 9 | 1 | 6 |
| 5 | 1 | 9 | 8 | 6 | 7 | 4 | 3 | 2 |
| 3 | 7 | 4 | 2 | 8 | 6 | 1 | 9 | 5 |
| 8 | 9 | 1 | 7 | 4 | 5 | 6 | 2 | 3 |
| 6 | 2 | 5 | 3 | 9 | 1 | 7 | 4 | 8 |
| 1 | 5 | 8 | 6 | 3 | 4 | 2 | 7 | 9 |
| 9 | 6 | 3 | 1 | 7 | 2 | 8 | 5 | 4 |
| 7 | 4 | 2 | 9 | 5 | 8 | 3 | 6 | 1 |

## இது புதுசு





பெண்களுக்கான புதிய காலணி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 990 ரூபா முதல் விற்பனைசெய் யப்படுகின்றன.



## முகத்தைப் பட்டுப்போல் மென்மையாக்கும் இயற்கை அழகுக் குறிப்புகள்!


முகம்மற்றும்மேனிஅழகுக்குக்கடலைபருப்புகால்கிலோ, பாசிபயறுகால் கிலோ, ஆவாரம்பூகாயவைத்தது100கிராம்எனமூன்றையும்அரைத்துச் சவர்காரத்துக்குப்பதிலாகப்பயன்படுத்தினால்பயன் கிடைக்கும்.


முகப்பரு, தழும்புமாறுவதற்குப்புதினாசாறு2கரண்டி, எலுமிச்சைசாறு ஒருகரண்டி, பயத்தம்பருப்புமா ஆகிவற்றைக்கலந்துமுகத்தில்பூசி வரத்தழும்புமாறும்.

வெள்ளரிச்சாறு இரண்டு கரண்டி, துளசிச்சாறு இரண்டு கரண்டி, புதினாச்சாறு அரை கரண்டி, எலுமிச்சம் பழசாறு அரைகரண்டிஎடுத்துஅனைத்தையும்நன்றாகக்கலக்கி முகத்தில்தேய்த்து15நிமிடம்கழித்துகழுவினால்முகம் பட்டுப்போல் மென்மையாக இருக்கும்.

உலர்ந்தசருமத்துக்குகரட்டைநன்றாகஅரைத்துஒரு கரண்டி தேன் கலந்து 20 நிமிடம் முகத்தில் பூசி பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

பாலைக்காய்ச்சும்போதுஅதிலிருந்துவரும்ஆவியில் முகத்தைக் காட்டி அந்த வியர்வையை துடைக்காமல் காயவிட்டு, அரை மணி நேரம் கழித்து முகம் கழுவி னால் முகம் பளபளப்பாகும்.





## வாய்த்துர்நாற்றத்துக்கு சிறந்தது அப்பிள்

ஒவ்வொருமுறைஉணவுசாப்பிட்டபின்பும்ஒருஅப்பிள்சாப்பிட வேண்டும். ஏனெனில் அப்பிளில் உள்ள இயற்கை என்சைம் கள் பூண்டு மற்றும் வெங்காயத்தில் உள்ள சல்பரின் வீரி யத்தைக் குறைக்கும்.

இதனால் உங்களுக்கு கிடைப்பது துர்நாற்றமில்லாத நறுமணமானவாசனையாகும். எனவேசாப்பிட்டு முடித்தபின் ஒரு அப்பிளோ அல்லது அப்பிள் ஜூஸோ குடிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.

## உருளைக்கிழங்கு வடை

பாண் துண்டுகள்: 10
வறுத்த ரவை : அரை கப்
அரிசி மா : இரு மேசைக்கரண்டி
உப்பு, எண்ணெய்: தேவைக்கு
கரட் துருவல் : இரண்டு மேசைக்கரண்டி
வெங்காயம்: 2
இஞ்சித் துருவல் : ஒரு கரண்டி
பச்சை மிளகாய் : 2
மிளகாய்த் தூள் : ஒரு கரண்டி
கறிவேப்பிலை, கொத்தமல்லித்தழை சிறிது
உருளைக் கிழங்கு: 2

**செய்முறை :**

வெங்காயம், ப. மிளகாய், கொத்தமல்லியைப் பொடியாக நறுக்கிக் கொள்ள வும். உருளைக்கிழங்கை வேக வைத்து மசித்துக் கொள்ளவும். ஒரு வாயகன்ற பாத்திரத்தில் பாண்துண்டுகளைப் போட்டு உதிர்த்துக்கொள்ளுங்கள். இதனுடன் வறுத்த ரவை, அரிசிமா, உப்பு, கரட் துருவல், வெங்காயம், ப. மிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி, இஞ்சித்துருவல், மிளகாய் தூள், வேக வைத்த உருளைக்கிழங்கு சேர்த்து நன்றாக பிசைந்து கொள்ளவும். தேவைப்பட்டால் தண்ணீர் தெளித்துக் கொள்ளலாம்.

கடாயை அடுப்பில் வைத்துப் பொரிப்பதற்குத் தேவையான எண்ணெய் ஊற்றி சூடானதும் மாவை வடையாகத் தட்டி, எண்ணெயில் போட்டுப் பொரித்தெடுங்கள். உருளைக்கிழங்கு வடை தயார்.

## ஓட்ஸை தினமும் சாப்பிடலாமா?



★ ஓட்ஸ் ஒரு முழுத் தானிய உணவுப் பொருள். உடல்எடையைக்குறைக்கநினைக்கும்பலரின் முதல் தேர்வாக இருப்பது ஓட்ஸ். உண்மையிலேயேஓட்ஸ்உடல்எடையைகுறைக்கஉதவுமா?

★ ஓட்ஸில் புரதம், மாங்கனீஸ், ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள், விற்றமின் ஈ, செலினியம், பீனோலிக் அமிலங்கள், பைட்டிக் அமிலம் போன்றவை உள்ளன.

★ ஓட்ஸில் கரையக்கூடிய நார்ச்சத்துக்கள் அதிகம் உள்ளதால், இதுகொழுப்பின்அளவைக்குறைக்கஉதவும். அதாவது, ஓட்ஸில்உள்ளபீட்டாக்ளுக்கன்கொழுப்புஅளவைக் குறைக்கும்.

★ ஓட்ஸில்உள்ளவிற்றமின் ஈ, ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் மற்றும்க்ளுட்டமைன்போன்றவைதசைநார்களைவேகமாக உருவாக்க உதவும்.

★ ஓட்ஸில்உள்ளஅதிகளவான ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் அரிப்பு, அழற்சி மற்றும் குருதி அழுத்தத்தைக் குறைக்க உதவும்.

★ தினமும்ஓட்ஸ்சாப்பிடுவது உடலின்மெட்டபாலிசத்தை மேம்படுத்தஉதவும். உடல்எடையைக்குறைக்கசெய்யும்.

★ ஓட்ஸில்உள்ளநார்ச்சத்து, குடலின்முறையானசெயற்பாட்டைப் பராமரிக்க உதவும் மற்றும் சமிபாட்டுப் பிரச்சினைகளைத் தடுக்கும்.

★ ஓட்ஸ் குருதியில்சர்க்கரை அளவைநிலையாகவைத்திருக்கும்.

## ஷவரில் பரவும் பக்றீரியாக்கள்



வீட்டில் இருக்கும் ஷவரில் பக்றீரியாக்கள் வளர்கின்றன என்று சொன்னால் எல்லோருக்கும் ஆச்சரியமாகவும், அதிர்ச்சியாகவும் இருக்கும்.

குளியலறையில் இருக்கும் ஷவர் தலை குனிந்தப்படிதான் இருக்கிறது.

அதனால்அதன் ஓரத்தில்எப்போதும்சிறிதுதண்ணீர் தேங்கி இருக்கும்.

ஒரு இடத்தில் தொடர்ந்து ஈரப்பதம் இருக்கும்போது அங்கு கிருமிகள் உண்டாகும்.

எனவே ஷவரில் குளிப்பவராக இருந்தால், ஷவரை திறந்து சில நிமிடங்கள் நீரை வெளியேற்றிவிட்டு பின்னர் குளிக்க ஆரம்பியுங்கள்.

ஷவரைத் திறந்ததும், முகத்தை நேராக காண்பித்தப்படி குளிக்கத் தொடங்குபவர்களுக்கு வாய், மூக்கு வழியாக கிருமிகள் பரவும் ஆபத்து இருப்பதாக ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

## மிளகில் இருக்கும் சூட்சுமம்



✦ ஒரே ஒரு மிளகு போதும் உண்ணும் உணவு சுவையாக!
✦ இரண்டு மிளகெடுத்து அதனோடு இரண்டொரு ஆடாதோடை இலை சேர்த்தால் இருமல், சளி காணாமல் போகும்.
✦ மூன்று மிளகெடுத்து வெங்காயம் சேர்த்தால் கேசம்கூட முசுமுசுவென்று வளரும்.
✦ நான்குமிளகும்அதனோடுசுக்கும்சிறிதுகலந்தால்நெஞ்சுவலி சொல்லாமல் போகும்.
✦ ஐந்து மிளகும், சுக்கும் திப்பிலியும், இணைந்தால் கோழை ஓடியே போகும்.
✦ ஆறு மிளகெடுத்து அதனோடு பெருஞ்சீரகம் (சோம்பு) சேர்த்து இடித்துஉண்ண, மூலநோய்வந்தசுவடின்றிதானேமறையும்.
✦ ஏழு மிளகை பொடி செய்து நெய் கலந்து அன்னம் பிசைந்து உண்டால் நல்ல பசி எடுக்கும். புண்ணும் தொண்டைக்கட்டும் விட்டுப் போகும்.
✦ எட்டுமிளகோடுபெருங்காயம்சேர்த்துக்கொண்டால்வாந்திகூட எட்டி நிற்கும்.
✦ ஒன்பது மிளகும் துளசியும், ஒவ்வாமையைத் (அலர்ஜி) துரத்தியடிக்கும்.
✦ ஆறேழு மிளகைவாயில்போட்டுக்கடித்துமென்றுவிட்டு, பகைவன் வீட்டிலும் பயமேயின்றி விருந்துண்ணலாம்.

# எப்போ வி(மு)டியும்?

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)

1993 ஆம் ஆண்டு காலமது. அவ்வப்போது ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுக்கள் கேட்பதும், இனந்தெரியாதோர் சூட்டுக்கு இலக்காகி வீதியோரங்களில் கிடப்பதும் தினப் பூசையாகி, பழகிப் போயிருந்தது. பொழுது விடிந்தால் யாருடைய பிணம் எங்கு கிடைக்கும் எனத் தெரியாது. கிழக்குச் சூரியன் குருதிக் கறைகளிலே விழிக்கின்ற அபசகாலம். இராணுவத்தினரதும் பொலிசாரினதும் சுற்றிவளைப்புக்களில் கைது செய்யப்படுபவர்கள் தலையாட்டி முன் நிறுத்தப்பட்டு தரம் பிரிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுவார்கள். இவர்களில் பலர் காணாமலாக்கப்பட்டு நூற்றுக்கணக்கானவர்கள் பூசா முகாம் வரை கொண்டு செல்லப்பட்டனர். அதுபோலவே தமிழர் வாழ் நிலமெங்கும் படைகளின் ஆதிக்கமும் பரவிப் படர்ந்திருந்தது.

வழமையாக விடியும் காலைப் பொழுது என்ன புதினத்தைக் காட்டப் போகிறது எனக் கண்விழித்த வந்தாறுமூலை மக்களை அதிகாலை 5.30 இக்கு பலநூறு படைகளும் சில நூறு பொலிசாரும் சூழ்ந்தனர். அதிகாலை அமைதியை குலைத்து அனைவர் செவிகளுக்கும் அழையா விருந்தாளியாக வந்திருந்த வேட்டோசைகளே. சிற்றன்னை வீட்டிலிருந்த விடலைப் பையன் மகேந்திரனும் படையினர் சுற்றிவளைத்து சாய்த்துச் சென்ற அப்பாவிகள் பட்டியலில் ஒருவனாக்கப்பட்டான். காலங்கள் யாருடைய கட்டுக்கும் அடங்காது முன்னேறிச் சென்று வருடங்களைக் கடத்தின. போராளிப் பாசறையில் பயிற்சி பெற்றதாகவும் பொலிஸார் மீதான தாக்குதலுக்குத் திட்டம் தீட்டியதாகவும் இரு குற்றச்சாட்டுக்களை வெறும் பத்தொன்பதே வயதான சிறுபயல் மீது திட்டமிட்டுத் திணித்தனர். அதனால் கடந்த 25 வருடங்களாகத் தொடர்கிறது அவனது சிறைவாழ்வு. அதுவும் ஆயுள் தண்டனைக் கைதியென்ற அடைமொழியுடன்.



“என்ன மகேந்திரன்… ரிலிசாகிப் போனாக் கலியாணம் கட்டுறதுதானே… நம்மளக் கண்டால் கதைக்கிறது தானே..” காவலர் விஜேசிங்கவின் கேள்விகளை காதுகள் ஏற்க மறந்து. அவன் கடந்த கால நினைவுகளுள் கரைகிறான். “எப்படியாவது கஸ்ரப்பட்டுச் சம்பாதித்து தங்கச்சியை நன்றாகப் படிக்க வைத்துப் பெரியவளாக்கி அம்மாவுக்கு ஓர் அழகான வீடு கட்டி அதில் அம்மா, அப்பா, தங்கச்சியென்று சந்தோசமாக வாழ வேண்டும்” இது தான் தங்கையிடம் அடிக்கடி கூறும் தமையனின் எதிர்காலக் கனவு. “இன்று நான் சிறையேறி அம்மா, அப்பா என இருவரையும் இழந்து அன்புத் தங்கையும் வாழவெட்டியாகப் பிள்ளையுடன் வந்து திக்கற்று நின்கிறாள். இவ்வளவும் நடந்தேறியதன் பிறகான விடுதலை எனக்கு எவற்றை மீளத் தரப்போகிறது. உயிரிழந்த பெற்றோரையா? இல்லை இழந்த என் இளமைக்காலத்தையா- இல்லை தங்கையின் இனிய வாழ்க்கையையா? இன்றைய மாற்றங்கள் நாளைய தலைவர்களான சந்தியையேனும் தலைநிமிர்ந்து வாழ வழிசமைக்கப்படும். வற்புறுத்தலாக வரவழைத்துக் கொண்ட சிரிப்பை உரித்துச் சிறைக்காவலரை நோக்குகின்றான் மகேந்திரன்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 548

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | | | | ■ | |
| 11 | 12 | | ■ | 13 | | 14 | |
| 15 | | ■ | 16 | | ■ | | ■ |
| | ■ | 17 | | ■ | 18 | | 19 |
| ■ | 20 | | | 21 | | ■ | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:.....................................................
முழுமையான தபால் விலாசம்: ..........................................
.......................................................................
கையொப்பம்:.............................................................

**இடமிருந்து வலம்**

1. சீதையை அடைய இராமர் முறித்தது
5. தாய்
7. சுவடு
8. கூறுதல்
10. ஆடை தயாரிப்பதற்கு உதவும்
11. சூரியன்
13. பால் கெட்டுப்போவதை இப்படிக் கூறுவர்
15. ரசனை கொள்
16. கோப்பிசத்தில் அமைவது
17. தாண்டு
18. தகைமை உடைய தன்மை
20. கைகூப்பு
22. மலையகத் தலைநகர்
23. கதாநாயகனின் எதிரி

**மேலிருந்து கீழ்**

1. இந்தியாவில் ஓர் இடம்
2. ஒரு திக்கின் சுருக்கம்
3. சதிபதி
4. கிருஷ்ணனின் தங்கை
5. நெஞ்சு
6. பாய்தல்
9. அமருவது இதில்
12. முனிவர்
14. ஆங்கிலத்தில் ‘கொமிசன்’
16. வீட்டின் ஹோல்
17. ஒரு மிருகம்
18. ஒரு தோல்வாத்தியம்
19. திறமை
20. விழி
21. ஒன்று சேர்

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 546 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) முகஸ்துதி (5) கவி (7) தர (8) வித்துடல் (10) லாம்பு (12) திணிவு (13) திகைப்பு (16) வனப்பு (17) நான் (18) குடம்பி (19) மேதினி (20) வலி (21) சகடை (23) ஆகுதி (24) சாவு

**மேலிருந்து கீழ்**
(1) முதலாளி (2) கரம் (3) துவி (4) தித்திப்பு (5) கடவு (6) வில் (9) துணிவு (11) புதினம் (14) கைப்பிசகு (15) தன்னிறைவு (16) வடலி (17) நாதி (18) குவளை (19) மேடை (22)கதி

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 546இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
வேலு முருகமூர்த்தி,
திருக்கேதீஸ்வரம், கோயில்,
மன்னார்

**2 ஆம் பரிசு**
ந.பாலகுமார்,
சிவன்வீதி,
காரைநகர்

**3 ஆம் பரிசு**
கி.சந்திரசேகரசர்மா,
அருளம்பலம் ஒழுங்கை,
கல்வியங்காடு

**4 ஆம் பரிசு**
அ.அறிவரசி,
இல.16/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
ஐ.முருகையா,
மடத்தடி, பலாலி வீதி,
உரும்பிராய்.

**பாராட்டுப் பெறுவோர்**

கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

மயில்வாகனம் சிவராசா,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

திருமதி தி.புவனம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

**சொற்சிலம்பம் போட்டி இல.548**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (21.11.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.548 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 25.11.2018ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 546 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.



## மேடம்

செவ்வாய், புதன், சந்திரனால் அனுகூலம் உண்டு. சமூகத்தில் பெற்ற நற்பெயரைப் பாதுகாத்திடுவீர்கள். உடன்பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். குடும்பத் தேவை ஓரளவு நிறைவேறும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற நல்ல ஆலோசனை சொல்வீர்கள். மனைவியின் அன்பு பாசம் நெகிழ்ச்சியைத் தரும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க புதிய வழி பிறக்கும். பணி யாளர்கள் எளிதாக பணி இலக்கு நிறைவேற்றுவர். வெளியூர்ப் பயணம் இனிய அனுபவம் தரும். பெண்கள் விரும்பிய பொருள்கள் வாங்கி மகிழ்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

## இடபம்

சூரியன், ராகு, குரு, சந்திரன் ராஜ யோக பலன் தருவர். பழகுபவர்களிடம் இதமாகப் பேசுவீர்கள். சமூக நிகழ்வு புதிய அனுபவம் தரும். புதிய வீடு, வாகனம் விரும்பிய படி வாங்கலாம். பிள்ளைகளின் ஆர்வமிகு செயல்களை இதமாகச் சரி செய்யவும். பூர்வ சொத்தில் ஓரளவு வருமானம் கிடைக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். மனைவியின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளைச் சமயோசிதமாகச் சரி செய்யவும். பணி யாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெறுகின்ற முயற்சியில் ஈடுபடுவர். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

## மிதுனம்

சுக்கிரன், புதன், சந்திரனால் நன்மை உண்டாகும். செயல்களில் புதிய பரிம ளிப்பு ஏற்படும். சமூகப்பணியில் ஈடுபாடு கொள்வீர்கள். வெளியூர்ப் பயணம் அதிக ரிக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் பெறுவர். பகைவரால் உருவான தொல்லை விலகும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்திணக்கம் கொள்வார்.
தொழில் போட்டி குறையும். உற்பத்தி விற்பனை செழித்துப் பணசேமிப்புக்கூடும். பணியாளர்கள் கூடுதல்வேலைவாய்ப்பை ஏற்றுக்கொள்வர். பெண்கள் புத்தாடை நகை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து பரிசு பாராட்டுப் பெறுவர்.

## கடகம்

சுக்கிரன், குரு, சனீஸ்வரர் அதிர்ஷ்ட பலன்களைத் தருவர். தாய்வழி உறவினர்களின் அன்பு, பாசம் கிடைத்து மனதில் தைரியம் வளரும். குடும்பத் தேவை தாராள பணச்செலவில் நிறைவேறும். வீடு வாகனத்தில் மனம் விரும்பிய மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நண்பர்களின் உதவியால் முன்னேற்றம் காண்பர். நோய், தொந்தரவு குறைந்து உடல் ஆரோக்கியம் கூடும். மனைவியின் ஆர்வமிகு செயல்கள் குடும்பத்திற்கு நன்மையைத் தரும். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி செய்வீர்கள். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர்.

## சிங்கம்

சூரியன், சுக்கிரன், புதன், கேது அளப்பரிய நற்பலன் வழங்குவர். தெளிந்த மனதுடன் பணிபுரிவீர்கள். நன்மையும் பணவரவும் அதிகரிக்கும். உடன்பிறந்தவர்கள் அதிக அன்பு, பாசம் கொள்வர். பிள்ளைகள் படிப்பு, வேலைத்திறனில் மேம்படுவர். பூர்வ சொத்தில் பணவரவு அதிகரிக்கும். நோய் தொந்தரவு விலகும். மனைவி கருத்திணக்கம் கொள்வார். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். தொழில் வியாபாரம் புதியவர்களின் ஆதரவில் செழித்து வளரும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும். பெண்கள் கணவரின் அன்பில் மகிழ்ச்சிகர வாழ்வு பெறுவர்.

## கன்னி

ராகு, சுக்கிரன், செவ்வாய் அனு கூலபலன் தருவர். வாழ்வில் முன்னேற புதிய வாய்ப்பு உருவாகும். குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தியாகும். சிலர் வசதியான வீட்டுக்கு இடம் மாறுவர். வாகனப்பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளை களின் செயல்கள் சிறப்பாக அமையும். உடல் ஆரோக்கி யம் பலம் பெறும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் பேச்சும் செயலும் மகிழ்ச்சியைத் தரும். உறவினர்கள் மதிப்பும் மரி யாதையும் தருவர். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளைத் தாமதமின்றிச் சரி செய்யவும். பணியாளர்கள் நிர்வா கத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

# இந்த வாரம்

**11.11.2018 முதல் 17.11.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## துலாம்

குரு, சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரன் அனுகூலஅமர்வில்உள்ளனர். மனதில் கலை இரசனை அதிகரிக்கும். பணிகளில் புதிய பரிமளிப்பு ஏற்படும். பிள்ளை களின் தேவையை தாராளமாக நிறைவேற்று வீர்கள். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். எதிர் மனப்பாங்கு உள்ளவரும் நல் அன்பு பாராட்டுவர். உற வினர்களின் வருகை வீட்டில் மகிழ்ச்சியைத் தரும். மனைவியின் நல்ல பணிகளைப் பாராட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் தொழில்நுட்பம் அறிந்து எளிதாகப் பணிபுரிவர். பெண்கள் தாய் வீட்டுக்குத் தேவையான உதவியை வழங்குவர்.

## விருச்சிகம்

சுக்கிரன், கேது, சந்திரனால் நன்மை வந்து சேரும். சமூக நிகழ்வுகள் வருத்தம்தரலாம். நண்பரின் ஆலோசனை மனக்குழப்பம் தீர உதவும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகள் பெற்றோர் சொல்லை வேதமெனக் கருதுவர். உடல் ஆரோக்கியம் பலம்பெற சத்தான உணவை உண்பீர்கள். கடனில் ஒரு பகு தியைச் செலுத்துவீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் அதிக அன்பு பாராட்டுவர். குடும்பத்தேவை பெருமளவில் பூர்த்தியாகும். தொழில் வியாபா ரத்தில் பணவரவு அளவுடன் இருக்கும். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிவர்.

## தனுசு

சூரியன், சுக்கிரன், செவ்வாய் வியத்தகு அளவில் நற்பலன் வழங்கு வர். தாயின் அன்பும் ஆசியும் கிடைக்கும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். அறிமுக மில்லாதவருக்கு வீடு வாகனத்தில் இடம் தரக்கூடாது. பிள்ளைகள் அறிவாற்றல், செயல் திறனில் மேம்படுவர். நிர்ப்பந்த கடனில் ஒருபகுதியைச் செலுத்து வீர்கள்.
விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் யோகத்தினால் குடும்பத்தின் எதிர்கால வாழ்வு சிறப்பாக உருவாகும். வீட்டு உபயோகப்பொருள் வாங்கு வீர்கள். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு.

## மகரம்

சூரியன், புதன், குரு அதிர்ஷ்டகரமான பலன் வழங்குவர். தாயின் அன்பு ஆசி கிடைக்கும். புதிய அணுகுமுறையால் பணிகளை நிறைவேற்றுவீர்கள். சிலர் புதிய வீடு, பணியிடம் மாறுவர். பிள்ளைகள் உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். எதிரியால் இருந்த தொந்தரவு குறையும். மனைவியிடம் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றிச் சரி செய்யவும். பணியாளர்களுக்கு கடன் கிடைக்கும். சுற்றுலாப் பயணம் இனிய அனுபவம் தரும். பெண்கள் தாய்வீட்டு உதவியைக் கேட்டுப் பெறுவர். மாண வர்கள் அதிக முயற்சியால் உரிய மதிப்பெண் பெறுவர்.

## கும்பம்

சுக்கிரன், ராகு, புதன், சனீஸ்வரரால் அளப்பரிய நன்மை கிடைக்கும். மனதில் ஆன்மிக சிந்தனை வளரும். பணியில் இருந்த குறுக்கீடு விலகும். உடன்பிறந்தவர் அதிக அன்பு பாராட்டுவர். வாக னப் பயன்பாடு அதிகரிக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் மேம்படுவர். மனைவியின் அன்பு பாசம் மனதில் உத்வேகம் தரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற பெரிய அளவில் உதவி கிடைக்கும். தொழிலில் போட்டி குறையும். பணியாளர்கள் வாழ்வில் முன்னேறுவர். பெண்கள் உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து பரிசு பாராட்டும் பெறுவர். மாணவர்கள் நன்கு படித்து நற்பெயர் பெறுவர்.

## மீனம்

குரு, சுக்கிரன், கேது, சந்திரனால் சுப பலன் உண்டாகும். நண்புரின் உதவி மனதில் நம்பிக்கையை வளர்க்கும். தாய்வழி உறவினர்களின் செயல்புரியாத புதிர் போல இருக்கும். பூர்வ சொத்தில் ஓரளவு பணவரவு கிடைக்கும். பிள்ளைகள் பெற்றோரின் எண்ணங்களை உணர்ந்து நடந்து கொள்வர். உடல் ஆரோக்கியம் மேம்படுவதற்குச் சத்தான உணவும், சீரான ஓய்வும் அவசியம். மனைவியின் ஆலோ சனை குடும்பத்தின் எதிர்கால நலனுக்கு உதவும். வெளியூர்ப் பயணத்தில் பாதுகாப்பு அவசியம். தொழில் வியாபாரம் புதியவர்களின் ஆதரவில் செழித்து வளரும். பணி யாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து நற்பெயர் பெறுவர்.

கட்டுரை

வி.அருணாசலம்

# ஈழத்தமிழருக்கு இருவேறு தமிழீழங்கள்...?

கடந்த மாதத்தில் 'தமிழீழத்திலும்' நாடு கடந்த 'தமிழீழத்திலும்' பல நிகழ்வுகள் நடந்தேறியிருக்கின்றன. வடக்கு மாகாண சபையின் இறுதிய மர்வு, முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்டார வன்னியன், கைலாச வன்னியன் ஆகியோரின் நினைவாக நிறுவப்பட்ட 55வீடுகளை அமைச்சர் சஜித் பிரேமதாச மக்களிடம்கையளித்தது,குமரப்பாபுலேந்திரன் நினைவாக ரெலோ தலைமையில் ஒரு தூபியும் ஏனைய இயக்கங்களில் இறந்தவர்களுக்காக மற்றொரு தூபியையும் அமைக்கும் பணியில் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் இறங்கி வெட்டிய அத்திபாரத்தை எதிர்ப்பாளர்கள் மூடியது, வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயைப் புலம்பெயர் தமிழர்கள் ஐரோப்பாவுக்கு அழைத்தமை, நாடு கடந்ததமிழீழத்தலைமைஅமைச்சரான உருத்திர குமாரனை அந்தப் பதவியில் இருந்த விலக்கியமை, அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிப் பேசுவதற்கு இப்போதுநேரம்போதாது என அரசதலைவர் எழுந்து சென்றமை போன்ற எல்லாமே ஈழத் தமிழர் விடயத்தில் நடந்தேறிய முக்கிய நிகழ்வுகளாகும்.

களநிலமை இவ்வாறு இருக்க, இருவேறு தமிழீழம் பற்றிப் பேசப்படுகின்றது. 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பிரகாரம் தொடக்கி வைக்கப்பட்ட 'தமிழீழம்' என்ற விடயம் இன்று வரைத் தமிழரை ஆட்டிப் படைக்கின்ற மர்மப் பொருளாகவே இருந்து வருகிறது. இது பலரைக் காவு கொண்டுள்ளது. சிலரைச்செல்வந்தராக்கியது.பழிவாங்கப்பட்டவர்களும்,நன்மைஅடைந்தவர்களும், இறுதிவரை தமிழீழம் பற்றியே பேசுகின்றனர். வடக்கு, கிழக்கில் தப்பி வாழுகின்ற தமிழ் மக்களைப் பொறுத்தவரை முள்ளிவாய்க்கால்நினைவேந்தல்,மாவீரர்நாள், சுற்றிவளைப்புப் படுகொலைகள், விமானத் தாக்குதல்கள் என தமது குடும்பத்தில் தமிழீழத்தின் பால் இழந்த உறவுகளை நினைவுகூர விட்டாலே போதும் என்ற நிலைக்கு வந்து விட்டார்கள்.

**அரசியல் தஞ்சம் புகுந்தவர்களின் அரசியல் வாழ்வு**

புலம்பெயர் தமிழர்கள் உள்நாட்டில் பிரச்சினைகள் உண்டு என்று காட்டுவதன் மூலம் தாம் போய்ச் சேர்ந்த நாடுகளில் அரசியல் தஞ்சத்தைப் பெற்றுக்கொண்டனர். 2009ஆம் ஆண்டுகளின் பின் உள்நாட்டு நிலைமை மாறிவிட்டதால் வருடா வருடம் அவர்கள் இலங்கைக்கு வருவதையும்அந்தப்பயணத்தைஒருசுற்றுலா நிகழ்வாகவும், தேர்த் திருவிழா, ஆட்டிறைச்சி,கள்ளு,கூழ்,தல்செவனக்கொண்டாட்டம் என முடித்துச் சிங்கள இராணுவ உயரதிகாரிகளுடன் ஆங்கிலத்தில் கதைத்து,"சிங்களவன்சிங்களவன்தான்" என்று பாராட்டும் நிலையும், "சாதாரண சிங்களவன்தான்பிரச்சினை,உயர்குடும்பத்தைச்சேர்ந்த படித்த சிங்களவன் தங்களுடன்டீசன்ராகநடக்கிறான்"என்றுகதை சொல்லும் அளவுக்கு நிலமை மாறிவிட்டது.



நாடுகடந்ததமிழீழச்செயற்பாட்டில்இறங்கிய முக்கிய நபர்கள் சிலர் இலங்கைக்கு வருவதற்குப் பயப்படுகின்றனர். ஒவ்வொரு வருடமும் முன்பு வந்து போனவர்களுக்குள் ஒளித்துக்கொண்டு சிலர் வந்து பார்த்துவிட்டுஇரண்டுநாட்டுக்குடியுரிமைகளுக்குப்பதிவுசெய்து, பெரும்தொகையானபணத்தைஇலங்கைக்குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்குச் செலுத்துகின்றனர். தாம் பிறந்த நாட்டுக்கு வந்து போவதற்கு அல்லது வாடகைக்கு இருப்பதற்கு பணம் கட்டுவதாகவே இது அர்த்தப்படும். வடக்கு, கிழக்கில்தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தமது பிள்ளைகளைக் காணமலாக்கியும், சிறைச்சாலைகளில் வாடவிட்டும், உறவுகளை இழந்தும், ஊனமுற்றவர்களாக இழுத்துக்கொண்டும்,வாழ்வாதாரத்துக்குவளர்த்தகன்றுத்தாச்சிப்பசுமாட்டைஇறைச்சிக்குக்கொடுத்தும், லீசிங் கடன் தொல்லை உயிர்மாய்ப்புக்கள், சாராயக் கடைகள், போதைப் பொருள் பாவனை, வாள்வெட்டு, வழிப்பறிஎனப்பலதுயரங்களைஅனுபவிக்கும் அளவுக்கு வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் துன்பப்படவில்லை.

வடக்கு, கிழக்கில் இவ்வளவு பிரச்சினைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின்பிரச்சினைகளைக்கண்டுகொள்ளாமலேயே இங்குள்ளதமிழ்த்தலைவர்கள் ஒருவரின் சுயசரிதையை மற்றவர் பத்திரிகைகளில் போடும் அளவுக்கு நிலமை மாறிவிட்டது.

**தமிழீழத்தவர்களின் நிலையும் நாடுகடந்த தமிழீழமும்**

உண்மைத் தமிழீழத்தின் நிலை இவ்வாறு இருக்கும்போது நாடுகடந்த இடங்களில் தமிழீழ அரசு ஒன்று இயங்கி வருவதாக அறியப்படுகின்றது. இந்த அரசுக்கும் வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கும் எந்த உறவும் இல்லை. அதே போல தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்தல்கள் மூலம் தெரிவான தமிழ்த் தலைவர்களுக்கும், நாடு கடந்த தமிழீழ நிர்வாகத்துக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. இந்த அமைப்பு களத்தில் இறங்கி வேலை செய்ததாகஇல்லை.பொதுவாக வெளிநாட்டில் வாழுகின்ற ஒருவர், தனது உள்நாட்டில் வாழும் குடும்பத்தவர்களின்படிப்பு,தொழில் முயற்சி, திருமணம், வீடு கட்டுதல் போன்ற பல்வேறு வழிகளில் உதவி செய்து அவர்களை நம்பிக்கையுடன்வாழவைத்துள்ளனர்.இத்தகையஓர் அணுகுமுறையைத் தமது மக்களின் மேம்பாட்டுக்காக நாடு கடந்த தமிழீழ நிர்வாகம் செய்யதாக இல்லை. தற்போது பதவிவிலக்கப்பட்டுள்ள நாடுகடந்ததமிழீழத்தின் தலைமை அமைச்சர் உருத்திரகுமாரன்2010ஆம்ஆண்டின்பின்அமெரிக்காவை விட்டு வெளியேறவில்லை என்றும், அமைப்பு எதிர்பார்த்தவாறு எதுவும் நடக்கவில்லை என்றும் ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இவையே அங்குள்ள முரண்பாடுகளாகக்கூறப்படுகின்றன.வெறும்அறிக்கை விடுவதால் மட்டும் எதை யும் சாதித்துவிட முடியாது என்பதை நாடுகடந்த தமிழீழ நிர்வாகம் கடந்த எட்டு ஆண்டுகளாக் வெளிக்காட்டி வருகின்றது. நாடுகடந்த தமிழீழத்தின் சின்னம் புலிக்கொடி. அதில் யார் அங்கம் வகிக்கலாம் என்றால் புலிகளின் ஆதரவாளர்கள் மட்டுமே.



**ஏனைய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் நேரடியாக உதவுகிறார்கள்**

புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற ஏனைய இயக்கங்களைச் சார்ந்தவர்கள் இந்தத் தமிழீழத்தவரால் துடக்காகப் பார்க்கப்படுகின்றனர். இவ்வாறு வாழ்கின்ற புலிகள் அல்லாத அமைப்பைச் சார்ந்தவர்கள் நேரடியாக வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற மக்களுக்குப் பல உதவிகளைச் செய்து வருகின்றனர். நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து உதவுகின்றனர். இத்தகைய எதையும் நாடுக்கடந்து நிற்கும் தமிழீழ நிர்வாகம் செய்யவில்லை. இந்த அரசியலில் ஈடுபடாத இன்னோர் புலம்பெயர் தரப்பினர் உள்நாட்டில் பெரிய கோவில்களைக் கட்டுவதிலும் அவற்றை அகலிப்பதிலும், நீட்டுவதிலும், உயர்த்துவதிலும்அக்கறைசெலுத்தி வருகின்றனர். ஆனால், இந்தக் கோவில்களில் சுவாமி காவுவதற்கு, துப்புரவு செய்வதற்குக் கூட ஆட்களில்லை.

**தமிழீழத்துக்காக அனைவரும் இணைந்தே போராடியிருந்தனர் ஆனால், நாடு கடந்த தமிழீழம் அப்படியானதல்ல**

இலங்கையில்தமிழீழம்என்றகுறிக்கோளுடன் விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய பல இயக்கங்களும் போராடின. அதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த போராளிகள் இடம்பெற்றனர். 2009ஆம் ஆண்டில் போர் முடிவடைந்த பின் உருவாக்கப்பட்ட நாடு கடந்த தமிழீழம்என்றஅமைப்புவிடுதலைப்புலிகளை மட்டும் அடையாளப்படுத்துவதாக உள்ளது. இன்று வரை பல நாடுகளில் பயங்கரவாத அமைப்பு என விடுதலைப் புலிகளைத் தடை செய்திருக்கும் உலக நாடுகளில் புலிக்கொடியுடன் தம்மை அடையாளப்படுத்தியதால், இந்த அமைப்புப்பெரிய பின்னடைவைச்சந்தித்தது. இஸ்ரேலியர்கள் தமது தாயக பூமியை விட்டு வெளியேறி அமெரிக்காவில் ஓர் நிழல் அரசையும்மேசாட் என்ற உளவு அமைப்பையும் உருவாக்கியிருந்தனர்.அத்தகையஓர் எண்ணத்துடனேயே1983ஆம்ஆண்டின் பின்பான காலத்தில் ஆயுதப் போராட்டத்தில்ஈடுபட்ட அமைப்புக்கள் தமிழ் நாட்டைப் பின்தளமாக வைத்திருந்தன. தலைமை அமைச்சர் இந்திரா காந்தியின் காலத்தில் இலங்கையின் அரச தலைவரான ஜே.ஆரைத் தனது கட்டுப்பாட்டில்கொண்டுவருவதற்காகத் தமிழ்ப்போராளிகளைஅவர்பயன்படுத்தினார். ஆனால், 1987ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டபோது இந்த நிலை தலைகீழாக மாறியிருந்தது.

**உருத்திரகுமார் போன்றவர்கள் புத்தி பூர்வமாகச் செயற்படவில்லை**

இறுதிப் போரின்போது விடுதலைப் புலிகளின்முக்கியஉறுப்பினர்களைப்பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன்அமெரிக்காபொறுப்பேற்பதற்கான ஏற்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் அது இறுதி நேரத்தில் சாத்தியப்படவில்லை என்பதைத் தெரிந்து கொள்ளஉருத்திரகுமாரன் போன்றவர்கள் புலிப்போராளிகளை இராணுவம் பொறுப்பேற்கும் இடத்தில் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் நிற்பதற்கானஏற்பாடுகளைச்செய்திருந்தால் அவர்களின் காணொலிகளும் ஒப்பமிட்ட வலுவான ஆவணங்களும் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கையில் இருந்திருக்கும். வெறும் சனல்4 ஆதாரங்களைக் காட்டி அழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. அந்த வகையில் உருத்திரகுமார் போன்றவர்கள் புத்திபூர்வமாகச் செயற்படவில்லை. தமிழரில் அரசியலில் ஈடுபடுபவர்களில் பெரும்பாலானவர்கள் சட்டத்தரணிகளாக இருக்கின்றபோதிலும் சட்டத்தை வலுவாக்குவதற்குத் தேவையான ஆதாரங்களை அவர்கள் வைத்திருப்பதில்லை. இதுவரை இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களின் பெயர்ப்பட்டியல் உள்நாட்டுத் தமிழர்களிடமோ, அரசியல்வாதிகளிடமோ,நாடுகடந்ததமிழீழஅமைப்பிடமோ இருக்காது. ஆனால், இலங்கைஅரசதரவுகளின்படி, விடுதலைப் புலிகளால் 9ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதற்கான ஆதாரம் தம்மிடம் உள்ளதாக அண்மையில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கருத்து வெளியிட்டிருந்தார்.

தமிழர்கள் ஒரு தமிழீழத்தை அடைவதற்கு 1976ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை போராடினர். அது சாத்தியப்படவில்லை. 2010ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 'நாடுகடந்த தமிழீழ அமைப்பு' ஆர்ப்பாட்டம் செய்வதையும், மனுக்கையளிப்பதையும்மட்டுமேசெய்ய முடிந்தது. அதன் மூலம் தமிழருக்கு இருந்த இருவேறு தமிழீழங்களும் கனவாகின.

விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களான கருணா அம்மான் 'துரோகி' எனவும், கே.பி. 'சூழ் நிலைக் கைதி' எனவும் வர்ணிக்கப்படுகின்றனர்.இத்தகையஒரு வேறுபட்ட பாத்திரங்களைஎதிர்காலத்தில் இலங்கை அரசுடன் சேர்ந்து உருத்திரகுமாரனும் வகிக்க மாட்டார் என்று கூறுவதற்கில்லை.

உருத்திரகுமாரனுக்குச்சொந்தமானதிருநெல்வேலி வீடு பாழடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

அவர் தனது இறுதிக் காலத்தைத் தனது சொந்தவீட்டில்கழிக்கப்போகிறேன்என்று இலங்கை அரசைக்கேட்டுக்கொண்டால் இலங்கை அரசு ஒருபோதும் அதைநிராகரிக்கப் போவதில்லை. அதை ஒரு துரும்பாகமாற்றிஅவரைவைத்தேஎஞ்சியுள்ள புலிகளின் பன்னாட்டுத் தொடர்புகளை இலங்கை ஆட்சியாளர்கள் கையாள முனைவர்.

கட்டுரை

நடராஜன் ஹரன்

# மழைக் காலத்தில் மருத்துவம் பேணுவோம்



கடந்த வருடத்தைப்போல் இந்த வருடமும் பருவ மழை பெய்யத் தொடங்கியிருக்கிறது. உச்சபட்ச வெயிலை இந்த வருடக் கோடை காலம் நம் மீது உமிழ்ந்துவிடைபெற்றுள்ளது. இப்போது அதற்கு பரிகாரம் செய்வதுபோல் இயற்கை இதமான பொழுதை நமக்கு வழங்குகிறது. எங்கும் மழைவெள்ளம் இந்த மழை காலத்தில் தான் அதிகமாக நோய்கள் நம்மை விரைவாகத் தாக்குகின்றன. ஆகவே மழைக காலத்தில்முடிந்தவரைநாம்கவனமாக இருக்கவேண்டும்.

**மழைக்காலத்தில் நோய்கள் எளிதில் பரவுகின்றன**

குளிர், மழைக்காலங்களில்எளிதில்பரவுவதுவைரஸ் தொற்றுக்கிருமிகள்தான். கோடை காலத்தில் வருவதை விட, தடிமன், காய்ச்சல் போன்றவை குளிர் காலத்தில்சட்டென்றுதாக்கிவிடும். குளிர்காலங்களில் முடிந்தவரை வெதுவெதுப்பான சூழ்நிலையில் இருப்பதுஅவசியம். ஒருவரால், அவரின்எதிர்ப்புசக்தியைப் பொறுத்துகுளிரைத்தாங்கமுடியும். ஆனால், குளிரால் தொற்றும் தொற்றுக்கிருமியை சாதாரணமாக ஒதுக்கிவிடமுடியாது. கோடைகாலத்தைவிட, மழைக்





காலம், குளிர்காலத்தில்தான்தொற்றுக் கிருமிகள் எளிதில் பரவும். சுத்தம் இல்லாத குடிநீர் மூலம் வாந்தி, வயிற்றோட்டம், காய்ச்சல், மஞ்சள் காமாலை ஆகிய நோய்கள் ஏற்பட அதிகவாய்ப்புள்ளது. இதுகுழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரையும் தாக்கும். ஆகையால் முடிந்த வரை நன்றாகக் கொதிக்க வைத்துஆறியநீரைமட்டுமேஅனைவரும் குடிக்கவேண்டி யது அவசியம். குழந்தைகளுக்கு மழைக் காலத்தில் கதகதப்பானஆடைகளைஅணிவிக்கவேண்டும். ஊர் எங்கும்தேங்கி இருக்கும்நீர்சாக்கடைபோல் மாறிவிடுகின்றது. அந்தச்சாக்கடைநீரில்நடந்துசெல்கிறோம். வெளியில் இருந்து வீட்டுக் உள்ளே வரும் முன்புநன்றாகக்கால்களைக்கழுவிவிட்டுவீட்டுக்குள் செல்லவும். பாதணிகளைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்

**நுளம்புகள் இனம்பெருவதைத் தவிர்க்க வேண்டும்**

மழையால் மழை நீர் வீட்டைச்சுற்றி தேங்கிருக்கும். அதில் உருவாகும் நுளம்புகள் மூலம் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, மூளைக்காய்ச்சல், யானைக் கால் ஆகிய நோய்கள் வரலாம். மாலை ஐந்து, ஆறு மணிக்குள் வீட்டு ஜன்னல், கதவுகளை மூடிவிடவும். இதனால்அதிகமானநுளம்புகள்வீட்டுக்குள்வராமல் தடுக்கலாம். முடிந்தவரை நுளம்பு வலைக்குள் உறங்கவேண்டும். பழகவும். காய்ச்சல், இருமல்ஏற்படும் போது மருத்துவரிடம் சென்று தகுந்த மருந்துகளை எடுத்துக் கொள்ளலாம். சரியாகிவிடும் என்று வீட்டிலேயே ஏதேனும் மாத்திரை போட்டுக் கொள்வதைத் தவிர்க்கவும். தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாள்கள் காய்ச்சல் நீடிக்கும் பட்சத்தில் குருதிப் பரிசோதனை செய்து என்ன கிருமி தாக்கியுள்ளது என்பதைத்தெரிந்துகொண்டு, அதற்குத்தகுந்தபடிசிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

**பாதுகாப்பும் ஆரோக்கிய வாழ்வும்**

பாடசாலை, அலுவலகங்களுக்குச் செல்பவர்கள் கொதித்துஆறியதண்ணீரைக்கொண்டுசென்றுகுடித்தால், மழைக் கால நோயில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். வீட்டுக்கழிவறைகள் மற்றும் வெளியில்பயன்படுத்தும்கழிவறைகள்சுத்தமாகஇருந்தால் மட்டுமே பயன்படுத்தவும். உணவு சாப்பிடும் முன்பு கட்டாயம் கைகழுவி விட்டுச் சாப்பிடுவது நல்லது.

மழைக்காலத்தில்நாம்சாப்பிடும்உணவில், இனிப்பு அதிகம் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. இரவு தூங்குவதற்கு முன், பாலில் மஞ்சள் தூள், மிளகுத்தூள், பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடுவது நல்லது. கண்டிப்பாக மழைக் காலத்தில் நம் உணவுப் பதார்த்தங்களில், மிளகுப்பொடியைச் சேர்த்துச் சமைத்துச் சாப்பிடுவது நல்லது. சிலருக்குச்சளி, இருமல்இருந்தாலும், விற்றமின் 'சி' சத்துப் பயனளிக்கும். மின் தடையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நமது நாட்டில் மின்சாரம் மழை நேரங்களில் அதிகமாகவே தடைப்படும் ஆகையால் முன்னதாகவே டோர்ச் லைட், கைபேசிகளுக்குமின்னூட்டிவைப்பதுநலம்.

**பழங்கள் சிறந்த உணவு**

பழங்களேஎன்றும்எந்தக்காலத்திலும் சிறந்த உணவு. உப்பு உணவுகள்உடலில்நீரைத் தங்கச் செய்யும், நோயை கூட்டும், எனவே அதனைத் தவிருங்கள்.

அதிக அரிசியைத் தவிர்த்து கடலை, பருப்பு வகைகளை எடுத்துக் கொள்ளுங்கள். சிவப்பு அரிசி, பழுப்பு அரிசி, ஓட்ஸ், பார்லி இவைசிறந்தன. பூண்டினை உணவில் சேருங்கள். பாலுக்குப் பதிலாக தயிர் மற்றும் பாதாம் எடுத்துக் கொள்ளலாம். புளியின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும். பச்சைக் காய்கறிகளை விட வேக வைத்த காய்கள் இந்தக் காலத்தில் சிறந்தன.

உங்கள் பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் இந்த பழக்கத்தினை ஏற்படுத்துங்கள்.

**நோய்களில் இருந்து தற்காப்பு**

லெப்டோஸ்பைரோஸிஸ்எனப்படும்கிருமிப் பாதிப்பும் சுகாதாரமற்ற நீரினாலேயே ஏற்படுகின்றன. மூளைக் காய்ச்சல், கல்லீரல் பாதிப்பு, சிறுநீரகப் பாதிப்பு என அனைத்து பாதிப்பினையும்இதுஏற்படுத்தும். இருமல், நெஞ்சு வலி, உமிழ் நீரில் குருதி வருதல் ஆகியஅறிகுறிகள்இருப்பின்உடனடிமருத்துவரை அணுகவும்.


அடிக்கடி முகத்தினை தொட்டுக் கொண்டே இருந்தால் வைரஸ் கிருமிகள் வாய், கண், மூக்குபோன்றஅனைத்துவழிகளிலும்உடலினுள் சென்று விடும். எனவே அடிக்கடி முகத்தைத் தொடுவதைத் தவிர்க்கவும். கைகளைச் சவர்க்காரம் கொண்டு கழுவுவதே முதல் உடல் நல பாதுகாப்பு முறையாகக் கூறப்படு கின்றது. எனவே உணவு உண்ணும் முன்பாக ஒவ்வொரு முறையும் சவர்க்காரம் கொண்டு கை கழுவவும். அதே போன்று சமைக்கும் முன்பும் சவர்க்காரம் கொண்டு கை கழுவவும்.

**அவதானமாக இருப்போம்**

வீதிஓரங்களில்இருக்கும்கடைகளில்சாப்பிடுவது சில ஆண்களுக்கு அவசியப்படுகின்றது. இது இயல்பாகவே பலருக்கு விருப்பம். ஆனால் தண்ணீரும், காய்கறிகளும் இந்தக் கடைகளில் சுத்தமாக இருப்பது மழை காலத்தில் மேலும் அரிது. வயிற்றுப் போக்கு, வாந்தி எனக் கிருமிகளின் பாதிப்பால்அநேகர்பாதிக்கப்படுகின்றனர். இவை ஏற்படும்பட்சத்தில்தவிர்ப்புமுறைக்காகமருத்துவ ஆலோசனைபெறவும். தண்ணீரில்நனைந்தபடி நடப்பது சந்தோசம்தான். கணக்கற்ற சரும வியாதிகள் காலுடன் வீட்டுக்கு வந்து விடும். எனவே மழை நீரில் நடந்து நடந்து நோயை வரவேற்காதீர்கள். மழைகக் காலத்தில் நோயின்றி வாழ்வதும். அதற்காக அவதானமாக இருப்பதும் அனைவருக்கும் ஆரோக்கியமளிக்கும்.

> மழையால் மழை நீர் வீட்டை சுற்றி தேங்கிருக்கும் அதில் உருவாகும் நுளம்புகள் மூலம் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா, மூளைக்காய்ச்சல், யானைக்கால் ஆகிய நோய்கள் வரலாம். மாலை ஐந்து, ஆறு மணிக்குள் வீட்டு ஜன்னல், கதவுகளை மூடிவிடவும். இதனால் அதிகமான நுளம்புகள் வீட்டுக்குள் வராமல் தடுக்கலாம். முடிந்த வரை நுளம்பு வலைக்குள் உறங்கவேண்டும்.




Velvet
sandalwood & venivel
for soft & radiant skin
100 g
பொலிவான மென்மையான சருமத்திற்கு
வெல்வட் சந்தனம் மற்றும் மரமஞ்சள்
பாரம்பரியம் தொட்டு பெண்களின் சரும அழகை மெருகூட்டி வரும்
சந்தனம் மற்றும் மரமஞ்சளின் குணநலன்கள் கொண்ட
புதிய வெல்வட் இப்போது ஹைட்ரோசொஃப்ட் டெக்னொலஜி உடன்.
உங்கள் சருமத்தின் ஈரப்பதனை தக்க வைத்து
பொலிவான மென்மையான சருமத்தை தரும்.
ரூ. 60/-
NEXAS


www.emami.com
emami
emami GOLD
டர்மரிக் ஸ்கின் கிரீம்
24 கரட் தங்கத்துடன்
கண்களை மயக்கும் பொலிவான, சிகப்பழகான சருமத்திற்கு
தங்கத்துகள்கள்
சருமச்சுருக்கத்தினை குறைத்து தங்கநிறப் பொலிவினை பெற்றுத்தருகின்றது.
மஞ்சள்
சருமத்தினை சுத்தம் செய்து கரும்புள்ளிகள் மற்றும் தழும்புகளை நீக்குகின்றது.
சந்தனம்
முகப்பருக்கள் ஏற்படுவதை தடுக்கின்றது.
குங்குமம்
மிருதுவான சருமத்தினை பெற்றுத்தருகின்றது.
அதிமதுரம்
சருமத்தின் பொலிவு மற்றும் பிரகாசத்தினை அதிகரிக்கின்றது.
NEW
emami GOLD
Turmeric Skin Cream
with 24k Gold
NET 1.01 FL.OZ (30ml)
தங்கநிறப் பொலிவும் பிரகாசமான தோற்றமும்
30ml - Rs.300/-



# சர்ச்சை மன்னன் கோக்லி



விளையாட்டு

பிரகாஸ்

இந்திய வீரர்களைப் பிடிக்காத ரசிகர்கள் இந்தியாவில் இருக்கத்தேவையில்லை'என்றுதெரிவித்துசர்ச்சையில் சிக்கியுள்ளார்இந்தியஅணியின்தலைவர்விராட்கோக்லி.

"விராட் கோக்லி தனது பிறந்த நாளை முன்னிட்டு புதிய 'அப்ஸ்' ஒன்றை வெளியிட்டு இருந்தார். அதில் ஒரு ரசிகர் பதிவிட்ட கருத்தில், "விராட் கோக்லி மீது அளவுக்கு அதிகமான நம்பிக்கையும், நல்ல எண்ணமும் ரசிகர்கள் வைத்தி ருக்கிறார்கள். எனக்குத் தெரிந்து அவரிடம் சிறப்பான திறமை இருப்பதாகத் தெரிய வில்லை.நான்இந்தியவீரர்கள்துடுப்பெடுத்தாடுவதைரசிப்பதைக்காட்டிலும்,இங்கிலாந்து வீரர்கள், ஆஸ்திரேலிய வீரர்கள் துடுப்பெடுத்தாடுவதை ரசித்துப் பார்ப்பேன்" என்று சாடி யிருந்தார்.

அவருக்குப்பதிலடிகொடுத்துகாணொளியைவெளியிட்டகோக்லி, "இந்தியவீரர்களைவிரும்பாமல், வெளிநாட்டு வீரர்களை விரும்பும் ரசிகர்கள் இந்தியாவில் வசிக்கத் தேவையில்லை' என்று கருத்துத் தெரிவித்தார். இந்தக் கருத்து ரசிகர்கள், நெட்டிசன்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சர்ச்சை ஏற்பட்டு அடுத்த சில நாள்களில் கோக்லி மற்றொரு சர்ச்சையிலும் சிக்கியுள்ளார். ஐ.பி.எல். தொடர் தொடர்பில் தெரிவித்த கருத்தே கோக்லிக்கு மீண்டும் ஒரு எதிர்ப்பலையை ஏற்ப டுத்தியுள்ளது. "2019ஆம்ஆண்டுநடைபெறவுள்ளஐ.பி.எல்.தொடரில்இந்தியஅணியிலுள்ள முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட வேண்டும். இங்கிலாந்தில் நடைபெறவுள்ளஉலகக்கிண்ணத்தொடரைக்கருத்தில்கொண்டுஇந்தமுடிவைஎடுக்க அனைவரும்முன்வரவேண்டும்" என்றுகோக்லிதெரிவித்திருந்தார். வேகப்பந்து வீச்சாளர்கள் இலகுவில் காயமடையக் கூடியவர்கள். இதனால் ஓர் அணித் தலைவர் என்ற ரீதியில் கோக்லியின் கோரிக்கை நியாயமானது. ஆனால் அணித் தலைவராகவும் இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் என்ற ரீதியிலும் தானும் ஐ.பி.எல். தொடரைப் புறக்கணிக்காமல் வேகப்பந்து வீச்சாளர்களை மட்டும் விலகுமாறு கோருவது என்ன நியாயம் என்று கேள்வி எழுப்புகின்றனர் சமூக வலைத்தள வாசிகள்.

# மறுசீரமைப்பில் பஞ்சாப் அணி

அடுத்தவருடம்நடைபெறவுள்ளஐ.பி.எல். தொடருக்காக உச்சக்கட்டவேகத்தில்தயா ராகிவருகிறதுகிங்ஸ்லெவன்பஞ்சாப். இந்தத்தொடருக்காகஅந்தஅணிமுழுமையான மறுசீரமைப்புப் பணியில் ஈடுபட்டு வருகிறது.

பஞ்சாப் அணியின் பயிற்சியாளர், துணைப் பயிற்சியாளர்கள், பல வீரர்கள் என்று எக்கச் சக்கமானோரைபஞ்சாப் அணியில் இருந்து விடுவித்துள்ளார் அந்த அணியின் உரிமையா ளர் ஜிந்தா. மீண்டும் புதிதாக பஞ்சாப் அணியை சீரமைப்புச் செய்யவுள்ளேன் என்றும் அவர் அறிவித்துள்ளார் அவர். இதுவரை நடந்துள்ள தொடர்களில் ஒன்றில்கூட பஞ்சாப் அணி கிண் ணம் வெல்லவில்லை. இதனால் அடுத்த வருடம் அணியைக் கிண்ணம் வெல்ல வைப்பதற்கா கவே இந்த முயற்சி என்றும் குறிப்பிட்டுள்ளார் ஜிந்தா.

# இந்தியா என்றால் பயமா?



இந்தியஅணிஆஸ்திரேலியாவுக்குசுற்றுப்பயணம் மேற்கொண்டுவிளையாடவுள்ளநிலையில், தடை விதிக்கப்பட்டிருக்கும் வீரர்களான சிமித், வோர் ணர், பான்குரொப்ட் ஆகியோரை மீண்டும் அணிக் குள் கொண்டுவருவதற்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைதீர்மானித்துள்ளதுஎன்றுசெய்திகள்வெளியா கியுள்ளன.

ஆஸ்திரேலிய அணி அண்மையில் தென்னாபிரிக் காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. இந்தத் தொடரில் ஆஸ்திரேலியாவை அடக்கி வலு வானஆதிக்கம்செலுத்தியதுதென்னாபிரிக்கஅணி. இதனால் தென்னாபிரிக்காவின் ஆதிக்கத்தைத் தடுக்கடெஸ்ட்ஆட்டமொன்றில்பந்தைத்திட்டமிட்டுச் சேதப்படுத்தும் சதியைக் கையிலெடுத்தது ஆஸ்தி ரேலிய அணி. உபதலைவர் வோர்ணர் திட்டம் வகுக்க, அணித் தலைவர் சிமித் அதை அனுமதிக்க ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் பந்தைச் சேதப்படுத்தினார். இவர்களின்குற்றம்உறுதிப்படுத் தப்பட்டதைத் தொடர்ந்து சிமித், வோர்ணர் இருவ ருக்கும் தலா ஓர் ஆண்டும், பான்குரொப்ட்டுக்கு 9 மாதங்களும் தடை விதித்தது ஆஸ்திரேலிய கிரிக் கெட் சபை.

இவர்கள், இல்லாமல் ஆஸ்திரேலிய அணி ஏகப் பட்ட தோல்விகளைச் சந்தித்துள்ளது. பாகிஸ்தான், இங்கிலாந்து என்று வரிசையாக ஏகப்பட்ட உதை களை வாங்கிக் குவித்துள்ளது ஆஸ்திரேலியா. ஆஸ்திரேலியா, இந்தியஅணிகள்தற்போதிருக்கும் நிலையை வைத்துப் பார்த்தால் இன்னும் சில நாள் களில் ஆரம்பமாகும் இந்த இரு தரப்புத் தொடரில் இந்திய அணி இமாலய அளவில் ஆதிக்கம் செலுத் தும்.

இதனால் இந்திய அணியைச் சமாளிக்க வேண்டு மாயின் சிமித், வோர்ணர், பான்குரொப்ட் ஆகி யோர் தேவை என்பதை அடுத்தே இந்த மூவர் மீதான தடைகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

# இந்தியா - ஆஸி. எதிர்பார்ப்பு உச்சம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான தொடர் இன்றும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடர் தொடர்பில் ஏகப்பட்ட எதிர்பார்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தஇரண்டுஅணிகளுக்கும்இடையில்மூன்றுஆட்டங்களைக் கொண்டரி20 தொடர், நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் என் பன இடம்பெறவுள்ளன.

கடந்ததடவை ஆஸ்திரேலிய இந்தியாவுக்குச்சுற்றுப்பயணம் மேற்கொண்டபோதுஇந்தியஅணிபெரியளவில்ஆதிக்கம்செலுத் தியது. இதனால் இம்முறை இந்திய அணியை ஆஸ்திரேலிய அணி அதன் மண்ணில் வைத்து ஆதிக்கம் செலுத்துமா என்பது தொடர்பில் உச்சக்கட்ட அளவில் எதிர்பார்க்கப்படுகிறது.



## மைத்திரியின்...

எதிராக உயர் நீதிமன்றம் தகுந்த தீர்ப்பை வழங்கும் என்று எதிர்பார்ப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்தமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கவும், கலைக்கவும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அதிகாரம் இருந்தது. ஆனால் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அது நீக்கப்பட்டு விட்டது. நாடாளுமன்றத்தை அரச தலைவர் கலைப்பதாக இருந்தால், நான்கரை ஆண்டுகளின் பின்னரே கலைக்க முடியும்.

மைத்திரிபால சிறிசேன தன்னிச்சையாக எடுத்த முடிவு படுதோல்வியடையப் போகின்றது என்ற அச்சத்தாலே நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி பன்னாட்டுச் சமூகத்துக்கும் இந்த உண்மை தெரியும்.

மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய செயற்பாடுகள், ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சராக நியமிக்கக் கூடாது என்பதிலும், தான் நியமித்த தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தோற்கக் கூடாது என்பதிலுமே குறியாக இருந்தார். அவர் தனது தன்னிச்சையான முடிவுக்காக, ஒட்டுமொத்த நாட்டு மக்களும் வழங்கிய ஆணையை மீறி விட்டார் - என்றார். (5)






**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்:3107 திகதி: 2018.11.10 சனிக்கிழமை

ශනිදා වාසනාව சனிக்கிழமை அதிர்ஷ்டம் SATURDAY FORTUNE

பச்சை

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 35 | 37 | 61 | 70 | T

போனஸ் இலக்கம்: 48

அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 49,823,185/-

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space SF space அடிப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 430
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.11.10

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 68,007,485/-

வெற்றி இலக்கங்கள்: 12 28 50 74

ஆங்கில எழுத்து: S

தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space AK space அடிப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

---

**සංවර්ධන වාසනාව**

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

சீட்டிழுப்பு வாரம் ▶ 194

சீட்டிழுப்பு திகதி ▶ 10.11.2018 சிவப்பு

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| H | 21 58 60 | 09 |

அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ.15, 602, 344 /=

2018.11.15 ம் திகதி வியாழக் கிழமை ........நீல........ நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

---

# IPS School Of Nursing

- ★ Diploma IN Nursing (க.பொ.த சாதாரண தகைமை)
- ★ Degree B.Sc In Nursing (அங்கீகரிக்கப்பட்ட தகைமை அல்லது Diploma) UGC Approved

நன்மைகள் :
- ★ உடன் தொழில் வாய்ப்பு
- ★ உயர்ந்த சம்பளம்
- ★ பயிற்சி (Practical)
- ★ பட்டதாரி விரிவுரையாளர்கள்
- ★ IC, Uniform வழங்கப்படும்.

**IPS**
தாதியர் பாடசாலை யாழ். பல்கலைக்கழகம் முன்பாக திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T : P : 076 292 4387

விளம்பர அனுசரணை : Mangos

---

**வேலையாள்கள் தேவை**

கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. (ஆண்) தேவை.

தொடர்பு - 077 159 5826

---

**Tamil/ English Medium Chemistry Personal Classes**

Basic, inorganic,Organic, Physical கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.SC(cey)M.SC(cey) Chemistry கற்பிக்கப்படும்.

075 046 0555

---

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு தங்கி இருந்து பணிபுரிய பணிப்பெண் ஒருவர் தேவை. தொடர்பு - 075 0399 441

---

**விற்பனைக்கு**

BAG - XXXX எனும் தொடர் இலக்கம் உடைய Hero Honda Pleasure மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. - 076 2613850 (சாவகச்சேரி)

(2Ads/15/17)

---

**மணமகள் தேவை**

யாழ் இந்து 39வயது. கார்த்திகை 4 பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு படித்த பண்பான மணமகள் தேவை. சூரியன் செவ்வாய் பதினொன்றில் குறுகியகால விவாகரத்து (ACO 339) (14.17)

077 784 0262

---

**உணவகம் வாடகைக்கு**

உணவகம் நடத்துவதற்கு உரிய அனைத்து தளபாட வசதிகளுடன் உணவகம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 077 101 9265

---

**வேலை ஆள்கள் தேவை**

Hotel / Restaurant க்கு சமையலாளர்/ உதவியாளர் - ஆண், பெண் இருபாலாரும் தேவை.

021 221 5282/077 107 5883

---

**பணியாளர் தேவை**

புத்தகக்கடைக்கு ஆர்வமுள்ள பணியாளர் தேவை.

புத்தகக்கூடம் இல. 204, சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ். பல்கலைக்கழகம் முன்பாக. தொ.இல - 077 128 5749

---

**ES Printers**

பனர் பிரிண்ட் (Banner), 35/=

# 357, Kasthuriyar Road, Jaffna.

---

# JAFFNA COLLEGE

*Cordially Invites You and Your Friends To Its*

## Christmas Carol Service


**"ROCKING THE BABE AT CHRISTMAS"**

**On Sunday 11 th November 2018**
**at**
**4.00 p.m.**
**at**
**The Cathedral, Vaddukoddai**

Principal.

---

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் செல்லையா தர்மலிங்கம்

25.10.2018 அன்று இறைபதமடைந்த எமது பாசமிகு தந்தையின் மறைவினை அறிந்தவுடன் நேரிலும். தொலைபேசி வழியாகவும் எம்முடன் துயர் பகிர்ந்து அனுதாபத்தை தெரிவித்த உறவினர்கள். நண்பர்கள். அயலவர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் எதிர்வரும் வியாழக்கிழமை (15.11.2018) முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளும் அதனைத்தொடர்ந்து மதிய போசனமும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22 | 10 |
| 03 | 11 |
| 1941 | 2018 |



## மார்க்கண்டு சண்முகலிங்கம்

லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சண்முகலிங்கம் நேற்று (10,11.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை - திரவியம் தம்பதிகளின் மருமகனும் நீலாதேவியின் அன்புக் கணவரும் ஜெயமதி, ஸ்ரீமதி, வானுமதி (ஜேர்மனி), காலஞ்சென்ற சுமதி மற்றும் கஜேந்திரன், சிறிதரன், கோபிதரன், ஐங்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் அருணகிரிநாதன், தவசீலன், செந்தில்வேல் (ஜேர்மனி), வசந்தா, குருலதா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாந், நதுஷா (லண்டன்), சோபன், நபிஷா, மிதுசன், புவிதரன் ஜேர்மனியில் வசிப்பவர்களான சஜீவன், மதுஷா, செந்தூரி, சந்தியா, குமரன் மற்றும் டேனுகா, சசிகுலராசா (லண்டன்) ஆகியோரின் பேரனும் சஸ்விகனின் (லண்டன்) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 18516/15/17)

# இளைஞர்களை முன்னுரிமைப்படுத்திய 15ஆவது உலக ஆயர்கள் மாமன்றம்!

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

15ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் வத்திக்கானில் கடந்த மூன்றாம் திகதி ஆரம்பித்து கடந்த 28ஆம் திகதி நிறைவெய்தி யுள்ளது. இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்க வேண்டியது என்னவென்றால் இந்த 15ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்னென்ன விடயங்கள் பேசப்பட வேண்டும் என்பதெல்லாம் கேள்விக்கொத்து மூலம் இளைஞர்களிடமே கேட்டு பெற்றுக்கொள்ளப்பட்து என்பதாகும். இதில் உலக இளைஞர்களின் பங்களிப்பும் கவனத்தில் கொள்ளப்பட்டது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். அந்த வகையில் "இளைஞர்களின் விசுவாசமும் அழைத்தலுக்கான தீர்மானமும்" என்னும் தலைப்பில் இளையோரை மையப்படுத்தி இளையோருக்கு முன்னுரிமை கொடுத்த 15ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் பற்றி இந்த ஆக்கம் பேசுகிறது.



**மாமன்ற உறுப்பினர்களுக்கு திருத்தந்தையின் நினைவுப்பரிசு**

வத்திக்கானில் இடம்பெற்ற உலக ஆயர்கள்மாமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ், இயேசுவின் மார்பில் இளம் சீடர் யோவான் சாய்த்திருப்பதைப்போன்று உருவாக்கப்பட்டுள்ள வெண்கலப் பதக்கத்தை நினைவுப் பரிசாக வழங்கினார். இறுதி இரவுணவில் நிகழ்ந்த ஒரு காட்சியாக சித்திரிக்கப்பட்டுள்ள இந்த பதக்கத்தில் இயேசுவின் இடது கரம் அவரது முகத்தின் உயரத்திற்கு உயர்த்தியிருப்பது போலவும் வலது கரம் உணவு கிண்ணத்தில் இருப்பதுபோலவும் அவ்விரு கரங்களுக்கிடையே இளைய சீடர் யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்திருப்பது போலவும் உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இறுதி அமர்வின் துவக்கத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் மாமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த நினைவுப் பரிசை தனித்தனியே வழங்கினார்.

இளையோரை மையப்படுத்தி நடைபெற்ற உலக ஆயர் மாமன்றம் தொடர்புடைய செய்திகள் படங்கள் காணொளிகள் என ஒக்டோபர் மாதத்தில் மட்டும் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட பதிவுகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயர் மாமன்ற நிகழ்வுகள் குறித்து சமூக வலைத்தளம் வழியாக பகிரப்பட்டவைகள் பற்றி எடுத்துரைத்த திருப்பீட தகவல்த்துறை இந்த மாதத்தில் ஆயிரத்து 400 கீச்சகங்கள் 6 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் திருப்பீட தகவல் தொடர்பு அலுவலகத்தில் ஒவ்வொரு நாளும் மாமன்றத் தந்தையர்கள் வெளியிடும் கருத்துக்கள் நேரடியாக ஆங்கிலம் ஸ்பானியம், பிரெஞ்ச், இத்தாலியம் என நான்கு மொழிகளில் தினமும் 15 கீச்சகங்களாக வெளியிடப்பட்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளது. சமூக வலைத்தளங்களில் ஆயர் மாமன்ற நிகழ்வுகள் குறித்த கருத்துக்களை உலகின் பல்வேறு பகுதிகளின் இளையோர் குறிப்பாக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய இளையோர் ஆர்வமுடன் பகிர்ந்து வந்ததாகவும் ரஷ்யா மற்றும் சீனாவின் இளையோரிடையே அதிக ஆர்வத்தைக் காண முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆயர் மாமன்ற நிகழ்வுகளில் சமூக வலைத்தளங்கள் வழி ஆர்வம் காட்டிய இளையோர் 18 முதல் 34 வயதிற்கு உட்பட்டோர் எனவும் திருப்பீட தகவல்துறை வெளியிட்ட செய்தி கூறுகிறது.


**உலக ஆயர்கள் மாமன்றம் குறித்து திருத்தந்தை பிரான்ஸிஸ் மகிழ்வு**

கடந்த சில வாரங்கள் நடைபெற்ற உலக ஆயர்கள் மாமன்றம் கடினமான பணியாக இருந்தாலும் நம்பிக்கையூட்டும் விளைவுகளை உருவாக்கியுள்ளது என்பதை திருத்தந்தை தன் உரையில் மகிழ்வோடு குறிப்பிட்டார். செவிமடுத்தல் என்ற சிறந்த பாடத்தை ஆயர்கள் மாமன்றத்தில் கலந்துகொண்ட அனைவரும் கற்றுக்கொண்டனர் என்றும் தூய ஆவியார் வழங்கும் தெளிந்து தேர்தல் என்ற கொடை இந்த மாமன்றத்தின் வழியே, திரு அவைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் திருத்தந்தை இந்த உரையில் சுட்டிக்காட்டினார். உலக ஆயர்கள் மாமன்றத்தின் நோக்கம், ஓர் ஏட்டை வெளியிடுவது அல்ல என்று தன் மூவேளை செப உரையில்எடுத்துரைத்ததிருத்தந்தை பிரான்சிஸ் இளையோரின் உலகில் நிலவும் யதார்த்தங்களைக் காண்பதற்கு மாமன்றம் நல்லதொரு தருணமாக அமைந்தது என்றும் கூறினார்.




**பீட்ஸ்பேர்க் வன்முறைக்கு திருத்தந்தையின் வருத்தம்.**

ஐக்கிய அமெரிக்க நாட்டின் பிட்ஸ்பேர்க் நகரில் யூத தொழுகைக்கூடத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சாவடைந்தோருக்காக திருத்தந்தை பிரான்சிஸ் மூவேளை செப உரையின் இறுதியில் தன் ஆழ்ந்த அனுதாபங்களையும் அருகாமையையும் வெளியிட்டார். இந்த வன்முறையால் உயிரிழந்தோரை இறைவன் தன் அமைதியில் வரவேற்று ஏற்றுக்கொள்ளவும், காயப்பட்டோரைக் குண மாக்கவும், உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு ஆறுதல் வழங்கவும் தான் செபிப்பதாக திருத்தந்தை கூறினார். இத்தகைய வன்முறை களால் நாம் அனைவருமே காயப்படுகிறோம் என்பதை எடுத்துரைத்தத் திருத்தந்தை பிரான்சிஸ் எமது சமுதாயத்தில் வளர்ந்துவரும் வெறுப்பை அன்பினால் வெல்லவும் உயிர்களை மதிக்கவும் இறைவன் எம் அனைவருக்கும் பாடங்கள் புகட்ட வேண்டும் என்றும் கூறினார்.



**திருஅவை புனிதமானவது**

ஆயர் மாமன்றக் கூட்டம் என்பது ஒரு பாராளுமன்றம் அல்ல அது தூய ஆவியார் செயலாற்றுவதற்குரிய பாதுகாப்பு நிறைந்த இடம் என்று கூறியத் திருத்தந்தை இங்கு தயாரிக்கப்பட்டுள்ளது வெறும் ஏடு அல்ல மாறாக எம் இதயங்களுக்குள் செயலாற்ற தூய ஆவியாரால் வழங்கப்பட்டுள்ள ஏடு என்பதையும் தெளிவுபடுத்தி இந்த ஏட்டுடன் நாம் செபித்து அதனை ஆழமாகப் படித்து அதிலிருந்து ஒளியைப் பெறுவோம் என மேலும் கூறினார்.

திருஅவையின் உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் பாவிகள் எனினும் நம் தாயாம் திருஅவை புனிதமா னவர் என்பதால் அந்த அன்னையைக் களங்கப்படுத்த நாம் அனுமதிக்கக்கூடாது என்று எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் திரு அவை மீது தீயோன் சுமத்தி வரும் மிகப்பெரும் குற்றச்சாட்டு கள் திரு அவை மீது அவன் மேற்கொள்ளும் சித்திரவதை களுக்கு ஒப்பானவை என்று வலியுறுத்திக் கூறினார். திரு அவையைத் தாக்கும் தீயோன் அதன் வழியாக அன்னை மரியாவையும் தாக்க முயல்கின்றான் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் செபத்தின் உதவியுடன், தாயாம் திரு அவையைக் காப்போம் என அழைப்பு விடுத்தார்.

இளையோர் மீதான நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் ஆறுதலையும் உள்ளடக்கியதாக மாமன்றத் தந்தையரால் உருவாக்கப்பட்ட ஒரு மடல் மாமன்ற நிறைவுத் திருப்பலியின் இறுதியில் ஆயர்களின் சார்பில் வாசிக்கப்பட்டது. ஆயர் மாமன்றங்களின் பொதுச்செயலர் கர்தினால் லொரென்ஸோ பால்திஸ்ஸேரியால் வாசிக்கப்பட்ட இந்த மடல் இளையோரின் மகிழ்வு, நம்பிக்கை, வருத்தங்கள், வேதனைகளை உள்ளடக்கிய அவர்களின் ஆழ்மனத் தேடுதல்களில் அவர்களுடன் இணைந்து நடக்க மாமன்றத் தந்தையர்கள் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கிறது. வாழ்வின் ஓரத்திற்குத் தள்ளப்பட்டுள்ள ஏழை மக்களை இளையோர் தங்கள் பயணத்தில் இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற அழைப்பையும் மாமன்றத் தந்தையரின் மடல் முன்வைத்துள்ளது.

இளையோரை மையப்படுத்திநடைபெற்றுவரும் ஆயர் மாமன்றக் கூட்டம் இவ்வுலகில் நிலவும் அநீதிகள் குறித்து 'சமூக பொருளாதார உலகிற்கு எடுத்துரைக்க ஒரு தூண்டுதலாக இருக்கும் என்ற நம்பிக்கையை வெளியிட்டார் கர்தினால். ஆயர் மாமன்றத்தில் நிகழ்ந்தவற்றைத் தொகுத்து வழங்கும் பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசிய வியன்னா கர்தினால், பல்வேறு கருத்துப் பரிமாற்றங்களுக்கு இந்த ஆயர் மாமன்றத்தில் இது வரை செவிமடுத்துக் கொண்டிருந்த உறுப்பினரகள் இதை உலகில் சென்று அறிவிக்க வேண்டிய கடமையைப் பெற்றுள்ளனர் என்று கூறியதுடன் திரு அவையை ஒரு வீடுபோல் எண்ணி, தங்கள் வருங்கால நம்பிக்கைகளை அதில் வைத்துள்ளதாக ஆதரிக்க இளையோர் ஒருவர் தன்னிடம் பகிர்ந்து கொண்டதையும் எடுத்துரைத்தார்.

இதே பத்திரிகையாளர் சந்திப்பில் உரையாற்றிய அயர்லாந்து ஆயர் பேரவைத் தலைவர், அருளின் தருணமாக இருந்த இந்த ஆயர் மாமன்றக் கூட்டத்தில் தூய ஆவியாரின் பிர சன்னத்தை யும் பலத்தையும் உணர முடிந்ததா கவும் நற்செய்தியின் தூதர்களாக இவ்வுலகில் இளையோர் செயல்படுவார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் தான் நாடுதிரும்புவதாகவும் தெரிவித்தார். இந்த ஆயர் மாமன்றம் கொணர்ந்துள்ள சுடர் இளையோரிடையே ஒரு புதிய தீபத்தை ஏற்றிவைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என இந்தப் பத்திரிகையாளர் கூட்டத்தில் உரைத்தார் கென்யா நாட்டு பேராயர்.

**திருத்தந்தையுடனும் ஆயர்களுடனும் இணைவு**

ஆயர் மாமன்றத்தில் வெள்ளியன்று நடைபெற்ற 20ஆவது அமர்வு இளையோரின் ஆடல் பாடலுடன் இடம்பெற்றது. ஆயர் மாமன்ற பரிந்துரைகளின் தொகுப்பு குறித்த சிந்தனைகள் இடம்பெற்றுவரும் வேளையில் அமர்வில் திருத்தந்தையுடன் கலந்துகொண்ட இளையோர் திருத்தந்தைக்கென உருவாக்கப்பட்ட ஒரு பாடலைப் பாட அதற்கு ஆயர் மாமன்ற பொதுச் செயலர் கர்தினால் லொரென்ஸோ பால்திஸ்ஸேரி பியானோ இசைக் கருவியை வாசிக்க இவ்வமர்வு கோலாகலமாகத் துவக்கி வைக்கப்பட்டது.

இந்த அமர்வின் முக்கியப் பகுதியாக ஆயர் மாமன்ற இளையோர் பிரதிநிதிகள் அனைவரும் வெவ்வேறு நிறங்களில் கையெழுத்திட்டு நாங்கள் எப்போதும் திருத்தந்தை யோடும் திருஅவை ஆயர்களோடும் இணைந்திருப்போம் என எழுதி அந்த மடலை திருத்தந்தைக்கு வழங்கினர்.

திருத்தந்தையே உமக்காகச் செபிக்கிறோம் உம் கனவுகளைப் பகிர்கிறோம் எனவும் இம்மடலில் கூறும் இளையோர் திருத்தந்தை பிரான்சிஸ் இளையோர் மீது கொண்டுள்ள அக்கறைக்கு தங்கள் நன்றியையும் வெளியிட்டுள்ளனர். தங்கள் கனவுகளை நிறைவேற்ற விரும்பும் இளையோர் எதற்கும் அஞ்சாமல் தங்கள் கடமைகளை கையிலெடுத்து நம்பிக்கையின் நாயகர்களாகத் திகழவேண்டும். எதிர்காலமான இளையோர் மீது நம்பிக்கை கொண்டு பேசவேண்டும். குழந்தையின் வாழ்வில் குடும்பம் உடன் நடந்து செல்வதுபோல் திரு அவையும் தன் அங்கத்தினர்கள் வாழ்வில் இணைந்து நடைபோட வேண்டும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 • 10 • 1938



விண்ணில் 23 • 10 • 2017

### அமரர் சரவணமுத்து சடாச்சரம்

திதி - சதுர்த்தி

ஆண்டொன்று மறைந்துவிட்டது ஐயா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றும் எம்
மனதை விட்டு நீங்காது

951, K.K.S. வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி தங்கச்சிப்பிள்ளை தம்பையா

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கச்சிப்பிள்ளை தம்பையா நேற்று (10.11.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, நாகரெட்ணம் மற்றும் மங்கையற்கரசி ஆகியோரின் சகோதரியும் ஆனந்தபாலா, நாகபரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜி, ஜெயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிநயா, கயன், செந்தூரன், பகி, யதர்சன், தீபிகா, தர்மிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2018) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்வரத்தினம் ரிஷாந்

*(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் நில அளவைக் கல்வி கற்கும் மூன்றாம் வருட மாணவன்)*



தோற்றம் 21.08.1993 மறைவு 10.11.2018

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் ரிஷாந் நேற்று (10.11.2018) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் செல்வரத்தினம் - விமலாதேவி தம்பதிகளின் அன்பு மகனும் சபேசன் (விபுலானந்தா அழகியல் கல்வியற் கல்லூரி, மட்டக்களப்பு), சுஜீபன் (மலபே [தனியார்] பல்கலைக்கழகம்), சத்தியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஐயாத்துரை ரத்தினம் நாகபூசணி, சின்னத்தம்பி அழகம்மா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் பாலசிங்கம் (திருகோணமலை), ஜெயராஜசிங்கம் (கனடா), சிவஞானம், இந்திராணி, தங்கராசா பார்வதி, சந்திரன், கலாநிதி (தயா) ஆகியோரின் மருமகனும் 'கீதா பொன்கலம் காலஞ்சென்றவர்களான விஜயதேவி, சின்னத்தம்பி கனகராசா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 21157/15/17)

## இலங்கையில்...

தலைவர் மு.க.ஸ்டாலின், அங்கு ஜனநாயகப் படுகொலை நடக்கின்றது எனவும், அதனைத் தடுக்காது இந்திய நடுவண் அரசு கைகட்டி வேடிக்கை பார்கின்றது என்றும் சாடியுள்ளார்.

நாடாளுமன்றம் அரச தலைவரால் நேற்றுமுன்தினம் இரவு கலைக்கப்பட்டமை தொடர்பில் ஸ்டாலின் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் அரசமைப்பைக் காலில் போட்டு மிதித்து, அதன் மீது ஏறி நின்று, சிறிதும் மனச்சாட்சியின்றி, நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ள சிறிசேனாவின் அராஜகம் பேரதிர்ச்சியளிக்கிறது. மிக மோசமான அரசியல் சட்ட நெருக்கடியை உருவாக்கி அதன் மூலம் இலங்கையில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழர்களின் நலனுக்கும், பாதுகாப்புக்கும் மிகப்பெரிய ஏமாற்றத்தையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியிருக்கிறார்.

கடந்த ஒக்ரோபர் 26 ஆம் திகதி தமிழர்களின் விருப்பத்துக்கு மாறாக, ரணில் விக்கிரமசிங்கவை மாற்றி, எதிர்வரும் 14 ஆம் திகதி புதிய தலைமை அமைச்சர் ராஜபக்ச பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்று தெரிந்ததும், தமிழ் மக்களின் குரல் ஒலிக்கும் நாடாளுமன்றத்தைக் கலைத்திருப்பது ஜனநாயகப் படுகொலை மட்டுமல்ல மைத்திரியின் அரசியல் சட்ட அத்துமீறல். தமிழர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் இந்த அக்கிரமத்தை ஏதோ அண்டை நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் என்று ஒதுக்கி வைத்து விட முடியாது என்றாலும், தலைமை அமைச்சர் நரேந்திரமோடி தலைமையிலான நடுவண் பாஜக அரசு தொடக்கத்திலிருந்தே இந்த ஜனநாயக விரோதச் செயல்களை கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது அதை விடக் கவலையளிக்கிறது.

முழுக்க முழுக்க ஈழத் தமிழர்களுக்கு எதிராகவும், அவர்களின் உரிமைகளை அடியோடு நசுக்குவதிலும், இனப் படுகொலை மனித உரிமை மீறல்கள் பன்னாட்டு நெறிகளுக்கு எதிரான போர்க்குற்றங்கள் ஆகியவற்றில் ஈடுபடுவதிலும், தனது ஆட்சிக் காலம் முழுவதும் கங்கணம் கட்டிக் கொண்டு ஹிட்லர் போல் செயல்பட்ட ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட போது நடுவண் அரசு அமைதி காத்தது.

இந்திய நடுவண் அரசின் மௌனம் இன்றைக்கு இலங்கை நாடாளுமன்றக் கலைப்பில் முடிந்து விட்டது. தமிழர்களுக்கு அதிகாரம் வழங்குவதற்காக இலங்கை அரசியல் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள உருவாக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபை பணிகளும் தடைப்பட்டு விட்டது. அதுமட்டுமின்றி தமிழர்கள் மீது திடீர் தேர்தலை, சிறிசேனா ராஜபக்ச சூழ்ச்சிக் கூட்டணி திணித்திருப்பதற்குக் காரணமாக அமைந்து விட்டது. கண்ணுக்கு எட்டிய தூரத்தில் நடந்துள்ள மிகப்பெரிய அநியாயத்தை நரேந்திரமோடி தலைமையிலான நடுவண் அரசு கண்டும் காணாமலும் தட்டிக் கேட்காமலும் இருந்ததையும், தங்களின் உயிருக்கும், உரிமைகளுக்கும் ஆபத்து உருவாகிய நேரத்தில் கூட இந்திய அரசு இப்படி இனம் புரியாத மௌனம் காத்ததையும் பார்த்து ஈழத் தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் ஏன் உலகத்தமிழர்களும் இன்றைக்கு அதிர்ச்சியுடன் உறைந்து போயிருக்கிறார்கள்.

விபரீதச் சூழல் இலங்கையில் உருவாகி, அரசியல் நெருக்கடியும், உறுதிப்பாட்டுத் தன்மையும் ஆபத்துக்குள்ளாகி இருக்கும் இந்த நேரத்தில், அங்கு வாழும் ஈழத்தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டிய மிகப்பெரிய பொறுப்பும் கடமையும் இந்திய அரசுக்கு இருக்கிறது என்பதை நரேந்திரமோடி தாமதமாகவேனும் உணர வேண்டும். இலங்கையில் பட்டப்பகலில் நிகழ்த்தப்பட்டுள்ள இந்த ஜனநாயகப் பச்சைப் படுகொலைக்கு, இந்திய அரசு உடனடியாகக் கடும் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும். இலங்கையில் ஈழத்தமிழர்கள் அமைதியாக, பாதுகாப்பாக, கண்ணியத்துடன் வாழ்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நடுவண் அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது. (5)

## பொதுத்...

படும். நிலமைகளை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய, நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதென்றால் 500 கோடி ரூபா வரையில் தேவை என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தை அரச தலைவர் கலைத்துள்ளதுடன் ஜனவரி மாதம் 5ஆம் திகதி தேர்தலை நடத்தும் வகையில் அரசிதழ் அறிவிப்பை வெளியிட்டிருந்தார். இது 19ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு முரணான நடவடிக்கை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்திருந்தது. இது தொடர்பில் அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பு முடிவடைந்த பின்னர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெரிவித்ததாவது,

மாகாண சபைத் தேர்தலை எதிர்பார்த்திருந்த எமக்கு நாடாளுமன்றத் தேர்தலே கிடைத்துள்ளது. அதற்காக தேர்தலை நடத்தாமல் விட இயலாது. எவ்வாறாயினும் தற்போது காணப்படுகின்ற நிலமைகளை கவனத்தில் கொண்டு அரசமைப்புக்கு அமைவாகவே நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும். பொது தேர்தலை நடத்துவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனைகள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை - என்றார். (5)

## 58 எம்.பிக்கள்...

தெரிவான 58பேர் ஓய்வூதியத்தை இழக்கும் நிலமை ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் 5 ஆண்டுகள் தொடர்ந்து பதவி வகித்தால் மாத்திரமே அவர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படும். நாடாளுமன்றம் 3 ஆண்டுகள் முடிவில் கலைக்கப்பட்டதால் 58 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஓய்வூதியம் கிடைக்கப்பெறாது.

இவர்களில் தமிழ்மொழி பேசுகின்ற, அங்கஜன் ராமநாதன், சதாசிவம் வியாழேந்திரன், ஞானமுத்து சிறிநேசன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சாள்ஸ் நிர்மலநாதன், எஸ்.சிவமோகன், முஜிபூர் ரஹ்மான், இம்ரான் மஹ்ரூப், திலகராஜா, கவிந்திரன் கோடீஸ்வரன், எஸ்.எம்.மொஹமட் இஸ்மாயில், அரவிந்தகுமார், வேலுகுமார், கே காதர் மஸ்தான் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர். (5)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் விஞ்ஞான பாட ஆசிரியர் **திரு.ஆறுமுகம் பொன்வாசன்** அவர்களின் அன்புத் தந்தையார்

### கந்தையா ஆறுமுகம்



அவர்கள் 01.11.2018 கனடாவில் இயற்கை எய்தியுள்ளார். அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**குறிப்பு:- இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2018) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.**

**ஆசிரியர் கழகம், யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 06 • 06 • 1947



மறைவு 13 • 10 • 2018

13.10.2018 அன்று காலமான எமது குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா பஞ்சலிங்கம்

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி ஆறுதல் தெரிவித்த மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைத்து அன்புள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் நாளை (12.11.2018) திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் அன்று மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதுடன் மதிய போசன நிகழ்விலும் தங்கள் குடும்பத்தினர் சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடத்தனை வடக்கு,
குடத்தனை.

குடும்பத்தினர்.

# நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படவேயில்லை

## கூறுகிறார் விஜயதாச ராஜபக்ச

கொழும்பு, நவ. 11

நடைமுறையிலுள்ள நாடாளுமன்றத்துடன் நாட்டின் செயற்பாடுகளை தொடந்தும் முன்னெடுக்க முடியாது என்று அரச தலைவர் மைத்திரி கருதுவாராக இருந்தால் தனக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். 19ஆவது அரசமைப்பில் எந்தவொரு இடத்திலும் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படவில்லை. இவ்வாறு அரச தலைவர் சட்டத்தரணியும், அமைச்சருமான விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். (5)

## தேர்தல்...

உடனடியாகவே தயார்படுத்தப்படும். ஆனால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான திகதி அரசிதழில் வெளியிடப்பட்டபோதும், தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்து பணிகளை ஆரம்பிக்குமாறு எந்தவொரு உத்தரவும், மாவட்ட தேர்தல்கள் திணைக்களங்களுக்கு நேற்று இரவு வரையில் கிடைக்கவில்லை.

தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட உடன், தேர்தல் பணிகளை ஆரம்பிக்குமாறு ஒவ்வொரு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் உத்தர வழங்கப்படும். அத்துடன் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டு கலந்துரையாடலும் நடைபெறும்.

ஆனால், நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டபோதும், அதனை நடத்துவதற்குரிய பணிகளை முன்னெடுக்கும் உத்தரவு எதனையும் தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கவில்லை. அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் தலைத்தமை அரசமைப்புக்கு முரணானது என்று பல தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர். தேர்தல்கள் ஆணைக்குழுவும், உயர் நீதிமன்றின் கருத்தை அறிந்தே தேர்தலை நடத்தும் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## உதவிகளை...

நாடாளுமன்றத்தை நேற்றுமுன்தினம் இரவு கலைத்துள்ளதாக அறிவித்துள்ள நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது; உங்கள் நாட்டின் நாடாளுமன்றத்தை இடைநிறுத்தி தலைமை அமைச்சரை அரசமைப்புக்கு முரணான விதத்தில் நீக்கியமை குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறும் தற்போதைய நெருக்கடிக்கு ஜனநாயக வழிமுறைகள் ஊடாக தீர்வைக் காணுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

2015ஆம் ஆண்டு நீங்கள் தெரிவு செய்யப்பட்டமை இலங்கையில் ஜனநாயக சீர்திருத்தம், பொறுப்புக்கூறப்படுதல் மற்றும் நல்லிணக்கம் குறித்த புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்தியது. நல்லிணக்கச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான உங்கள் அரசின் நடவடிக்கைகளும் அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் இலங்கையில் ஜனநாயக ஆட்சிக்கான புதிய சமிக்ஞையை வெளிப்படுத்தின. இந்த நடவடிக்கைகளுக்குப் பதிலாக அமெரிக்கா இலங்கையுடனான உறவுகளில் முதலீடு செய்வதற்கான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எனினும் துரதிஸ்டவசமாக அண்மைய நடவடிக்கைகள் சரிசெய்யப்படாவிட்டால் உங்கள் நாட்டின் ஜனநாயக அபிவிருத்தி மற்றும் அண்மைய ஆண்டுகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று நாங்கள் அச்சமடைந்துள்ளோம்.

அண்மைய நடவடிக்கைகள் இலங்கையில் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. சபாநாயகர் கரு ஜயசூரிய இரத்தக்களரி அபாயம் உள்ளதாக எச்சரித்துள்ளார். இலங்கையில் அண்மையில் இடம்பெற்றுள்ள விடயங்கள் எம்சிசி திட்டத்திற்கும், அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிக்கும், அமெரிக்காவின் ஏனைய திட்டங்கள் மற்றும் ஈடுபாடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் - என்றுள்ளது. (5)

## நெருக்குவாராம்...

செய்துள்ளதாக அறியமுடிகின்றது. தமது முடிவை அரசின் உயர் மட்டங்களுக்கும் அறிவிப்பது என்று அவர்கள் நேற்றுத் தீர்மானித்துள்ளனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவினால் நாடாளுமன்றம் கலைக்கப்படும் அரசிதழ் அறிவிப்பு நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் ஜனவரி 5ஆம் திகதி நடத்தப்படும் என்றும் அரசிதழில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அரச தலைவரின் திடீர் அறிவிப்பையடுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும், தேர்தல்கள் செயலகத்தில் நேற்று மதியம் ஆராய்ந்தனர். சுமார் 3 மணி நேரம் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

அரச தலைவர் அரசமைப்புக்கு முரணாகவே நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார் என்று ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டியுள்ளார். அரசமைப்புக்கு முரணாக தேர்தல் நடத்த முடியாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். உயர் நீதிமன்றத்தில் பல தரப்பும் வழக்குகளைத் தாக்கல் செய்யவுள்ளதாகக் கூறுகின்றன. உயர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என்பதை ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவரையும் பதவி நீக்கம் செய்வதற்கும் இரகசிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை அரசமைப்புக்கு முரணாக நடத்துமாறு பணிக்கப்பட்டால் அல்லது அழுத்தம் பிரயோகிக்கப்பட்டால் பதவி துறப்பேன் என்று ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் தவிசாளரிடம் தெரிவித்துள்ளார். இதன்போது, யாராவது ஒருவர் பதவி துறக்கும் முடிவை எடுத்தாலும், மூன்று உறுப்பினர்களும் பதவியைத் துறப்பது என்று தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது. இதனை அரச உயர்மட்டத்துக்கு தெரியப்படுத்தவும் ஆணைக் குழுவினர் முடிவு செய்துள்ளனர். (5,105)

## தமிழரை...

சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார். மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மரநடுகையும், மலர்க் கண்காட்சியும் நிகழ்வு நேற்று மாலை கிட்டுப் பூங்காவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் தனது பங்கு என்ன என்பது தொடர்பில் திருமாளவன் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மாவீரர் தின உரைகளில், இந்தியாவை விமர்சித்ததில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். மேலும் பேரரசுகளின் துணையின்றி இனி எங்கும் ஆயுதப் போராட்டத்துக்கு சாத்தியமில்லை என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, எங்கள் முன்பாக இன்று இருக்கிற சவால், சிதறிக் கிடக்கக் கூடிய தமிழ்ச் சமூகத்தை ஒருங்கிணைக்க வேண்டும். தாயகத்திலே ஒரு பங்கு, புலம் பெயர் நாடுகளிலே ஒரு பங்கு, அண்டை நாடான இந்தியாவிலே வாழ்கின்ற தொப்புள் கொடி உறவான தமிழ்ச் சமூகம் ஒரு பங்கு என்று தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்கிற அடிப்படையிலே நாம் அடையாளத்தைக் கொண்டிருந்தாலும், நாம் ஒருங்கிணைந்துள்ளோமா? ஒருமித்த கருத்தில் இயங்குகிறோமா? நம் முன்னாள் இருக்கக் கூடிய மிகப் பெரிய சவாலாக மாறியிருக்கிறது. சிதறிக்கிடக்கிற தமிழ்ச் சமூகத்தை ஒருங்கிணைக்கிறதற்கான அறிவார்ந்த ஒருதலைமை, பகைவர்களை தெளிவாகப் புரிந்து கொண்டு அவர்களின் இராஜதந்திரங்களுக்கு ஈடுகொடுத்து அவற்றை எல்லாம் முறியக் கூடிய ஆற்றல் வாய்ந்த ஒரு தலைமை, ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு இனி வாய்ப்பில்லை என்ற நிலையில் இந்த நாடாளுமன்ற ஜனநாயக வழியில் போராடுவதற்கான ஒரு தலைமை, தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுத்துச் செல்கின்ற ஒரு தலைமை இன்றைக்கு எமக்கு தேவைப் படுகிறது. நான் இந்த மேடை என்பதற்காகச் சொல்லவில்லை, இன்றைக்கு இந்த மண்ணில் என் கண்ணுக்குத் தெரிந்த தலைமையாக விக்கினேஸ்வரனைப் பார்க்கிறேன் - என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்; கட்சி என்கிற மரம் ஒன்றை நட்டுள்ளேன். அதை வளத்து விருட்சமாக்கவேண்டியது மக்களிடம் உள்ளது என்று தெரிவித்தார்.

நிகழ்வின் நிறைவில் ஊடகவியலாளர்கள் விக்னேஸ்வரனிடம், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி போட்டியிடுமா? அந்தக் கட்சியின் சார்பில் நீங்கள் போட்டியிடுவீர்களா என்று கேட்டனர். இதற்குப் பதிலளித்த அவர் கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை. நான் தேர்தலில் நிற்பதையும் கட்சிதான் தீர்மானிக்கும் என்றும் தெரிவித்தார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது தொடர்பில் கேட்டபோது, சட்டவிரோதமான செயல் என்றே எல்லோரும் ஒருமித்துக் கூறுகின்றனர் - என்றார். (5,21)

## பாதீடு...

விடயத்திலும் அரசமைப்பை மீறியே செயற்பட வேண்டும். இவ்வாறு பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தில் கடந்த 5ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் சமர்பிக்கப்பட இருந்தது. அதற்கிடையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவை தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கினார். புதிய தலைமை அமைச்சராக மகிந்தவை நியமித்தார். மகிந்த தரப்பு, இடைக்கால கணக்கு அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கத் திட்டமிட்டிருந்தது. ஆனாலும், நாடாளுமன்றம் கூட்டப்படவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதில் ஏற்பட்ட சறுக்கல் காரணமாக அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

ஜனவரி மாதம் 17ஆம் திகதியே புதிய நாடாளுமன்றம் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து, புதிய அரசின் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்படும் காலம் வரையிலான நிதிக் கொடுப்பனவுகள் எப்படி முன்னெடுப்பது என்பது தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

இது தொடர்பில் அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகத்தின் தலைவர் மு.சர்வானந்தன் தெரிவித்ததாவது, நாட்டின் அபிவிருத்தி, அரச பணியாளர்களுக்கான சம்பளங்கள் உள்ளிட்ட அனைத்து நிதி சார் செயற்பாடுகளுக்கான நிதியும் வருட முடிவின் பாதீட்டில் ஒதுக்கப்படும். நவம்பர் மாதமளவில் பாதீடு நாடாளுமன்றில் சமர்பிக்கப்படும். பாதீடு தொடர்பான விவாதங்கள் நடைபெற்று ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை அந்த நிதியை பயன்படுத்த முடியும். 2019ஆம் ஆண்டுக்கான பாதீடு தயாரிக்கப்பட்டு முதல் முன் வைப்பு நிறைவு பெற்ற நிலையில் அடுத்த விவாதம் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெற இருந்தது. அதற்கிடையில் அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன.

அடுத்து ஆண்டுக்கான பாதீடு தீர்மானிக்கப்படவில்லை. நாடாளுமன்றுக்கும், அரச தலைவருக்கும் இடையே உள்ள பகிரப்பட்ட அதிகாரம் மூலமே நிதி சார்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். நிதி கையாளுகை தொடர்பில் அரச தலைவருக்கு முழுமையான சிறப்பதிகாரம் இல்லை. நாடாளுமன்றின் தலையீட்டுடனே நிதி நிலைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். அவரச நிதி தேவை ஏற்பட்டால் குறை நிரப்பு தீர்மானம் முன் வைப்பதன் மூலமும் நிதியை பெற்று கொள்ள முடியும். எதுவென்றாலும் நாடாளுமன்றம் தேவை.

நாடாளுன்றம் கலைக்கப்பட்டு ஜனவரி 5 தேர்தல் திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. 17 ஆம் திகதி முதலாவது நாடாளுமன்ற அமர்வு நடைபெறும் என்று அரச தலைவர் அறிவித்துள்ளார். இந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதியின் பயன்பாடு டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுக்கு வரும். ஜனவரி முதலாம் திகதியில் இருந்து 17 ஆம் திகதிக்குள் புதிய நாடாளுமன்ற அமர்வு தொடர்பில் பல விடயங்கள் முவைக்கப்படும். இந்த நிலையில் எப்போது பாதீடு பற்றி பேசப்படும் என்று தெரியாது. அரச பணியாளர்களுக்கான சம்பளம் தொடக்கம் அரச தலைவரின் செயலகம் இயங்குவதற்கான நிதி எங்கிருந்து பெறப்பட போகிறது. அரசமைப்பை மீறி, சட்டத்துக்கு முரணாக அரச தலைவர் செயற்பட்டு வருகிறார் என்று சொல்லப்படும் நிலையில் இந்தத் தேவைகளுக்கும் திறைசேரியில் இருந்தும் அரச தலைவரால் சட்டவிரோதமாக நிதி பெற்றுக் கொள்ளப்பட வாய்ப்பு இருக்கின்றது என்றார். (5,7)

## ஐ. தே. க...

கொழும்பு, நவ. 11

அரசமைப்பை மீறி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைக்க எடுத்துள்ள நடவடிக்கைக்கு எதிராக, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) உள்ளிட்ட கட்சிகள் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப் போவதாக அறிவித்துள்ளன.

அரச தலைவர் முன்கூட்டியே நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளதற்கு எதிராக அடுத்தவாரத் தொடக்கத்தில் தாம் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப் போவதாக, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு எதிராக, நாளை திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில், மனுத்தாக்கல் செய்யப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் சார்பிலும், நாடாளுமன்ற கலைப்புக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க கொழும்பில் நேற்று அறிவித்தார்.

இவர்கள் தவிர, சட்டவாளர் அமைப்புகளும், பல்வேறு சிவில் அமைப்புகளும் நாடாளுமன்ற கலைப்புக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்யத் தயாராகி வருகின்றன. (5)

## சு. கவிலிருந்து...

நாமல் ராஜபக்ச சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக் கொண்டுள்ளார்.

நாமல் ராஜபக்ச, சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக் கட்சியில் உறுப்புரிமையை பெற்றுக்கொண்டதாக அவரது உத்தியோகப்பூர்வ கீச்சகத்தில் நேற்றுப் பதிவிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்சவை தொடர்ந்து மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த கஞ்சனா விஜேசேகர, அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த சேஹான் செமசிங்க மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த டி.வி.சானக டினுசனும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக் கொண்டுள்ளனர்.

நாமல் ராஜபக்ச சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் இணைந்துள்ளமை சுதந்திரக் கட்சிக்குள் குழப்பத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்கள் முன்னணிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையில் உட்கட்சி பூசல் ஆரம்பமாகும் சமிஞ்சைகளும் தென்படுவதாக அறிய முடிகிறது. (5,10)

## பல்கலை...

வந்துள்ளது. இந்தத் துயரச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

செல்வரட்ணம் திசான் (வயது-25), சரவணபவன் கோபிசன் (வயது23) மற்றும் கோபாலகிருஷ்ணன் சாரங்கன் (வயது-25) ஆகிய மூவருமே உயிரிழந்தனர். உயிரிழந்த மாணவர்களின் சடலங்கள் பலாங்கொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (5,37)

## நீர்க்குழிக்குள்...

அதே இடத்தைச் சேர்ந்த் கனகராச் ரஜித் மற்றும் இன்பயூட் லிவிசன் ஆகியோரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஓலைநனையவைத்துக்கிடுகு பின்னுவதற்காக அந்தப் பகுதியில் நீர்க்குழி ஒன்று உள்ளது. நேற்றுக் காலை 11 மணியளவில் சிறுவர்கள் இருவரும் அந்தப் பகுதியில் குளித்து விளையாடும் நோக்குடன் சென்றதாகக் கூறப்படுகின்றது. நீண்டநேரமாக சிறுவர்களைக் காணவில்லை என்று உறவினர்கள் தேடியுள்ளனர். இதன்போது சிறுவன் ஒருவனின் உடல் நீரில் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் தேடுதல் நடத்தியபோது மற்றைய சிறுவனின் உடலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5,105)

# பண்டுக்கு பதிலாக ஸ்ரேயாஸ்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்றாவது ரி-20 ஆட்டமான இன்று பண்டுக்குப் பதிலாக ஸ்ரேயாஸ் களமிறங்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

ரி-20 ஆட்டங்களில் டோனி நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக பண்ட் சேர்க்கப்பட்டார். ஆனால் முதல் இரண்டு ஆட்டங்களிலும் பண்ட் சரியாக விளையாடவில்லை.

இதனால் மூன்றாவது ஆட்டமான இன்று பண்ட் நீக்கப்பட்டு ஸ்ரேயாஸ் சேர்க்கப்படலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. (ம)







இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரின் இறுதியாட்டம் கொழும்பு சென். பெனடிற் விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஓல்ட் பென்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளளது. (ம-23)

# யாழ்ப்பாணம் மத்தி வென்றது

யாழ்ப்பாணம் நவ 11

இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி போராடி வெற்றிபெற்றது.

கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு தெற்குப் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதியது. 48:46 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# சென். பற்றிக்ஸ் அதிரடி வெற்றி!



யாழ்ப்பாணம் நவ 11

இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் த பப்பரே வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

வென்னப்புவ அல்பிரட் பீரிஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்துக் கட்டுநேரியல் சென். செபஸ்ரியன் கல்லூரி அணி மோதியது.

முதல் பாதியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் சார்பில் கெயின்ஸ் 2 கோல்களையும், சாந்தன் ஒரு கோலையும் பதிவுசெய்தனர். இரண்டாவது பாதியில் சென். பற்றிக்ஸின் சார்பாக மேலும் மூன்று கோல்கள் பதிவாயின. சாம்சன் 2 கோல்களையும், கெயின்ஸ் ஒரு கோலையும் பதிவுசெய்தனர். ஆட்ட நேர முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)


# இந்தியா, தீவுகள் இறுதி ரி–20 இன்று இரவு

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான ரி 20 தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட், ஒருநாள் தொடர்களை இந்திய அணி கைப்பற்றியது.

ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரிலும் முதலிரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இந்திய அணி கிண்ணம் வெல்வதை உறுதி செய்துள்ளது. இந்த நிலையில் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்று இந்தியாவிடம் வழித்துத் துடைக்கப்படுவதைத் தவிர்ப்போம் என்று மேற்கிந்தியத் தீவுகளின் தலைவர் பிரீத்வைட் தெரிவித்துள்ள நிலையில் இந்த ஆட்டம் பெரியளவில் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)





## ஹமில்டனுடனான ஒப்பந்தம் நீடிப்பு!

### மெர்சிடஸ் அறிவிப்பு

பிரபல கார்பந்தய வீரரான ஹமில்டனுடன் தான் கொண்டிருந்த ஒப்பந்தத்தை நீடித்தது மெர்சிடஸ் நிறுவனம். 'பார்முலா 1' கார் பந்தய வீரர் ஹமில்டன். 4 முறை சம்பியனான அவர் மெர்சிடிஸ் அணிக்காக போட்டிகளில் பங்கேற்று வருகிறார். அந்த அணியுடனான ஹமில்டனின் ஒப்பந்தம் இந்த வருடத்துடன் முடிகிறது.

இந்த நிலையில் ஹமில்டனின் ஒப்பந்தத்தை இன்னும் 2 ஆண்டுகளுக்கு மெர்சிடஸ் அணியின் நிர்வாகம் நீட்டித்துள்ளது. ஆனால் அவருக்கு அளிக்கப்படும் தொகை குறித்து கருத்து வெளியிடவில்லை. இதற்கிடையே இங்கிலாந்து ஊடகங்கள், ஹமில்டனை ஆண்டுக்கு 400 கோடி ரூபாவுக்கு மெர்சிடஸ் அணி நிர்வாகம் ஒப்பந்தம் செய்து தக்க வைத்து கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளன. (ம)





## நியூசிலாந்து அணிக்கு பாகிஸ்தான் கவனிப்பு!

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்று முதலாவது ஆட்டத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுத்தது பாகிஸ்தான்.

நியூசிலாந்து அணி ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இரண்டாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முன்னதாக முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றதால் இரண்டாவது ஆட்டத்திலும் அந்த அணி வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்யும் என்ற நிலை இருந்தது. இதனால் பாகிஸ்தானுக்கு வாழ்வா சாவா? என்ற நிலையில் இந்த ஆட்டம் அமைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக ரெய்லர் ஆட்டமிழக்காமல் 86 ஓட்டங்களையும், நிக்கொல்ஸ் 33 ஓட்டங்களையும், வோர்கர் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அப்ரிடி 4 இலக்குகளையும், ஹசன் அலி 2 இலக்குகளையும், ஹபீஸ், சடப் கான் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் 57 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக சமன் 88 ஓட்டங்களையும், அசாம் 46 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)



## கரீபியன் லீக்கில் இருந்து ஆப்கானின் ரசிட் விலகல்

கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் இருந்து விலகினார் ஆப்கானிஸ்தான் அணியின் இளம் சுழல்பந்து வீச்சாளர் ரசிட் கான்.

ஆப்கானிஸ்தான் அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் ரசிட்கான் பன்னாட்டு அரங்கில் சிறந்த பந்துவீச்சுப் பெறுதியை வெளிப்படுத்தி வருகிறார். இதனால் அவர் ரி-20 தொடர்களில் தொடர்ந்து ஒப்பந்தமாகி வருகிறார். இந்த வரிசையில் அவர் கரீபியன் பிறீமியர் லீக் தொடரிலும் ஒப்பந்தமாகியிருந்தார். அதேநேரம் இங்கிலாந்தின் சசெக்ஸ் அணிக்காகவும் அவர் விளையாடி வருகிறார். கரீபியன் பிறீமியர் லீக்கும் இங்கிலாந்துக் கழகங்களுக்கு இடையிலான தொடரும் ஒரே காலத்தில் நடைபெறவுள்ளன. இதனால் சசெக்ஸ் அணிக்காக தொடர்ந்து விளையாட வேண்டும் என்பதற்காக கரீபியன் பிறீமியர் லீக் தொடரில் இருந்து விலகியுள்ளார். (ம)



## டிசெம்பர் 15இல் ஐ.பி.எல். ஏலம்?

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் இந்த ஆண்டு டிசெம்பர் 15ஆம் திகதி நடைபெறலாம் என்று இந்திய ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டன. டிசெம்பர் 16ஆம் திகதி அல்லது 18ஆம் திகதி ஏலம் நடைபெற வாய்ப்புண்டு என்று முன்னதாகச் செய்திகள் வெளிவந்திருந்த நிலையில் தற்போது டிசெம்பர் 15ஆம் திகதி ஏலம் நடைபெறலாம் என்று சில ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. வழக்கமாக நடைபெறும் மெகா ஏலமாக அல்லாமல் முக்கிய நகர்வுகளை ம்ட்டும் கொண்டதாக இந்த வருடத்துக்கான ஏலம் அமையலாம். அதாவது ஒவ்வொரு அணியில் இருந்தும் கழற்றிவிடப்படும் வீரர்களுக்கும் புதிதாக அணியில் இணைத்துக் கொள்ளப்படும் வீரர்களுக்குமான ஏலமாக இந்த ஏலம் அமைய வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

இந்தியாவில் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் ஐ.பி.எல். தொடரின் சில ஆட்டங்களை வெளிநாடுகளில் நடத்தவும் திட்டமிடப்பட்டு வருகிறது. எனினும் ஏலம் தொடர்பிலோ அல்லது தொடர் தொடர்பிலோ இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எந்தவித உத்தியோகபூர்வத் தகவலையும் வெளியிடவில்லை. (ம)

## பவுன்சரால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் இமாம்



பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இமாம் உல் ஹக், பவுன்சர் ரகப் பந்தால் தாக்கப்பட்டு நிலத்தில் சுருண்டு விழுந்தார். அவர் உடனடியாக மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டார்.

பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் 210 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பாகிஸ்தான் இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான இமாம் உல் ஹக் மிகச் சிறந்த வகையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். அவரை நோக்கி நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் பேர்குசன் பவுன்சர் பந்தொன்றை வீசினார். அந்தப் பந்து இமானின் தலைக் கவசத்தை பலமாகத் தாக்கியது.

இதையடுத்து அவர் உடனடியாக மண்ணில் வீழ்ந்தார். முதலுதவி வழங்கப்பட்ட பின்னர் அவர் மீண்டும் துடுப்பெடுத்தாடத் தயாரானார். எனினும் சற்றுநேரத்தில் மயக்க நிலைக்குச் சென்றார். இதையடுத்து அவர் நோயாளர் காவு வண்டியின் மூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம)

# ரொனால்டோவை மாற்ற முடியாது

## யுவென்டாஸ் அழுத்தம் திருத்தம்!

"எந்தக் காரணத்துக்காகவும் ரொனால்டோவை எந்த அணிக்கும் விட்டுக்கொடுக்க முடியாது" என்று யுவென்டாஸ் கழகம் அழுத்தம் திருத்தமாக அறிவித்தது.

ரியல் மட்ரிட்டில் இருந்து அண்மையில் யுவென்டா ஸுக்காக ஒப்பந்தமானார் ரொனால்டோ. அவரை யுவென்டாஸில் இருந்து ஒப்பந்தம் செய்ய ஏகப்பட்ட கழகங்கள் போட்டிபோடு



கின்றன என்ற செய்திகள் அண்மையில் வெளி வந்தன. குறிப்பாக ரொனால்டோவை இழந்து தற்போது தோல்விகளைச் சந்தித்து வரும் மட்ரிட் மீண்டும் ரொனால்டோவை வாங்கவுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் கூட செய்தி வெளியிட்டிருந்தன. இதையடுத்தே யுவென்டாஸ் நிர்வாகம் இவ்வாறு கருத்துத் தெரிவித்தது.

"எக்காரணத்தைக் கொண்டும் ரொனால்டோவை விட்டுத்தர மாட்டோம். எங்கள் அணியில் இணைய ஆரம்பம் முதலே அவர் ஆர்வம் காண்பித்தார். இது சாதகமாக அமைந்தது. நீண்ட காலத்துக்கு பல பருவகாலத்துக்கு ரொனால்டோ யுவென்டாஸுக்காக விளையாடவுள்ளார். ஆக, ரொனால்டோவை மாற்றுவது என்பது எளிதான காரியம் அல்ல" என யுவென்டாஸ் நிர்வாகம் மேலும் குறிப்பிட்டது. (ம)


### வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11Kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு விசேடசலுகை UK 600/=, France 700/=, Swiss 800/= மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்.

**திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd.**
**321, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். 077 755 4528**

(CS 21158) (LV18)

### வேலையாள்கள் தேவை

ஆவரங்கால் சந்தியில் அமைந்துள்ள
Service Station இற்கு பின்வருவோர் தேவை.
**கணக்காளர் - ஆண்கள் (50 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது - கணினி அறிவு விரும்பத்தக்கது.)**
**அலுவலக உதவியாளர் - பெண்கள் - கணினி அறிவு விரும்பத்தக்கது.**

**தொடர்பு - 077 8580 133**

### வேலைவாய்ப்பு

புதிய புத்தகக் கடைக்கு முழுநேரப் பணியாளராக இயங்கக் கூடியவர்கள் தேவை. அடிப்படைக் கல்வித் தகுதியைப் பூர்த்தி செய்தவர்களாகவும் கணினியோடு பரீட்சயம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். புத்தகங்கள் மீது ஆர்வமும் ஈடுபாடும் உள்ளவராக இருப்பது மேலதிகத் தகுதியாகும்.

(CS 21128) (14.17)

**076 762 2100/ 021 222 5090**


### மரணஅறிவித்தல்



## கார்த்திகேசு பீதாம்பரம் J.P

(ஓய்வு நிலை உதவிப் பிரதேச செயலர் - தெல்லிப்பழை)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24.04.1943 | 09.11.2018 |

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பீதாம்பரம் 09.11.2018 வெள்ளிக்கிழமை மாலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற சாந்த நாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் தில்லையம்பலம் (ஓய்வு நிலை கிராம அலுவலர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரவிந்தன் (ஜேர்மனி), ஜெயவிந்தன் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), நளினா(உறுப்பினர் மாநகரசபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தி, நந்தினி, பிறேம்லால் (மக்கள் வங்கி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கபிஷா, டினுஷா, தருண் கார்த்திக் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.11.2018) திங்கட்கிழமை இல.04, கலைமகள் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணியளவில் அரியாலை செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.04, கலைமகள் வீதி, அரியாலை.** (CS 21142) (14)

**தகவல்: குடும்பத்தினர்.**


### வேலை வாய்ப்பு

உருக்கு அலுமாரி செய்வதற்கு அலுமாரி வேலை தெரிந்தவர்கள். வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை.

(CS 21066) (14.17)

**077 905 0186/077 226 9950**

### வீடு வாடகைக்கு

வெளிநாட்டிலிருந்து / வெளி இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் வருவோர் தங்குவதற்கு ஏற்ற வீடு சகல வசதிகளுடன் நாள் வாடகைக்கு உண்டு.
(AC and Non AC Rooms)

(CS 21139) (11.17)

**077 633 3000, 077 429 1246**

### வேலையாள் தேவை

யாழ் நகரிலுள்ள பிரபல சைவ உணவகத்திற்கு சமையலறை உதவியாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (ஆண்கள் மட்டும்)

(CS 21130) (14.17)

**077 766 1083**

### வீடு வாடகைக்கு

இருபாலை, டச்சுறோட்டில், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு அருகில் நான்கு அறைகளுடன் கூடிய நவீன மலசலகூட குளியல் அறை வசதியுள்ள வீடு வாடகைக்கு உண்டு.தரகர் தேவையில்லை.

**077 740 5308, 077 740 5349**

### தேவை

திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்திற்கு முன்பாக கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் மற்றும் காசாளர் உடன் தேவையாக உள்ளது.

(CS 21141) (14.17)

**071 417 2364/077 239 7898**

### விற்பனைப்பிரதிநிதி தேவை

கொழும்பில் தங்கி நின்று கடமையாற்றக்கூடிய வாகன சாரதி அனுமதிப்பத்திரமுடைய 20 - 30 வயதிற்கிடைப்பட்ட விற்பனைப் பிரதிநிதி உடன் தேவை. தங்குமிட வசதியுடன் 35,000/= சம்பளம் வழங்கப்படும்.

(IN 8281) (14.17)

**077 477 3481**




வலிகாமம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் பெண்களுக்கான கால் பந்தாட்ட பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது. (ம-23)

# இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுப்போம் – லயன்



"இந்திய அணிக்கு டெஸ்ட் தொடரில் பெரும் அதிர்ச்சி கொடுப்போம்" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் சுழற்பந்து வீச்சாளர் லயன்.

இந்திய அணி விரைவில் ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது: இந்த இரண்டு அணிளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர், நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் என்பன நடைபெறவுள்ளன.

ரி-20 தொடர் எதிர்வரும் 20ஆம் திகதியும், டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 5ஆம் திகதியும், ஒருநாள் தொடர் ஜனவரி 11ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்தத் தொடர்கள் தொடர்பில் தற்போதே வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்று வரும் நிலையில் இந்திய அணிக்கு அதிர்ச்சி கொடுப்போம் என்று தெரிவித்தார் லயன்.

"சிமித், வோர்ணர், பான்குரொப்ட் ஆகியோர் இல்லை என்பதால் ஆஸ்திரேலிய அணியைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுக்கக்கூடிய தகுதியுடைய ஏராளமான இளம் வீரர்கள் எம்மிடத்தில் உள்ளனர்" என்று லயன் மேலும் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.